# சுவடியியல் கலைச்சொல் விளக்க அகராதி

முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி



CPL616989

கருமணி பதிப்பகம்

# சுவடியியல் கலைச்சொல் விளக்க அகராதி

*தொகுப்பும் பதிப்பும்*

*முதுமுனைவர்* **ம.சா. அறிவுடைநம்பி**
*தமிழ்ப் பேராசிரியர்*
*சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்*
*புதுவைப் பல்கலைக்கழகம்*
*புதுச்சேரி 605 014*

**அ. கிரிஜா**
8, மாரியம்மன் கோயில் தெரு, சலவையாளர் நகர்,
இலாசுப்பேட்டை, கிழக்குக் கடற்கரைச்சாலை,
**புதுச்சேரி 605 008**

## நூல் விளக்கக் குறிப்பு

நூல் : கவடியியல் கலைச்சொல் விளக்க அகராதி

மொழி : தமிழ்

உரிமை : ஆசிரியருக்கு

பொருள் : அகராதி

தொகுப்பும் பதிப்பும் : முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி

பதிப்பு : தி.ஆ. 2037 வைகாசித்திங்கள்
முதற்பதிப்பு மே 2006

பக்கம் : (கஉ + 176) 188

தாள் : 21.3 கே.ஜி. பப்

அளவு : 1/8 டெம்மி

நூற் கட்டுமானம் : சாதாரணக்கட்டு

விலை : உரு 75-00

மேலட்டை வடிவமைப்பு : தனபால், மதுரை.

வெளியீடு : கருமணி பதிப்பகம், புதுச்சேரி 605 008.

கணினி அச்சு : அ. சிவமூர்த்தி, புதுச்சேரி.

மெல்லச்சு : செந்தில் ஆண்டவர் ஆப்செட்,
5, செங்கைத்திட்டுச் சாலை,
முதலியார்பேட்டை,
புதுச்சேரி 605 008.

நூல் கிடைக்குமிடம் : அ.கிரிஜா,
8, மாரியம்மன் கோயில் தெரு, சலவையாளர் நகர்,
இலாசுப்பேட்டை, கிழக்குக் கடற்கரைச்சாலை,
புதுச்சேரி 605 008.
தொலைபேசி : 0413-5542526 கைபேசி : 9360 327019

மின்னஞ்சல் : m_s_arivudainambi @ rediffmail.com

# படையல்

தமிழ்ப் பல்கலைக்கழக
முதல் துணைவேந்தர்
முதுமுனைவர்
வ.அய். சுப்பிரமணியனார்
அவர்களுக்கு
இந்த நூல்
ஓர்
அன்பின் படையல்

# பதிப்புரை

தமிழ் மொழியில் பல்வேறு துறைகளிலும், குறிப்பாகப் பொறியியல், மருத்துவம், கணினி, இயற்பியல், வேதியியல் போன்ற துறைகளில் கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மின்னல் வேகத்தில் வளர்ந்து வரும் அறிவியல் உலகில் காலத்திற்கேற்பப் புதிய புதிய சொற்கள் உருவாகிப் பெருகி வருகின்றன. ஒருதுறை பற்றிய முழுமையான அறிவைப் பெறுவதற்கு அத்துறையில் வழங்கும் கலைச்சொற்கள் பற்றிய அறிவும் இன்றியமையாது தேவைப்படுகின்றது.

கலைச்சொற்களின் தேவை, பயன்பாடு குறித்துத் தமிழில் அண்மைக்காலத்தில்தான் விழிப்புணர்வு எழுந்தது. அதன் பயனாகக் கலைச்சொல்லாக்க நூல்கள் ஒருசில துறைகளிலேயே இதுவரை வெளிவந்துள்ளன.

அந்த வகையில் சுவடியியல் கலைச்சொல் விளக்க அகராதி எனும் தலைப்பில் இந்நூல் தொகுத்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை இத்துறையில் கலைச்சொற்கள் தொகுக்கப் பெறவில்லை.

தமிழ்ப் பல்கலைக்கழக அரிய கையெழுத்துச் சுவடித்துறையில் 1982இல் பணியில் சேர்ந்தேன். இன்றைக்கு 24 ஆண்டுகள் காலம் வரை அத்துறையில் பெற்ற பயிற்சி, அனுபவம் போன்றவற்றின் அடிப்படையில் கலைச்சொற்களுக்குரிய அகராதி உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த அகராதியைத் தொகுப்பதற்கு வித்திட்டவர் முன்னைத் துணைவேந்தர் முனைவர் **கதிர். மகாதேவன்** அவர்கள். அகராதி உருவாகி வெளிவருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கியவர் சுவடித்துறையில் ஆழங்காற்பட்ட புலமை பெற்ற முன்னைத் துணைவேந்தர் முனைவர் **இ. சுந்தரமூர்த்தி** அவர்கள். இன்றைக்கு இந்நூல் அவரது திருக்கரங்களாலே வெளியிடப்பெறுகிறது.

ஓலைச்சுவடி முதல் இன்றைக்கு ஒளிஅச்சுப் பதிவம் எடுத்து அச்சிடும் வரை உள்ளவற்றில் கையாளப்படுகின்ற சொற்களில் ஏறத்தாழ 2006 சொற்களுக்குரிய விளக்கம் இந்நூலில் தரப்பட்டுள்ளது. ஒரு சுவடி இன்றைய நிலையில் அச்சாகும் வரை உள்ள நிலைகளில் கையாளப்படுகின்ற சொற்கள் கூடுமான வரை தொகுக்கப்பட்டுள்ளன. இது முதல் முயற்சியாகும். அடுத்தடுத்த நிலைகளில் விடுபாடுள்ள சொற்களும் புதிய சொற்களும் சேர்க்கப்படலாம்.

ஒரு சுவடி படியெடுத்தல், பாதுகாத்தல், பதிப்பித்தல் போன்ற முயற்சியை மேற்கொள்ளும்பொழுது பல்வேறு சொற்களுக்கு விளக்கம் காண்பதில் சிக்கல் எழுந்தது. அதேபோன்று இன்றைக்குக் காகிதங்களின் பயன்பாடு மக்களிடம் பெருமளவில் பெருகிய நிலையில் உலகின் பல்வேறிடங்களில் காகிதச் சுவடிகள் பல்கிப் பெருகின.

தற்கால வரலாறு, இலக்கியம் போன்றவற்றை அறிவதற்கு இக்காகிதச் சுவடிகள் பெருமளவில் உறுதுணை புரிந்து வருகின்றன. தமிழ்ப் பல்கலைக்கழகம், சரசுவதி மகால் நூலகம் போன்றவற்றில் ஓலைச்சுவடிகள், காகிதச் சுவடிகள், அச்சு நூல்கள், ஆவணங்கள், கடிதங்கள், நாட்குறிப்புகள் முதலானவை சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தஞ்சை வரலாற்றில் மராத்தியர்களின் பணி குறிப்பிடத்தக்கது. கி.பி. 17,18 ஆகிய நூற்றாண்டுகளைச் சேர்ந்த ஆவணங்களுள் மோடி ஆவணங்கள் 1000க்கும் மேற்பட்ட துணிக்கட்டுகளாக இருக்கின்றன.

மோடி ஆவணங்களைத் தமிழாக்கம் செய்யும் பொழுதும், தமிழ் ஆவணங்களைப் படியெடுத்து எழுதும்பொழுதும் பல்வேறு சொற்களுக்கு விளக்கம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டது.

இத்தகைய சுவடிகளில் தமிழ், ஆங்கிலம், வடமொழி, உருது, பிரெஞ்சு, போர்த்துக்கீசியம், மராத்தி முதலான பல்வேறு மொழிகளின் சொற்கள் தமிழ் எழுத்துக்களில் கலந்து காணப்பட்டதை அறியமுடிந்தது. இச்சொற்கள் அடிக்கடிச் சுவடிகளிலும், ஆவணங்களிலும் பயின்று வருவதையும் காணநேர்ந்தது.

எனவே இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு சொற்கள் தொகுக்கப்பட்டன. சில சொற்களுக்கு ஆங்கிலச் சொற்களும் பிறை வளைவுக்குள் கொடுக்கப்பட்டுள்ளன.

இக்கலைச்சொல் விளக்க அகராதி தொகுப்பதற்கு உறுதுணையாக இருந்த நூல்களின் பட்டியல் வருமாறு :

அறிவுடைநம்பி, ம.சா.,
இலட்சுமணன், சி. (ப.ஆர்.) 2000 காகிதச் சுவடி ஆய்வுகள்,
அரிய கையெழுத்துச் சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

அறிவுடைநம்பி, ம.சா.,
இலட்சுமணன், சி. (ப.ஆர்.) 2002 பதிப்பு நிறுவனங்கள்,
அரிய கையெழுத்துச் சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

கண்ணையன், பா., 2001 'ஓலைச்சுவடிகளின் ஆவணங்களும் பதிவேடுகளும்',
தமிழில் ஆவணங்கள்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை,
பக். 191–210.

கிருட்டினமூர்த்தி, சா., மகாலட்சுமி, தி., நிர்மலா தேவி, சு., பூமிநாகநாதன், த., 2002 கவடிப் பதிப்புத்திறன் 2 தொகுதிகள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

கினி, எம்.எ., 1976 புத்தகம் பைண்டிங் செய்வது எப்படி? ஆசிரியர், சென்னை.

சண்முக சுப்பிரமணியன், மா., புலமை வேங்கடாசலம் (ப.ஆர்.) 2001 சட்டத்தமிழ் அகராதி (ஆங்கிலம்–தமிழ்), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மறுபதிப்பு.

சண்முகம்பிள்ளை, மு., (தொ.ஆ.) 1985 தமிழ்–தமிழ் அகரமுதலி, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

சத்தியபாமா, கா. 1998 மெக்கன்சியின் தமிழ்ச் சுவடிகள் சுட்டும் மக்கள் வாழ்வியல், வெளிவராத முனைவர் பட்ட ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சதாசிவம், மு. (ப.ஆ.) 1991 பதிப்பு நெறிமுறைகள், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

சம்பந்தன், மா.சு., 1960 அச்சுக்கலை, தமிழர் பதிப்பகம், சென்னை.

சம்பந்தன், மா.சு., 1980 அச்சும் பதிப்பும், தமிழர் பதிப்பகம், சென்னை.

சிங்காரவேலு முதலியார், அ., 1981 அபிதான சிந்தாமணி, ஏசியன் எடுகேஷனல் ஸர்வீஸஸ், புதுதில்லி, மறுபதிப்பு.

சுப்பராயலு, எ. (ப.ஆ.), 1991 திருச்சிராப்பள்ளி மாவட்ட ஓலை ஆவணங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

| | | |
|---|---|---|
| சுப்பிரமணியம், பா. (ப.ஆ.), | 1989 | தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும் 3 தொகுதிகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். |
| சுப்பிரமணியன், பூ., | 1991 | சுவடியியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. |
| தசரதன், ஆ., மகாலெட்சுமி, தி., நிர்மலாதேவி, கு., பூமி நாகநாதன், த. (ப.ஆர்.), | 2001 | தமிழில் ஆவணங்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. |
| பரமசிவம், த.கோ. (ப.ஆ.), | 1989 | சுவடிப் பதிப்பு நெறிமுறைகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். |
| பவானந்தம் பிள்ளை, ச., | 1938 | தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி, மாக்மில்லன் அண்ட் கம்பெனி லிமிடெட், சென்னை. |
| ராஜம், எஸ். (ப.ஆ.), | 1958 | சந்தி குறியீட்டு விளக்கம், மர்ரே அண்டு கம்பெனி, சென்னை. |
| விநாயகமூர்த்தி, அ., | 1979 | பதிப்புக்கலை, பாலமுருகன் பதிப்பகம், மதுரை. |
| விநாயகமூர்த்தி, அ., | 1999 | புத்தகக்கலை, பாலமுருகன் பதிப்பகம், காட்பாடி. |
| விநாயகமூர்த்தி, அ., | 1978 | மூலபாட ஆய்வியல், பாலமுருகன் பதிப்பகம், மதுரை. |
| வேங்கடராமையா, கே.எம்., | 1984 | தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். |
| வேங்கடராமையா, கே.எம். (ப.ஆ.), | 1987 | தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு (மெக்கன்சிச் சுவடிப் பதிப்பு), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். |

ஜெயராஜ், வே., 2002 ஆவணங்கள் பாதுகாப்பு,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை, மறுபதிப்பு.

- - - - - - - 1982 தமிழ்நாடு அரசு கிராமக் கணக்குகள்
நடைமுறை நூல்.

Bailey. H.S.Jr., 1930 The Art and Science of Book
Publishing,
Harpen and Row,
New York.

Barrow, W.J., 1965 Deacidification and Lamination of
Deteriorated Documents, 1938-63,
American Archivist,
28-04-1965.

Bhowmik, S.K., 1969 Conservation of Old Paper
Manuscripts,
Museums Bulletin, Vol. 21,
Baroda.

Collin, P.H., 1994 Dictionary of Printing and
Publishing,
Harpen and Row,
New York.

Dakers, A., 1961 Publishing,
Rebert Hale Ltd.,
London.

Jeyaraj, V., 1999 Care of Archival Materials,
Sarasvati Mahal Library,
Thanjavur.

Kathpalia, Y.P., 1973 Conservation and Restoration of
Archival Materials,
Paris, UNESCO.

Katre, S.M., 1954 Introduction to Indian Textual
Criticism,
Deccan College,
Poona.

| | | |
|---|---|---|
| --------- | 1982 | Tamil Lexicon I to VI Volumes, University of Madras, Chennai. |

இன்னும் ஆழமாகச் செல்லச் செல்லப் பல புதிய சொற்கள் கிடைப்பதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. இந்த அகராதியில் சுவடிக் காப்பகங்கள், ஆவணக் காப்பகங்கள், சுவடி நூல்நிலையங்கள், சுவடித் தொகுப்புகள் போன்றவற்றின் விவரங்களும் தரப்பட்டுள்ளன. மேலும் தமிழ் ஆண்டுகட்கு நேரான ஆங்கில ஆண்டுகள், பல்வேறு அளவை முறைகள், குறியீடுகள், சுவடிப் பாதுகாப்பு முறைகள், சுவடிக் காப்பகத்திற்குத் தேவையான பொருள்கள், சுவடி மற்றும் ஆவணக் காப்பகங்கள் போன்றவை பின் இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன. சுவடி ஆய்வில் ஈடுபடுகின்றவர்களுக்கு இவ்வகராதி பெருமளவில் உறுதுணை புரியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

குறுகிய காலத்தில் இந்நூலை வெளியிட்டுதவிய கருமணி பதிப்பக உரிமையாளர் திருமதி அ. கிரிஜா அவர்களுக்கும், கணினி அச்சுப்பதிவம் எடுத்துத் தந்த திரு அ. சிவமூர்த்திக்கும், விரைவாக அச்சிட்டுத் தந்த செந்தில் ஆண்டவர் ஆப்செட் அச்சகத்தாருக்கும் நன்றி.

தோன்றாத் துணையாய் இருந்துவரும் எம்பெருமானது திருவருளை நினைத்து வழுத்துவன்.

வாழ்க தமிழ்!

புதுச்சேரி
தி.வ.ஆ. 2037
15-05-2006

அன்பன்
ம.சா. அறிவுடைநம்பி


சுவடியியல்
கலைச்சொல்
விளக்க
அகராதி

# சுவடியியல் கலைச்சொல் விளக்க அகராதி

## அ

**அ-பதிவேடு**

நிலவிவரங்கள், நில உரிமைகள் பதியப்படும் ஏடு. கல்வெட்டுக்களில் இது தரப்பொத்தகம் எனவும், ஊர்ப்பொத்தகம் எனவும் அழைக்கப்பட்டது.

**அக்கிரகாரம்**

*பார்ப்பனர்கள் வசிக்கும் பகுதி* அல்லது தெரு.

**அக அமைப்பு**

சுவடியின் அகப்புற அமைப்புகளுள் ஒன்று.

**அக இதழ்**

காசோலைச் சுவடியிலுள்ள ஓர் இதழில் கிழித்துத் தரும் பகுதி 'புற இதழ்' என்றும் அக்காசோலைச் சுவடியிலே நிறுத்திக் கொள்ளும் பகுதி 'அக இதழ்' என்றும் கூறப்படும். அக இதழில் செய்திகளைச் சுருக்கமாகக் குறிக்குமளவில் இடமிருக்கும்.

**அகச் சான்று**

மூலபாடத்தை நிறுவுவதற்கு உதவும் அகப்புறச் சான்றுகள்.

**அகநிலை ஆய்வு**

நூலின் உட்செய்திகளைத் திரட்டி, சொற்கள் முதல் அணிகள் ஈறாக ஆராய்வது.

**அகநிலைச் சான்று**

வேறு எந்தவித விளக்கமுமின்றி ஆவணம் ஒன்றின் சொற்றொடரில் அடங்கியுள்ள சான்று.

**அகப்பதிவம்**

மனத்திலோ, புலன்களிலோ வெளிச் செயல்களால் ஏற்படும் பதிவு.

**அகரநிரல்**

நூற்பெயர், ஆசிரியர் பெயர் போன்றவற்றையும் ஒரு மொழியின் எல்லாச் சொற்களையும் அல்லது பெரும்பான்மையான சொற்களையும் அகரத்தில் தொடங்கி வரிசைப்படுத்திக் கூறுதல்.

**அகரமுதலி**

*காண்க : அகரநிரல்.*

**அகரவரிசை**

காண்க : அகரநிரல்.

**அகரவரிசை அட்டைகள்**

சுவடிகளின் பெயர்கள், சுவடி அல்லது நூல் எழுதிய ஆசிரியர்கள், பொருள் அடிப்படையிலானவற்றை அகரத்தில் தொடங்கி வரிசைப்படுத்தித் தனித்தனி அட்டைகளில் எழுதுதல்.

**அகரவரிசை அட்டவணை**

அகரத்தில் தொடங்கி வரிசைப் படுத்தி எழுதிய பட்டியல்.

**அகரவரிசை எண்**

அகரத்தில் தொடங்கி வரிசைப் படுத்தப்பட்ட எண்கள்.

**அகராதி**

அகர வரிசையில் சொற்களுக்குப்

பொருள் தரும் நூல். ஒரு மொழியில் இடம் பெறும் சொற்களைக் கூறி அவற்றின் பொருளைக் கூறுவது பொருள் அகரநிரல் எனப்படும். இது ஒருமொழி அகரநிரல், இருமொழி அகரநிரல், பலமொழி அகரநிரல் எனப் பலவகைப்படும். காண்க : அகர முதலி.

**அகராதி முறை**

அகரவரிசைப் பட்டியல். காண்க : அகரமுதலி.

**அகராதியொழுங்கு**

காண்க : அகரமுதலி.

**அகலவுரை**

விரிவாக எழுதும் உரை.

**அகவிதழ்**

உள்ளிதழ்.

**அச்சகச் சட்டம்**

காண்க : அச்சகம் மற்றும் நூல்கள் பதிவுச்சட்டம்.

**அச்சகப் பார்வைப்படி**

அச்சகத்திலிருந்து வரப்பெற்ற மெய்ப்புத்திருத்தப் படிவம்.

**அச்சகப் பதிப்புப் படிவம்**

பதினாறு பக்கங்கள் கொண்ட மடிப்புகளாக அச்சிடப்பெறும் படிவம்.

**அச்சகம்**

அச்சடிக்கும் இடம், அச்சுக்கூடம்.

**அச்சகம் மற்றும் நூல்கள் பதிவுச் சட்டம்**

1867இல் இயற்றப்பட்ட மத்திய அரசின் சட்டமாகும். 1955இல் இதற்குத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன்படி உறுதிஆவணம் தாக்கல் செய்து குறிப்பிட்ட காலத்திற்குள் செய்தித்தாளை அச்சிட்டு வெளியிடவேண்டும். அவ்வாறு வெளியிட முடியவில்லை என்றால், அனுமதி வழங்கப்பட்ட உறுதி ஆவணம் முறிக்கப் பட்டதாகக் கருதப்படும். மீண்டும் இச் சட்டம் 1960இல் திருத்தப்பட்டது. இச் சட்டத்தின்படி இந்தியாவில் வெளியிடப் படும் நூல்களை இலவசமாகத் தேசியப் பொது நூலகம் (கோல்கத்தா), மைய நூலகம் (மும்பை), கன்னிமாரா பொது நூலகம் (சென்னை), பொது நூலகம் (புதுதில்லி), நாடாளுமன்ற நூல் நிலையம் (புதுதில்லி) ஆகியவற்றுக்கு அனுப்பிப் பதிவு செய்தல் வேண்டும்.

**அச்சடி பத்திரம்**

காண்க : முத்திரை ஓலை.

**அச்சடித்த பத்திரம்**

ஆவணங்கள் எழுதப்பெற்ற ஓலை களில் முத்திரைகளைப் பொறித்தல். காண்க : முத்திரை ஓலை.

**அச்சடித்தல்**

உருக்கெழுத்தைப் பொறித்தல், முத்திரையைப் பதித்தல்.

**அச்சடிப்பதற்குக் கொடுக்கப்படும் மூலவரைப்படி**

சுவடி.

**அச்சடிப்பாளர்**

அச்சடிக்கும் நிலைய உரிமையாளர்.

**அச்சடி பத்திரம்**

ஆவணங்கள் எழுதப்பெற்ற ஓலை களில் முத்திரைகளைப் பதித்தல். காண்க : முத்திரை ஓலை.

**அச்சடியோலை**

முத்திரையிடப்பட்ட ஓலை.

**அச்சடுக்கி**

அச்சுக் கோப்பாளன்.

**அச்சடுக்குதல்**

உருக்கெழுத்தைச் சொல்லாகக் கோத்தல்.

**அச்சாகாத சுவடி**

அச்சில் வெளிவராமல் இருக்கும் கையெழுத்துப்பிரதி அல்லது ஓலைச்சுவடி.

**அச்சாரம்**

முன்பணம்.

**அச்சிடுபவர்**

அச்சக உரிமையாளர் (Printer).

**அச்சு**

உருக்கெழுத்து, குத்தும் முத்திரை, புள்ளி.

**அச்சு உலோகம்**

அச்சு வேலைகளுக்கு உதவும் உலோகக் கலவைக்கு அச்சு உலோகம் என்பது பெயர்.

**அச்சு ஓலை**

ஆவணங்கள் எழுதப்பெற்ற ஓலை களில் முத்திரைகளைப் பொறித்தல். காண்க : முத்திரை ஓலை.

**அச்சுக் கடுதாசி பத்திரம்**

ஆவணங்கள் எழுதப்பெற்ற ஓலை களில் முத்திரைகளைப் பொறித்தல். காண்க : முத்திரை ஓலை.

**அச்சுக்கரு**

வார்ப்படம் வார்க்கும் அச்சு.

**அச்சுக்கலை**

அச்சுத் தொழிற்கலை.

**அச்சுக் கலைஞர்**

அச்சுத் தொழிலில் வல்லுநர்.

**அச்சுக் காகிதம்**

அச்சு இயந்திரத்தில் அச்சடிப்பதற் குரிய தாள்.

**அச்சுக்கூடம்**

அச்சடிக்கும் சாலை. காண்க : அச்சகம்.

**அச்சுக் கோக்கும் இயந்திரம்**

அச்செழுத்துக்களைக் கோக்கும் இயந்திரம்.

**அச்சுக் கோக்கும் கருவி**

அச்செழுத்துக்களைக் கோக்கும் இரும்பினாலான கருவி.

**அச்சுக் கோத்தல்**

உருக்கெழுத்தைச் சொல்லாக அடுக்குதல். இவற்றைக் கையினால் எடுத்துக் கோத்தல் (Composing).

**அச்சுக் கோப்பவர்**

எழுத்துக்களைக் கையினால் எடுத்துக் கோப்பவர் (Compositor).

**அச்சுக் கோப்பாளர்**

காண்க : அச்சுக் கோப்பவர்.

**அச்சுக் கோப்பாளன்**

அச்சடுக்கி, கோப்பாளன். காண்க : அச்சுக் கோப்பவர்.

**அச்சுக் கோப்பான்**

அச்செழுத்துக்களைக் கையினால் கோக்கும் இரும்பினாலான கருவி.

**அச்சுக் கோப்புப் பொறி**

அச்செழுத்துக்களைக் கோக்க உதவும் பொறி.

**அச்சுத் தகடு**

அச்செழுத்துக்களை அடுக்கி வைக்கும் தகடு.

**அச்சுத் தட்டு**

அச்செழுத்துக்கள் கோக்கப்பட்டு அடுக்கி வைக்கப்படும் தட்டு (Galley).

**அச்சுத் தாள்**

திருத்தம் செய்வதற்குரிய அச்சிட்ட தாள் (Proof).

**அச்சுத் தாள் திருத்துதல்**

அச்சிடுவதற்குரிய பக்கங்களைத் திருத்துதல் (Proof correction).

**அச்சுத் திருத்துதல்**

அச்சுத் தாள்களைத் திருத்துதல்.

**அச்சுத்துணி**

அச்சிடப்பட்ட துணி.

**அச்சுத் துளையீடு**

உலோகம் அல்லது காகிதத்தில் துளை போடும் கருவி.

**அச்சுப்படி**

அச்சிட்டதன் ஒரு படி (Printed copy).

**அச்சுப்படி திருத்துபவர்**

காண்க : மெய்ப்புத் திருத்துதல்.

**அச்சுப்படிமை**

அச்சிட உதவும் படக்கட்டை (Printing block).

**அச்சுப்படிமையாளர்**

அச்சிட உதவும் படக்கட்டையைக் கொண்டு அச்சிடும் அச்சகம்.

**அச்சுப் படிவம்**

அச்சிடப்பட்ட படிவம் (Printed form).

**அச்சுப் பத்திரம்**

ஆவணங்கள் எழுதப்பெற்ற ஓலைகளில் முத்திரைகளைப் பொறித்தல். காண்க : முத்திரை ஓலை.

**அச்சுப் பிழை**

அச்சில் நேர்ந்த பிழை; அச்சிடும் போது ஏற்படும் தவறு; அச்சுப்படி திருத்துதலுக்கு உட்படாதது.

**அச்சுப்பிழை திருத்தம்**

அச்சுப்பணியில் அச்சுப்பிழை ஏற்படுமாயின் வரி, பக்க எண், சுட்டி, திருத்தம் செய்வது அச்சுப்பிழை திருத்தம் எனப்படும். இப்பிழை திருத்தம் நூலின் முன் இணைப்பாகவோ, பின் இணைப்பாகவோ அமையும். அச்செழுத்தில் ஓர் எழுத்து மாறிவிட்டாலோ அல்லது விட்டு விட்டாலோ முரண்பாடுகளுக்கு இடனாகி நகைப்பிற்கு உரியதாகிவிடும். சான்று : 'கவுந்தியடிகள் வந்தார்' என்பதில் ஓர் எழுத்து மாறியதால் 'காந்தியடிகள் வந்தார்' என்றும், 'அறத்தான் வருவதே இன்பம்' என்பதில் ஓர் எழுத்தை (ற) விட்டு விட்டதால் 'அத்தான் வருவதே இன்பம்' என்றும், திருமண அழைப்பிதழில் 'எம்பெருமான் திருவருளால்' என்பதில் மகரத்திற்குப் புள்ளி இல்லாமல் இருக்குமாயின் 'எமபெருமான் திருவருளால்'

என்றும் வந்து நகைப்பிற்கு இடம் தருவதாய் அமைந்துவிடும்.

**அச்சுப்பிழை திருத்துவோர்**

அச்சில் நேர்ந்த தவறுகளைத் திருத்துகின்றவர்கள் (Proof reders).

**அச்சுப்புத்தகம்**

அச்சடித்த புத்தகம். நாளடைவில் அச்சுப் புத்தகம் முதலியவற்றையும் சுவடி எனக் குறிப்பிடுவது வழக்கமாயிற்று.

**அச்சுப்புள்ளி**

எழுத்தின் அளவுகள். நூல் அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்படும் அச்சு எழுத்துக்களின் வடிவம் அச்சுப்புள்ளி எனப்படும். அச்சு எழுத்துக்கள் 6 புள்ளி முதல் 7, 8, 9, 10, . . . . . . . 72 வரை உள்ளன. நூல் அச்சிடுவதற்குப் பத்துப் புள்ளி எழுத்துக்களே அதிகமாகப் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. துணைத் தலைப்புக் களுக்கு 12 புள்ளியும், இயல் தலைப்புக் களுக்கு 14, 18 புள்ளி எழுத்துக்களும், அடிக்குறிப்புக்களுக்கு 8 புள்ளி எழுத்துக் களும், நூல் தலைப்புக்களுக்கு 30 புள்ளி எழுத்துக்களும் பொதுவாகப் பயன் படுத்தப்படுகின்றன.

**அச்சுப் பேய்**

புத்தகத்தில் காணப்படும் அச்சுப் பிழைக்குப் பெயர் (Printer's devil).

**அச்சுப் பொறி**

அச்சிடும் பொறி, அச்சு இயந்திரம் (Printing machine).

**அச்சு மை**

இந்தியாவில் பல நகரங்களில் அச்சு மை தயாராகிறது. எந்தத் தாளின்மீது எம் முறையில் அச்சடிக்கப்படுகிறதோ அதற்கு ஏற்றவாறு மை தயாரிக்கப்படுகிறது. சாதாரண எழுத்தச்சு மைகள், அலங்கார அச்சு மைகள், ஆப்டோன் மைகள், ரோட்டரி அச்சு மைகள், செய்தித்தாள் மைகள், லித்தோகிராப் அச்சு மைகள், படவரைவு மைகள் முதலானவை தேவைக் கேற்பப் பயன்படுகின்றன. இவை ஒவ்வொன்றிலும் கறுப்பு மற்றும் பல வண்ணங்கள் உண்டு.

**அச்சுருளி**

அச்சுப்பொறி உருளை.

**அச்சு வழங்கி**

அச்சியந்திரங்களை விற்பனை செய்யும் நிறுவனம்.

**அச்சு வார்க்கும் கருவி**

அச்செழுத்துக்களை உருவாக்கும் கருவி.

**அச்சு வார்ப்படக்காரர்**

அச்செழுத்துக்களை வார்ப்பவர்.

**அச்சு வார்ப்படச்சாலை**

அச்செழுத்துக்களை வார்க்கும் வார்ப்படப் பட்டறை.

**அச்சு வார்ப்படம்**

உலோகத்தை உருக்கி அச்செழுத் துக்களாக வார்த்தல்.

**அச்சு வார்ப்பான்**

வார்ப்புச் செய்யும் இயந்திரம்.

**அச்சுருக்களை**

வார்ப்படம் வார்க்கும் அச்சு.

**அச்சுருவை**

காண்க : அச்சுத் துளையிடு.

**அச்செழுத்தலகு**

அச்செழுத்துக்களின் புள்ளி அளவு.

**அச்செழுத்து**

அச்சடித்த எழுத்து.

**அச்செழுத்துக்களின் வடிவம்**

அச்சுக்களைக் கொண்டு அச்சடிப்பதற்கேற்ற முறையில் எழுத்துக்களின் வடிவங்கள் உள்ளன. அச்சு எழுத்துக்களின் அளவு புள்ளி (point) என்ற அலகினால் குறிப்பிடப்படுகிறது.

**அசல்**

மூலம், மூலப்படி. அசல் (original) என்பது உருதுமொழிச் சொல்லாகும்.

**அசல் மனு**

மூல விண்ணப்பப் படிவம் (original petition).

**அசற்பிரதி**

மூலப்படி.

**அசிட்டிக் அமிலம்**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவையான வேதிமப் பொருள்களில் அசிட்டிக் அமிலமும் (Acetic acid) ஒன்று.

**அசிட்டோன்**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவையான வேதிமப் பொருள்களில் அசிட்டோன் (Acetone) என்பதும் ஒன்று.

**அஜூர் கச்சேரி**

மாவட்ட அரசு அலுவலகம்.

**அஞ்சல் மடல்**

அஞ்சல் வழி அனுப்பப்படும் மடல் (கடிதம்).

**அஞ்சற் கடிதம்**

காண்க : அஞ்சல் மடல்.

**அஞ்சனா ஜாபிதா**

சாகுபடி மதிப்புப் புள்ளிக்கணக்கு.

**அஞ்சாப்பட்டயம்**

எடுத்த உரிமைகளைத் திரும்ப அளித்தற்குரிய சாசனம்; பிறர் கொடுமை செய்யாவண்ணம் நியமிக்கப்படும் சாசனம்.

**அட்சய**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் அறுபதாவது ஆண்டு.

**அட்சராப்பியாசம்**

எழுத்துப் பயில்விக்கும் சடங்குக்கு அட்சராப்பியாசம் என்று பெயர்.

**அட்சராரம்பம்**

கல்வி கற்கத் தொடங்குதல்.

**அட்டவணை**

விவரங்கள், எண்கள் இவற்றின் வரிசைப்படியான பட்டியல், பொருட்பட்டி (index).

**அட்டவணை அட்டை**

எழுதப்பட்ட அட்டைகளை (index cord) வரிசைப்படியாக அடுக்கி வைத்தல்.

**அட்டவணைக் கணக்கன்**

பேரேடு எழுதும் கணக்கன் (Accountant).

**அட்டவணைச் சீட்டுகள்**

தனித்தாள்களில் எழுதியவற்றை வரிசையாக அடுக்கி வைத்தல்.

**அட்டவணைச் சீட்டுகளைக் கோத்தல்**

தனித்தாள்களில் எழுதியவற்றை அடுக்கிக் கோப்பில் இடுதல்.

**அட்டவணைப் பத்திரம்**

காண்க : அம்சபத்திரம்.

**அட்டவணைப் பதிவேடு**

பதிவேட்டில் வரிசைப்படிப் பதிவு செய்தல்.

**அட்டை**

சன்னப்பலகை போன்று தடித்த தாள் அட்டை (Card, Card board). புத்தகக் கட்டமைப்புப் பொருள்களுள் ஒன்று. காண்க : பத்தை.

**அட்டை உறை**

நூலட்டைக்குப் பாதுகாப்பாக மாட்டப்படும் ஓர் உறை (Jacket). அட்டையில் தூசு, தும்பு படாமல் பாதுகாக்கும் வகையில் வழவழப்பான காகிதத்தில் தயாரிக்கப் பட்டது. காலப் போக்கில் இது வண்ண அட்டையாக, பல வண்ண அட்டையாக மாறியது.

**அட்டைக் காகிதம்**

எடை குறைவுள்ள இலேசான அட்டைக் காகிதம் (Paper board).

**அட்வான்ஸ் பிரதி**

அட்வான்ஸ் என்பது ஆங்கில மொழிச் சொல். நூலின் அச்சுவேலை முடிந்தவுடன், (ஆனால்) நூல் முழுமை யாகக் கட்டமைப்புச் செய்து விற்பனைக் காக வெளிவருவதற்கு முன்னர், அணிந்துரை போன்றவற்றை எழுதுவதற் காகத் தைக்கச் செய்து பெறும் பிரதிக்குரிய பெயர்.

**அடகு**

கடனுக்கு அல்லது வாக்குறுதி நிறை வேற்றத்திற்குப் பிணையமாகப் பொருளை ஒப்படை செய்தல், ஒப்படைப்பவரை அடகு வைப்பவர் என்றும், பெறுபவரை அடகு பெறு பவர் என்றும் சொல்வதுண்டு. 'ஈட்டுப் பொருள்' எனவும் பொருள்படும். அடைவு எனவும் கூறப்படும்.

**அடகுக் கடைக்காரர்**

தங்கம், வெள்ளி போன்ற பொருளை அடகாகப் பெற்றுக் கொண்டு அதன் மீது கடன் கொடுப்பவர் (Pawn broker).

**அடகுச் சீட்டு**

பொருளை அடகாகப் பெற்றுக் கொண்டதற்கு அடையாளமாகக் கொடுக்கப்படும் சீட்டு.

**அடகு பிடித்தல்**

கடனாகப் பணம் கொடுத்து அதற்கு ஈடாக விலைபெறும் பொருள்களை வாங்கி வைத்தல்.

**அடகு பெறுபவர்**

காண்க : அடகு.

**அடகுப் பொருள்**

காண்க : அடகு.

**அடகுமுறை ஆவணம்**

ஒருவர் தமது நிலத்தைச் சில காலத் திற்கு வேறொருவருக்கு உரிமையுடையதாய் ஒற்றிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் அடகுமுறை ஆவணம் ஆகும்.

**அடகு வைப்பவர்**

காண்க : அடகு.

**அடகோலை**

அடைமான ஓலை.

**அடங்கல்**

காண்க : சிட்டா. சாகுபடிக் கணக்கு.

**அடத்திச் சீட்டு**

ஒரு வணிகர் மற்றொரு வணிகருக்கு இவ்வளவு தொகை வரை கொடுக்கலாம் என்று எழுதிக் கொடுக்கும் சீட்டு.

**அடமானம்**

காண்க : அடைமானம்.

**அடவு**

காண்க : அடகு.

**அடவோலை**

காண்க : அடைமான ஓலை. சொத்தை ஈடு காட்டி எழுதிக் கொடுக்கும் பத்திரம்.

**அடிக்குறிப்பு**

ஆய்வு நெறிமுறைகளுள் ஒன்று. நூல் அல்லது ஆய்வேட்டின் ஒவ்வொரு பக்கத்தின் கீழ்ப்பகுதியில் தரப்படும் குறிப்பு அடிக்குறிப்பு எனப்படும். சில நேரங்களில் நூல் அல்லது ஆய்வேட்டின் இறுதியில் அல்லது அந்தந்த இயலின் முடிவில் தரப்படுவதும் உண்டு. சுவடிப் பதிப்பைப் பொறுத்த அளவில் பாட வேறுபாடு, சொற்பொருள், இலக்கணக் குறிப்பு, ஒப்புமை, மேற்கோள், பதிப்பாசிரியர் குறிப்புகள் முதலானவை அடிக்குறிப்பில் (Footnote) தரப்படும்.

**அடிக்குறிப்புப் பதிப்பு**

சில செய்யுள் நூல்களின் மூலபாடப் பதிப்பை வெளியிடும்பொழுது அருஞ்சொற்களுக்குரிய பொருள், பாடவேறுபாடு போன்றவற்றை அந்தந்தப் பக்கத்திலேயே அடிக்குறிப்பாகச் சிறிய எழுத்தில் அமைப்பது.

**அடிக்கோடு**

முக்கியமான சொல் அல்லது நூல் பெயர் போன்றவற்றின் கீழே அடிக்கோடு (underline) இடுதல்.

**அடிச்சீட்டு**

காசோலை அல்லது பற்றுச்சீட்டின் ஒத்த மறுபகுதி (Counterfoil).

**அடிச்சுவடு**

பாதத்தடம்.

**அடிமைச் சீட்டு**

அடிமையோலை. அடிமையாக இருத்தற்பொருட்டு எழுதித் தரப்படும் ஆவணம்.

**அடிமைத்தனம்**

காண்க : ஆவணம்.

**அடிமைப் பத்திரம்**

அடிமையோலை. அடிமையாக இருத்தற்பொருட்டு எழுதித் தரப்படும் ஆவணம்.

**அடிமையோலை**

அடிமையாவணம் (ஆள் அடிமைப் பத்திரம்). அடிமையாக இருத்தற்பொருட்டு எழுதித் தரப்படும் ஆவணம்.

**அடியெழுத்து**

உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் ஆகிய முப்பது முதலெழுத்துக்கள்.

**அடைக் குத்தகை**

குத்தகைக்காரன் தானியமாகக் கொடுக்கும் அரசிறை.

**அடைச் சீட்டு**

வரி செலுத்தியதற்கான இரசீது.

**அடை நிலம்**

ஆற்றுநீர், கடல்நீரால் மண் சேர்ந்து கடல் விரிதல்.

**அடைப்புக்குறி**

சொல், எண் முதலியவற்றின் இரு பக்கமும் இடும் வளைவுக் குறியீடுகள் (bracket).

**அடைமானக் கடன் பத்திரம்**

சொத்துக்களை ஈடு காட்டிக் கடன் பெறுதற்கான ஆவணம்.

**அடைமான பத்திரம்**

பாத்தியத்தை மாற்றும் ஆவணம். ஈட்டுக்கடன் பத்திரம் எனவும் அழைக்கப் படும்.

**அடைமானம்**

கடன் உதவியாகக் கொடுக்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட வேண்டிய பணத்தைத் திரும்பச் செலுத்துவதற்கோ, நிகழ்கால அல்லது எதிர்காலக் கடனுக்கோ பணிப்பொறுப்புடைய ஒருவர் பணிக் கடனை நிறைவேற்றுவதற்கோ உறுதி ஈடாக ஒரு குறிப்பிட்ட நிலை சொத்திலுள்ள பாத்தியத்தை மாற்றுதல். கொதுவை எனவும் கூறப்படும். நிலத்தை வைத்துப் பணம் வாங்குவது.

**அடைமானம் பெறுபவர்**

பாத்தியத்தைப் பெற்றுக் கொள்பவர்.

**அடைமானம் வைப்பவர்**

பாத்தியத்தை மாற்றிக் கொடுப்பவர்.

**அடைமானவோலை**

அடைமான ஆவணம் (பத்திரம்). அடைமானமாக இருத்தற்பொருட்டு எழுதித் தரப்படும் ஆவணம்.

**அடையாள எண்**

அச்சடித்த படிவத்தின் ஒவ்வொரு மடிப்புத் தொடங்கும்போதும் அதன்கீழ் இடப்புறத்தில் நூல் பெயரின் முதல் எழுத்து அல்லது அந்த நூல் வந்த ஆணை எண்ணுடன் 1. 2, 3. . . . . என்று அச்சிடப் படுதல்.

**அடையாளச் சீட்டு**

கைச்சீட்டு (Coupon).

**அடையாளம்**

காண்க : ஆவணம்.

**அடையாறு நூல் நிலையம்**

கர்னல் ஆல்காட் என்பவர் கி.பி. 1855இல் வடமொழி இலக்கியத்தையும் இந்தியப் பண்பாட்டையும் வளர்ப்பதற்காக இந்நூல் நிலையத்தைத் தொடங்கினார். சென்னைக்கு அருகிலுள்ள அடையாற்றில் பிரம்மஞான சங்க வளாகத்தில் இது உள்ளது. அச்சு நூல்கள், கையெழுத்துப் பிரதிகள் இங்கு உள்ளன. 33 அடி நீளத்தில் சீனப்பிரதி ஒன்று கறுப்புக் கடுதாசியில் பொன் எழுத்தால் எழுதப்பட்ட சுவடி உள்ளது. இந்தியாவில் காணப்படும் மிகப் பழைய குரான்களுள் ஒன்றும் இங்கே உள்ளது.

**அடையெழுதுதல்**

கணக்கில் பதிவு செய்தல்.

**அடையோலை**

அடைமான ஆவணம் (பத்திரம்). பொருளை அடைமானமாக வைத்து

எழுதப்படும் ஆவணம். பொருள் அடைமானம் பெறுபவர் அடையோலை எழுதித் தருவது வழக்கம்.

**அடைவு**

காண்க : அடகு.

**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

சிதம்பரம் அண்ணாமலைநகரில் அமைந்துள்ள இப்பல்கலைக்கழகத்தில் ஓலை மற்றும் காகிதச்சுவடிகள் சேகரிக்கப் பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழ்த்துறையின் மேற்பார்வையில் பேராசிரியர்களால் சுவடிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் பல நூல்கள் பதிப்பித்து வெளியிடப்பட்டு வருகின்றன. சான்று : கம்பராமாயணம், திருவாசகம், திருவருட்பா போன்றவை.

**அண்மைப்படி**

மூலச்சுவடியிலிருந்து படியெடுக்கப் பட்டவை அண்மைப் படிகள் எனப்படும். அண்மைப் படிகளிலிருந்து பின்னால் பல நிலைகளில் படியெடுக்கப்பட்டவை 'வழி ஏடுகள்' எனப்படும்.

**அண்மைப்பிரதி**

காண்க : அண்மைப்படி.

**அணிந்துரை**

ஆசிரியரல்லாத பிறரால் எழுதப் படும் தொடக்கவுரை. நூலையும் நூலாசிரி யரையும் பாராட்டுமுகத்தான் இது அமையும். நூலாசிரியர் அறிமுகம், அவர் தம் புலமைநலம், எழுத்தாற்றல் போன்ற வற்றைச் சுட்டிக்காட்டி நூலின் மையக் கருத்தையும் அதன் வளர்ச்சி நிலை களையும் கூறுவதாக அமையும். இக்காலப் பதிப்புகளில் காணப்படும் அணிந்துரை (Preface. Foreword) என்பது தொடக்ககாலப் பதிப்புகளில் சிறப்புப் பாயிரம் என்னும் தலைப்பில் வழங்கி வந்தது. வாழ்த்துரை, பாராட்டுரை, ஆசியுரை, பாயிரம், புறவுரை என்னும் தலைப்புகளில் சான்றோர் இதனை வழங்கி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**அணில்**

கொறிக்கும் உயிரினம். சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைப் பாழ் படுத்தும். சுவடிகளைப் பாதிக்கும் காரணி களில் அணிலும் (squirrel) ஒன்று.

**அத்தாட்சி நகல்**

மூல ஆவணத்தைத் தன்வசத்தில் வைத்திருக்கும் அலுவலர். அதனுடன் ஒப்பிட்டுப் பார்த்துச் சரியென்று சான்று அளித்துச் சரியென்று ஒப்பமிடப்பட்ட பிரதி.

**அத்தியாய அட்டவணை**

காண்க : பொருளடக்கம் (content).

**அத்யாட்சதர்**

நியாயாதிபதி, நீதிபதி (Judge). பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆவணங்களில் இச்சொல் அடிக்கடிப் பயன்படுத்தப்படும்.

**அதாலத்து**

நீதிமன்றம் (Court of Justice).

**அதிகார அளிப்புக் கடிதம்**

நூலாசிரியர் அல்லது பதிப்பாசிரியர் ஒப்புதலுடன் அளிக்கப்படும் கடிதம்.

**அதிகாரப் பத்திரம்**

தான் செய்ய வேண்டிய செயலைத் தனக்காகப் பிறர் செய்வதற்கு அதிகார மளிக்கும் பத்திரம் (Power of Attorney) இதற்கு வக்காலத்து என்ற பொருள் உண்டு.

**அதிகாரப்பூர்வப் பதிப்பு**

நூலாசிரியருடைய அல்லது பதிப்புரிமை பெற்றவருடைய ஒப்புதலைப் பெற்றுக் கொண்டு வெளிவரும் பதிப்பு.

**அதிகாரப்பூர்வம்**

சட்டப்படி உண்மையெனக் காட்டுதல்.

**அதிகாரப்பூர்வ வாழ்க்கை வரலாறு**

ஒருவருடைய அனுமதி பெற்று அல்லது அவரது வாரிசுகளின் அனுமதி பெற்று அவர் தொடர்பான ஆவணங்களின் துணையுடன் எழுதப்படுவது.

**அதிகாரவோலை (பத்திரம்)**

ஒருவர் தனக்குப் பதிலாகச் செயல் படவோ வழக்காடவோ இன்னொருவருக்கு எழுதிக் கொடுக்கும் ஓலை.

**அந்துப்பூச்சி**

ஆவணங்கள், சுவடிகள் போன்ற வற்றைப் பாழ்படுத்தும் ஒருவகைப் பூச்சி.

**அப்சயம்**

'Option' என்ற பிரெஞ்சு மொழிச் சொல். முடிவுக்கு விடுதல் என்பது பொருள்.

**அப்தர் கானா**

தண்ணீர்ப் பந்தல்.

**அப்பீல் பிராது**

மேல் முறையீடு (Appeal petition).

**அபிதான சிந்தாமணி**

கடவுள், கதை மாந்தர், கொடைஞர், புலவர், வீரர் முதலியோர் பெயர்களை அகர நிரலாக்கி அவர் பற்றிய விவரங்களுடன் தருதல். ஆ. சிங்காரவேலு முதலியார் 1890 ஆம் ஆண்டில் பல சான்றோர் இயற்றிய நூல்களிலிருந்து தொகுக்கத் தொடங்கினார். 1910 ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கம் இதன் முதற்பதிப்பை வெளியிட்டது. அதன் பின்னர்ப் பல திருத்தங்களுடன் பல பதிப்புகள் வெளியிடப்பட்டன. தமிழ் இலக்கியக் கலைக்களஞ்சியமாக இந்நூல் திகழ்கிறது.

**அபிதான விளக்கம்**

பெயர்களின் விளக்கம் கூறுதல்.

**அம்ச பத்திரம்**

பங்காளிகள் ஏற்படுத்திக் கொள்ளும் பாக அட்டவணைப் பத்திரம். அவகாச முறி எனவும் அழைக்கப்படும்.

**அம்பலக்காரன்**

ஊர்த்தலைவர்.

**அம்புக்குறி**

சுவடிகளை நூலாகப் பதிப்பிக்கும் பொழுது கையாளப்படும் பல்வேறு குறியீடுகளுள் இதுவும் (→) ஒன்று.

**அம்மாமார்கள்**

தஞ்சாவூர் மராத்தியர் காலத்தில் அரண்மனையிலிருந்த மங்களவிலாசப் பெண்கள். இவர்கள் பாயி என்றும் அம்மா என்றும் அழைக்கப் பெறுவர்.

**அமானத்து**

பொருள் நிலையத்தில் விவரம் குறிக்காமல் வைத்த தொகை, தனியாக ஒப்படைத்த பொருள்.

**அமானத்துச் சிட்டா**

பொதுக் குறிப்பேடு (Miscellaneous account).

**அமில்கன்**

மாவட்ட அதிகாரி, வருவாய்த்துறை அலுவலர் (District Revenue Officer).

**அமில்தார்**

வருவாய்த்துறை அதிகாரி (Revenue Officer). ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பைக் கொண்ட மாவட்ட அமைப்புக்கு அதிகாரியாக நியமிக்கப் பட்டவர். நில வருவாயை வசூலிக்கும் பொறுப்பைப் பெற்றவர்.

**அமிலக் கலவை**

காகிதச் சுவடிகளைப் பாதுகாப் பதற்குப் பயன்படுத்தப்படும் வேதிமப் பொருள்.

**அமிலம்**

காகிதச் சுவடிகளைப் பாதுகாப் பதற்குப் பயன்படுத்தப்படும் வேதிமம்.

**அமில அளவுக் காகிதம்**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவை யான வேதிமப் பொருள்களில் அமில அளவுக் காகிதமும் (pH paper) ஒன்று.

**அமில அளவைக்கருவி**

ஆவணப் பாதுகாப்பிற்குத் தேவை யான கருவிகளில் அமில அளவைக் கருவியும் (pH Meter) ஒன்று.

**அமீனா**

பணம் வசூல் செய்யும் அலுவலர். உருதுமொழிச் சொல்லாகும். உரிமையியல் நீதிமன்றத்தின் பிடியாணையை அல்லது உத்தரவை நிறைவேற்றும் பொறுப்புடைய அலுவலர்.

**அமுல்தாறர்**

காண்க : அமில்தார்.

**அமெரிக்க மூட்டு இடைவெளிக் கட்டமைப்பு**

காண்க : மூட்டு இடைவெளிக் கட்டமைப்பு.

**அய்வேஜ்**

பணம், தொகை, சொத்து இருப்பு, பொருள்.

**அயல் நாட்டவர்க்கான பதிப்பு**

அயல் நாட்டவர்க்குப் பயன்படும் வகையில் ஒரு மொழியின் நூலைப் / சுவடியைப் பதிப்பித்தல்.

**அர்ப்பணம்**

காண்க : உரிமையுரை.

**அர்ஜீ**

விண்ணப்பம். அர்ஜி என்பது உருது மொழிச் சொல். தனக்கு மேல் பணிபுரியும் உயர் அலுவலர்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் கடிதம்.

**அரசாணை**

அரசாங்கத்திலிருந்து பிறப்பிக்கப் படும் ஆணை (Government Order).

**அரசிதழ்**

அரசு அறிக்கைகள், அரசு அலுவலர் நியமனங்கள், அறிவிப்புகள், ஆணைகள், சாதிகள் முதலியவற்றைக் கொண்ட அரசு வெளியீடு. இதில் வெளியிடப்பட்டவற்றிற்கு இவ்வெளியீடே சான்றாகும் (Gazette).

**அரசியல் நிலப்படம்**

நாட்டின் அரசாங்கப் பிரிவுகள்,

மாநில விவரங்கள் முதலியவற்றைக் காட்டும் படம் (Political map).

**அரசினர் கீழ்த்திசைக் கையெழுத்துப் பிரதிகள் நூல் நிலையம்**

சென்னைப் பல்கலைக்கழக நூலகக் கட்டிடத்தில் 1939இல் இது அமைக்கப்பட்டது. தமிழக அரசு இந் நூலகத்தின் மூலம் சுவடிகளைத் திரட்டி. முறைப்படுத்தி, சுவடிகளின் அகரவரிசைப் பட்டியல், விளக்க அட்டவணைகள் போன்றவற்றை வெளியிட்டுப் பாதுகாத்து வருகிறது. சில சுவடிகளை வெளியிட்டும் வருகிறது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், வடமொழி, உருது, அரபி, பெர்சியன், மராத்தி ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட பழைய ஏட்டுச் சுவடிகளும் காகிதக் கையெழுத்துப் பிரதிகளும் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன. தமிழகத்தைப் பொறுத்த அளவில் மிகப் பழமையான. பெரியதொரு சுவடிக் காப்பகமாக இது திகழ்ந்து வருகிறது (Government Oriental Manuscript Library - G.O.M.L.).

**அரசு அச்சகம்**

அரசினரால் நடத்தப்படும் அச்சகம் (Government Press).

**அரசு ஆவணக் காப்பகம்**

சென்னையிலுள்ள எழும்பூர் இரயில் நிலையத்தின் எதிரில் இது அமைந் துள்ளது. கி.பி. 17ஆம் நூற்றாண்டு முதலாக உள்ள தாள்கள், கடிதங்கள், பத்திரங்கள், நூல்கள் முதலானவை இங்கு உள்ளன. தமிழக அரசால் நிருவகிக்கப் பட்டு வரும் இந்தக் காப்பகத்தின் பல்வேறு கிளைகள் தமிழக மாவட்டத் தலைநகர் களில் செயல்பட்டு வருகின்றன (Government Archives).

**அமைல் அசிட்டேட்**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவை யான வேதிமப் பொருள்களுள் அமைல் அசிட்டேட் (Amyle acetate) என்பதும் ஒன்று.

**அமோனியம் ஹைடிரோ சல்பைடு**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவை யான வேதிமப் பொருள்களுள் அமைல் அசிட்டேட் (Ammonium hydro sulphide) என்பதும் ஒன்று.

**அமோனியா**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவை யான வேதிமப் பொருள்களுள் அமோனியா (Ammonia) என்பதும் ஒன்று.

**அரசு ஆவணங்கள்**

பொதுவானவை, அரசாண்மை அதிகாரச் செயல்கள், அச்செயல் குறிப்பு கள், இவற்றைக் காட்டும் ஆவணங்கள்; அதிகாரக் குழுக்கள், மன்றங்கள், இந்தியா வின் எப்பகுதியிலேனும் அல்லது அயல் நாடுகளில் உள்ள சட்டமன்ற – நீதிமன்ற – ஆட்சிமுறை அதிகாரிகள் ஆகியோரின் செயல்கள், செயற்குறிப்புகள் இவற்றைக் காட்டும் ஆவணங்கள்; தனியார் துறை யினரைக் குறித்து அரசினரால் வைக்கப் பெறும் பொதுக் குறிப்புகள் அரசு ஆவணங்கள் (Government documents) எனப்படும்.

**அரசு உதவித்தொகை**

அரசிடமிருந்து பெறப்படும் கடன் தொகை.

**அரசு கருவூலம்**

முத்திரை ஓலைகள், பத்திரங்கள் போன்றவற்றைப் பாதுகாத்து விற்பனை

செய்யும் பணியை இக்கருவூலம் (Government Treasury) செய்து வருகிறது.

**அரசுப் பதிவுரு**

அரசு நடவடிக்கைகளைப் பதிவு செய்யும் ஆவணம்.

**அரசுப் பிணையம்**

பாதுகாப்புக் கருதி அரசு தரப்பில் தருவது.

**அரசு மானியம் / நல்கை**

அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி.

**அரசு வழக்குப் பதிவேடு**

அரசிடமிருந்து நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் வழக்குகளைப் பதிவு செய்யும் ஏடு.

**அரண்தரு காப்பு**

ஓலைச்சுவடிகள் பலவும் பாதுகாப்பாக வைக்கப்பட்ட இடத்திற்கு அரண்தரு காப்பு என்று பெயர். சேக்கிழார் சுந்தரர் வரலாற்றைக் கூறுமிடத்தில் இச்சொல்லைக் கையாண்டுள்ளார்.

**அரபு மொழி இலக்கம்**

1, 2, 3, . . . . . .

**அரிக்காரன்**

தூதுவன் (Ambassodor).

**அரிகை**

அரிய வேலைப்பாடமைந்த துணி.

**அரிச்சுவடி**

அரி என்று தொடங்கும் நெடுங்கணக்குப் புத்தகம் அல்லது ஓலைக்கற்றை (the alphabet); சுவடி மூலமாகப் பெற்ற பெயர்; அகர வரிசையின் உயிர், மெய், உயிர்மெய் ஆகிய எழுத்துக்கள் அடங்கியவை; ஈரெழுத்துச் சொற்கள் முதலாக ஆறெழுத்துச் சொற்கள் ஈறாக உள்ள பாலபாடம் அடங்கியவை.

**அரிப்பு முறை**

உலோகங்களில் உருவங்களைச் செதுக்கும் முறை.

**அரிய கையெழுத்துச் சுவடித்துறை**

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் பல்வேறு துறைகளுள் இத்துறையும் ஒன்று. காகிதச் சுவடிகளின் ஆய்வுக்கென்று இந்தியாவிலேயே வேறெந்தப் பல்கலைக்கழகத்திலும் தனியொரு துறை இல்லை. அண்மை நூற்றாண்டுகளின் ஆய்வுகளாகத் திகழ்வன அரிய கையெழுத்துச் சுவடிகளாகும். 24–01–1982 அன்று தொடங்கப்பட்ட இத்துறையில் இயங்கி வரும் ஆவணக் காப்பகத்தில் அரிய காகிதச் சுவடிகள், அரிய அச்சு நூல்கள், கடிதங்கள், வருவாய்த்துறை மற்றும் முத்திரை ஆவணங்கள், வரைபடங்கள், 900க்கும் மேற்பட்ட மோடி ஆவணக் கட்டுகள் சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப் பட்டு வருகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழகத்தின் அரசியல், சமுதாயம், பொருளாதாரம், பண்பாடு, கலை, இலக்கியம் முதலானவற்றை வெளிக்கொணரும் வகையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல நூல்கள் வெளியிடப்பட்டும் உள்ளன.

**அரிய சுவடி**

ஓர் ஆசிரியன் எழுதிய முதல் மூலச் சுவடி; நூல்கள், கட்டுரைகள் போன்றவை அச்சாகி வெளிவந்த நிலையில் அவற்றின் மூலச்சுவடிகள்; ஆசிரியர் இறந்த பின்னர்க் கிடைத்த சுவடி; படியெடுக்கப் பெற்ற

சுவடியின் மூலச்சுவடி கிடைக்காமல் அழிந்து போனபின், படி எடுக்கப்பெற்ற சுவடி (மூலச்சுவடியாக மாறும் நிலையில் அச்சுவடி அரிய சுவடியாகும்); நூல் ஒன்று மறுபதிப்பு ஆகாமல் ஒரேயொரு நூல் மட்டும் கிடைக்குமாயின் அந்நூல் (அரிய சுவடியாகும்); தட்டச்சு, உருளச்சு, படி எடுக்கப்பட்ட சுவடிகள் போன்றவை காலப் போக்கில் அரிய சுவடிகளாக (Rare Manuscripts) மாறலாம்.

**அருஞ்சொல் அகராதி**

சுவடிப் பதிப்புப் பணிகளில் ஒன்று அருஞ்சொல் அகராதி (dictionary) தயாரித்தல். நூல் அல்லது சுவடியில் இடம்பெற்றுள்ள அரிய சொற்களைத் தொகுத்து அவற்றை அகர வரிசைப்படுத்தி அமைத்தல்.

**அருஞ்சொல் விளக்கக் கோவை**

காண்க : கலைச்சொல். அகரநிரல், கலைச்சொற்கள் (Glossary).

**அருதி ஆவணம்**

அசையும் பொருள், அசையாப் பொருள் பற்றிய நலன்கள் வழிவகை பற்றிய அல்லது சேரும் வகையை அருதி செய்யும் அல்லது அதற்கான ஒப்புதலைக் காட்டும் முறை ஆவணம் (settlement deed).

**அரும்பதம்**

பொருள் தெரியாச் சொல்லுக்கு அரும்பதம் என்று பெயர்.

**அரும்பதவுரை**

அரிய சொல்லுக்கு உரை எழுதுதல்.

**அரும்பொருள்**

எளிதில் விளங்காத பொருள்.

**அரும்பொருள் அகராதி**

அரும்பொருள் அகராதி என்பதற்குத் தனியொரு வரையறை இருப்பதாகத் தெரியவில்லை. அரிய வழக்கங்கள், பொன் மொழிகள் ஆகியவற்றின் திரட்சியை அரும் பொருள் அகராதி எனக் கொள்ளலாம்.

**அரேபிய எண்கள்**

1, 2, 3, . . . . . .

**அரைக்காணி**

ஓர் அளவை. கீழ்வாய்க்கணக்கு. நூற்றறுபதில் ஒரு பங்கு (1/160).

**அரைக்கால்**

ஓர் அளவை. கீழ்வாய்க்கணக்கு. எட்டில் ஒரு பங்கு (1/8).

**அரைத்தலைப்பு**

ஒரு நூலின் கட்டுமான அட்டைக்கும் தலைப்புப் பக்கத்திற்கும் இடையில் அந்த நூலைக் காப்பதற்காக ஒரு தாள் காலியாக விடப்படும். இது விடுதித் தாள் எனப்படும். மற்றொரு தனித் தாளில் நூல் தலைப்பு மட்டும் அச்சிடப்பட்டுச் சேர்ப்பது அரைத் தலைப்பு எனப்படும். தலைப்புப் பக்கத்தைப் பாதுகாத்தலும். அழகுபடுத்தலும் அரைத் தலைப்புப் பக்கத்தின் பயனாகும்.

**அரைத்தோல் கட்டமைப்பு**

முதுகுத்தண்டுப் பகுதியும் மூலைகளும் மட்டும் தோலினால் போர்த்தப்பட்டு மற்றப் பகுதிகள் துணியினாலோ காகிதத்தாலோ மூடப்படுவது அரைத்தோல் கட்டமைப்பாகும் (half leather binding).

**அரை நாழி**

கைந்நாழி என்னும் நாட்டுப்படியில் பாதியளவு, உரி.

**அரைப்பணம்**

இடத்திற்கேற்ப வேறுபட்ட ஒரு பண மதிப்பில் பாதி. ஒன்றே காலணா (3¾ துட்டு).

**அரைப்புள்ளி**

ஓர் எழுவாயினை உடைய தொடர் பல முடிவுகளைப் பெற்று வருமிடங்களில் அரைப்புள்ளியிட வேண்டும். அம் முடிவு சொற்கள். வாக்கிய முடிவுகள் அல்ல என்பதை அரைப்புள்ளிகள் (semicolon. a punctuation mark) புலப்படுத்தும். இது ; என்ற வடிவினது.

**அரை மா**

கீழ்வாய்க்கணக்கு. நாற்பதில் ஒரு பங்கு (1/40). மா என்றால் அளவாகும் (measure).

**அரையெழுத்து**

நெடுங்கணக்கைப் பற்றிய சிற்றறிவு.

**அலம்பல்**

ஆரவாரம், உபத்திரம்.

**அலுவல்முறைக் கடிதம்**

அலுவல் தொடர்பாக எழுதப்படும் கடிதம்.

**அலுவல் முன்பணம்**

அலுவல் தொடர்பானவற்றுக்குப் பெறப்படும் முன்பணத் தொகை.

**அலுவலகப் படி**

வரைவு, மேல் அலுவலர் வரையில் சென்று, வெளியில் அனுப்புவதற்குரிய நிலையில் ஒப்பம் பெறப்படும் படி. வெளியில் அனுப்ப வேண்டிய தாளினுடைய அலுவலக வடிவம் என்று அது பொருள்படும். இதனைக் கைப்படி எனவும் கூறுவதுண்டு.

**அவகாசமுறி**

காண்க : அம்சபத்திரம்.

**அவதாரிகை**

முன்னுரை (preface).

**அவாலத்து**

மாறுதல், மாற்றுதல்.

**அழுத்தகம்**

அச்சிடும் அச்சகத்தை (Printing Press) அழுத்தகம் என்று இலங்கையில் கூறுவர்.

**அழுத்தப் பொறிப்பு**

தோல் அல்லது காலிக்கோ அட்டையின்மீது நூல் தலைப்பு, ஆசிரியர் அல்லது பதிப்பகப் பெயர், பதிப்பக நிறுவன அடையாளம் அல்லது பதிப்பகக் குறிப் பெழுத்து என்பவற்றைப் புடைப்புருவமாக அழுத்தி, எழுத்துக்கள் மேடும் பள்ளமும் அமையுமாறு பதிப்பதற்கு அழுத்தப் பொறிப்பு (embossment) என்று பெயர்.

**அழைப்புப் பத்திரம்**

அழைப்பு மடல், அழைப்போலை. கிறித்தவச் சபைக்குக் குருவாகும்படி அழைக்கும் ஓலை.

**அழைப்பு மடல்**

காண்க : அழைப்புப் பத்திரம்.

**அழைப்போலை**

காண்க : அழைப்புப் பத்திரம்.

**அளர் நிலம்**

களர் நிலம்.

**அளவி**

காண்க : அளவு.

**அளவு**

எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை அளவுகளுள் ஒன்று.

**அளவுகருவி**

அளக்க உதவும் அளவைக்கருவி.

**அளவுகோல்**

அளக்கும் தடி.

**அளவு நாழி**

முத்திரைப்படி.

**அளவுப்பதிவு**

வயல்களை அளந்து பதிவு செய்தல். (அளவு – பைமாஷ்).

**அளவு ஜாடி**

ஆவணப் பாதுகாப்பிற்குத் தேவையான கருவிகளுள் அளவு ஜாடியும் (Measuring cylinder) ஒன்று.

**அளவை**

அளவு. எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை அளவைகளுள் ஒன்று. காண்க : கணக்கதிகாரம்.

**அளவை நாடா**

சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றை அளப்பதற்கு உதவும்.

**அளவை வாய்பாடு**

கணித நூற்சுவடிகளுள் ஒன்று.

**அறவோலை**

கையடை ஆவணம், இனாம் சாசனம், தருமங்கள் அல்லது அறச்செயல்களைக் குறிக்கும் ஆவணம் (Trust deed).

**அறிக்கை**

அறிவிப்பு (notice), வாக்குமூலம் (statement).

**அறிக்கைப் பத்திரம்**

எழுத்து மூலமான விளம்பரம்.

**அறிக்கை பண்ணுதல்**

விளம்பரப்படுத்துதல்.

**அறிக்கையோலை**

செய்திக் கடிதம்.

**அறிக்கை வாசித்தல்**

கிறித்தவ தேவாலயத்தில் ஓலை கூறுதல், திருமண அறிக்கை விளம்புதல்.

**அறிவிக்கை**

காண்க : அறிவிப்பு (notice).

**அறிவிப்பாளர்**

ஒரு நிகழ்ச்சியை வரிசைப்படி அல்லது முறைப்படி அறிவிப்பவர்.

**அறிவிப்பு**

விளம்பரம்.

**அறிவிப்புப் பத்திரம்**

ஒருவருக்குரிய தொகை அல்லது பொருளைப் பெற்றுக் கொள்ள வரும்படி அறிவிப்பினைத் தருவது.

**அறிவியல் அகராதி**

அறிவியல் தொடர்பானவற்றை விளக்கி அகரவரிசைப்படுத்திக் கூறுவது.

**அறுக்காறு**

ஒற்றன், அரசவைத் தூதுவன். ஹர்க்காரா என்ற சொல் மருவி அறுக்காறு என வழங்கப்படுகிறது.

**அறுக்குமுறி**

மனைவியைத் தள்ளிவிடுகைப் பத்திரம்.

**அறுதி ஆவணம்**

அசையும் பொருள். அசையாப் பொருள் பற்றிய நலன்கள் வழிவழி இறங்கும் வகையை அல்லது சேரும் வகையை அறுதி செய்யும் அல்லது அதற்கான ஒப்புதலைக் காட்டும் முறையாவணம். இதில் உயில் ஆவணம் சேர்வதில்லை. இதை நன்கொடை ஆவணம் எனவும் அழைப்பர்.

**அறுதிக்கிரயம்**

முடிவான விலை (final sale).

**அறுதிச் சாசனம்**

விலையாவணம் (sale document).

**அறுதிச் சீட்டு**

அறுதி முறி, அறுதி ஆவணம். நிலபுலம் முதலான சொத்துக்களின் முடிவான விலை.

**அறுதி முறி**

தீர்ந்த கணக்குச் சீட்டு.

**அறுதி முறி அறையோலை**

தீர்ந்துபோன (காலாவதியான) பத்திரம். ஒப்பந்தக் காலம் முடிந்து உரிமையற்றுப் போன ஒப்பந்தச் சீட்டு ஓலை.

**அறுதியுறுதி**

அறுதிச் சீட்டு.

**அறுப்புச் சீட்டு**

வேளாண்மை நிலத்தில் கதிர் அறுக்கக் கொடுக்கும் உத்தரவு முறி. தானிய அறுவடை செய்ய அனுமதிச் சீட்டு.

**அறுமுறி**

உடன்படிக்கை ஓலை (பத்திரம்).

**அறுவரி**

தவணையில் செலுத்தும் வரி.

**அறையோலை**

வரையறை செய்யும் பட்டயம் (சாசனம்).

**அன்புரை**

காண்க : உரிமையுரை.

**அன்னீதம்**

தவறு, நியாயமற்ற.

**அனாதித்தரிசு**

நெடுங்காலம் பயிரிடப்படாத நிலம்.

**அனாதித்திட்டு**

நெடுங்காலம் பயிரிடப்படாத நிலம்.

**அனாதிப் பஞ்சர்**

நெடுங்காலம் பயிரிடப்படாத நிலம்.

**அனாதி பீடு**

நெடுங்காலம் பயிரிடப்படாத நிலம்.

**அனுபந்தம்**

பொருளடக்கம் (content).

**அனுபோகம்**

உரிமையை அனுபவித்தல்.

**அனுமரணம்**

உடன்கட்டை ஏறுதல் (sati).

# ஆ

**ஆக்கியோன்**

நூல், நாடகம், புதினம், சிறுகதை, திரைப்படம் போன்றவற்றை உருவாக்கிய படைப்பாளர்; நூல் எழுதுபவர் (Author).

**ஆக்கினைப் பத்திரம்**

அரசனது கட்டளைத் திருமுகம்.

**ஆக்சாலிக் அமிலம்**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் ஆக்சாலிக் அமிலம் (Oxalic acid) என்பதும் ஒன்றாகும்.

**ஆங்கீரச**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் ஆறாவதாண்டு.

**ஆசியவியல் நிறுவனம்**

அண்மைக் காலத்தில் ஜப்பானியர் உதவியுடன் சென்னையில் உருவாக்கப் பட்ட நிறுவனம். ஓலைச்சுவடிகள் பல வற்றைத் தொகுத்துப் பாதுகாத்து வருவ துடன் அவற்றை ஆய்வு நோக்கில் பதிப் பித்து வெளியிட்டு வருவதும் இந்நிறுவனத் தின் நோக்கங்களில் ஒன்றாகும்.

**ஆசியுரை**

காண்க : அணிந்துரை.

**ஆசிரியர்**

நூல், சுவடி, கட்டுரை போன்ற வற்றைப் பதிப்பித்தவர் (Editor).

**ஆசிரியர் சங்கம்**

கி.பி. 1884இல் சர் வால்டர் பெசண்ட் என்பவரால் முதன்முதல் தோற்றுவிக்கப் பட்டது.

**ஆசிரியர் நூல்பட்டி**

நூல் எழுதிய ஆசிரியர்களின் அகர வரிசைப் பட்டியல் (Author catalogue).

**ஆசிரியர் பட்டி**

காண்க : ஆசிரியர் நூல்பட்டி.

**ஆசிரியர் பெயர் வரிசை**

நூல் எழுதிய அல்லது பதிப்பித்த ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியலை அகர வரிசை முறையில் தொகுப்பது (Author index).

**ஆசிரியர் பெயரில்லாத தலைப்பு**

பெயர் தெரியாமல் உள்ள நூல் ஆசிரியர் எழுதிய நூல்களின் பட்டியல்.

**ஆசிரியர் விவரம்**

அகரவரிசைப் பட்டியலின்படி அமைந்த சுவடி / நூல்களின் ஆசிரியர் விவரம்.

**ஆட்சியர் பிணைமுறி**

வேறொருவர் சொத்தை ஆட்சி செய்வதற்காக ஒப்படைக்கப் பெற்றவரால் கடமைகளை ஒழுங்காகச் செய்வதற்குக் கொடுக்கப்பட்ட பிணைமுறி.

**ஆடம்**

இருபது படி கொண்ட அளவை.

**ஆடம்பரப் பதிப்பு**

படிக்கின்றவர் குறிப்புகள் எழுது வதற்காக நான்கு ஓரங்களிலும் அதிகமான அளவு இடம் விட்டுக் கட்டமைப்புச் செய்யப் பட்ட பதிப்பு.

**ஆண்டுக்குறிப்பு வரலாறு**

நிகழ்வுகளை ஆண்டுக்கு ஆண்டுப் பதிவு செய்யும் வரலாற்றுக் குறிப்பேடு.

**ஆண்டறிக்கை**

ஆண்டுதோறும் அந்தந்தத் துறையின் செயல்பாடுகள் குறித்து வெளியிடப்படும் அறிக்கை (Annual report).

**ஆண்டுத் தகவல் புத்தகம்**

ஆண்டுதோறும், உலகு சார்ந்த மற்றும் உள்நாடு சார்ந்த தகவல்கள் பலவற்றையும் அடிப்படைப் புள்ளி விவரங்களுடன் தொகுத்து வெளியிடும் நூல். சான்று : தினமலர் இயர்புக், மலையாள மனோரமா இயர்புக்.

**ஆண்டு நிலத்தீர்வைத் தவணை**

கிஸ்தி, உருதுச்சொல். நிலத்தீர்வை.

**ஆணி**

ஓலைச்சுவடிகள் எழுதுவதற்குப் பயன்படுத்தப்படுவது ஆணி (stylus) ஆகும். காண்க : எழுத்தாணி.

**ஆணை உறுதி ஆவணம்**

ஆணை உறுதி ஏற்கும் அதிகாரம் பெற்றவர் முன், மெய்யுறுதியாகவும் எழுத்து மூலமாகவும் அளிக்கப்படும் வாக்குமூலம். உறுதிமொழிப் பத்திரம் (affidavit) எனவும் அழைக்கப்படும்.

**ஆணைக்கு**

மேலதிகாரியிடம் இசைவு பெறுவதற்காக அனுப்பப்படும் கடித வரைவு.

**ஆணையோலை**

அரசனது கட்டளைத் திருமுகம்.

**ஆதாரச் சான்று**

காண்க : ஆவணங்கள்.

**ஆதார மூலம்**

காண்க : ஆவணங்கள்.

**ஆதாரப் பிரதி**

காண்க : ஊக ஆதாரப்பிரதி (arche type).

**ஆதீனச் சுவடிகள்**

தமிழகத்தில் சைவம், வைணவம், கிறித்தவம், இசுலாம் போன்ற சமயங்களைச் சார்ந்த நிறுவனங்கள் பல உள்ளன. இந்நிறுவனங்கள் தங்கள் சமயத்தைச் சார்ந்த சுவடிகளையும் ஆவணங்களையும் சேகரித்துப் பாதுகாத்து வருகின்றன. திருவாவடுதுறை ஆதீனம், தருமையாதீனம், திருப்பனந்தாள் காசிமடம், மயிலம் பொம்மபுர ஆதீனம், மதுரைத் திருஞானசம்பந்தர் திருமடம், கோவை பேரூர் ஆதீனம், காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம், குன்றக்குடி ஆதீனம் போன்ற ஆதீனங்களில் ஓலைச்சுவடிகள், காகிதச் சுவடிகள், ஆவணங்கள் சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. வேதம், ஆகமம், புராணம், சோதிடம், தத்துவம், இலக்கணம், இலக்கியம் முதலான பலவகை நூல்கள் தமிழ், வடமொழி, தெலுங்கு, மலையாளம் முதலான மொழிகளில் தமிழ், கிரந்தம், வடமொழி, தெலுங்கு ஆகிய எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன.

**ஆம்னிபஸ் பதிப்பு**

'ஆம்னிபஸ்' என்பது ஆங்கில மொழிச் சொல்லாகும். ஆசிரியர் ஒருவருடைய படைப்புகளில் ஏற்கெனவே வெளிவந்தவற்றை உட்கொண்டு, அனைவரும் வாங்கக்கூடிய அளவில் குறைந்த விலைக்குக் கிடைக்கும் வகையில் ஒரே தொகுதி நூலாக வெளியிடுவது.

**ஆய்வகம்**

அறிவியல் முறைப்படிச் சோதனை செய்யும் கூடம் (Laboratory).

**ஆய்வடங்கல்**

ஆய்விற்குத் துணைபுரிந்த நூல்களையும் சுவடிகளையும் தொகுத்துக் காட்டும் அட்டவணை. இதில் நூல், ஆசிரியர், வெளியீடு, ஆண்டு முதலான விளக்கங்கள் அமையும் (bibliography).

**ஆய்வறிக்கை**

விரிவான முறையில் எழுதப்படும் அறிக்கை (inspection report).

**ஆய்வுத்துணைக்கருவி**

ஆய்வுக்குத் துணையாக நின்றவற்றை விளக்கிக் கூறுவது.

**ஆய்வுப் பணியாளர்**

ஆய்வுக்கு உறுதுணை செய்பவர்.

**ஆய்வுப்பொருள்**

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள் (subject matter).

**ஆய்வேட்டுச் சுருக்கம்**

முனைவர், முதுமுனைவர் ஆகிய பட்டங்கள் பெறுவதற்காக அளிக்கப்படும் ஆய்வேட்டின் சுருக்கம் (synopsis).

**ஆயக்கணக்கு**

கிராமத்தின் மொத்த நிலஅளவுக் கணக்கு.

**ஆயக்கட்டு**

ஊரிலுள்ள மொத்த நிலம்.

**ஆயத்துறை**

சுங்கச்சாவடி (Custom's office).

**ஆயம்**

காண்க : சுங்கம் (Custom).

**ஆயுள்கால நிலச் சொத்துரிமை**

சொத்தில் ஒருவருக்கு ஆயுள் காலம் வரை உள்ள பாத்தியதை.

**ஆர்சனிக் ட்ரை ஆக்சைடு**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் ஆர்சனிக் ட்ரை ஆக்சைடு (Arsenic tri oxide) என்பதும் ஒன்று.

**ஆர்ட் காகிதம்**

'ஆர்ட்' என்பது ஆங்கில மொழிச் சொல். வழவழப்பாக இருக்கும் தாள் (art paper).

**ஆர்ட் போர்டு**

இது ஆங்கில மொழிச் சொல். நூலின் வண்ண அட்டைகளுக்குப் பயன்படும் வழவழப்பான மேற்பரப்புடைய அட்டை (art board).

**ஆராய்ச்சிப் பதிப்பு**

திருத்தப் பதிப்பு முறைகளுடன் நூலின் முழுத்தன்மையையும் ஆய்ந்து நூலில் காணப்பெறும் சிறப்புச் செய்திகள், நூலாசிரியர், உரையாசிரியர், பாட்டுடைத் தலைவர் ஆகியோர் வரலாறுகள், ஆய்வாளருக்குப் பயன்படும் அருஞ்சொல் முதலியவற்றின் அகரநிரல்கள், பதிப்பு வரலாறு ஆகிய எல்லா வகையான செய்திகளையும் தன்னகத்து அடக்கியதாக அமையும் (Critical edition).

**ஆல்கஹால்**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் ஆல்கஹால் (Alcohol) என்பதும் ஒன்று.

**ஆல்டின் அச்சுமுறை**

'ஆல்டின்' என்பது ஆங்கில மொழிச்

சொல். இது பிரெஞ்சு அச்சடிப்பாளர்கள் பிரான்சில் அறிமுகப்படுத்திய அச்சுமுறை.

**ஆவண அறை**

ஆவணங்கள், சுவடிகள் போன்ற வற்றைப் பாதுகாத்து வைக்கும் அறை (Record room).

**ஆவண ஆய்வு வல்லுநர்**

ஆவணங்கள் தொடர்பான அனைத்தையும் விரல்நுனியில் அறிந்து வைத்திருப்பவர் (Document expert).

**ஆவண எழுத்தர்**

அலுவலகங்களிலும், ஆவணக் காப்பகங்களிலும் ஆவணங்களை முறைப் படிப் பராமரித்துப் பதிவு செய்யும் அலுவலர் (Record clerk).

**ஆவணக் கடிதம்**

கடித அமைப்பில் இருக்கும் ஆவணம் (letter document).

**ஆவணக்களம்**

பத்திரங்களைப் பதிவு செய்யும் அலுவலகம் (Registration office).

**ஆவணக்களரி**

காண்க : ஆவணக்களம்.

**ஆவணக் காப்பகம்**

பொதுவான அல்லது நிறுவனங் களுக்குரிய ஆவணங்களைத் தேடி வைத் திருக்கக்கூடிய இடம். அரசு, நகரம், குடும்பம் ஆகியவற்றின் பொதுப் பத்திரங்கள் வைத்துக் காப்பற்றப்படும் இடம். சுவடிக் கூடம் எனவும் அழைக்கப்படும் (Archives department, Record Office).

**ஆவணக் காப்பர்**

ஆவணங்களை எவரும் ஆவண அறையிலிருந்து அனுமதி இல்லாமல் கொண்டு சென்று விடாமல் அவற்றைக் காப்பவர் (Record Keeper).

**ஆவணக் காப்பாளர்**

ஆவணங்களுக்கு வரும் பழுதுகளை யும், நோய்களையும் தடுத்துக் காப்பவர் (Curator of Records).

**ஆவணக் கோப்பு**

ஆவணங்களை வரிசைப்படுத்திப் பாதுகாத்து வைக்கும் முறை (Archive file).

**ஆவணங்கள்**

அரசு அலுவலகங்களில் கோப்புகள் என்று சொல்லப்படுபவையும் அரசு நடவடிக்கைகள், தீர்மானங்கள் முதலான வையும் ஆவணங்கள் என்று சொல்லப்படு கின்றன. எழுத்துருவப் பதிவுகளுக்கு ஆவணம் என்று பெயர். ஆவணம் என்பதற்கு அடையாளம், கடைத்தெரு, முறிச்சீட்டு, அடிமைத்தனம், உரிமை என்ற பொருள்களை அகராதி குறிப்பிடுகிறது. 'document' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஆவணம், பத்திரம், ஆதாரமூலம், ஆதாரச் சான்று என்ற பொருள்களை ஆங்கிலம் – தமிழ் அகராதி கூறுகிறது.

**ஆவணச் சாட்சி**

காண்க : சான்றுக் கையொப்பம் இடுபவர்.

**ஆவணச் சான்று**

சட்டப்படி நீதிமன்றத்தால் சான்று என்று கொள்ளத்தக்க ஆவணங்கள் (documentary evidence).

**ஆவணத்துணி**

ஆவணக் காப்பகங்களில் ஆவணங்கள் நீலநிறத்துணியால் கட்டி வைக்கப்படும். அவ்வகைத் துணியால் கட்டப்பட்ட தாள்களைத் 'தஸ்தரக்கட்டு' என அழைப்பர்.

**ஆவண நூலகம்**

ஆவணங்கள் தொகுத்துப் பாது காத்து வைக்குமிடம்.

**ஆவணப் பதிவேடு**

ஆவண அறையில் வைக்கப்படும் ஆவணங்களை முறைப்படுத்திப் பதிவு செய்யும் பதிவேடு. இப்பதிவேடு நிலை ஆவணப் பதிவேடு, தற்காலிக ஆவணப் பதிவேடு என இருவகைப்படும்.

**ஆவணம்**

எழுத்துருவப் பதிவுகள் யாவும் ஆவணங்களாகும். பதிவுச் சான்றுகள். காரியம் ஒன்றிற்குச் சான்றாகப் பயன் படுமாறு கருதிய பயன்படத்தக்க நிலையிலோ ஒரு பொருளின்மீது பொறிக்கப் பட்டுள்ள எழுத்துக்கள், எண்கள், குறிகள். இவற்றின் வழி குறிக்கப்படுவது அல்லது விவரிக்கப்படுவது. ஆவணம் என்பதற்கு அடையாளம், முறிச்சீட்டு, அடிமைத்தனம், உரிமை என்ற பொருள்களைத் தமிழ் அகராதிகள் குறிப்பிடுகின்றன.

**ஆவணம் தாக்கல் செய்தல்**

நீதிமன்றத்தில் முறையாகத் தேவைப்படும் ஆவணங்களைத் தாக்கல் செய்தல்.

**ஆவணம் மாற்றுதல்**

கடன் உறுதிச்சீட்டு, மாற்று ஆவணம், காசோலை என்ற இவற்றை ஒருவருக்கு மாற்றி அவரை அதற்கு உடையவராக்குதல். இது ஆவணம் மாற்றுதல் (negotiation) எனப்படும்.

**ஆவண மாக்கள்**

பிரமாணம் வாங்குவோர்.

**ஆவண வரைவு**

திருந்தா நிலையில் உள்ள ஓர் ஆவணம் அதன் அடிப்படையில் திருந்திய ஆவணம் எழுதப்பெறும்.

**ஆவணவோலை**

உரிமைப்பத்திரம்.

**ஆள் ஓலை**

அடிமை வழக்கத்தைக் குறிப்பது.

**ஆளிவிதை எண்ணெய்**

மை தயாரிக்கப் பயன்படும் பொருள் களுள் ஒன்று.

**ஆனந்த**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் நாற்பத்தெட்டாவது ஆண்டு.

# இ

**இசுக்கொயர்**

மரியாதையைக் குறிக்கும் சொல். தஞ்சை மராத்தியர் கால ஆவணங்களில் இச்சொல் மிகுதியாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

**இசுபசால்**

மேல் முறையீட்டுக்குரிய சபை.

**இசையோடு கூடிய கதை**

நாட்டுப்புறப் பாடல். அதாவது பாலட் (ballad) என்று கூறப்படும்.

**இசைவுத்தீட்டு**

உடன்படிக்கைச் சாசனம்.

**இசைவோலை**

உடன்படிக்கைச் சாசனம்.

**இடம்பெயராச் சொத்து**

அசையாச் சொத்து என்பது நிலம். நிலம் தரும் பயன்கள் நிலத்தொடு நிலையாகச் சேர்ந்து நிற்கும் பொருள்கள். அவற்றுடன் நிலையாகப் பொருத்தப்பெற்ற பொருள்கள் ஆகியவற்றைக் குறிப்பதாகும்.

**இடைச்செருகல்**

சுவடிகளுள் இடைச்செருகல் (interpretation) பல நிகழ்ந்துள்ளன. மூலச்சுவடியிலிருந்து படி யெடுக்கும்போது செய்த சேர்க்கை அல்லது திருத்தம்.

**இண்டார்ஸ்**

குறிப்பு.

**இணை**

காண்க : சுவடி.

**இணைகோடு**

சுவடியை நூலாகப் பதிப்பிக்கும் பொழுது கையாளப்படும் பலவகைக் குறியீடுகளுள் இணைகோடும் (hypen) (–) ஒன்று. பாடல்களில் இக்குறியீடு பெரும்பாலும் கையாளப்படுவதுண்டு.

**இணைத் தயாரிப்பு**

மிகுந்த பொருட்செலவு ஏற்படும் நூலை அல்லது சுவடியை இருவர் அல்லது இரு நிறுவனங்கள் இணைந்து ஒப்பந்தம் செய்து வெளியிடுவது (Co-production).

**இணைப் பதிப்பு**

ஒரே நூலுக்கு இரண்டு நாடுகளில் ஒரு நேரத்தில் வெளியாகும் பதிப்பு. இவை வெவ்வேறான பதிப்பகங்களால் வெளியிடப்படும். இணை வெளியீடு (Co-edition) எனவும் அழைக்கப்படும்.

**இணைப்பு**

1. ஆய்வேட்டில் அல்லது நூலில் தொடர்புடையனவற்றைப் பின்னிணைப்புகளாகச் சேர்த்தல்.

2. சேர்க்கை எனவும் அழைக்கப்படும். நூல் அச்சிட்டு முடிந்த பின்னர்க் கிடைத்த புதிய செய்திகளைத் தனியாக அச்சிட்டுச் சேர்த்தல்.

**இணைப்புத்தாள்**

நூலின் மேலுறையையும் நூலட்டையையும் நூலுடன் பிணைத்து வைக்கும் தாள். ஆங்கிலத்தில் 'side paper' என அழைக்கப்படுகிறது.

**இணை வெளியீடு**

காண்க : இணைப்பதிப்பு.

**இதழ்**

'Folicum' என்ற இலத்தின் மொழிச் சொல்லிலிருந்து 'Foil' என்ற சொல் பிறந்தது. தனித்தாளைக் (sheet) குறிக்கும்.

**இதழ் அச்சிடும் தாள்**

நாள், வார, மாத இதழ்கள் அச்சிடுவதற்குரிய தாள் (newsprint).

**இதழ்களின் பதிப்புமுறை**

நாள், வார, மாத இதழ்களின் பதிப்புமுறை (news editing).

**இந்திய அரசிதழ்**

மத்திய அரசினரால் வெளியிடப்படும் அரசிதழ். அரசின் ஆணைகள், கொள்கைகள் போன்றவை இதில் வெளியிடப்படும்.

**இந்திய அரசுப்பணி**

இந்தியக் குடிமுறை ஆட்சிப்பணி.

**இந்திய அலுவலக நூலகம்**

இலண்டனில் இந்நூலகம் உள்ளது. ஆர்ம் என்பாரின் சுவடிகள், வெல்லெஸ்லி தாள் சுவடிகள், பிரெஞ்சு இந்திய ஆவணங்கள், தொழிற்சாலை ஆவணங்கள், கடல்துறை ஆவணங்கள், கிழக்கிந்தியத் தொகுப்புகள் முதலான பல்வேறு வகைப்பட்ட ஆவணங்கள் இங்கு உள்ளன. இந்த ஆவணங்களில் இந்திய நாட்டில் கி.பி. 17, 18 ஆகிய நூற்றாண்டுகளில் நிகழ்ந்த பல்வேறு வகையான அரசியல் வரலாறு, சமுதாயநிலை, கல்வி நிலை, மகளிர்நிலை, சதி தொடர்பான செய்திகள் முதலான வற்றைக் காணமுடிகிறது. பல்வேறு ஆவணங்கள் நுண்படமாக எடுக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**இந்திய உரிமைப் பதிவுச்சட்டம்**

இச்சட்டம் 1957இல் மத்திய அரசால் உருவாக்கப்பட்டு 1958இல் செயல்படுத்தப்பட்டது. இதன் தலைமை யகம் புதுதில்லியில் உள்ளது. ஒரு நூலின் ஆசிரியரோ, பதிப்பாளரோ, உரிமையாள ரோ, உரிமையைப் பெறும் அக்கறையுள்ள ஒருவரோ புதுதில்லியிலுள்ள உரிமைப் பதிவு அலுவலகப் பதிவாளருக்கு உரிய விண்ணப்பப் படிவத்தை நிறைவு செய்து அனுப்ப வேண்டும்.

**இந்திய விவரச் சுவடி**

மைய அரசிலிருந்து வெளியிடப் படும் பத்திரிகை (India Gazetteer).

**இந்தியன் மை**

காகிதச் சுவடிகளில் பயன்படுத்தப் படும் மையாகும். இது சீனாமை எனவும் அழைக்கப்படும்.

**இமாரத்தி மகால்**

பழுது பார்த்தலாகிய வேலையைக் கவனிக்கும் அலுவலகம்.

**இயல்**

ஆய்வேடு, நூல் போன்றவற்றில் இடம்பெறும்.

**இயல் தலைப்பு**

ஆய்வேடு, நூல் போன்றவற்றில் இடம்பெறும் தலைப்புகள்.

**இயற்கையமைப்பு நிலப்படம்**

ஒரு நாட்டின் ஆறுகள், கடல்கள், மலைகள் ஆகியவற்றைக் காட்டும் நிலப் படம்.

**இரகசியப் பதிவணங்கள்**

கமுக்கமாகக் கையாளப்படும் முக்கிய ஆவணங்கள் (Confidential records).

**இரசீது**

ஒப்புகைச்சீட்டு (receipt). பணம் அல்லது சுவடிகள் அல்லது ஆவணங்களைப் பெற்றுக் கொண்டதற்கான எழுத்துமூலம் ஒப்புதல்.

**இரட்டை எழுத்துக்கள்**

கூட்டாகச் சேர்ந்து வரும் எழுத்துக் கள். சுவடிகளில் பெரும்பாலான எழுத்துக்கள் கூட்டெழுத்துக்களாகவே எழுதப்பட்டுள்ளன.

**இரட்டை மேற்கோள்**

பாடல், மேற்கோள் போன்றவற்றைக் குறிப்பதற்காகக் கையாளப்படும் ("") குறி.

**இரட்டைப் பாய்மரச் சுலுப்பு**

இரண்டு பாய்மரங்களைத் தாங்கிய சிறு கப்பல்.

**இரண்டாம் படி**

செலுத்துச் சீட்டில் இரண்டாவதாக இருக்கும் பகுதி (duplicate).

**இரத்தாட்சி**

தமிழ் அறுபது ஆண்டில் ஐம்பத் தெட்டாவது ஆண்டு.

**இராசிக் கணக்கு**

கூட்டு வணிகத்தில் கூட்டாளிகள் தனித்தனியாகக் கணக்கிடும் இலாப நட்டக் கணக்கு.

**இராட்சத**

அறுபது தமிழாண்டில் நாற்பத் தொன்பதாவது ஆண்டு.

**இராமபாணம்**

ஏட்டுச் சுவடிகளைத் துளைத்துக் கெடுக்கும் ஒருவகைப் பூச்சி. தாள் சுவடிகளையும் இப்பூச்சிகள் பாழ்படுத்தும். சுவடிகளைப் பாதிக்கும் உயிரியல் காரணிகளுள் இராமபாணமும் (white ants) ஒன்று.

**இராயசம்**

விசயநகர, நாயக்கர் ஆட்சிக் காலத்தில் ஓலை எழுதும் பணியை மேற் கொண்டவர்கள் இராயசம் என அழைக்கப் பெற்றனர். எழுத்தர் (clerk).

**இராயல் காகித ஆலை**

ஹொரா மாகாணத்திலுள்ள பாலி என்னுமிடத்தில் 1867 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட காகித ஆலை.

**இருசால் நாமா**

தண்டற்பணம் அரசுக் கருவூலத்தில் செலுத்தியதற்கான விவரக் கணக்கு.

**இருகுழல் அச்சுப்பொறி**

இரண்டு குழல்களைக் கொண்ட அச்சியந்திரம்.

**இருப்புப் பதிவேடு**

ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப் பட்டுள்ள சுவடிகள், ஆவணங்கள் போன்ற வற்றைப் பதிவு செய்தவற்றின் இருப்புக் கணக்குப் பதிவேடு (stock register).

**இருபுறமும் அச்சடிக்கும் பொறி**

அச்சியந்திர வகைகளுள் ஒன்று (Perfecting Press).

**இருமொழி அகரநிரல்**

காண்க : அகராதி.

**இருமொழியகராதி**

ஒரு மொழியின் சொற்களுக்கு மற்றொரு மொழியில் பொருள் வழங்குவது. அதாவது ஏதேனும் இருமொழிகளில் எழுதப்படும் அகராதி (bilingual dictionary).

**இரௌத்திரி**

அறுபது தமிழாண்டுகளுள் ஐம்பத்து நான்காவது ஆண்டு.

**இல்ல இதழ்**

ஒரு நிறுவனம் தன் பணியாளர் களுக்குச் செய்திகளை வழங்குவதற்காக வெளியி(டப்ப)டும் இதழ்.

**இலவச இணைப்பு இதழ்**

செய்தித்தாள் அல்லது வார, மாத இதழ்களின் இணைப்பாக வெளியிடப்படும் இதழ்.

**இலவசப் படிப்பகம்**

எவ்விதக் கட்டணமும் செலுத்தாமல் நாள், வார, மாத இதழ்கள் மற்றும் நூல்களைப் படிக்கும் அறை.

**இலாகா**

உருதுமொழிச் சொல். நிறுவனம் (department) என்பது இதன் பொருள்.

**இலிகிதம்**

எழுதப்பட்ட கடிதம் (letter), எழுதப்பட்ட புத்தகம் (book).

**இலேசனம்**

எழுத்து (letter), பனையோலை (palmleaf).

**இலை**

காண்க : கல்.

**இழிசுவைப் பத்திரிகை**

நடிகர், நடிகையர், அரசியல் தலைவர்கள், சமுதாயப் பெரும்புள்ளிகள் தொடர்பானவர்களின் தனி வாழ்க்கைக் குறைகளை ஆட்களை வைத்து அறிந்து படிப்பவர்களுக்குக் கிளர்ச்சியூட்டும் வகையில் பெரிதுபடுத்தி எழுதும் இதழுக்குரிய பெயர்.

**இழைப்பு வேலை**

நூல் அட்டையின் மீது பொன்னிறமான இலை, மலர், அரும்பு முதலியன பொறித்துப் பொன் வண்ணம் சிறக்க இழைப்பது.

**இளவோலை**

பனைஓலை வகைகளுள் இதுவும் ஒன்று.

**இளைஞர் எழுத்துப் படைப்பு**

சிறுவயதுடைய ஒருவரால் எழுதப் படுவது.

**இறுதி விருப்ப ஆவணம்**

உயில் (will). ஒருவர் இறக்குந் தறுவாயில் எழுதப்படும் ஆவணம்.

**இறையியல் கல்லூரி நூல் நிலையம்**

மதுரையில் உள்ள இந்நூல் நிலையத்தில் தமிழ், கிரந்தம், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் கிறித்தவ சமயம் தொடர்பானவை அதிக அளவில் உள்ளன. இலக்கியம், இலக்கணம், நாடகம், நாட்டுப் புறப்பாடல், மருத்துவம், மனையடி சாத்திரம், மாந்திரிகம், சோதிடம், வேதாந்தம், சடங்குகள் முதலான பலவகைகளைச் சார்ந்த ஓலைச்சுவடிகள் உள்ளன. வேதநாயக சாத்திரியார் கைப்பட எழுதி வைத்த கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன.

**இறையிலி**

காண்க : இனாம் (gift).

**இனாம்**

தீர்வையின்றி நிலத்தையோ தீர்வை வசூலிக்கும் உரிமையையோ நல்கையாக அளிப்பது. இது நிபந்தனைக்கு உட்பட்டோ இல்லாமலோ இருக்கலாம். இத்தகைய நல்கைகள் சமய அறச்செயலுக்காகவோ ஊழியத்துக்காகவோ அளிக்கப்படுவது வழக்கம்.

**இனாமத் நாமா**

இனாம்களின் விவரம் குறித்த பதிவேடு (gift register).

**இஜார் நாமா**

குத்தகைப் பத்திரம்.

**இஜார் பட்டா**

காண்க : இஜார் நாமா.

**இஜாரா**

அரபுச்சொல். நிலக்குத்தகை.

**இஜாராதார்**

குத்தகைக்கு வாங்குவோர்.

**இஸ்காதர்**

'Escadron' என்ற பிரெஞ்சுச் சொல். கப்பல் படை என்பது பொருள்.

**இஸ்தியார்**

எழுத்து மூலமான விண்ணப்பம் (notice), விளம்பரம் (advertisement).

**இஸ்தியார் நாமா**

எழுத்து மூலமான விண்ணப்பம், விளம்பர அறிவிப்பு (poster).

**இஸ்பானோல்காரர்**

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர்களைக் குறிக்கும்.

## ஈ

**ஈசுர**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் பதினொன்றாவது ஆண்டு.

**ஈட்டுக் கடன்காரன்**

தமக்கு வரவேண்டிய கடனுக்காக அடைமானம், பொருட்பிணைப் பொறுப்பு அல்லது கடனாளியின் சொத்தின் மீது பற்றுரிமை இவற்றை வைத்திருந்தால், அவர் ஈட்டுக் கடன் கொடுத்தவர் எனப்படுவார்.

**ஈட்டுக் கடன் பத்திரம்**

காண்க : அடைமானப் பத்திரம்.

**ஈட்டுப் பொருள்**

காண்க : அடகு.

**ஈட்டுறுதி ஒப்பந்தம்**

தமது அல்லது மற்றவர் நடத்தையால் விளையும் இழப்பிற்கு ஈடு செய்வதாக ஒருவர் வாக்குறுதி அளிக்கும் ஒப்பந்தம்.

**ஈ புக்ஸ்**

மின்னணுப் புத்தகங்கள் (எலெக்ட்ரானிக்ஸ் புக்ஸ்).

**ஈயக்கட்டை**

அச்சகத்தில் அச்சுக் கோப்பதற்கும், அச்சேற்றம் செய்வதற்கும் பயன்படும் (quads).

**ஈரப்பதம்**

சுவடிகளைப் பாதிக்கும் இயற்பியல் காரணிகளுள் ஈரப்பதமும் ஒன்று. ஈரப்பதத்தை அளவிடுவதற்கு ஈரமானி (Hygrometer), சுழல் ஈரப்பதமானி (Whirling Psychrometer), உலர் ஈரக்குமிழ் ஈரப்பதமானி (Wet and Dry Hygrometer), மயிர் ஈரப்பதமானி (Hair Hygrometer), தானியங்கி வெப்ப ஈரப்பதமானி (Automatic Hygrometer) போன்ற கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

**ஈரமானி**

காற்றிலுள்ள ஈரப்பதத்தை அளவிடுவதற்குரிய கருவிக்கு ஈரமானி (Hygrometer) என்று பெயர். நவீனப் பாதுகாப்பு முறைகளுள் ஒன்றான இக்கருவியை சுவடி மற்றும் ஆவணக் காப்பகங்களில் பயன்படுத்தி வருகின்றனர்.

**ஈரமூட்டும் கருவி**

ஆவணப் பாதுகாப்பிற்குத் தேவையான கருவிகளுள் ஈரமூட்டும் கருவி (Humidifier) என்பதும் ஒன்று.

## உ

**உ.வே. சாமிநாதையர் நூலகம்**

உ.வே. சாமிநாதையர் சேகரித்த ஓலைச்சுவடிகள், காகிதத்தில் எழுதிய கையெழுத்துப் பிரதிகள், அவருக்கு வந்த கடிதங்கள், நூல் பதிப்பிப்பதற்காக அவரால் எழுதி வைக்கப்பட்ட குறிப்புகள் முதலானவை இந்நிலையத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. சுவடிகளைப் பதிப்பித்து வெளியிடும் பணியை முதன்மைப் பணியாகக் கொண்டு இந் நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

**உச்சநீச வெப்பமானி**

ஆவணப் பாதுகாப்பிற்குத் தேவையான கருவிகளுள் உச்சநீச வெப்பமானி (Maximum and Minimum Thermometer) என்பதும் ஒன்று.

**உசூர்**

அரசர், உருதுச்சொல்.

**உடன்படிக்கை**

இருதரப்பாரும் உடன்பட்டுப் பின்பு வரும் முடிவு உடன்படிக்கையாகும். உடன்பாடு (agreement) எனவும் கூறப்படும்.

**உடன்பாடு**

ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, இருவரும் ஒத்த முடிவுக்கு வுருதல், ஒருவருடைய கருத்து இன்னொருவருக்குப் பிடிக்காவிட்டாலும் அதற்கு அந்த இன்னொருவர் உடன்படுவதால் உடன்பாடாயிற்று.

**உடுக்குறி**

அடிக்குறிப்பில் மிகுதியாகப் பயன்படும் குறி (*) (star mark).

**உண்டிகை**

'Hundi' என்ற உருது மொழிச் சொல்லில் இருந்து பிறந்தது. மாற்றுச்சீட்டு என்பது பொருள். காணிக்கை, கலம் எனவும் பொருள் கொள்ளலாம்.

**உண்டுகாட்டி**

அரசர்கள் உணவு உண்ணுவதற்கு முன்னர் அதில் ஏதேனும் கலப்படமோ அல்லது நஞ்சோ கலந்திருக்கிறதா என்பதைக் கண்டுபிடிப்பதற்காக அமர்த்தம் செய்யப்பட்ட அலுவலர். இவர்கள் அரசருக்குரிய உணவை உண்டு சரி பார்த்த பின்னரே அரசர் அந்த உணவை உண்ணுவது வழக்கம். தஞ்சாவூர் மராத்திய அரண்மனையில் இத்தகைய அலுவலர்கள் பணிபுரிந்ததற்கான சான்றுகள் மோடி ஆவணங்களில் காணப்படுகின்றன. இவர்களுக்கு மாதந்தோறும் அரண்மனையிலிருந்து ஊதியம் கொடுக்கப்பட்டுள்ளது.

**உண்மை உறுதி மூலம்**

எழுதப்பட்ட வழக்குரையின் இறுதியில், அதில் கூறப்பட்டவை அனைத்தும் நேரடியாகத் தாமறிந்த வகையில் உண்மையானது என்றும், தகவலின் பேரில் தெரிந்ததாகக் கூறப்பட்டவை அனைத்தையும் தாம் உண்மையென நம்புவதாக உறுதி கூறி அதில் கையொப்பமிடுதல்.

**உண்மை உறுதி வரைவு**

காண்க : உண்மை உறுதி மூலம்.

**உண்மைப் பாடம்**

மூலபாடத்தை உண்மைப் பாடமெனவும் (text) அழைப்பர். பாடவேறுபாடுகளைச் சீர்தூக்கிச் செம்மை செய்து உண்மைப் பாடம் மூலபாட ஆய்வு நோக்கில் நிறுவப்படும்.

**உண்மைவழி**

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சுவடிகளில் சில சொற்கள் அல்லது தொடர்கள் அல்லது பாடல்கள் அல்லது வேறுபாடுகள் ஒன்று போல அனைத்துச் சுவடிகளிலும் பொருந்தியிருக்குமானால் அச்சுவடிகள் அனைத்தையும் ஒரு மூல ஏட்டின் வழிவந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவையாக வரையறுக்கலாம். இது உண்மைவழிக் குடும்பம் எனப்படும்.

**உத்தராயணம்**

சூரியன் வடக்கு நோக்கிச் செல்லும் காலம் உத்தராயணம் எனப்படும். இது தைத் திங்கள் முதல் ஆனித் திங்கள் வரையுள்ள ஆறு திங்கள் காலம் வரையாக இருக்கும்.

**உத்தாரம்**

உத்தரவு, ஆணை.

**உத்திரகிரியை**

இறந்துபட்டவர் பொருட்டுச் செய்யும் சடங்குகளுக்கு உத்திரகிரியை என்று பெயர். நீத்தார் நினைவுக் கடன் என்றும் கூறுவதுண்டு.

**உப்பளச் சுதந்திரத் திட்டம் ஏடு**

உப்பளங்களிலிருந்து கிராம ஊழியர்கள் மற்றும் அறநிலையங்களுக்கு உரிமையாக வழங்கப்படும் அளவு விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு.

**உப்பளம் வாரச்சட்டம் ஏடு**

உப்பளங்களுக்கு விதிக்கப்பட்ட வரிகளின் வாரப் பங்கு வீதங்களைத் தெரிவிக்கும் ஏடு.

**உபதேசி**

கத்தோலிக்கக் குருமார்களுக்கு ஆலயத் திருச்சடங்கு வேளைகளில் உதவி செய்து வரும் நபர்.

**உபயத் தீட்டு**

கோயில் வழிபாடு செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்கமைந்த உடன்பாட்டுச் சீட்டு.

**உயில்**

காண்க : இறுதி விருப்ப ஆவணம்.

**உரிம விண்ணப்பம்**

இரு சக்கரம், நான்கு சக்கரம் போன்ற வண்டிகளை ஓட்டுவதற்குரிய உரிமம்.

**உரிமை**

காண்க : ஆவணம்.

**உரிமைக் கட்டளை**

ஒருவர் மற்றொருவருக்காக நிர்வாகப் பொறுப்பு ஏற்க உத்தரவு.

**உரிமைச் சீட்டு**

ஆவணக் கடிதங்களுள் ஒன்று.

**உரிமைப் பத்திரம்**

எழுத்துக்கள், எண்கள், குறிகள் ஆகியவற்றை ஓலை, காகிதம், செப்புத் தகடு, கல் போன்றவற்றில் செய்தியாகப் பொறித்து வைப்பது உரிமைப் பத்திரம், கிரயப் பத்திரம் எனவும் அழைக்கப்படுகிறது.

**உரிமைப் பதிவணம்**

உரிமை மாற்றம் செய்பவர்; உரிமையை மற்றொருவருக்கு மாற்றிக் கொடுப்பவர்.

**உரிமை மாற்று**

தன் உரிமையை அல்லது பாத்தியதை யை மற்றொருவருக்கு மாற்றிக் கொடுத்தல்.

**உரிமை மாற்று ஆவணம்**

உரிமை மாற்றம் செய்யப்பட்டதற் கான ஆவணம்.

**உரிமை மாற்றுப் பத்திரம்**

காண்க : சொத்துரிமை மாற்றம்.

**உரிமை மூல ஆவணம்**

உரிமை மூலம் அளிக்கும் ஆவணம். காண்க : மூலப் பத்திரம்.

**உரிமையியல் மேல் முறையீட்டு வழக்கு**

கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பைத் திருத்துவதற்கோ மாற்றுவதற்கோ மேல் நீதிமன்றத்தில் முறையிடுதல்.

**உரிமையுரை**

1. நூலின் இரண்டாம் பக்கத்தில் அந்நூலை எழுதிய ஆசிரியர் அதன் உரிமையைக் கொடுத்தலைப் பதிவு செய்தல்.

2. நூல் எழுதும் ஆசிரியர், அந்நூலைத் தம் மதிப்பிற்குரிய ஒருவ ருடைய அன்பிற்கும் நினைவிற்கும் அறிகுறியாக வழங்குதல். சாதாரணமாக, இது தலைப்புப் பக்கத்தை அடுத்து வலக்கைப் பக்கம் வரும். இது உரைநடை அல்லது செய்யுள் வடிவில் இடம்பெறுவ துண்டு. இது தலைப்புடனோ, தலைப்பு எதுவும் இன்றியோ அமைக்கப்படும். அன்புரை, படையல், காணிக்கை, நினைவுரை, அர்ப்பணம், சமர்ப்பணம் எனவும் வழங்கும்.

**உரிமையுரைப் பக்கம்**

பொருளடக்கத்தை அடுத்து உரிமை யுரைப் பக்கம் அமையும். உரிமையுரைப் பக்கத்தில் நூலாசிரியர் அல்லது பதிப்பாசிரியர் தம் மதிப்பிற்குரிய ஒருவ ருடைய நினைவிற்கு அடையாளமாக அந் நூலை வழங்குவது பற்றிய செய்திகள் இடம்பெறும்.

**உரிமை வரைவு**

எதிர்நோக்கு உரிமை வந்தடையும் காலம் குறைதல் அல்லது ஒடுங்குதல்.

**உரிமை வழக்கு**

ஒருவர் தன் உரிமையை வலியுறுத்தி நடைமுறைப்படுத்துவதற்காக மேற் கொள்ளப்படும் நடவடிக்கை.

**உருத்திரோற்காரி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் ஐம்பத்து ஏழாவதாண்டு.

**உருப்பாசு**

அனுமதிச் சீட்டு.

**உருவ நேர்வடிவம்**

அச்சிட்ட அல்லது கையால் எழுதிய பக்கங்களையோ படங்களையோ நிழற்படங் களையோ மின்னணுக் கருவிகள் மூலமாக ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்கு அனுப்புவது உருவ நேர்வடிவம் எனப்படும். இது 'பாக்சிமிலி' எனவும் கூறப்படும்.

**உருவாக்கம்**

வார்ப்புச் செய்தல் (casting).

**உருளச்சுச் சுவடி**

உருளச்சு மூலம் எடுக்கப்படும் ஆவணங்கள். இவை கட்டமைப்புச் செய்து பாதுகாக்கப்படுவதுண்டு.

**உருளி அச்சியந்திரம்**

காண்க : உருளை (cylinder machine).

**உருளை**

அச்சியந்திரத்தில் உருளை (cylinder) ஒன்று. இது தட்டு இயந்திரத்தைவிடப் பெரியது. இதில் அச்சுக்கள் முடுக்கிய சட்டம் கிடையாகப் பொருத்தப்படும். இப்பலகை முன்னும் பின்னுமாக இயந்திரத்தில் ஓடும். இது பின்புறம் செல்கையில் மையுருளை எழுத்துக் களின் மேல் மை தடவிவிடும். முன்புறம் வரும்போது இது ஒரு பெரிய இரும்பு உருளையினடியில் வரும். இந்த உருளை அச்சிடவேண்டிய தாளைப் பிடித்திருக்கும். இந்த உருளை சுழன்று தாளில் அச்சுப் பதியும். இதன் பின்னர்த் தாள் உருளையை விட்டு வெளியேறும். இந்த இயந்திரத்தில் ஒருவகையில் உருளை நின்று நின்று சுற்றும். இன்னொன்றில் தொடர்ந்து சுற்றிக் கொண்டே இருக்கும். உருளை இயந்திரத் தில் பெரிய தாள்களில் அச்சடிக்கலாம். 32 பக்கங்கள் கொண்ட படிவத்தை ஒரே முறையில் அச்சடிக்கலாம். இது பெரும் பாலும் மின் இயந்திரத்தினாலேயே இயங்கும். இது மணிக்குச் சுமார் 2,000 முதல் 3,000 பிரதிகள் வரை அச்சிட வல்லது.

**உரை**

மொழிநடையுள் உரை (commentary) ஒன்று. பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை, கருத்துரை என உரை பலவகைப்படும்.

**உரைக்குள் அடைத்தல்**

அண்மைக்காலத்தில் பாதிக்கப்பட்ட ஆவணங்கள் தூய்மை செய்யப்பட்டு, பாலியெஸ்டர் (polyester) பைக்குள் இட்டு வெற்றிட முண்டாக்கி, அதன் வாயை ஒட்டிப் பாதுகாக்கும் முறை நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. இம்முறைக்கு உரைக்குள் அடைத்தல் (encapsulation) என்று பெயர். இம்முறையில் ஆவணத்திற்கு வெப்பம், அழுத்தம் அல்லது வேதிமப் பொருள் தேவை இல்லை.

**உரைநடை**

காண்க : உரை.

**உரையாசிரியர்**

செய்யுள் அல்லது பாடலுக்கு உரை நடையில் விளக்கம் எழுதும் ஆசிரியர். நூலுக்கு, பாடலுக்கு உரை எழுதுபவர் (Annotator).

**உரையுடன் உள்ள சுவடி**

மூலம் மட்டும் அமைந்த சுவடிகள் உண்டு. எனவே உரையுடன் கூடிய சுவடியை விதந்து கூறுவர்.

**உரைவளப் பதிப்பு**

மூலத்தையும் பல உரையாசிரியர் களின் விளக்கங்களையும் ஒருங்கே கொண்ட பதிப்பு (Variorum edition).

**உரை விளக்கம்**

செய்யுள் அல்லது பாடலுக்கு உரைநடையில் எழுதப்படும் விளக்கம் (annotation).

**உரோமன்**

எண் வகையுள் ஒன்று.

**உரோமன் எண்கள்**

I, II, III, . . . . .

**உல்கு**

காண்க : சுங்கம், தீர்வை, ஆயம்.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

சென்னை தரமணியில் இந் நிறுவனம் உள்ளது. இந்நிறுவனத்தில் ஓலை மற்றும் தாள் சுவடிகள் சேகரிக்கப் பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அச்சில் வராத சுவடிகள் ஆய்வு செய்யப் பட்டுப் பதிப்பிக்கப்படுகின்றன. சுவடி களுக்கென்று பட்டய வகுப்புகள் இந் நிறுவனத்தில் நடத்தப்பட்டு வருகின்றன.

**உலகப் படநூல்**

உலகின் இயற்கை அமைப்பு, வானிலை அமைப்பு முதலான அடிப்படை களைக் காட்டுவது.

**உலக வெளியீட்டு எண்**

ஒரு நூலின் தலைப்பைப் பார்த்த அளவில் நூற்பொருளைப் பல நாட்டவரும் எளிதில் அறிந்து கொள்ளவும், விளக்கப் பட்டியல் தயாரிக்கவும், கட்டளை அனுப்பவும் உதவும் வகையில் இந்த எண் உருவாக்கப் பட்டது. பன்னாட்டுத் தரப் புத்தக எண் (International Standard Book Number - ISBN) எனவும் கூறப்படும். இது பத்து இலக்கங் களைக் கொண்டது. நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்ட இதில் முதலாவது இலக்கம் மொழியைக் குறிக்கும். (சான்று : பூஜ்யம் மற்றும் ஒன்று ஆங்கில மொழியிலுள்ள நூலைக் குறிக்கும்). அடுத்த குழு இலக்கங்கள் (மூன்று, நான்கு, ஐந்து, ஆறு இலக்கம் வரையில் உள்ளவை) நூல் வெளியீட்டாளரைக் குறிக்கும். மூன்றாவது குழு, குறிப்பிட்ட இந்நூலைக் குறிக்கும். இறுதியான இலக்கம், சோதனை இலக்க மாகும்.

**உலர் இரும்புப் பெட்டி**

ஆவணப் பாதுகாப்பிற்குத் தேவை யான கருவிகளுள் உலர் இரும்புப் பெட்டி (Iron Box) என்பதும் ஒன்று.

**உலர் ஈரக்குமிழ் ஈரப்பதமானி**

காண்க : ஈரப்பதம்.

**உலர் கருவிகள்**

ஆவணப் பாதுகாப்பிற்குத் தேவை யான கருவிகளுள் உலர் கருவிகள் (Dehumidification Air Dryers) என்பனவும் அடங்கும்.

**உலர் சட்டி**

ஆவணப் பாதுகாப்பிற்குத் தேவையான கருவிகளுள் உலர் சட்டி (Desiccator) என்பதும் ஒன்று.

**உலர வைக்கும் கருவி**

ஆவணப் பாதுகாப்பிற்குத் தேவை யான கருவிகளுள் உலர வைக்கும் கருவி (Dehumidifier) என்பதும் ஒன்று.

**உலாந்தகாரர்**

டச்சுக்காரர்களைக் குறிக்கும்.

**உலூப்பை**

உண்ண வரமுடியாதவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் அனுப்பப்படும் உணவுப் பொருள்.

**உலோகச் சுவடி**

உலோகத்தில் எழுதப்படுவது (metal manuscript). 'கரோஸ்தி' எழுத்தில் எழுதப்பட்ட சுவடிகள் குறித்துப் பாகியான், யுவான்சுவாங் ஆகியோர் தம் பயணக் குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளனர்.

**உலோகச் செதுக்கல்**

உலோகத்தைச் செதுக்கி எடுத்தல் (metal engraving).

**உலோகத் தகடு**

காண்க : கல்.

**உவரப் பாசிகை**

தாள் சுவடிகளைப் பாதுகாப்பதற்குப் பயன்படும்.

**உழக்கு**

அளவைப் பெயர், காற்படியைக் குறிக்கும்.

**உழவு நிலம்**

உழுது பயிர் செய்வதற்கேற்ற நிலம்.

**உள் அடைமானம்**

அடைமானத்தார், தம் அடைமான பாத்தியத்தை அடைமானம் வைத்தல்.

**உள் அடைமானதாரர்**

அடைமானதாரரிடம் இருந்து, அவர் உரிமையை, மீண்டும் அடைமானம் பெற்றவர்.

**உள் தலைப்புப் பட்டியல்**

காண்க : பொருளடக்கம்.

**உள்ளடக்கம்**

காண்க : பொருளடக்கம்.

**உள்ளுறை**

காண்க : பொருளடக்கம்.

**உள்ளே**

காண்க : பொருளடக்கம்.

**உளவியல்**

உள்ளத்தைப் பற்றி அறிவது, ஆய்வது, உணர்த்துவது, கற்பது (Psychology).

**உறுதி ஆவணம்**

நூல் பதிவுச் சட்டத்தின்படி மாவட்ட வருவாய்த்துறை அலுவலரிடமும், தலைமைக் குற்றவியல் நடுவரிடமும் உறுதி ஆவணம் தாக்கல் செய்தல் வேண்டும்.

**உறுதிக் கூற்று**

வழக்குரையில் சொல்லப்படும் உறுதியான கூற்று.

**உறுதிச் சான்று**

சான்று ஒன்று மற்றொரு சான்றோடு ஒத்திருத்தல்.

**உறுதி செய்யப்பட்ட பதிப்பு**

ஆசிரியரால் எல்லாத் திருத்தங்களும் முடிவாகச் செய்யப்பட்டு அதிகாரப் பூர்வமானதாகப் பதிப்பித்து வெளியிடுதல் (definite edition).

**உறுதி முறி**

குறிப்பிட்டவற்றைச் செய்வதற்காகவோ செய்யாது இருப்பதற்காகவோ தம்மைக் கட்டுப்படுத்தி எழுதிக் கொடுக்கும் முறை ஆவணம்.

**உறுதிமொழிப் பத்திரம்**

காண்க : ஆணை உறுதி ஆவணம்.

**உறைக் காகிதம்**

நூல் மேலட்டை அச்சடிப்பதற்குரிய தாள். உறைத்தாள் எனவும் கூறப்படும். புத்தகங்களைச் சிப்பம் கட்டுவதற்கும் பயன்படுகிறது.

**உறைத்தாள்**

காண்க : உறைக் காகிதம். ஒரு கோப்பு முடிவு பெற்றுவிட்ட பின்பு அது ஆவண அறைக்கு அனுப்பப்படும். அங்கு அக்கோப்பின் தாள்களை வரிசையாகச் சீர் செய்து அடுக்கி அதன் மேலே ஓர் உறைத் தாள் இடப்படும். இதை ஆங்கிலத்தில் 'docket' என்பர்.

**உறை மடிப்பு**

மேலுறை நூலோடு சேர்ந்து இருப்பதற்காக முன்னும் பின்னும் மடித்து விடப்பட்டது. முதலில் இது வெறும் மடிப்பாக மட்டும் இருந்தது. காலப் போக்கில் முன்மடிப்பில் ஆசிரியர் குறிப்பும், பின் மடிப்பில் நூற்குறிப்பும் அமைந்தது. சில சமயம் நூல் மதிப்புரைக் குறிப்பாகவும் அமைந்தது. இதனை ஆங்கிலத்தில் 'Blurb' அல்லது 'Puff' எனக் கூறுவதுண்டு.

## ஊ

**ஊக ஆதாரப்பிரதி**

குடிவழி முறையில், ஒரு குடும்ப ஏடுகளுக்கு மூலப்பிரதியாக இருந்திருக் கக்கூடியது என்று மூலபாடத் திறனாய் வாளரால் புனைவுகோளாக உருவாக்கப் படுவது ஊக ஆதாரப்பிரதி (Archetype) அல்லது ஊக மூலப்பிரதி எனப்படும். இம் மூலப்பிரதியிலிருந்துதான் எல்லாக் குடும்பங்களினுடைய மற்றும் உட்குடும்பங் களினுடைய வழிகளும் கிளைத்தன என்று கொள்ளப்படும்.

**ஊக மூலப்பிரதி**

காண்க : ஊக ஆதாரப்பிரதி.

**ஊசி**

எழுத்தாணிக்கு மற்றொரு பெயர்.

**ஊர் அலுவலர்**

கிராமத்திலுள்ள நிருவாக அலுவலர் (Village Officer).

**ஊர்க் கணக்கர்**

கிராமத்திலுள்ள நிருவாக அலுவலர் (Village Karnam).

**ஊர்த் தலைமையர்**

கிராமத்திலுள்ள நிருவாக அலுவலர் (Village Headman).

**ஊர் நடுவர்**

முன்சீப் (Village Munsiff) என்பது உருதுமொழிச் சொல். இதற்கு நேர்மைக்கு உரியவர், நடுநிலை வகிப்பவர் என்பது பொருள். கிராமத்தை நடுநிலையி லிருந்து ஆட்சி செய்பவர்.

**ஊர்ப் பொத்தகம்**

காண்க : அ-பதிவேடு.

**ஊராட்சி அதிகாரி**

கிராமத்திலுள்ள நிருவாக அலுவலர் (Village Administrative Officer - VAO).

## எ

**எடையிடும் கருவி**

ஆவணப் பாதுகாப்பிற்குத் தேவை யான கருவிகளுள் எடையிடும் கருவி (Weighing balance) என்பதும் ஒன்று.

**எண்**

சுவடிகளில் எண் என்பது பக்க எண்ணைக் குறிக்கும். ஓலைச்சுவடிகளில் பக்க எண்கள் இடப்பக்க ஓரத்தில் குறிக்கப் பட்டிருக்கும். எண்ணும் எழுத்தும் என்னு மிடத்தில் கல்வியைக் குறிக்கும்.

**எண் சுவடி**

சுவடி மூலமாகப் பெற்ற பெயர். கணக்கேடு, பெருக்கல் வாய்பாடு. காண்க : கணக்கதிகாரம்.

**எண்ணிக்கை**

வரிசையாக எண்ணுதல்.

**எண்ணெய்த்தாள்**

ஆவணங்களைச் சீர் செய்வதற்குரிய பொருள்களுள் எண்ணெய்த்தாள் (Oiled paper) என்பதும் ஒன்று.

**எதிர் ஆணை உறுதிப் பத்திரம்**

ஓர் ஆணை உறுதிப் பத்திரத்திற்கு விடையளிக்கும் வகையில் உள்ள மற்றொரு ஆணை உறுதிப்பத்திரம்.

**எதிர் கணக்கு**

கணக்கரால் எழுதப்பட்டு ஊர்ச் சபையினருக்கோ அல்லது கண்காணிப்பாளருக்கோ அனுப்பப்படும் கணக்கின் பிரதி. எதிர்நடைக் கணக்கு எனவும் அழைக்கப்படும்.

**எதிர்ச் சீட்டு**

சொத்தைக் கிரையம் வாங்கினவர் அச்சொத்தை விற்பனை செய்ய நேரிட்டால், கிரையம் கொடுத்தவருக்கோ திரும்பக் கிரையம் செய்வதாக ஒப்பந்தம் செய்து எழுதும் கிரையப் பத்திரம். எதிரிடை முறி, எதிர்நடைப் பத்திரம், எதிர்முறி எனவும் அழைக்கப்படும்.

**எதிர்நடை**

மூலப்பிரதி (original document).

**எதிர்நடைக் கணக்கு**

காண்க : எதிர் கணக்கு.

**எதிர்நடைக் காகிதம்**

மூலப்பிரதி.

**எதிர்நடைப் பத்திரம்**

காண்க : எதிர்ச் சீட்டு.

**எதிர்முறி**

காண்க : எதிர்ச் சீட்டு.

**எதிரிடைமுறி**

காண்க : எதிர்ச் சீட்டு.

**எதிரீட்டு அச்சிடுமுறை**

ஒளிப்படம் எடுத்து அதைத் தகடுகளின் உதவியுடன் அச்சிடுதல் (Offset Printing).

**எதிரீட்டுப் பதிவுமுறை**

ஒளிப்படம் எடுத்து அதைத் தகடுகளின் உதவியுடன் அச்சிடுவதற்கேற்ற முறையைச் செய்தல் (Offset process).

**எதிலின் ஆக்சைடு**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் எதிலின் ஆக்சைடு (Ethelene oxide) என்பதும் ஒன்று.

**எந்திர அச்சுமுறை**

பிரெஸ்டன் (Preston) அருகிலுள்ள ஹார்கிரீக்ஸ் அண்டு கம்பெனியில் இருந்த பெல் (Bell) என்பவர் 1785இல் முதன் முதலில் எந்திர முறையைக் கையாண்டார். துணி, காலிக்கோவில் ஓவியங்களை இந்த எந்திர முறையில் அச்சிடுவதால் பல நுண்ணிய வேலைப்பாடுகள் நிறைந்த ஓவியங்களைத் தெளிவாகவும் பல நிறங்களிலும் அச்சிட இயலும். காண்க : காலிக்கோ அச்சுமுறை.

**எல்லைப் பத்திரம்**

எல்லை வழக்குத் தீர்த்து எழுதும் பத்திரம்.

**எலி**

கொரிக்கும் உயிரினம். சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைப் பாழ் படுத்தும். சுவடிகளைப் பாதிக்கும் உயிரியல் காரணிகளுள் ஒன்று. எலிகளில் (Rodents) பல வகைகள் உண்டு. இவற்றில் சுண்டெலி, வெள்ளெலி போன்றவை பெரும்பாலும் சுவடிகள், நூல்கள், ஆவணங்கள், தோல் மற்றும் துணிப் பகுதிகளைச் சேதப்படுத்தும். கூர்மையான பற்களால் உணவைத் தேடும் நோக்குடன் கிடைப்பவற்றைக் கடித்துச் சேதப்படுத்தும்.

**எலும்புச் சுவடி**

சீனாவில் கி.மு. 1,100இல் எலும்பு களில் எழுதப்பட்ட சுவடிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

**எழுத்தச்சடிப்பு**

உலோகம் மற்றும் மரக்கட்டையினா லான எழுத்துக்களைக் கொண்டு அச்சிடும் அச்சகம் (Letter Press).

**எழுத்தச்சு**

காண்க : எழுத்தச்சடிப்பு.

**எழுத்தச்சுப் படிமை**

காண்க : லித்தோ அச்சுமுறை (Lithograph).

**எழுத்தர்**

ஆவணங்கள், கணக்குகள் ஆகிய வற்றைப் பராமரிப்பதற்காகப் பணிக்கு அமர்த்தப்பட்ட ஒருவர். படி எடுப்பவர். நகலர் எனவும் அழைக்கப் பெறுவார்.

**எழுத்தாணி**

பனை ஓலையில் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட எழுதுகோல் (style); இரும்பி னாலான பழங்கால எழுதுகருவி; பயன் பாட்டு அடிப்படையில் குண்டெழுத் தாணி, வாரெழுத்தாணி, மடக்கெழுத்தாணி, குட வெழுத்தாணி (குடைவெழுத்தாணி) எனப் பல பெயர்கள் வழங்குகின்றன. ஓலைச்சுவடிகள், ஆவணங்கள், பதிவேடு கள் ஆகியவற்றில் இந்த ஆணிகளைக் கொண்டு எழுதப்படுவதுண்டு. எழுத்து ஊசி, ஓலை ஆணி, ஓலை தீட்டும் படை எனும் பெயர்களாலும் அழைக்கப்படும்.

**எழுத்தாளர்**

ஓலையில் வேகமாக எழுதுபவர் எழுத்தாளர் எனப்பட்டார்.

**எழுத்து**

காண்க : கடிதம்.

**எழுத்து ஊசி**

காண்க : எழுத்தாணி.

**எழுத்துக்களைச் செதுக்குபவர்**

அச்சடிக்கும் எழுத்துக்களை உருவாக்குபவர்.

**எழுத்துத் தடிப்பு**

அச்செழுத்துக்களின் பருமன்.

**எழுத்துநிலைக் களவு**

பிறர் எழுதிய படைப்பாகிய எழுத்து, கருத்துக்களைத் திருடுவது (Plagiarism, Plagiany).

**எழுத்துப் பிழை**

படி எடுக்கும்போது அல்லது எழுதும் போது ஏற்படும் பிழை.

**எழுத்துரிமை**

எழுத்துச் சுதந்திரம்.

**எழுத்துரிமைத் தொகை**

ஆசிரியருக்கு அளிக்கப்படும் பங்கு வீத உரிமை (royalty).

**எழுத்துருவப் பதிவு**

காண்க : ஆவணம்.

**எழுத்து லேஞ்சாசாம்பும்**

'Les Chop' என்ற சொல். எழுதி முத்திரையிட்டு வைக்கப்பட்ட கடிதம் என்று பொருள்.

**எழுத்து வரி வடிவங்கள்**

காலந்தோறும் ஏற்பட்ட எழுத்து வரிவடிவ மாற்றங்களால் சுவடிகளைப் படிப்பதிலும், பதிப்பிப்பதிலும் சிக்கல்கள் ஏற்படுவது தவிர்க்க இயலாததாகும்.

**எழுத்து வாங்குதல்**

அடிமையாவதற்கு அறிகுறியாக ஆண்டான் பெயரை மார்பில் எழுதிக் கொள்ளுதல்.

**எழுதிய புத்தகம்**

சுவடிக்குரிய பெயர்களுள் ஒன்று.

**எழுதுகருவி**

சுவடிகளை உருவாக்கத் தேவையானவற்றுள் ஒன்று; சுவடிகளைத் தயாரிப்பதற்கு எழுதப்படு பொருள். எழுதுபொருள், எழுதுகருவி (writing material) என்ற மூன்றும் தேவைப்படும்; எழுதுபொருளில் எழுதுவதற்குப் பயன் படுவது.

**எழுதுகோல்**

காண்க : எழுத்தாணி.

**எழுதுபவர்**

சுவடிகளில் எழுதுபவர் (Scriber).

**எழுதுபொருள்**

தாளில் எழுதுவதற்குப் பயன் படுத்தப்படும் பொருள் (writing material).

**எழும் நடப்பு**

காண்க : வரைவு.

**என்காப்சுலேசன்**

ஆங்கிலமொழிச் சொல். பழைய சுவடிகளை மறுசீரமைப்புச் செய்வதற்கு 'என்காப்சுலேசன்' (encapsulation) எனும் முறை சுவடிக் காப்பகங்களில் கையாளப்படுகிறது. அதாவது உறைக்குள் ஆவணங்கள் அடைக்கப்படும். காண்க : உறைக்குள் அடைத்தல்.

**எனாமல் தட்டு**

ஆவணப் பாதுகாப்பிற்குத் தேவையான கருவிகளுள் எனாமல் தட்டு (Enamel tray) என்பதும் ஒன்று.

**எஸ்டேட்**

'எஸ்டேட்' (Estate) என்பது ஆங்கில மொழிச் சொல். காண்க : ஜமீன்தாரி.

**எஸ்பார்ட்டோ**

'எஸ்பார்ட்டோ' (Esparto) என்பது ஆங்கில மொழிச் சொல். ஸ்பெயின், வட ஆப்பிரிக்கா மற்றும் தென்னாப்பிரிக்கப் பகுதிகளில் வளரும் புல்வகையைக் கொண்டு தயாரிக்கப்படுவது. எழுதுவதற்கும் அச்சிடுவதற்கும் பயன்படுகின்ற பருமனும் வழுவழுப்பும் உடைய மிகச் சிறப்பான தாள்.

## ஏ

**ஏசு சங்க ஆவணக் காப்பகம்**

கொடைக்கானலில் உள்ள செண்பகனூரில் இக்காப்பகம் (Jesuit Archives) உள்ளது. கி.பி. 16 முதல் 20ஆம் நூற்றாண்டு வரை மதுரை மாநிலத்தில் உழைத்த திருச்சபைத் தொண்டர்களின் கடிதங்கள், நாட்குறிப்பு கள், சுவடிகள், நூல்கள் போன்றவை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ 2,000க்கு மேற்பட்ட ஓலை மற்றும் தாள் சுவடிகள், 5,000க்கும் மேற்பட்ட நூல்கள் இக்காப்பகத்தில் உள்ளன. இவை தமிழ், ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்சு, போர்த்துக் கீசியம் போன்ற மொழிகளில் எழுதப் பட்டுள்ளன. கத்தோலிக்கக் கிறித்தவர் களின் வாழ்வுக்குப் பயன்படும் சுவடிகளே பெரும்பாலும் உள்ளன. தமிழ் நாட்டின் வரலாறு, இலங்கை, புதுச்சேரி, கோவா ஆகியவற்றைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள், தமிழ் இலக்கியத்திற்குக் கிறித்தவத் தொண்டர்கள் ஆற்றிய பணிகள் போன்ற பலவற்றைப் பற்றிய செய்திகள் இச்சுவடிகளில் காணப்படு கின்றன.

**ஏட்டில் எழுதுதல்**

சிறந்த கருத்துக்களை ஓலையில் பொறித்து வைக்கும் செயலை ஏட்டில் எழுதுதல் என வழங்குவர்.

**ஏட்டு இருப்பு**

சுவடிகள் அல்லது நூல்களின் இருப்பு.

**ஏட்டு எண்**

சுவடிகளில் காணப்படும் எண் (Folio number).

**ஏட்டுச் சுவடி**

எண்ணத்தின் சுவடாகிய எழுத்துகள் பதிக்கப் பெற்றமையால் ஏட்டுச்சுவடி எனப்பட்டது. காண்க : சுவடி.

**ஏட்டுச்சுவடி நிலையம்**

ஏடுகளைச் சேகரித்துப் பாதுகாத்து வைத்திருத்தல். தரங்கம்பாடியில் பார்த்தி லோமிய சீகன்பால்கு ஓலைச்சுவடிகள் பலவற்றைத் தொகுத்து ஒரு தமிழ் ஏட்டுச் சுவடி நிலையத்தைத் தொடங்கினார்.

**ஏட்டுச்சுவடிப் பதிப்பு**

ஓலைச்சுவடிகளிலிருந்து நூல் களைப் பெயர்த்தெழுதிப் பதிப்பித்தல் (manuscript edition).

**ஏட்டுப்பிரதி**

காண்க : சுவடி.

**ஏட்டுப் புத்தகம்**

காண்க : சுவடி.

**ஏட்டுப்பொறி**

ஆவணங்கள் எழுதும் ஓலைகள் பதப் படுத்தப்பட்டு அரசு முத்திரை பதிப்பிக்கப் படும். பதிவேடுகளில் அரசுப் பதிவேடு களின் தலைப்பு ஏட்டிலும் அரசு முத்திரை பதிக்கப்படும். இவ்வாறு பதிக்கப்படும் முத்திரை ஏட்டுப்பொறி அல்லது ஓலை முத்திரை எனப்படும்.

**ஏடு**

தனி ஓலைக்கு ஏடு என்று பெயர். எழுதப்பெற்ற ஓலை.

**ஏடு எழுதுவோர்**

ஓலைச்சுவடியில் எழுதுகின்றவர் (Scriber).

**ஏடு பதப்படுத்துதல்**

பனைமரத்தில் ஆறு வயதுள்ள ஓலைகளை வெட்டி நிழலில் காய வைக்க வேண்டும். பின் நீண்ட தலையோலைகளின் குறுகிய அடி நுனிகளை நீக்கி ஓலைகளின் நரம்பைக் கிழித்து ஒரே அளவாக நறுக்க வேண்டும். நறுக்கப்பட்ட ஓலைகளை நன்கு உலர வைக்க வேண்டும். நன்கு உலர்ந்த பிறகு அவற்றை நீராவியில் பதமாக வேக வைக்க வேண்டும். இதனால் ஓலைகளில் ஒரு துவள்வு ஏற்படும். பின்னர் ஓலைகளை ஈரம் போகக் காய வைக்க வேண்டும். காய்ந்தபிறகு மழுமழுப்பாகக் கூழாங்கல் அல்லது சங்கு கொண்டு நன்றாக அழுத்தித் தேய்க்க வேண்டும். இதனால் ஓலைகள் அழுத்தமாகிக் கெட்டியாகவும் பளபளப்பாக வும் தோன்றும். இவ்வாறு ஓலைகளில் எழுதுவதற்கேற்பப் பதப்படுத்தும் முறையை ஏடு பதப்படுத்துதல் அல்லது ஏடு பாடம் செய்தல் என்று கூறுவர்.

**ஏடு பாடம் செய்தல்**

காண்க : ஏடு பதப்படுத்துதல்.

**ஏடு வாருதல்**

ஏடுகளைத் தயாரிக்கும் செயல். ஓலை வாருதல் எனவும் கூறப்படும்.

**ஏர்க்குறிப்பு ஏடு**

ஏர் உழவு செய்வதைக் குறித்த தினசரிக் கணக்கு.

**ஏர்மெயில் தாள்**

காண்க : மணிபோல்டு தாள். 'ஏர்மெயில்' என்பது ஆங்கிலச் சொல்.

**ஏரி வயணம் ஏடு**

கிராமத்திலுள்ள ஏரிகளையும் அதற்கான மராமத்து முதலிய விவரங்களை யும் தெரிவிக்கும் ஏடு.

**ஏலம்**

அதிகமாக ஏலம் (auction) கேட்டவர்க்குச் சொத்தை விற்றல். 'Leileo' என்ற போர்த்துக்கீசியச் சொல்லில் இருந்து பிறந்தது. ஏலம் என்பது விற்பனையைச் சொல்லக்கூடிய சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஏலம் எடுப்பவர்**

ஏல விற்பனை செய்பவர்.

**ஏலவாதி பத்திரம்**

நீதிபதி மூலம் எந்தவொரு சொத்தை யும் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் செயல்படுத்துவது.

**ஏவிளம்பி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் முப்பத் தொன்றாவது ஆண்டு.

**ஏற்பு அட்டை**

சுவடிகள், ஆவணங்களைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை (acknowledgement card).

**ஏற்புக் கடிதம்**

சுவடிகள், கடிதங்கள், ஆவணங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொண்டதற் கான ஒப்புதல் கடிதம்.

**ஏற்பு மகன்**

தத்துப்பிள்ளை, சுவீகாரமாக எடுக்கப்பட்ட மகன் (adopted son).

## ஐ

**ஐந்தொகைக் கணக்குக் காகிதம்**

இளநீல வண்ணத்தில் உறுதியான தாக இருக்கும். நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கும். கணக்கு வழக்குகள் எழுதப்

பயன்படும் இத்தாள் ஆங்கிலத்தில் 'Ledger paper' என அழைக்கப்படுகிறது.

**ஐவரி அட்டை**

'ஐவரி' என்பது ஆங்கிலச் சொல். இரண்டு அழகிய தாள்களை ஒருங்கே வைத்து மெருகொட்டு செய்த தந்தம் போன்ற வெண்மையான சிறந்த அட்டை (Ivory board).

**ஐவரி தாள்**

பருமனான, தந்தம் போன்று வெண்மையான எழுதுதாள் (Ivory paper).

**ஐவேஜி**

உருதுமொழிச் சொல்.

## ஒ

**ஒட்டுப்பசைக் கட்டமைப்பு**

காண்க : பெர்பெக்ட் கட்டமைப்பு (Adhesive binding).

**ஒட்டுப்பொறிப்புத் தலை**

காண்க : மணிலா காகிதம்.

**ஒத்தல் வழி**

காண்க : உண்மைவழி.

**ஒத்தி**

காண்க : அடைமானம். பேச்சு வழக்குச் சொல். ஒற்றி என்பது சரியான வடிவமாகும் (mortgage).

**ஒத்தி வை**

வேறொரு நாளுக்கு ஒத்திப் போடுதல், தள்ளி வைத்தல் (adjourn).

**ஒத்திகை**

தொடக்கம் முதல் இறுதி வரை திரும்பக் கூறுதல் (rehearsal).

**ஒத்து**

ஒருவகை ஊதப்படும் இசைக் கருவி.

**ஒதுக்குக் கடிதம்**

ஒதுக்கீட்டுக் கடிதம்

**ஒப்பந்தம்**

சட்டப்படிச் செயல்படுத்துவதற்குரிய ஓர் உடன்பாடு (agreement).

**ஒப்பம்**

ஆவணங்கள், கவடிகள் போன்றவற்றில் எழுதியவர் ஒப்பமிடுதல் (signature). வரைவு செய்துவிட்ட ஒரு செயலுக்குச் 'செய்தது சரிதான்' என்று ஒப்பம் பெறு வதைக் குறிக்கும்.

**ஒப்பாவணம்**

தொடர்புள்ள தரப்பினர் முறைப்படிக் கையெழுத்திட்டு ஒப்படைக்கும் அச்சடித்த அல்லது கையால் எழுதிய பத்திரம் (deed).

**ஒப்பீசார்**

'Officier' என்ற பிரெஞ்சு மொழிச் சொல். கைத்துப்பாக்கி என்பது பொருள்.

**ஒப்பிடுதல்**

மூலச்சுவடியிலிருந்து படியெடுக்கப் பட்ட கவடியை ஒப்பிட்டுப் பார்த்தல் (comparing).

**ஒப்பிய படிவங்கள்**

முறைப்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட படிவங்கள் (authorised forms).

**ஒப்பிய பதிப்பு**

முறைப்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட பதிப்பு.

**ஒப்பீடு**

ஒன்றிலிருந்து மற்றொன்றை ஒப்பிட்டுச் சரி பார்த்தல் (comparison).

**ஒப்புகை**

பெற்றுக் கொண்டதற்கான சான்று (acknowledgement).

**ஒப்புநோக்கு நிரல்**

ஒரு சுவடியில் வரும் சொற்களையும் பெயர்களையும் பொருளையும் அகர வரிசையில் நிறுத்திக் கொண்டு பிற சுவடிகளில் இடம் பெறுபவற்றோடு அவற்றை ஒப்பிட்டுக் காட்டி, 'இன்னின்ன இடங்களில் இது இவ்வாறு வழங்குகிறது' எனச் சுட்டுவது ஒப்புநோக்கு நிரல் (concordance) எனப்படும்.

**ஒப்புநோக்கு நூல் நிலையம்**

அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், பெரும்பொருள் விளக்க அகராதிகள், ஆவணங்கள், சுவடிகள் முதலானவற்றை எடுத்துச் செல்லாமல் அவை இருக்கும் இடத்திலேயே பார்வையிட்டுக் குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு சேகரித்து வைத்துள்ள நூலகம் ஒப்புநோக்கு அல்லது பார்வை நூல்நிலையம் (Reference Library) எனப்படும்.

**ஒருபொருட் கலைக்களஞ்சியம்**

குறிப்பிட்டதொரு பொருள் தொடர்பான பல்வேறு செய்திகளையும் தனித் தலைப்புக்களில் அகர வரிசையில் தருவது ஒருபொருட் கலைக்களஞ்சியம் எனப்படும்.

**ஒருமொழி அகரநிரல்**

காண்க : அகராதி.

**ஒருமொழியகராதி**

ஒரு சொல்லின் பொருளை அச்சொல்லின் மொழியிலேயே வழங்குவது (monolingual dictionary).

**ஒலாந்துக்காரர்**

டச்சுக்காரர்.

**ஒலி ஒத்த பிழை**

சுவடிகளில் மூலபாடங்களிலிருந்து வேறுபட்டுப் பல்வேறு பிழைகள் காணப்படும். 'தொடர்' என்ற சொல் 'துடர்' என்று வந்தது ஒலி ஒத்த பிழையாகும்.

**ஒலிநாடாக்கள் நூல்நிலையம்**

ஒலிநாடாக்களைச் சேமித்துப் பாதுகாத்து வைக்குமிடம்.

**ஒவ்வாப் பாடம்**

பொருந்தாப் பாடம்.

**ஒழுங்கு செய்தல்**

சுவடிகள், ஆவணங்களை முறைப்படி அடுக்கி வைத்தல் (arrangement).

**ஒளி அச்சு**

கணினி மூலம் அச்சுக் கோர்த்த பின் அதை ஒளிஅச்சு மூலம் அச்சுப்பதிவம் எடுத்தல் (Laser Printer).

**ஒளி அச்சுக் கோப்பான்**

ஈயம் போன்ற உலோகத்தின் உதவியின்றி எழுத்துக்களை நிழற்படம் பிடித்து அச்சுக் கோப்பது. இது லித்தோ அச்சு முறைக்கு ஏற்றது (Photo typesetter).

**ஒளிச்செதுக்கு முறை**

இம்முறையில் அச்சிட வேண்டிய பகுதி பள்ளமாகவும் மற்றது மேடாகவும் இருக்கும் (Photo gravier).

**ஒளிநாடாக்கள் நூல்நிலையம்**

ஒளிநாடாக்களைச் சேகரித்துப் பாதுகாத்து வைக்குமிடம் (Video Library).

**ஒற்றி**

காண்க : அடைமானம், ஒத்தி.

**ஒற்றிப் பத்திரம்**

வாங்கும் கடன் தொகையைத் திரும்பச் செலுத்தும் போக்கியப் பத்திரம் கடன் தொகையைத் திரும்பிச் செலுத்தும் வரை வட்டிக்கு ஈடாக அச்சொத்தை அனுபவித்து வரும் உரிமையை விளக்கும் கடன் பத்திரம்.

**ஒற்றை மேற்கோள்**

சுவடிகளில் இடம்பெறும் பாடல்கள், மேற்கோள் தொடர்களைத் தனியே குறிப்பிட்டுக் காட்டுவதற்கு இக்குறி (') பயன்படும்.

## ஓ

**ஓகினி**

ஒருவகை நகை.

**ஓசனை**

யோசனை என்பது பொருள்.

**ஓட்டுச்சுவடி**

பாபிலோனியர் கி.மு. 4,000 அளவில் களிமண் ஓடுகளில் எழுதி, அவற்றைப் படிகளாகப் பயன்படுத்தித் தீயில் சுட்டெடுத்துச் சுவடிகளாகப் பயன் படுத்தினர். இது ஓட்டுச்சுவடி என அழைக்கப்படுகிறது.

**ஓம்படைக்கிளவி**

இத்தருமத்தை, இக்கோயிலைப் பின்வருவோர் பராமரிக்க வேண்டும் என்று வருவது.

**ஓய்வூதிய நிலுவை**

பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின் பெறும் ஊதிய நிலுவைத் தொகை.

**ஓர இடைவெளி**

ஒவ்வொரு பக்கத்தின் நான்கு ஓரங்களிலும் வெற்றிடம் விடுதல் (margin).

**ஓரக்குறிப்புகள்**

ஓரப்பகுதியில் எழுதப்படும் குறிப்புகள் (margin notes).

**ஓலை**

பொதுவாக இடப்பெறும் ஆணைகள் ஓலை (palmleaf) என வழங்கப்பட்டது. ஓலை எழுதுகின்ற அலுவலரின் அலுவல் பெயரும் ஓலை எனப்பட்டது. மன்னர் களால் அனுப்பப்பெற்ற அரசவைச் செய்தி களும் ஆணைகளும் அடங்கிய கடிதங்கள் ஓலை எனப்பட்டது.

**ஓலை ஆணி**

காண்க : எழுத்தாணி.

**ஓலை எழுத்து**

எழுத்தர்.

**ஓலை எழுத்துப்பேறு**

ஓலைச்சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றை எழுதும் பணியாளர்

களுக்கு ஓலை எழுத்துப்பேறு என ஊதியமும், ஓலை எழுத்து விநியோகம் எனச் சன்மானமும் வழங்குதல்.

**ஓலை எழுத்து வினியோகம்**

ஓலை எழுதுவோருக்கு ஊதியம் தரும் பொருட்டு வாங்கப்பட்ட வரி.

**ஓலை எழுதுதல்**

கடிதம் அனுப்புதல்.

**ஓலை எழுதுவோர்**

அரசரிடம் ஓலை எழுதுவோர் எனும் பணியாளர் இருந்தனர் (scribers).

**ஓலைக்கட்டு**

பனைஓலைகள் சேர்ந்த தொகுதி.

**ஓலைக் கடிதம்**

ஓலையில் எழுதப்படும் கடிதம் (palmleaf letter). இது ஓலைப் பாசுரம் எனவும் அழைக்கப்படும்.

**ஓலைக்கண்கள்**

செம்மைப்படுத்திய ஓலைகளில் துளையிட்டுக் கயிறு கோர்த்துச் சுவடியாக்கப்படும். இவ்வாறு இடப்படும் துளைகள் ஓலைக்கண்கள் எனப்படும்.

**ஓலைக்கணக்கர்**

பள்ளியில் படிக்கின்றவர்.

**ஓலைக்கற்றை**

காண்க : அரிச்சுவடி.

**ஓலைக்காசு**

ஓலை எழுதுவோருக்கு ஊதியம் தரும் பொருட்டு வாங்கப்பட்ட வரி.

**ஓலைக்காரர்**

திருவரங்கக் கோயிலில் ஓலைக்காரர் என்ற அலுவலர் இருந்துள்ளார்.

**ஓலைக்கூலம்**

ஓலை எழுதுவோருக்குக் காசுக்குப் பதில் தானியம் கொடுக்கும் பழக்கத்தை ஓலைக்கூலம் என்பர்.

**ஓலை கூறுதல்**

கிறித்தவத் தேவாலயங்களில் கூறப்படும் திருமண அறிவிப்பு. ஓலை வாசித்தல் எனவும் அழைக்கப்பெறும்.

**ஓலைச் சம்ப(பு)டம்**

ஓலை வைக்கும் பெட்டி. ஓலைச் சுவடி நூல்கள், ஆவணங்கள், பதிவேடுகள் ஆகியவை வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்படும் பேழை. ஓலை எழுதுவோருக்கு ஊதியம் தரும் பொருட்டு வாங்கப்பட்ட வரி.

**ஓலைச் சம்பளம்**

ஓலை எழுதுவோருக்கு ஊதியம் தரும் பொருட்டு வாங்கப்பட்ட வரி.

**ஓலைச் சம்மாதம்**

ஓலை எழுதுவோருக்கு ஊதியம் தரும் பொருட்டு வாங்கப்பட்ட வரி.

**ஓலைச்சீட்டு**

புலவர் பாடிய சீட்டுக்கவி.

**ஓலைச்சுவடி**

காண்க : சுவடி.

**ஓலைச்சுவடித்துறை**

பல்கலைக்கழகம், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், சில கல்லூரிகளில் ஓலைகள் சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இதற்கென்று தனி

யாகத் துறை ஒன்று உருவாக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தனியொரு துறையாகச் செயல்பட்டு வரும் ஓலைச் சுவடித்துறையில் 5,000க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள் சேகரிக்கப்பட்டுப் பாது காக்கப்பட்டு வருவதுடன் அச்சில் வராத சுவடிகள் பதிப்பிக்கப்பட்டு நூலாகவும் வெளியிடப்படுகின்றன. விளக்க அட்ட வணைகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளன.

**ஓலைத்தூக்கு**

புலவர்கள் வள்ளல்களுக்கு எழுதும் கடிதக்கவி ஓலைத்தூக்கு எனவும் சீட்டுக்கவி எனவும் அழைக்கப்படும்.

**ஓலை தீட்டும் படை**

காண்க : எழுத்தாணி.

**ஓலைநாயகம்**

சோழருடைய தலைமை அமைச்சர் (Chief Secretary).

**ஓலை பதம் பார்த்தல்**

ஏடுகள் எழுதுவதற்குப் பதமாக இருக்கின்றதா என்று அறிந்து கொள்ள எழுத்தாணியால் சுழியிட்டுப் பார்த்தல்.

**ஓலைப்பாசுரம்**

காண்க : ஓலைக் கடிதம்.

**ஓலைப்பாயிரம்**

காண்க : ஓலைக் கடிதம்.

**ஓலைப் புத்தகம்**

காண்க : சுவடி.

**ஓலை போக்குதல்**

ஓர் அரசர் மற்றோர் அரசருக்குத் தூதர் வழியே முடங்கல் அனுப்புவதற்கு ஓலை போக்குதல் என்று பெயர்.

**ஓலை முத்திரை**

காண்க : ஏட்டுப்பொறி.

**ஓலை முறி**

ஓலைச்சீட்டு.

**ஓலை வாசித்தல்**

காண்க : ஓலை கூறுதல்.

**ஓலை வாருதல்**

எழுதுவதற்கு உதவும் வகையில் ஓலை சீவுதல். ஏடுகளைத் தயாரிக்கும் செயலை ஓலை வாருதல் எனவும் அழைப்பர். காண்க : ஏடு வாருதல்.

ஃ

**ஃபாக்சிமிலி பதிப்பு**

'ஃபாக்சிமிலி' என்பது ஆங்கிலச் சொல். ஒரு நூலை மறுபதிப்புச் செய்யும் பொழுது, புதிதாக அச்சுக் கோக்காமல் பழைய பதிப்பையே நிழற்படம் எடுத்து மறுதோன்றி அச்சு முறையில் அச்சிடுவது ஃபாக்சிமிலி பதிப்பு (Facsimile edition). எனப்படும்.

**ஃபார அடையாளம்**

'ஃபாரம்' என்பது ஆங்கிலச் சொல். காண்க : மடிப்புக் குறிப்பு.

**ஃபாரம் புரூப்**

அச்சுப் பக்கங்களைத் தளைச் சட்டத்தில் முறையாக வைத்து இறுக்கிய பின்பு எடுக்கப்படும் புரூப். 4, 8, 16, 32 என்று அச்சக வசதிக்கேற்ப இவை அமையும்.

**ஃபிளாட் தையல் கட்டமைப்பு**

'ஃபிளாட்' என்பது ஆங்கிலச் சொல். தாள்களின் மடிப்பில் நூலைச் செலுத்தித் தைப்பது 'செக்சன்' தையல் முறை. மடிப்புகளுக்கு அருகில் செக்சன்களின் பக்க வழியாக நூலைச் செலுத்தித் தைப்பது ஃபிளாட் தையல் கட்டமைப்பு எனப்படும் (Flat stitching binding).

## க

**கச்சாத்து**

இரசீது, கைச்சாத்து, கையெழுத்து.

**கச்சேரி**

உருதுமொழிச் சொல். நீதிமன்றம். பொதுவாக ஆட்சியர், வட்டாட்சியர், காவல்துறை போன்றோரது அலுவலகங் களைக் குறிக்கப் பயன்படுகிறது.

**கட்டமைப்பு**

புத்தகத்திலுள்ள தாள்கள் எளிதில் கிழிந்து விடாமல் பாதுகாப்பதற்கும், அப் புத்தகத்தை எளிதில் கையாளுவதற்கு வசதியாக இருப்பதற்காகவும் புத்தகங் களுக்குக் கெட்டியான அட்டையிட்டுத் தைத்துச் செய்யும் வேலை கட்டமைப்பு (binding) எனப்படும். புத்தகக் கட்டடம், புத்தகக் கட்டுமானம், புத்தகக் கட்டமைப்பு எனவும் அழைக்கப்படும்.

**கட்டமைப்புப் பொருள்கள்**

புத்தகத்தின் தரம், பருமன், வாங்கு பவரது தேவை மற்றும் விருப்பத்திற்கேற்பக் கட்டமைப்புப் பொருள்கள் தேவைப்படும். தாள், அட்டை, நூல், பசை (சாதாரணப் பசை, வச்சிரம், பெவிகால்), துணி, மெழுகு போன்றவை அவற்றுள் ஒருசிலவாகும்.

**கட்டளை மொழி**

தரப்படுத்தப்பட்ட மொழிகள்.

**கட்டிகாரர்**

கட்டியம் கூறிப் புகழ்பவர் (paneggrist).

**கட்டு**

காண்க : சுவடி.

**கட்டுமரம்**

இரண்டு அல்லது மூன்று தடித்த மரக்கட்டைகளால் கட்டப்பட்டு மீனவர் களால் பயன்படுத்தப்படும் படகு.

**கடதம்**

கன்னட நாட்டு வணிகர்கள் தங்கள் வாணிபம் தொடர்பானவற்றைக் கடதம் என்ற துணியில் எழுதி அவற்றைப் புளியங் கொட்டையில் தயாரிக்கப்பட்ட பசையால் ஒட்டி அனுப்பியுள்ளனர். இத்துணியில் கருப்பு அல்லது வெள்ளையில் சாக்குக்கட்டி / சவர்க்காரப் பென்சில் கொண்டு எழுதி யுள்ளனர்.

**கடன் ஈட்டுப் பத்திரம்**

ஒரு கம்பெனி (பங்கமைப்பு) தான் வாங்கிய கடனை ஒப்புக்கொண்டு வட்டி யோடு திருப்பிக் கொடுப்பதற்குக் காப்புறுதி அளிக்கும் வகையில் கொடுக்கப்படும் சான்றிதழ் அல்லது பத்திரம்.

**கடன் உதவி**

அவசர காலத்தில் கடனாகவோ வேறு பணமாகவோ தேவைப்படும் அல்லது விரும்பத்தக்க உதவிக்கான ஏற்பாடு.

**கடன் உறுதி ஆவணம்**

காண்க : கடன் ஒப்புச்சீட்டு (Promissory note).

**கடன் ஒப்புச் சீட்டு**

குறித்த நபர் ஒருவருக்கோ, அவரது உத்தரவு பெற்றவருக்கோ முறைப்படி அதைக் கொண்டு வருபவருக்கோ குறிப்பிட்ட ஒரு தொகையைக் கொடுப்ப தாக நிபந்தனை எதுவுமின்றிப் பொறுப்பு ஏற்பவர் கையொப்பமிட்டு எழுதிக் கொடுக்கும் முறை ஆவணம் கடன் ஒப்புச்சீட்டு (Promissory note) எனப்படும்.

**கடன் ஒப்புதல்**

கொடுக்கப்பட வேண்டியதைக் கடன் பாத்தியதை பொறுப்பு உண்டு என்று எழுத்து மூலமாக ஒப்புக் கொள்ளுதல்.

**கடன் ஓலை**

வாங்கும் கடனுக்குச் சான்றாக எழுதிக் கொடுக்கும் ஆவணம். கடன் சீட்டு, கடன் முறி, கடன் பத்திரம் எனவும் அழைக்கப்படும்.

**கடன் கொடுத்தவர்**

பணத்தை வட்டிக்கு விடுபவர்.

**கடன் சான்றிதழ்**

ஒருவருக்குக் கடனாகக் கொடுத்த தற்கு உரிய சான்றிதழ்.

**கடன் சீட்டு**

கடன் பெறுவதற்கு எழுதப்படும் உறுதிப் பத்திரம்.

**கடன் பத்திரம்**

காண்க : கடன் ஓலை.

**கடன் பெறுபவர்**

பணம் அல்லது பொருளைக் கடனாகப் பெறுபவர்.

**கடன் முறி**

காண்க : கடன் ஓலை.

**கடிதம்**

எழுத்து. தாள், கடிதம் என்ற சொல் பழக்கத்தில் உள்ளது. எழுதப்பெறுவது எழுத்தாகும். ஆங்கிலத்தில் 'letter' என அழைக்கப்படுகிறது. கடிதம் என்பது வழக்குச் சொல். எழுத்து வடிவிலுள்ள செய்தி.

**கடுக்காய்**

மை தயாரிக்கப் பயன்பட்ட பொருள் களுள் ஒன்று.

**கடுதாசி (சு)**

தாள், கடிதம். கடுதாசி (letter) என்பது 'Cartas' என்ற போர்த்துக்கீசியச் சொல்லிலிருந்து தமிழில் வழங்கப்பட்டது.

**கண்ணாடிப் புட்டி**

ஆவணப் பாதுகாப்புக்குத் தேவை யான கருவிகளுள் கண்ணாடிப் புட்டியும் (Glass bottle) ஒன்று.

**கண்ணாடி முகவை**

ஆவணப் பாதுகாப்புத் தேவை யான கருவிகளுள் கண்ணாடி முகவை (Glass beaker) என்பதும் ஒன்று.

**கணக்கக்காணி**

ஓலைகளில் பதிவேடுகள் (கணக்கு கள்) எழுதும் கணக்கர்களுக்கு வழங்கப் படும் நிலமான்யம்.

**கணக்கதிகாரம்**

கணிதநூற் சுவடிகளுள் ஒன்று. அளவை, வாய்பாடு, எண்சுவடி, கணித நூல், கணிதாமிருதம் என்று பல பெயர்களில் பலவகைக் கணிதநூல் சுவடிகள் காணப் படுகின்றன.

**கணக்கப்பேறு**

ஓலைகளில் பதிவேடுகள் (கணக்குகள்) எழுதும் கணக்கர்களுக்கு வழங்கப்படும் ஊதியம்.

**கணக்கர்**

கணக்கில் தேர்ச்சி பெற்றவர் (Accountant).

**கணக்காயர்**

நூல் ஓதுவிப்போர், ஆசிரியர் (Teacher).

**கணக்கு ஏடு**

பதிவேடுகள் எழுதுவதற்குரிய பதப்படுத்தாத முழு ஓலைகள் கணக்கு ஏடு எனப்படும். கணக்கு ஓலை எனவும் அழைப்பர். காண்க : எண்சுவடி.

**கணக்கு ஓலை**

காண்க : கணக்கு ஏடு.

**கணிசம்**

மதிப்பு (estimate).

**கணினி அச்சுக்கோப்பு**

கணினியைப் பயன்படுத்தி அச்சுக் கோத்தல்.

**கணினி இதழ்**

கணினி தொடர்பான செய்திகளைத் தரும் இதழ்.

**கணிதநூற் சுவடி**

காண்க : கணக்கதிகாரம்.

**கணிதாமிருதம்**

காண்க : கணக்கதிகாரம்.

**கதவாகில்**

பற்றுச்சீட்டு.

**கந்தக அமிலம்**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் கந்தக அமிலம் (Sulphuric acid) என்பதும் ஒன்று.

**கப்பிதான்**

கப்பலோட்டி (Captain). போர்த்துக்கீசியச் சொல்.

**கப்பித்தேன்**

கப்பற்படைத் தலைவர் (Chief sailor).

**கபர் தான்**

இசுலாமியர்கள் அடக்கம் செய்த இடம்.

**கபாலத்து கவுல்**

உடன்படிக்கை.

**கபுலியத் நாமா**

நிலக்குத்தகைப் பத்திரம்.

**கபுறு**

கபர் என்ற அரபுச் சொல்லிலிருந்து பிறந்தது. செய்தி அல்லது அறிக்கை எனப் பொருள்படும்.

**கபூல்**

வாக்குறுதி.

**கம்பர் நினைவு ஆய்வு நூல்நிலையம்**

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற அ. விநாயகமூர்த்தி கம்பர் நினைவு ஆய்வு நூல்நிலையம் என்ற பெயரில் அவர் இல்லத்தில் வைத்துள்ள இந்நூல் நிலையத்தில் ஓலைச்சுவடிகள், காகிதச் சுவடிகள், கடந்த நூற்றாண்டில் வெளிவந்த

தமிழ் நூல்களின் பதிப்புகள், படங்கள் முதலானவை சேகரிக்கப்பட்டுப் பாது காக்கப்பட்டு வருகின்றன. வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த செங்குட்டை எனும் ஊரில் இந்நூல்நிலையம் தற்பொழுது செயல்பட்டு வருகிறது.

**கமாவிசுதார்**

பல ஊர்களை மேற்பார்வை செய்யும் அதிகாரி.

**கயிறு பிணிக்குழிசி ஓலை**

பழைய வழக்கு.

**கர்ச் போதே**

போதே மகால். தஞ்சாவூர் மராத்தியர் ஆட்சிக் காலத்தில் இருந்த அரசுப் பொருள் நிலையம்.

**கர்ணம்**

கிராமக் கணக்கன் (Village accountant).

**கர**

அறுபது தமிழாண்டுகளில் கர ஆண்டு என்பது இருபத்தைந்தாவது ஆண்டாகும்.

**கரப்பான் பூச்சி**

இக் கரப்பான் பூச்சி (cockroach) சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைப் பாழ்படுத்தும். இவை 20 முதல் 29° சென்டிகிரேடு வெப்பநிலையில் அதிக இனப்பெருக்கம் செய்யும். இவை சுவடிகள், ஆவணங்களிலுள்ள தாள், தோல் ஆகியவற்றைப் பெருமளவு பாதிப்படையச் செய்யும். தாள்களை ஒட்டப் பயன்படுத்தப் படும் பிசின் மற்றும் பசையை இவை உணவாக விரும்பி உட்கொள்ளும்.

**கரம்பு**

தரிசு, சாகுபடி செய்யாத நிலம் (waste land).

**கரஸ்பான்டென்ஸ்**

'கரஸ்பான்டென்ஸ்' (correspondence) என்பது ஆங்கிலச் சொல். கடிதப் போக்குவரவு.

**கரித்தாள்**

பல பிரதிகள் எடுப்பதற்குரிய தாள் (carbon paper). எழுதுவதற்கும், தட்டச்சு செய்வதற்கும் ஏற்ற வகையில் இதில் பல வகைகள் உண்டு.

**கருத்துக் குறிப்பு**

பொருள் ஒன்றைக் குறித்துக் குறிப்பு அல்லது விமர்சனம் அல்லது விளக்கம் அல்லது அபிப்பிராயம் தெரிவித்தல்.

**கருத்துரை**

பலவகை உரைகளுள் கருத்துரை (commentary)யும் ஒன்று. ஒரு நூல், சுவடி, கட்டுரை, திரைப்படம் போன்ற வற்றைப் பற்றித் திறனாய்வு செய்து உரைத்தல்.

**கருவூல அலுவலர்**

சுவடிகளில் அரசு முத்திரையில் கருவூல அலுவலர் ஒப்பமும் இடம் பெற்றிருக்கும்.

**கருவூலம்**

அரசு பணத்திற்கான பாதுகாப்பு இடம் (treasury).

**கரையான்**

சுவடிகளைப் பாதிக்கும் உயிரியல் காரணிகளில் ஒன்று. இந்தியா, இலங்கை

போன்ற பூமத்திய ரேகையை ஒட்டிய பகுதிகளில் கரையான்களால் (termites) ஏற்படும் இழப்பு அதிகம். இவை மரங்களிலும் பூமிக்குள்ளும் வாழ்கின்றன. ஒரே இரவில் நூல்கள், சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைக் கரையான்கள் அழித்து விடுகின்றன.

**கரோஸ்தி**

கி.பி. 2 அல்லது 3ஆம் நூற்றாண்டில் பூர்ச்சமரப்பட்டையில் எழுதப்பட்ட எழுத்து கரோஸ்தி(kharosthi)யாகும்.

**கல்**

எழுதப்படு பொருள்களாகப் பயன்படுத்தப்பட்டவற்றுள் கல் (stone) ஒன்றாகும். களிமண் பலகை, தோல், உலோகத்தகடு, இலை, மரப்பலகை, பூர்ஜப்பட்டை, துணி, மூங்கில் பத்தை, பனையோலை போன்றவைகளும் எழுதப்படுபொருள்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**கல் தேய்த்த காகிதம்**

மெல்லியதாக இருக்கும். பல வண்ணங்களில் இத்தாள் இருக்கும்.

**கல்விநூல் வரிசை**

கல்வி தொடர்பாக வெளியிடப்படுதல்.

**கல்வெட்டு**

உளி போன்ற கருவிகளைக் கொண்டு அரசு செய்திகளைப் பொறிக்கக் கற்களைப் பயன்படுத்தியுள்ளனர் (inscription).

**கலப்புவழி ஏடு**

தனித்தனியே செல்கின்ற இரு குடும்ப ஏடுகளை, எழுத்தர் ஒருவர் ஒருங்கே வைத்து ஒப்புநோக்கி எழுதுகின்ற நிலையும் உண்டு. அந்நிலையில் அவ்வேட்டில் இருவகை மேலேட்டு வழிகளினுடைய பாடமும், மாசுகளும் கலந்து காணப்படும். இவ்வகை ஏடு கலப்புவழி ஏடு எனப்படும்.

**கலம்**

ஒரு முகத்தலளவை.

**கலன்**

வில்லங்கம் (encombrance).

**கலாசி**

பீரங்கி சுடும் படையில் இருப்பவன். கலாசுகாரன் எனவும் அழைக்கப்பெறுகிறான்.

**கலியுகம்**

நான்கு யுகங்களுள் நான்காவது கலியுகம். இதற்கு 4 இலட்சத்து 32,000 ஆண்டு.

**கலைக்களஞ்சியம்**

கலைச்சொல்லின் பொருள் விளக்கக் கட்டுரைகளைத் தருவது கலைக்களஞ்சியம் (encyclopaedia). இது பல துறைகளிலும் உள்ள கருத்துக்களைப் பல தலைப்புகளில் தொகுத்து எழுதி அகர வரிசைப்படி அமையும். ஆராய்ச்சிக்கு மிகவும் பயனுள்ள வகையில் அமையும் (இத்தகைய கலைக்களஞ்சியங்கள் தமிழ், ஆங்கிலம் போன்ற பல மொழிகளில் வெளியிடப்பட்டு வருகின்றன). இந்திய மொழிகளுள் தமிழில்தான் கலைக்களஞ்சியம் முதன் முதலில் வெளியாயிற்று.

**கலைச்சொல் அகரநிரல்**

குறிப்பிட்ட ஒரு தொழிலில் அல்லது ஒரு நூலில் பயன்பட்டுள்ள சொற்களில், பலருக்கு அறிமுகமாகாத, சிறிய அளவே

வழக்கத்திலுள்ள கலைச்சொற்களை அகர வரிசைப்படுத்திப் பொருளுடன் அல்லது விளக்கத்துடன் தொகுப்பது கலைச்சொல் அகரநிரல் எனப்படும்.

**கலைச்சொல் அகராதி**

காண்க : கலைச்சொல் அகரநிரல் (Glossary).

**கலைச்சொல் தொகுப்பவர்**

கலைச்சொற்களைத் தொகுக்கின்றவர் (Glossarist).

**கலைச்சொல் விளக்குபவர்**

கலைச்சொற்களை விரிவாக விளக்கிச் சொல்பவர் (Glossographer).

**கலைச்சொற்கலை**

கலைச்சொல் அகராதியின் மற்றொரு பெயர் (Glossography).

**கலைச்சொற்கள்**

அறிவியல் தொழில் நுட்பத்துறை சார்ந்த சொல்லாக்கம். ஆங்கிலத்தில் இருக்கும் துறைச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள். இது அருஞ்சொல் விளக்கக் கோவை எனவும் அழைக்கப்படும். நூல் அல்லது சுவடியில் கையாளப்படும் கலைச்சொற்களுக்கு (Technical terms) விளக்கம் தந்து அவற்றை அகரவரிசை முறையில் அமைத்தல்.

**கவளி**

பல சுவடிகள் சேர்ந்த கட்டுக்குக் கவளி அல்லது பொத்தகக் கவளி (pack of manuscripts) என்று பெயர்.

**கவுண்டுக்காறன்**

நடைமுறையிலுள்ள கணக்கு.

**கவுமாக் (கவுல்)**

உடன்படிக்கை (agreement).

**கவுல்சீட்டு**

நிலக்குத்தகைப் பத்திரம்.

**கவுல் நாமா**

நிலக்குத்தகைப் பத்திரம்.

**கவுலாத்து**

உடன்படிக்கை. ஒப்பந்தம்.

**கழஞ்சு**

ஓர் எடுத்தல் அளவை.

**களநடைக் கணக்கு**

அறுவடையாகிக் களத்தில் உள்ள தானியக் கணக்கு.

**களப்பணி**

ஆய்வுக்கு வேண்டிய தரவுகள் களப்பணி (field work) மூலம் சேகரிக்கப் படும். களப்பணி மூலம் சுவடிகள், ஆவணங்கள், கடிதங்கள் முதலானவையும் சேர்க்கப்படும். உ.வே.சாமிநாதையர் பல ஊர்களுக்கும் சென்று பலவகையான சுவடிகளைச் சேகரித்தமையை அவரது வரலாறு புலப்படுத்தும்.

**களிமண் பலகை**

எழுதுபொருள்களாகப் பயன் படுத்தப்பட்டவற்றுள் களிமண் பலகை (clay plate)யும் ஒன்றாகும். கல், தோல், உலோகத்தகடு, இலை, மரப்பலகை, பூர்ஜப்பட்டை, துணி, மூங்கில் பத்தை போன்றவையும் எழுதப்படு பொருள்களாகப் பயன்பட்டுள்ளன.

**கற்பூரத் தைலம்**

மை தயாரிக்கப் பயன்படும் பொருள்களுள் ஒன்று

**கற்றுச்சொல்லி**

ஆசிரியரின் வாய்மொழியாகக் கேட்டு-எடு எழுதுவோர்.

**கற்றை**

காண்க : சுவடி.

**கறையான்**

சுவடிகள், ஆவணங்கள் போன்ற வற்றைப் பாழ்படுத்தும் பூச்சியினம் (termites, white ants).

**கன்றுக்குட்டித் தோல்**

கன்றுக்குட்டியின் தோலைப் பதப் படுத்தி அதில் எழுதுவதுண்டு.

**கஜானா**

கருவூலம். முத்திரை ஒலைகளில் வட்டவடிவமான இரண்டு முத்திரைகளில் ஒன்றில் தமிழில் 'பொக்கிஷம்' என்றும், ஆங்கிலத்தில் 'Treasury' என்றும், பாரசீக மொழியில் 'கஜானா' என்றும் பொறிக்கப்பட்டிருக்கும்.

**கஸ்பா**

தலைமை ஊர்.

## கா

**காகித அட்டை**

கட்டமைப்புச் செய்யப் பயன்படும் பொருள்களுள் ஒன்று (board).

**காகித அளவுகள்**

புத்தகப் பதிப்பில் பலவகையான பக்கப் பரப்பளவுகள் உள்ள புத்தகங்களை யும் பதிப்பாசிரியர் காணவும் கையாளவும் நேரும். எனவே அவற்றிற்குப் பயன்படும் தாள்களின் அளவுகள் (paper sizes) பலவகைகளில் உள்ளன. அவை வருமாறு : புல்ஸ்கேப் ஆக்டேவா (16.75 X 4.25 அங்குலம்), கிரவுன் ஆக்டேவா (7.5 X 5 அங்.), டெம்மி ஆக்டேவா (8.75 X 5.5 அங்.), மீடியம் ஆக்டேவா (9.5 X 6 அங்.), ராயல் ஆக்டேவா (10 X 6.25 அங்.), புல்ஸ்கேப் குவார்ட்டோ (8.5 X 6.75 அங்.), கிரவுன் குவார்ட்டோ (10 X 7.5 அ.), டெம்மி குவார்ட்டோ (11.25 X 8.75 அங்.), ராயல் குவார்ட்டோ (12.5 X 10 அங்.), இம்பீரியல் குவார்ட்டோ (15 X 11 அங்.), புல்ஸ்கேப் (13.5 X 17 அங்.), கிரவுன் (15 X 20 அங்.), டெம்மி (17.5 X 22.5 அங்.). மீடியம் (18 X 23 அங்.). ராயல் (20 X 25 அங்குலம்).

**காகித ஆலை**

தாள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை (Paper Mill).

**காகித எண்ணிக்கையளவு**

24 தாள் கொண்டது 1 குயர். 20 குயர் கொண்டது (480 தாள்) 1 ரீம். தற்பொழுது 1 ரீம் என்பது 500 தாள் கொண்டதாகப் பல காகித ஆலைகளின் கணக்கு ஆகும். 16 ரீம் கொண்டது 1 பேல் ஆகும்.

**காகிதக் குளவி**

இயற்கையில் காகிதத்தைத் தயாரித்து வரும் ஓர் உயிரினம் (paper wasp).

**காகிதச் சுவடி**

சீனாவில் கி.பி. 105இல் காகிதம் செய்யும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியாவிற்கு முதன் முதலில் இசுலாமியர் களால் கி.பி. 11ஆம் நூற்றாண்டில் அறிமுகம் செய்யப்பட்டது.

**காகிதப் பட்டை**

பார்த்திலோமிய சீகன்பால்கு கி.பி. 1715இல் பொறையாற்றில் 'பெத்லகேம்

ஆலயத்' தோட்டத்தில் காகிதப் பட்டடை (Paper Mill) ஒன்றைத் தொடங்கினார்.

**காகிதம்**

காகிதம் (paper) என்பது வழக்குச் சொல். ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் 'பேப்பர்' என்ற சொல் 'பேபிரஸ்' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது.

**காசேட்டுச் சுவடி**

காண்க : காசோலைச் சுவடி (cheque book).

**காசோலை**

குறிப்பிட்ட ஒரு வங்கியருக்கு வரையப்படுவதும், காட்டிக் கோரும்போது அந்த வங்கியர் பணம் கொடுக்க வேண்டிய தாகவும் உள்ள மாற்றுச் சீட்டு (cheque).

**காசோலைச் சுவடி**

10, 20 என்ற எண்ணிக்கையில் ஒரே தொகுதியாக இருக்கும் கர்சோலைப் புத்தகம் (cheque book). வங்கியின் பயன்பாட்டிற்காக உள்ள புத்தகமாகும். காசேட்டுச் சுவடி எனவும் அழைக்கப் பெறும்.

**காட்சிப்படுத்தல்**

கண்காட்சி, ஆவணக் காப்பகம், சுவடி நூலகங்களில் சுவடிகள் போன்ற வற்றைக் காட்சிப்படுத்தல்.

**காடாரம்பம்**

நீர்ப்பாசனம் இல்லாத நிலப்பகுதி.

**காணி**

ஓர் அளவை எண். எண்பதில் ஒன்று (1/80). 100 குழி அளவுள்ள நிலம்.

**காணிக்கை**

காண்க : உரிமையுரை.

**காதோலை**

காதில் அணியும் அணிகலன் (ear-hoop).

**காப்பிரிகள்**

தென்கிழக்கு ஆப்பிரிக்க சுதேசிகள். போர்த்துக்கீசியர்களும், பிரெஞ்சுக்காரர் களும், ஆங்கிலேயர்களும் இவர்களை ஏராளமாக இந்தியாவிற்குக் கொண்டு வந்து இராணுவத்தில் பயன்படுத்தினார்கள்.

**காப்பீட்டு ஆவணம்**

குறிப்பிட்ட செயல் நடக்கும் பொருட்டுக் குறிப்பிட்ட தொகையோ, தொகையின் ஒருபகுதியோ கொடுப்பதாகப் பொறுப்பு ஏற்பதைக் குறிக்கும்.

**காப்புறுதி**

ஒரு சொத்து இழக்கப்பட்டால் அதன் மதிப்புத் தொகையைப் பெறுவதற்கும் ஒருவர் இறந்துவிட்டால் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெறுவதற்குச் செய்யப்படும் காப்பீடு.

**காமாரம்பம்**

நீர்ப்பாசனம் இல்லாத நிலப்பகுதி.

**காய்ந்த ஓலை**

ஓலை வகைகளுள் ஒன்று.

**காயக்காரர்**

காயக்கம் என்றால் தந்திரம் என்று பொருள். காயம் என்றால் உடம்பில் ஏற்பட்ட புண் என்று பொருள். போரில் காயப்பட்ட வர்களுக்கு மருத்துவ உதவி அளிக்கும் மருத்துவர் என்பது காயக்காரர் என்பதற் குரிய பொருளாகும்.

**கார்கானா**

அரசு, தொழில் செய்யுமிடம்.

**கார்கூன்**

அலுவலர், கணக்கர், எழுத்துவேலை செய்பவர்.

**கார்கோன்**

தலைமை அலுவலர் (manager).

**கார்பன் டை ஆக்சைடு**

ஆவணக் காப்பிற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் கார்பன் டை ஆக்சைடு (Carbon-di-oxide) என்பதும் ஒன்று.

**கார்பார் பிரசங்கம்**

இது (சர்கேல்) அமைச்சர் அலுவலகம் (Secretariot).

**கார்பாரி**

கார்பார் என்ற அலுவலர், அரசனின் மெய்க்காப்பாளரின் தலைவன் (superintendent).

**காரியக்காரர்**

அலுவலர் (agent).

**காரியஸ்தர்**

அலுவலர் (agent).

**கால்சியம் ஆக்சைடு**

ஆவணக் காப்பிற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் கால்சியம் ஆக்சைடு (Calcium oxide) என்பதும் ஒன்று.

**கால்சியம் பை கார்பனேட்**

ஆவணக் காப்பிற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் கால்சியம் பை கார்பனேட் (Calcium bi carbonate) என்பதும் ஒன்று.

**கால் தோல் கட்டமைப்பு**

முதுகுப்பகுதி மட்டும் தோலினால் போர்த்தப்பட்டு மற்ற எல்லா இடமும் துணியாலோ காகிதத்தாலோ போர்த்துவது கால் தோல் கட்டமைப்பு எனப்படும்.

**காலப் பதிப்பு**

வரலாற்றில் வரும் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தைச் சேர்ந்த நூல் எனின், அக்காலச் சூழலே புலப்படுமாறு, அக்காலத்தில் வழங்கிய எழுத்து வடிவங்களும் படங்களும் அமையுமாறு, வரைந்து புத்தகத்தை அச்சிடுதல் காலப் பதிப்பு எனப்படும்.

**காலம் காட்டி**

காண்க : நாட்காட்டி (calender).

**காலயுத்தி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் ஐம்பத்திரண்டாவது ஆண்டு.

**காலாண்டு இதழ்**

மூன்று மாதங்களுக்கொருமுறை வெளிவரும் இதழ் (Quarterly journal).

**காலி புரூப்**

அச்செழுத்துக்களை அடுக்கும் நீண்ட தட்டுக்கு 'காலி' என்று பெயர். அத் தட்டிலிருந்து எடுத்துப் பக்கம் கட்டாமல் எடுக்கப்படும் அச்சுப் பார்வைப்படி 'காலி புரூப்' (galley proof) எனப்படும்.

**காலிக்கோ**

'காலிக்கோ' (calico) என்பது ஒருவகைப் பருத்தித் துணி. இந்தியாவிலுள்ள கள்ளிக் கோட்டையில் இவ்வகைத் துணி முதன் முதலில் தயாரானதால், இது கள்ளிக் கோட்டைத் துணி (Calicut cloth) எனப்பட்டு, நாளாவட்டத்தில் 'காலிக்கோ'

என மாறிற்று. பொதுவாகக் காலிக்கோ துணி 27 அங்குல அகலத்திலேயே தயாரிக்கப்படுகிறது. பல வண்ணங்களில் இத்துணி தயாரிக்கப்படுகிறது. இத் துணியைப் பயன்படுத்திப் பல நூல்கள் கட்டமைப்பு செய்யப்படுகிறது.

**காலிக்கோ அச்சுமுறை**

காலிக்கோ எனப்படும் பருத்தித் துணி அல்லது வேறுவகைத் துணியின்மீது பலவகைச் சித்திரங்களைக் கண்ணைக் கவரும் நிறங்களில் அச்சிடுதல் காலிக்கோ அச்சுமுறை எனப்படும். பிளாக்கு அச்சு முறை (Block press), எந்திர அச்சுமுறை (Machine press) எனக் காலிக்கோ அச்சுமுறை இருவகைப்படும்.

**காவல்காரர்**

ஊர்க்காவலர் (guard).

## கி

**கிடைநிலைப் பாடவேறுபாடு**

நூலாசிரியர் எழுதிய மூல ஏட்டைப் பார்த்து இருவர் பிரதியெடுக்கக் கூடும். அவ்விருவருடைய பிரதிகளுக்கிடையே காணப்படும் பாடவேறுபாட்டுக்குக் கிடைநிலைப் பாடவேறுபாடு என்று பெயர்.

**கிரந்த எழுத்து**

வடமொழியை எழுதுவதற்குத் தமிழ் மக்கள் வழங்கிய எழுத்து (grantha letter).

**கிரயம்**

விற்பனை (sale).

**கிரய சாசனம்**

நிலபுலன் முதலான சொத்துக் களின் விற்கிரய சாசனம் (sale document).

**கிரயச் சீட்டு**

நிலபுலன் முதலான சொத்துக் களின் விற்கிரய சாசனம் (sale deed).

**கிரயப் பத்திரம்**

நிலபுலன் முதலான சொத்துக் களின் விற்கிரய சாசனம் (sale document). காண்க : உரிமைப் பத்திரம்.

**கிராப்ட் தாள்**

சிப்பங்கள் கட்டப் பயன்படும் அழுத்தமான பழுப்புத்தாள் (kraft paper).

**கிராம ஆட்சி அலுவலர்**

காண்க : ஊராட்சி அதிகாரி (village officer).

**கிராம ஈஸ்துவை ஏடு**

கிராமத்தின் காணியாட்சிக்காரர் முதலானவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இனாம் முதலிய விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு.

**கிராம முன்சீப்**

ஊர்களை மேற்பார்வை செய்யும் அதிகாரி.

**கிரேதாயுகம்**

நான்கு யுகங்களுள் முதல் யுகம். இதற்கு 17 இலட்சத்து 28,000 ஆண்டுகள்.

**கிரேப்பியிலே**

பிரெஞ்சுச் சொல். பத்திர அலுவலகம் என்பது பொருள்.

**கிரையம்**

விலை.

**கில்லா**

கோட்டையைக் குறிக்கும்.

**கில்லேதார்**

கோட்டைத் தலைமையாளர், மிகப் பெரிய கோட்டை அதிகாரி.

**கிளிசரின்**

ஆவணக் காப்பிற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் கிளிசரின் (Glycerine) என்பதும் ஒன்று.

**கிளிமுக்கு**

சுவடிகளில் ஏடு விழாமல் தடுக்க வைக்கும் ஓலையீர்க்குத் துண்டு.

**கிளைவழி மரபு**

தந்தை – மகன் என்னும் நேர்வழி மரபுக்கு மாறாக அண்ணன் – தம்பி செல்லும் கிளை வழி மரபு.

**கிஸ்தி**

நிலவரி. 'கிஸ்த்' என்பது, அரபுச் சொல்லாகும்.

**கிஸ்தி பந்தி**

தவணை முறையில் செலுத்தும் நிலவரிக் கணக்கு. கிஸ்தி பேரிஸ்து, தவணைக் கணக்கு எனவும் அழைக்கப் படும்.

**கிஸ்தி பேரிஸ்து**

காண்க : கிஸ்தி பந்தி.

## கீ

**கீலக**

அறுபது தமிழாண்டுகளுள் நாற்பத்து இரண்டாவது ஆண்டு.

**கீழ் அடைமானம்**

காண்க : உள் அடைமானம்.

**கீழ்க்கோர்ட் (டு)**

நியாய சபை.

**கீழ்வழி ஏடு**

அண்மைப் படியிலிருந்து படி எடுக்கப்பட்டவை கீழ்வழி ஏடுகள். சான்றாக இ, ஈ, உ என்பன அ என்னும் அண்மைப் படியிலிருந்து படியெடுக்கப்பட்ட கீழ்வழி ஏடுகள் ஊ, எ, ஏ என்பன ஆ என்னும் அண்மைப்படியின் வழிவந்த கீழ்வழி ஏடுகள் ஆகும்.

**கீழ்வாயிலக்கம்**

எண்சுவடியில் ஒன்று. கிராமப்புறப் பள்ளிக்கூடங்களில் தொடக்கத்தில் தமிழ் எண்கள், எண்சுவடியிலுள்ள கீழ்வா யிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று, நெல் இலக்கம் போன்றவற்றைச் சொல்லித் தருவர்.

**கீழ்வார உரிமை**

காண்க : ஜமீன்தாரி.

**கீழேடு**

கீழ் நோக்கி வருகின்ற அல்லது மூலத்திலிருந்து அல்லது மூதாதையர் வழி வந்த ஏடு.

**கீறல்**

1. ஏட்டில் எழுத்தாணி கொண்டு எழுதும் முறைக்குக் கீறல் என்று பெயர்.

2. கையெழுத்திடத் தெரியாதவன் இடும் கோடு.

## கு

### குங்கிலியம்

மை தயாரிக்கப் பயன்பட்ட பொருள் களுள் ஒன்று.

### குடவெழுத்தாணி

குடவெழுத்தாணி (metallic pen) என்பது தலைப்பில் இருபிரிவு கூர் முனைகள் உள்ளதாக இருக்கும். இந்தத் தலைப்பை ஓலையில் வைத்துத் திருகினால் ஓலைகளைக் கயிறு கோர்த்துச் சேர்த்துக் கட்டத் துளை உண்டாகும். இந்த ஓலை களைத் துளை உண்டாகும்படிக் குடைவ தால் இது குடைவு எழுத்தாணி எனப் பட்டுத் தற்போது குடவெழுத்தாணி என்று பேச்சு வழக்கில் திரிந்து வழங்கி வருகிறது. காண்க : எழுத்தாணி.

### குடவோலை

சபையோரைத் தேர்ந்தெடுப்பதற் காக வேட்பாளர் பெயர் எழுதிக் குடத்துக் குள் இடப்படும் ஒலை அல்லது சீட்டு. சோழர் ஆட்சிக்காலத்தில் இக்குடவோலை முறையிலேயே தேர்தல் நடந்தது.

### குடிக்கூலி

வீட்டு வாடகை.

### குடிவழிமுறை

மூலப்பிரதி கிடைக்காத போது, வழியேடுகள் கிடைக்கின்ற இடவகை களைக் கொண்டும், ஏடுகளுக்கிடையே காணப்படும் படங்களின் ஒற்றுமை வேற்றுமைகளைக் கொண்டும், பதிப் பாசிரியர் அவ்வேடுகளைக் குடும்பங்க ளாகவும் உட்குடும்பங்களாகவும் பிரித்துக் கொள்வார். அவ்வேடுகள் எழுந்த காலங்கள் கொண்டு எதன் வழியேடு எது என்று அவற்றின் கிளை மரபுகளை ஒருவாறு வரையறை செய்வார். அவற்றின் பாடங்களில் எது பழமையான திருத்தமான பாடம் என ஊகிக்க முயல்வார். இம்முறை குடிவழிமுறை எனப்படும்.

### குடிவாரக்கணக்கு

குடிமக்கள் மேல்வாரமாகக் கொடுக்க வேண்டிய தானியக் கணக்கு.

### குடிவாரம்

நிலத்தின் விளைச்சலில் குடியான வனின் பங்கு.

### குடும்ப வழி ஏடு

மூல ஏட்டிலிருந்து பிறந்த அண்மைப் படிகள் பல்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு ஆங்காங்கு அவற்றின் வழி ஏடுகள் பல தோன்றும் ஒரு நூலுக்குரிய பல சுவடிகள் குடும்ப வழி ஏடுகள் ஆகும்.

### குடைக்கூலி

குடியிருப்பதற்கான மாத அல்லது அன்றாட வாடகைப் பணம். காண்க : குடிக்கூலி.

### குடைவு எழுத்தாணி

காண்க : எழுத்தாணி, குடவெழுத்தாணி (iron pen).

### குண்டெழுத்தாணி

காண்க : எழுத்தாணி. எழுத்தாணி வகைகளுள் ஒன்று. மேற்புறம் கனமாகவும், குண்டாகவும் அமைந்திருக்கும். முதன் முதலில் ஓலையில் எழுதத் தொடங்குவோர் பயன்படுத்துவர்.

### குத்தகை

கைம்மாறு என்பது இதன் பொருள். 'குத்தகை' (lease) என்பது அரபுச் சொல்லாகும். ஒரு நிலத்தின் விளைவை, ஒரு

தோப்பின் பலனை அல்லது ஓரிடத்தில் ஒரு பொருளை விற்கும் தனியுரிமை குத்தகைக்கு விடப்படும். குறிப்பிட்ட அளவு பணத்தைக் கட்டி அவற்றைக் குத்தகைக்கு எடுப்பர். சில வேளைகளில் ஏலத்தில் விடுவதும் உண்டு. ஏலத்தில் உச்சக்கேள்வி கேட்டு, ஏலத்தை எடுத்தவர் 'குத்தகைதாரர்' எனப்படுவர்.

**குத்தகை எடுப்பவர்**

குத்தகைக்கு எடுக்கும் நபர் (lessee).

**குத்தகை ஒப்புதல்**

நிலத்தின் உரிமையை மற்றவருக்கு ஒற்றிக்கு வைப்பது.

**குத்தகைதாரர்**

ஏலத்தில் உச்சக் கேள்வி கேட்டு ஏலத்தை எடுத்தவர் (lease holder). காண்க : குத்தகை.

**குத்தகை நிலம்**

குத்தகைக்கு விடப்பட்ட நிலம், சொந்த நிலம்.

**குத்தகைக்கு விடுபவர்**

குத்தகைக்கு விடும் நபர் (lesser).

**குத்தகைப் பத்திரம்**

ஒருவர் தமது நிலத்தைச் சில காலம் வேறு ஒருவருக்கு உரிமையுடையதாய் ஒற்றிக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது குத்தகைப் பத்திரம் எனப்படும். இதனை அடகுமுறை ஆவணம் எனவும் கூறுவது உண்டு.

**குதாவடை**

தடை.

**கும்பாபிஷேகம்**

கோயில் கும்பகலசங்களைப் புதுப்பித்து நடைபெறும் சடங்கு. 12 ஆண்டுகளுக்கொருமுறை நடத்த வேண்டும்.

**கும்பினி**

'Compagnie' என்ற பிரெஞ்சு மொழிச் சொல் கும்பினி என்று மருவித் தமிழில் வழங்கப்படுகிறது.

**குமாந்தான்**

பிரெஞ்சு மொழிச் சொல். படைத் தலைவன் என்பது பொருள்.

**குமுசல்**

'Conseil' என்ற பிரெஞ்சுச் சொல் தமிழில் குமுசல் என அழைக்கப்படுகிறது. ஆலோசனைக் குழுக் கூட்டம் என்று பொருள்.

**குமுசலியோர்**

'Conseiller' என்ற பிரெஞ்சுச் சொல்லில் இருந்து பிறந்தது. ஆலோசனை கூறுபவர்கள் குழு என்பது பொருள்.

**குருத்தோலை**

ஓலை வகையுள் ஒன்று.

**குரோதன**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் ஐம்பத்தொன்பதாவது ஆண்டு.

**குரோதி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் முப்பத்தெட்டாவது ஆண்டு.

**குரோமோ தாள்**

வண்ணக்கல் அச்சுத்தாள், வண்ணந் தோய்த்து அச்சடிக்கத்தக்க தாள்.

**குலமான்யம்**

முழு மான்யம்.

**குழி**

புன்செய்க்குரிய நில அளவைக் குறிக்கும். ஒருகோல் நீளமும், ஒருகோல் அகலமும் கொண்ட நில அளவை.

**குழிமாற்று**

எண்சுவடியில் ஒன்று. காண்க : கீழ்வாயிலக்கம்.

**குளிர்பதனி**

சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைப் பாதுகாப்பதற்குப் பயன்படும் குளிர்பதனக் கருவியாகும் (air-conditioner).

**குளோரமின்-டி**

ஆவணக் காப்பிற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் குளோரமின்—டி (Chloramin-T) என்பதும் ஒன்று.

**குற்றம் சாற்றுதல்**

முறைப்படிக் குற்றம் சாற்றுதல்.

**குற்ற வழக்கு**

விளக்கப்பட்ட சேவையைச் செய்பவர் மீது சட்டம் விதித்துள்ள தண்டனையைச் செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கையை நிறைவேற்றுதல்.

**குறிப்பு ஆவணம்**

நபர் ஒருவரின் அடையாளம் தகுதி நிலை காட்டுவதாகவோ, நடவடிக்கை ஒன்றைப் பதிவு செய்வதாகவோ உள்ள ஆவணத் தொகுப்பு.

**குறிப்புக் கோப்பு**

ஒரு கோப்பில் நடப்புக் கோப்புக்கு அடுத்துள்ள பகுதி குறிப்புக் கோப்பாகும். எழுத்தர்கள், பிறர் எழுதும் குறிப்புக்கள் இப்பகுதியில் இருக்கும்.

**குறிப்புரையாசிரியர்**

பதிப்பிக்கும் சுவடி அல்லது நூலில் குறிப்புரை எழுதும் ஆசிரியர் (annotator).

**குறிப்பெதிர் பதிப்பு**

ஒரு சுவடியின் ஒரு பாதியில் மட்டும் மூலத்தை எழுதி அதன் எதிர்ப்புறம் காலியாக அதாவது வெற்றிடமாக விடப்படும். வெற்றிடமாக உள்ள பக்கத்தில் மூலத்தைப் பயில்வோர் தம் குறிப்புக்களை எழுதுவர். இது குறிப்பெதிர் பதிப்பு ஆகும். நீ. கந்தசாமிப் பிள்ளை பதிப்பித்த திருவாசகப் பதிப்பு இப்பதிப்புமுறையில் வெளிவந்தது.

**குறிப்பேடு**

ஒரு நாளில் நடந்த செயல்கள் அனைத்தையும் குறித்து வைக்கும் ஏடு.

**குறியீடு**

குறியாக இட்டாளும் பெயர். சுவடிகளில் சொற்குறியீடுகள் (symbols) பல உள்ளன.

**குறுந்தகடு**

இக்காலத்தில் குறுந்தகடு (CD) என்பதில் சுவடிகளைப் பதிவு செய்து பாதுகாத்து வருகின்றனர்.

## கூ

**கூட்டெழுத்து**

பல எழுத்துக்களைச் சேர்த்தெழுதும் எழுத்து. பெரும்பாலும் சுவடிகளில் இரண்டு எழுத்துக்களைச் சேர்த்து எழுதும் பழக்கம் உண்டு. இக்கூட்டெழுத்து முறை ஏனைய இந்திய மொழிகளின் தாக்கத்தின் காரணமாகத் தமிழில் இடம்பெற்றது. ஒரே மெய்யெழுத்து இரட்டிக்கும் இடங்களில் இவை இடம்பெற்றன.

**கூடுதல் படி**

ஒன்றுக்கு மேற்பட்ட படிகள் (additional copies) இருத்தல்.

**கூந்தற்பனை**

தாளிப்பனைமரம் (talipot palm). பனைமரங்களில் இக்கூந்தற்பனை (Coripha Umbra Calibra) மரத்தின் ஓலைகள் எழுதுவதற்குப் பயன்படுத்தப் பட்டன. இந்தியாவின் மேற்குக் கடற்கரை. இலங்கை, மலேசியக் கடற்கரை ஆகிய பகுதிகளில் இப்பனைமரங்கள் அதிகமாக வளர்கின்றன. இப்பனையின் ஓலை மிக மெல்லியதாகவும், வழவழப்பாகவும் நன்கு வளைந்து கொடுக்கும் தன்மையும் கொண்டது. இப்பனையோலைகள் 8 செ.மீ. முதல் 10 செ.மீ. வரை அகலமும் 90 செ.மீ. வரை நீளமும் உள்ளதாக இருக்கும்.

**கூந்தற்பனையோலை**

காண்க : பனை ஓலை.

**கூரெழுத்தாணி**

எழுத்தாணி வகையுள் ஒன்று.

**கூற்றம்**

காண்க : வட்டம் (taluk).

## கெ

**கெட்டி அட்டைக் கட்டமைப்பு**

காண்க : கேஸ் கட்டமைப்பு (hard back bound).

**கெட்டிப் பத்திரம்**

உறுதிப் பத்திரம்.

**கெசொசன்**

குறிப்பிட்ட காலம்.

**கெஜம்**

3 அடி அதாவது 36 அங்குலம் (yard measure).

## கே

**கேட்பு வரைவோலை**

காட்டியவுடன் செலுத்தப்பட வேண்டிய வரைவோலை (draft).

**கேள்விநிலைச் சான்று**

சாட்சியாக அழைக்கப்படாத ஒருவரின் வாய்மொழி அல்லது வரைமொழி கூற்றுகளைச் சாட்சிகள் தன் சான்றுரை யில் கூறுதல்.

**கேஸ் கட்டமைப்பு**

புத்தகத்தைத் தைத்தபிறகு இரு புறமும் கடினமான அட்டை (hard case board) கொண்டு மூடுவது. அட்டையை யும் புத்தகத்தையும் இணைத்து முதுகுப் பக்கம் ஒட்டுவதோடன்றி, எண்ட் தாள்களை இரு உட்புற அட்டைகளிலும் ஒட்டுவது. அதனால் கட்டமைப்பு செம்மையாகப் பிடித் திருக்கும். சிறிய புத்தகங்களில் மெல்லிய காகித அட்டையிட்டுச் செய்வது போலவே, கடின அட்டையிட்டும் கட்டமைப்பு செய்ய லாம். கெட்டி அட்டைக் கட்டமைப்பு எனவும் வழங்கப்படும்.

## கை

**கைக்கணக்கு**

தினசரிக் கணக்குக் குறிப்பேடு. கைச்சிட்டா, கையேடு, கையோலை, கைச் சீட்டு எனவும் அழைக்கப்படும்.

**கைக்குறி**

இடதுகைப் பெருவிரல் அச்சுப் பதித்தல்.

**கைக்குறிப்பு ஏடு**

நாட்குறிப்பு ஏடு (diary).

**கைச்சாத்து**

செலுத்திய தொகைக்குக் கொடுக்கப் படும் ஒப்புதல் சீட்டு (signature).

**கைச்சிட்டா**

காண்க : கைக்கணக்கு.

**கைச்செலவோலை**

சிறு தொகை கொடுத்து விற்பனை உறுதி செய்யப்பெறும் ஓலை.

**கைத்தீட்டு**

நேரில் கையெழுத்திட்டு எழுதிக் கொடுக்கும் உறுதிச்சீட்டு (document).

**கைத்தையல் கட்டமைப்பு**

மடிப்புகளை முறைப்படுத்திக் கொண்டு கெட்டியான நூலினால் இணைத்துத் தைப்பது. நெடுங்காலமாக வழக்கத்தில் இம்முறை இருந்து வருகிறது.

**கைத்தையல் கட்டுமானம்**

காண்க : செக்சன் தையல் (hand bound).

**கைத்தொழில் நூல்கள்**

கையினால் செய்யப்படும் பூவேலை, பின்னல் வேலை, தையல் வேலை, பழுது பார்ப்பது முதலானவை பற்றி விளக்கு கின்ற, படங்களுடன் கூடிய புத்தகங்கள் (craft books).

**கைநாட்டு**

ஓலைகள், ஆவணங்கள், பத்திரங்கள் போன்றவற்றில் கையெழுத்து இடத்தெரியாதவர்கள் எழுத்தாணியால் கீறியுள்ளனர். இந்தக் கீறல் இன்னாரின் கைநாட்டு என்று எழுதியுள்ளனர். தாள் களில் மையினால் இடதுகைப் பெருவிரல் முத்திரையைப் பதித்து, இது இன்னாரின் இடதுகைப்பெருவிரல் முத்திரையாகும் என்றும் எழுதியுள்ளனர்.

**கைப்படம்**

கையில் வைத்திருக்கக்கூடிய அளவில் உள்ள நிலப்படம்.

**கைப்படி**

காண்க : அலுவலகப்படி (office copy).

**கைப்பிரதி**

மூலப்பிரதி (autograph).

**கைபீது**

விவரக் குறிப்பேடு (statement).

**கைபீயத்து**

விவரக் குறிப்பேடு (detailed account).

**கையால் எழுதிய பிரதி**

காண்க : சுவடி.

**கையினால் தயாரிக்கப்பட்ட காகிதம்**

இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்படு வதற்கு முன்னர்க் கையினால் தயாரிக்கப் பட்ட காகிதங்களை (handmade papers) மக்கள் பயன் படுத்தினர்.

**கையெழுத்துத் துப்பறி வல்லுநர்**

தனி நபர்களின் கையெழுத்தைத் துப்பறியும் கலையில் வல்லவர்.

**கையெழுத்துப் பிரதி**

காண்க : சுவடி.

**கையேட்டுப்பிள்ளை**

ஓலைச்சுவடிகளைப் பிரதி செய்தவர் கையேட்டுப்பிள்ளை என அழைக்கப் பெற்றார்.

**கையேடு**

காண்க : கைக்கணக்கு (manual).

**கையொப்பம்**

ஆவணம் ஒன்றில் அடங்கிய வற்றிற்குக் கட்டுவதாக அறிவிக்கும் வகையில், ஒருவர் அதில் தம் பெயரையோ முதலெழுத்துக்களையோ வேறு அடையாள அறிகுறிகளையோ (கைநாட்டு) இடுதல் (signature).

## கொ

**கொட்டடி**

அறை (room).

**கொட்டி**

கொட்டகை (shed).

**கொட்டியம்**

சரக்கறை (store).

**கொடை**

குறிப்பிட்ட அசைபொருள் அல்லது அசையாப்பொருளை மறுபயனின்றித் தாமாகவே ஒருவர் மற்றொருவருக்கு மாற்றுதல். மாற்றம் பெறுபவராலோ அவர் சார்பாளராலோ அது ஏற்கப்பட வேண்டும் (donation).

**கொத்தவால்**

கோட்டைக் காவலர் (Chief fort officer).

**கொதுவை**

காண்க : அடைமானம் (mortgage).

**கொழுப்புத் தாள்**

மிகவும் மெல்லியதான தாள் (cellophane paper).

**கொள்ளைப் பதிப்பு**

உரியவருடைய இசைவுரிமையின்றி ஏட்டினைப் பதிப்பித்து நேர்மையற்ற ஆதாயம் அடைவது (pirated edition).

**கொவர்ணதோர்**

'Governador' என்ற போர்த்துக் கீசியச் சொல்லில் இருந்து பிறந்தது. கவர்னர் அல்லது ஆளுநர் என்று பொருள்.

**கொறிக்கும் உயிரினம்**

சுவடிகள், ஆவணங்கள் போன்ற வற்றை எலி, அணில் போன்ற கொறிக்கும் உயிரினங்கள் (rodents) பாழ்படுத்தி வருகின்றன.

## கோ

**கோசம்**

குரோசம், 2¼ மைல்.

**கோட்டம்**

காண்க : மாவட்டம் (district).

**கோட்டி மகால்**

தானியக் கிடங்கு.

**கோட்டியக்காரன்**

வாயில் காப்போன்.

**கோட்டிவாலா**

வாயில் காப்போன்.

**கோடக்ஸ்**

பலகைகளில் எழுதப்பட்ட கையெழுத்துச் சுவடியைக் கோடக்ஸ் (Codex) என அழைத்தனர். காண்க : பலகைச் சுவடி.

**கோத்து**

பட்டாளம் தங்குமிடம் (contonment).

**கோந்து**

கட்டமைப்புச் செய்யப் பயன்படும் பொருள்களுள் ஒன்று (gum, glue).

**கோப்பி**

நகல், பிரதி (copy).

**கோமகன் காகிதம்**

சாய்லன் (T'Sai Lun) என்ற சீன அறிஞர் கி.பி. 105இல் மரப்பட்டை, நார், துண்டு துணி, மீன்வலை முதலான பொருள்களைப் பயன்படுத்திக் காகிதம் செய்யும் முறையைக் கண்டுபிடித்தார். அக்காகிதம் கோமகன் காகிதம் (Paper of Marquis T'Sai) என்றழைக்கப்பட்டது.

**கோலடி சுதந்திரத் திட்டம் ஏடு**

கதிரடித்த பிறகு தாளில் தங்கியுள்ளதை மாடுகட்டிப் போரடித்து உதறியெடுத்துத் தூற்றிய தானியத்தில் கிராமப் பணியாளர், அறநிலையங்கள் ஆகியவற்றிற்கு உரிமையாக வழங்கப்படும் அளவினைத் தெரிவிக்கும் ஏடு.

**கோவில் ஈஸ்துவை ஏடு**

கோவில்களுக்கு வழங் கப்பட வேண்டிய இனாம் முதலியவற்றையும், அவற்றைப் பெற வேண்டிய உரிமையாளர் களையும் தெரிவிக்கும் ஏடு.

**கோவில் ஈஸ்துவைத் தீர்ப்பு ஏடு**

கோவில்களுக்கு வழங்கப்பட்ட இனாம் முதலிய விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு.

**கோவில் வயணம் ஏடு**

கிராமத்தில் அமைந்துள்ள கோவில்களையும் அவை தொடர்புடைய விவரங்களையும் தெரிவிக்கும் ஏடு.

**கோனேரின்மை கொண்டான் ஓலை**

அரசர்தம் ஆணையைக் குறிக்கும். தனக்கு யாரும் ஒப்பில்லாத தன்மை உடையவன் என்பது கோனேரின்மை கொண்டான் என்பதற்குப் பொருள். சோழர், பாண்டியர் கல்வெட்டுகளில் இச்சொல் காணப்படுகிறது.

**கோனோலை**

அரசனது கட்டளைத் திருமுகம்.

**கோஷ் பாரா**

ஒரு கணக்கின் முடிவான மொத்தத் தொகையைக் காட்டும் விவரப்பட்டியல்.

**கோஷா ஸ்திரீ**

பிற ஆண்கள் காணாதபடி முகத்தில் திரையிட்டு வரும் பெண்கள் (Zenana lady).

# கௌ

**கௌரவ ஆசிரியர்**

பத்திரிகை ஒன்றின் வேண்டுகோளுக்கிணங்கி அவ்விதழைப் பெருமைப் படுத்தும் வகையில் அதன் ஆசிரியராக இருப்பவர். பத்திரிகையின் நிர்வாகத்திலோ செய்தி வெளியிடும் செயல்களிலோ இவர் பங்கேற்பதில்லை (Honorary editor).

## ச

### சக்கரத்தார்

பிரெஞ்சு மொழிச் சொல். செயலாளர், காரியதரிசி என்பது பொருள்.

### சகலாத்து

'Escarlata' என்ற போர்த்துக் கீசியச் சொல்லில் இருந்து பிறந்தது. ஒருவகைக் கம்பளித் துணி கட்டிலின் மேல் இடப்படும். ஆங்கிலத்தில் 'broad cloth' என அழைக்கப்படுகிறது.

### சங்கராந்தி

தைப் பொங்கல்.

### சங்கமுக ஸ்நானம்

இரண்டு அல்லது மூன்று ஆறுகள் ஒன்றாகக் கலக்கும் இடத்தில் புனித நீராடுவதைக் குறிப்பது.

### சங்கிராம பண்டாரம்

ஆயுதசாலை.

### சஞ்சாயித்

குடிவாரம், குத்தகைக்கு விடாமல் தாமே பயிரிடும் நிலம்.

### சஞ்சிகை

இதழ், நாள், வார, மாத இதழ்களைக் குறிக்கும்.

### சட்டம்

1. சுவடிகளின் மேல், கீழ் ஆகிய இருபுறத்தும் வைத்துக் கட்டப் பயன் படுத்துவது. ஒழுங்காக நறுக்கப்பட்ட ஓலைகள் இடையே முதுகு நரம்புடன் கூடியதாய் இரண்டு ஏடுகளாக இணைந்து காணப்படும். இவ்வாறு நறுக்கப்பட்ட வடிவம் சட்டம் எனப்படும்.

2. ஆசிரியர் எழுதித் தந்த மூலஓலை சட்டம் எனப்படும்.

### சண்டேசுரன் ஓலை

சிவன் கோயிலுக்குரிய பொருளை வாங்கினாலும், விற்றாலும், கொடையாக அளித்தாலும் சண்டேசுர நாயனார் பெயரில் ஆவணம் எழுதுவது வழக்கம். அது சண்டேசுரன் ஓலை எனப்பட்டது.

### சணல் வகை

மை தயாரிக்கப் பயன்பட்ட பொருள் களுள் ஒன்று.

### சதுர நிலைக்குத்தான அச்செழுத்து

அச்செழுத்து வகைகளுள் ஒன்று.

### சந்தாதாரர் பதிப்பு

ஒரு புத்தகப் பதிப்புக்கு மிகுதியான பணம் தேவைப்படும் எனத் தெரிந்தால், அதனை வெளியிடுபவர், தம்மிடம் போதிய பணமின்மையாலோ, தாமே முதலீடு செய்து அச்சிட்டால் இவ்விலையில் அதிகமான பிரதிகள் செலவாகா என்ற அச்சத்தினாலோ முதலீட்டுக்குத் தயங்குவார். அந்நிலையில், அப்புத்தகத்துக்குச் சந்தாதாரர்களைச் சேர்ப்பார் அல்லது வாங்குவதற்கு உத்தர வாதம் அளிப்பவரை நாடுவார். தாம் எண்ணி யுள்ள தொகை சேர்ந்த பின்பு, அல்லது அத் தொகைக்கு உத்தரவாதம் கிடைத்த பின்பு, நூலை அச்சிட்டுச் சந்தாதாரர்களுக்கும் உத்தரவாதம் அளித்தவர்களுக்கும் வழங்கிய பின்பு எஞ்சியுள்ள புத்தகங்களை விற்பனை செய்வார். இப்பதிப்பு சந்தாப் பதிப்பு அல்லது சந்தாதாரர் பதிப்பு (subscriber edition) எனப்படும்.

### சந்தாப் பதிப்பு

காண்க : சந்தாதாரர் பதிப்பு.

**சபர்**

கப்பல் பயணம் (voyage).

**சபர் போதல்**

கப்பல் பயணம் செய்தல்.

**சபனி சப்நவி**

எழுத்தர் (clerk).

**சம்சாரி**

குடும்பம் உடையவன்.

**சம்பிரதி**

தலைமைக் கணக்கர் (Head accountant), காவலர்.

**சமய வழிபாட்டுச் சுவடி**

அந்தந்தச் சமயத்தில் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாக்கப்படும் சுவடிகள். தேவாரம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், பைபிள், திருக்குரான் போன்ற வற்றைச் சான்றாகக் கூறலாம்.

**சமர்ப்பணம்**

காண்க : உரிமையுரை.

**சமஸ்தானம்**

சமாத் என்ற உருது மொழிச் சொல்லில் இருந்து பிறந்தது. நாட்டின் உட்பிரிவு என்பது பொருள்.

**சமாச (ஜ)ப் பதிப்பு**

சமாசப் பதிப்பு என்று சொன்னாலே அதில் பிழை எதுவும் காணமுடியாது. மிகக் குறைந்த விலையில் திருமுறைகள், சங்க நூற் புலவர்கள் பெயர் அகராதி முதலான பல நூல்களை சைவ சித்தாந்த மகா சமாசம் வெளியிட்டுள்ளது.

**சமாதி சாசனம்**

சமண முனிவர்கள் நோன்பு இயற்றி உயிர் துறந்த இடங்களில் அவர்தம் மாணவர்கள், அவர்களைப் பற்றிய செய்திகளைக் கற்களில் பொறித்தனர். இவை சமாதி சாசனங்கள் எனப்பட்டன.

**சமுசாயி**

கடன் (credit).

**சமுறட்சணை**

காப்பாற்றுதல்.

**சமுகேஷபம்**

சமூகம் (திருமுன்னிலை).

**சய**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் இருபத்தெட்டாவது ஆண்டு.

**சர்க்கார் தீர்வை**

அரசு ஆயம் (government duty).

**சர்கேல்**

தஞ்சை மராத்திய அரசின் தலைமை அமைச்சராக (Chief minister) இருந்தவர் சர்கேல் ஆவர். சர்க்கீல் எனவும் அழைக்கப் பெறுவார்.

**சர்வதாரி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் இருபத்திரண்டாவது ஆண்டு.

**சர்வமான்யம்**

எந்தவிதமான தீர்வையும் செலுத் தாமல் அனுபவிக்கும் நிலம். அரசுக்கு யாதொரு வரியும் செலுத்தாமல் அனுபவிக்கும் நிலம்.

**சர்வமுக்தியார் நாமா**

எல்லாவற்றுக்குமாகக் கொடுக்கப் படும் அதிகாரப் பத்திரம்.

**சர்வே**

அளந்து மதிப்பீடு செய்தல் (survey).

**சரசுவதி பண்டாரம்**

ஓலைச்சுவடிகள், நூல்கள், ஆவணங்கள், பதிவேடுகள், கணக்குகள் போன்றவற்றைச் சேர்த்து வைத்துப் பாதுகாக்கப்படும் இடம்.

**சரசுவதி பீடம்**

ஓலைச்சுவடி நூல்களையும், ஆவணங்களையும், பதிவேடுகளையும் வைத்துப் படிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சாய்வுப் பலகை சரசுவதி பீடம் எனப்படும். சிக்குப்பலகை எனவும் அழைக்கப்படும்.

**சரசுவதி மகால் நூல் நிலையம்**

தஞ்சாவூரில் அமைந்துள்ள இந்நூல் நிலையம் உலகப் புகழ் பெற்ற நூலகங்களுள் ஒன்று. தமிழ், வடமொழி, தெலுங்கு, மராத்தி போன்ற மொழிகளில் ஓலைச்சுவடிகள், காகிதச்சுவடிகள் பல்லாயிரக் கணக்கில் சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. சுவடிகளிலிருந்து பல நூல்கள் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளன.

**சராய் சாவடி**

வழிப்போக்கருக்கான விடுதி (house of travellers).

**சரிப்படுத்தவும்**

அச்செழுத்துக்களைக் கோக்கும் பொழுது ஒழுங்கான முறையில் அமைத்தல் (justification).

**சருகுத்தாள்**

மிக மெல்லிய இலேசான தாள் (trace paper).

**சருவசித்து**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் இருபத்தொன்றாவது ஆண்டு.

**சல்லி**

தம்பிடி என்னும் பழைய காசு (coin).

**சலங்கு**

சலந்தி என்ற அரபுச் சொல்லில் இருந்து பிறந்தது. ஆட்களையும், படைவீரர் களையும், குதிரைகளையும் ஏற்றிச் செல்லும் படகு.

**சவர்க்காரப் பென்சில்**

கன்னடநாட்டு வணிகர்கள் கடதம் என்ற துணியில் சவர்க்காரப் பென்சில் கொண்டு எழுதினர்.

**சவாரி**

சுற்றுப்பயணம் (tour).

**சற்பராயி மகால்**

பொருள் கொடுக்கும் துறை.

**சறாப்பு**

பணம் வரவு செலவு செய்பவன்.

**சன்னது**

அரசு ஆணை.

**சன்னாகம்**

விருதுகள்.

**சஷ்டி பூர்த்தி சாந்தி**

அறுபதாவது வயது நிரம்பிய நாளில் செய்யும் சடங்கு நிகழ்ச்சி.

## சா

**சாகுபடிக் கணக்கு**

நன்செய், புன்செய் நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட பயிர் விவரக் கணக்கு.

**சாகுபடி முச்சலிக்கா**

நிலக்குத்தகைப் பத்திரம்.

**சாகை**

வசிக்குமிடம், வாழுமிடம்.

**சாசனப் பத்திரம்**

கிரய சாசனம்.

**சாசனம்**

உறுதிப்பத்திரம் (deed).

**சாட்சி**

ஒன்றைப்பற்றி நேரடி அனுபவத்தால் உணர்ந்து அறிந்தவர். ஒரு வழக்கில் சான்று கூறுபவர். காட்சியை நேரில் பார்த்து அறிந்தவன் சாட்சியாவான் (eye witness).

**சாட்சிக் கையெழுத்து**

சாட்சியாகக் கையெழுத்து இடுவது (testimony). காண்க : சாட்சியம்.

**சாட்சியம்**

காண்க : சான்று. வழக்கில் கூறும் சான்று சாட்சியம் (evidence) எனப்படும். உறுதிப் பத்திரம் முதலியவற்றில் சாட்சியாகக் கையெழுத்து இடுவதும் உண்டு. அதற்குச் சாட்சிக் கையெழுத்து என்று பெயர்.

**சாதா அட்டைப் பதிப்பு**

பெருவாரியான மக்கள் வாங்குவதற்கு வசதியாகக் குறைந்த விலையில் சாதாரணத் தாளில் அச்சிட்டு, மெல்லிய அட்டை கொண்டு கட்டமைப்பு செய்து வெளியிடுவது (paperback edition).

**சாதாரண**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் நாற்பத்து நான்காவது ஆண்டு.

**சாதாரணப் பதிப்பு**

பொது மக்களுக்கான பதிப்பு சாதாரணப் பதிப்பாகும் (standard edition). குறைந்த விலையில் சாதாரணத் தாளில் அச்சிட்டு வெளியிடப்படுவது.

**சாதாரணப் பனை**

காண்க : பனை ஓலை (palmleaf).

**சாபை**

காகிதக் கூழ் தயாரிக்க உதவும் ஒரு புல்வகை.

**சாமேவார்**

குதிரைப்படை.

**சாய்வெழுத்துகள்**

சாய்வாக எழுதப்படும் எழுத்துகள் (italics).

**சார்நிலைச் சான்று**

காண்க : துணைநிலைச் சான்று (secondary edition).

**சார்வரி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் முப்பத்து நான்காவது ஆண்டு.

**சாரோலை**

ஓலை வகைகளுள் ஒன்று.

**சால்சாப்பு**

பதில் கொடுத்தல். சாக்குப் போக்குக் கூறுதல் என்றும் பொருள்படும்.

**சாவடி**

மராத்தியச் சொல். வழிப்போக்கர்கள் தங்குமிடம்.

**சான்றாளர்**

ஒரு குற்றச்சாட்டு உண்மை என்றோ, பொய் என்றோ சான்று கூறுபவர்.

**சான்றிதழ்**

பொதுப் பணியாள் ஒருவர் அல்லது அலுவலர் ஒருவர் தமக்குத் தெரிந்த ஒருவர் தம் அதிகாரத்திற்கு உட்பட்ட ஒன்றைப் பற்றி எழுத்து மூலமாகச் சான்றளித்தல். ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வேடுகளில் ஆய்வாளர், நெறியாளர் ஆகியோர் சான்றிதழ் (certificate) அளித்தல்.

**சான்று**

நீதிமுறை ஆய்வு, நிகழ்வு ஒன்றினை மெய்ப்பிப்பதற்கோ, பொய்ப்பிப்பதற்கோ உதவத்தக்க சட்டமுறைக் கருவிகள் (evidence, source).

**சான்று ஆவணம்**

நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உதவும் பொருட்டு வைக்கப்படும் ஆவணம் (source document).

**சான்றுக் கையொப்பம்**

ஆவணத்தை எழுதிக் கொடுப்பவர் கையொப்பமிட்டதை மெய்யுறுதி செய்வதற்கு அதை ஒருவர் சான்றாகக் கையொப்பமிடுபவர் (attestation).

**சான்றுக் கையொப்பமிடுபவர்**

எழுதிக் கொடுத்தவர் ஆவணத்தில் கையொப்பமிட்டதைக் கொண்டு அவர் கையொப்பமிட்டதாகக் கேட்டுச் சான்றாக அந்த ஆவணத்தில் சான்றுக் கையொப்பமிடுபவர் (attestor).

**சான்றொப்ப நகல்**

உண்மையானவையா என்று சரி பார்க்கப்பட்ட நகல் (attested copy).

**சான்றொப்பம்**

காண்க : சான்றுக் கையொப்பம். மூலப்பிரதியையும் படி எடுத்த பிரதியையும் ஒப்புநோக்கி உண்மை நகல் என்று உறுதியளிக்கும் கையொப்பம் (attestation).

**சான்றொப்பமிடு**

உண்மையானதென்று சரி பார்த்து ஒப்பமிடுதல் (attest).

**சாஸ்திரி**

மருத்துவர்.

## சி

**சிஃபான் பழுது**

சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைத் தற்கால முறையில் மறுசீரமைப்புச் செய்வதற்குப் பயன்படும் பொருள்களுள் சிஃபான் என்பதும் ஒன்று.

**சிசாசனத்து**

முத்திரையோடு கூடிய அறக்கட்டளை.

**சிகா செய்தல்**

முத்திரை போடுதல்.

**சிக்குப் பலகை**

காண்க : சரசுவதி பீடம்.

**சிட்டா**

உருதுமொழிச் சொல். பேரேடாகும். ஒவ்வொரு பெயருக்கு ஒரு சீட்டு அல்லது தாளாக ஒதுக்கி வைத்து வரையப்பெறும் பதிவேடாகும். அடங்கல் எனவும் அழைக்கப்படும்.

**சிட்ரிக் அமிலம்**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவை யான வேதிமப் பொருள்களுள் சிட்ரிக் அமிலம் (Citric acid) என்பதும் ஒன்று.

**சிட்ரோனில்லா எண்ணெய்**

வேப்பிலை, வேப்பங்கொட்டைப் பசை மற்றும் தூள், புகையிலை, வசம்பு, வெட்டி வேர், கற்பூரம், சிட்ரோனில்லா எண்ணெய் போன்றவற்றைக் கொண்டு ஆவணங்கள் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த எண்ணெய் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பதற்குப் பெருமளவில் பயன்படுத்தப்பட்டுவருவது குறிப்பிடத் தக்கது.

**சி.டி. ராம்**

கணினி தொடர்புடையதோர் எண்மான இலக்க வடிவிலான ஒளித் தட்டுக் கருவி. சி.டி. – ராம் (CD-ROM - Compact Disc - Read Only Memory) தட்டு கடினமான பிளாஸ்டிக்கி னால் செய்யப்படுவது. 120 மில்லி மீட்டர் விட்டமும், மையத்தில் 1.50 மி.மீ. அளவுடையதொரு துளையும், 1.2 மி.மீ. கனமும் கொண்டது. சிடி – ராம் தட்டை ஒரு வாசகரால் படிக்க மட்டுமே முடியும். அதில் எழுதவோ எழுதியதை அழிக்கவோ முடியாது. எனவேதான் 'ரீட் ஒன்லி மெமரி' எனப்படுகிறது. நீண்டநாள் உழைக்கக் கூடிய இது செலவு குறைவானது.

**சித்தார்த்தி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் ஐம்பத்து மூன்றாவது ஆண்டு.

**சித்திரத் தையல் துணி**

துணியில் பூக்கள், ஓவியங்கள் போன்றவற்றைப் பல வண்ண நூல்களால் உருவாக்குதல் (embroidery cloth).

**சித்திரபானு**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் பதினாறாவது ஆண்டு.

**சிப்பம்**

நூல்கள், ஆவணங்கள் போன்ற வற்றைக் கட்டுதல் (parcel). கருள் எனவும் பொருள்படும்.

**சிப்பாய்**

உருதுமொழிச் சொல். இராணுவ வீரரைக் குறிக்கும் (sepoy).

**சிரஞ்சீவி**

வாழ்த்து அடைமொழி. தீர்க்காயுளை உடையவன். வயதில் குறைந்த ஆண் பாலரைக் குறித்து மூத்தோர் வாழ்த்துத் தோன்ற வழங்கும் சொல். அசுவத்தாமன், மாபலி, வியாசன், அனுமன், விபீடணன், கிருபன், பரசுராமன் ஆகிய எழுவரையும் சிரஞ்சீவியர் என்பர்.

**சிரஸ்தேதார்**

ஆவணக் காப்பாளர் (curator).

**சில்லு**

ஒருவகை தட்டும் இசைக்கருவி.

**சிலிக்கா ஜெல்**

ஈரத்தால் பாதிக்கப்படக்கூடிய மிக முக்கிய ஆவணங்களைக் காற்றுப் புகாப் பெட்டியில் வைத்து ஈரத்தைச் சிலிக்கா ஜெல் (Silica Gel) மூலம் நீக்கப்படுகிறது.

**சிறகு எடைத்தாள்**

பறவையின் இறகு போல் இலேசானதும் பருமனானதுமான தாள் (feather weight paper).

**சிறப்பாசிரியர்**

குறிப்பிட்டதோர் இதழை மட்டும் தொகுத்து வெளியிடும் பொறுப்பை ஏற்பவர் (guest editor).

**சிறப்புக் கட்டமைப்புப் புத்தகம்**

காண்க : செக்சன் தையல்.

**சிறப்புப் பாயிரம்**

காண்க : அணிந்துரை.

**சிறப்புரிமைப் பட்டயம்**

ஒரு தனி நபரோ, நிறுவனமோ குறிப்பிட்ட செயல்களைச் செய்யுமாறு அல்லது குறிப்பிட்ட சிறப்பு உரிமைகளை அனுபவிக்குமாறு அதிகாரம் அளிக்கும் வகையில் அரசால் அளிக்கப்படும் முத்திரையிட்ட ஆவணம் இவ்வாறு அளிக்கப்படும். அதிகாரமின்றி அச்செயலைச் செய்யவோ, அச்சிறப்பு உரிமையை அனுபவிக்கவோ இயலாது.

**சிறாங்கு**

கப்பல் கண்காணி.

**சிறு சுருக்கம்**

ஒரு கட்டுரையின் அல்லது கதையின் பொழிப்பு அல்லது சுருங்கிய வடிவம் சுருக்கம் (abstract).

**சிறு நூல்**

காண்க : சிறு புத்தகம் (booklet).

**சிறு புத்தகம்**

காகித மேலட்டையுடன் கூடிய வெளியீடு (booklet). சான்று : நூல் விலைப்பட்டியல், தனிச் சுற்றுக்கு வரும் சிற்றிதழ்.

**சிறுமுறி**

பற்று இரசீது மற்றும் சிறிய கட்டளைக் குறிப்பு ஓலை.

**சிறுவர் இதழ்**

பதின்மூன்று வயதுக்குக் குறைந்தோர்க்காக வெளியிடப்படும் இதழ் (chilren's journal).

## சீ

**சீட்டு**

சன்மானம். காண்க : முத்திரை ஓலை.

**சீட்டு ஏடு**

காண்க : முத்திரை ஓலை.

**சீட்டுக்கவி**

காண்க : ஓலைத்தூக்கு, ஓலைச் சீட்டு.

**சீதன ஓலை**

மணமகளுக்கான சீதனம் எழுதப் பட்ட ஓலை.

**சீதாள ஓலை**

காண்க : பனை ஓலை (talipot palm).

**சீதாளப் பனை**

பனைமரங்களில் சீதாளப்பனை எனப்படும் கூந்தற்பனை (Coripha Umbra Calibra) ஓலைகள் எழுது வதற்குப் பயன்படுத்தப்பட்டன. காண்க : கூந்தற்பனை.

**சீப்புக் கட்டமைப்பு**

தனித்தனித் தாள்களைச் சீப்புப் போன்றதொரு பிளாஸ்டிக் கருவியால் ஒன்றாகச் சேர்த்துப் பின்பு ஒரே முதுகில் இணையுமாறு இயந்திரத்தினால் செய்வது சீப்புக் கட்டமைப்பு (comb binding) எனப்படும்.

**சீமுக**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் ஏழாவது ஆண்டு.

**சீமை**

சீமை என்பது பிரான்சு நாட்டைக் குறிக்கும். சீர்மை என்ற சொல் பல மாகாணங்களைக் கொண்ட நாட்டின் உட்பகுதியாகும்.

**சீனா மை**

காண்க : இந்தியன் மை.

## சு

**சுக்கான்**

கப்பலை நடத்தும் கருவி. கப்பல், படகு, விமானம் போன்றவற்றின் ஒருபகுதி.

**சுக்கில**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் மூன்றாவது ஆண்டு.

**சுகஸ்த லிகிதம்**

தானே தன் கையால் எழுதிய ஆவணம்.

**சுங்கச் சாவடி**

காண்க : ஆயத்துறை. இறக்குமதி வரி வசூலிக்கும் இடம் (custom house).

**சுங்கம்**

ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள் மீது வரியிடுதல். காண்க : உல்கு (toll, duty, custom).

**சுத்தக் கிரய சாசனம்**

எல்லா உரிமைகளையும் விலைக்குக் கொடுத்து விடுதல்.

**சுதந்திரத் திட்டம் ஏடு**

கிராம ஊழியர் மற்றும் அறநிலையங் களுக்குக் களத்தில் உரிமையாக வழங்கப் படும் தானிய அளவினையும் அதனைப் பெறும் உரிமையாளர் விவரத்தினையும் தெரிவிக்கும் ஏடு.

**சுந்தரக் கைசாத்திய திருவேடு**

இராமலிங்க அடிகள் கைப்பட எழுதிய மூல ஏடுகளுக்குச் சுந்தரக் கை சாத்திய திருவேடு என்பது பெயர்.

**சுப்பீரியர்**

பிரெஞ்சு மொழிச் சொல். மேலதிகாரியைக் குறிக்கும்.

**சுபகிருது**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் முப்பத் தாறாவது ஆண்டு.

**சுபாமஜ்கூர்**

முற்கூறப்பட்ட சுபா (வட்டம்).

**சுபானு**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் பதினேழாவது ஆண்டு.

**சுபேதார்**

சபை என்ற நாட்டுப் பகுதிக்குத் தலைமை அலுவலர். சுபைதார் எனவும் அழைக்கப் பெறுகிறார் (indian military officer).

**சுயசரிதம்**

காண்க : சுயசரிதை (auto biography).

**சுயசரிதை**

ஒருவர் தமது வரலாற்றைத் தாமே எழுதுவது. சுயசரிதை, சுயசரிதம், தன் வரலாறு (auto biography) எனப்படும். சான்று : என் சரித்திரம், சத்திய சோதனை, ஆத்ம சோதனை, ஒரு பித்தனின் சுயசரிதம்.

**சுய சரிதையாளர்**

சுயசரிதை எழுதுபவர் (auto biographer).

**சுருக்க அறிக்கை**

சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை (abridged report).

**சுருக்கக் குறியீட்டு விளக்கம்**

மூலத்தைவிடச் சிறிதாக்கப்பட்ட வடிவம். குறிப்பாகச் சொற்களைக் குறிக்கின்ற எழுத்து வடிவம் சுருக்கக் குறியீடு ஆகும். சுவடியில் அல்லது நூலில் கையாளப்பட்டுள்ள குறுக்க வடிவுகளுக்கு அதாவது சுருக்க வடிவுகளுக்கு விரிவு தரவேண்டும். இது அகரவரிசையில் அமையும் (abbreviation).

**சுருக்கப் பதிப்பு**

ஒரு நூலின் சுருங்கிய வடிவம். ஒரு நூலினது மூலத்தைப் பக்க அளவால் சுருக்கி வெளியிடுதல் சுருக்கப் பதிப்பாகும் (abridged edition).

**சுருக்கம்**

காண்க : சுருக்கீடு. சுருங்கிய வடிவில் அமைத்தல் (abstract).

**சுருக்கி எழுதுவோர்**

சுருக்கமாக எழுதுகின்றவர் (abridger).

**சுருக்கீடு**

எழுதப்பட்ட ஒரு சொல்லை, சொற்றொடரை முழுவதுமாகக் குறிக்காமல் அவற்றைச் சுருக்கிக் குறிப்பிடுதல் (abridgement).

**சுருக்கெழுத்து**

தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் அமைந்துள்ளவற்றை அதற்கென்று வடிவமைக்கப்பட்டுள்ள சுருக்கமான எழுத்துக்களால் எழுதும் முறை (short-hand)

**சுருணப்பாகை**

தலையில் அணியும் அணிகலன்.

**சுருணை**

கணக்கெழுதப்பட்ட ஓலைக் கோர்வையினைச் சுருட்டிக் கட்டிய கட்டு.

**சுருள் ஓலை**

கடிதம் எழுதிச் சுருட்டி முத்திரையிடப்பட்ட ஓலை (stamped palmleaf).

**சுரோத்திரியம்**

வேதம் வல்ல அந்தணர்களுக்கு ஆதியில் விடப்பட்ட மானிய நிலம். அரசு அலுவலர்களுக்கு விடப்பட்ட மானிய பூமி எனவும் கூறுவர் (gift of land).

**சுலுப்பு**

வணிகத்தின் பொருட்டுப் பயன் படுத்திய சிறு கப்பல். 'Sloop' என்ற ஆங்கிலச் சொல்லுக்குரியது.

**சுவடி**

சுவடு உடையது. பல ஏடுகள் சேர்ந்தது சுவடியாகும் (manuscript). அது ஏட்டுச்சுவடி, ஓலைச்சுவடி, பொத்தகம், இணை, சுற்றை, கட்டு எனப் பல பெயர் களைப் பெறுகிறது. ஏடுகளின் தொகுப் பாகிய கட்டு. கையால் எழுதப்பெற்ற படிவம்.

**சுவடி எழுத்து**

சுவடியில் எழுதப்பட்ட எழுத்துக்கள்.

**சுவடி எழுதுதல்**

எழுத்துக்களை எழுதிப் பழகுதல்.

**சுவடிக் குறிப்பு**

சுவடி எழுதியோர் பற்றிய விவரம், ஆண்டு, மாதம், நட்சத்திரம் போன்ற குறிப்புகள் சுவடிகளின் இறுதியில் தரப் பட்டிருக்கும். அதனைச் சுவடிக் குறிப்பு (Colophon) என்று கூறுவர்.

**சுவடிக் கூடம்**

காண்க : ஆவணக் காப்பகம்.

**சுவடிச்சாலை**

நூல்நிலையத்தைக் குறிக்கும்.

**சுவடிச் சேர்க்கை**

சுவடிகளைக் காப்பகத்தில் சேர்த்தல் (accession).

**சுவடிச் சேர்க்கைப் பதிவேடு**

சுவடிக் காப்பகத்தில் சேகரித்த சுவடிகளைப் பதிவு செய்யும் ஏடு (accession register).

**சுவடிச் சேர்க்கைப் பிரிவு**

சுவடிக் காப்பகத்தில் சேகரிக்கப்பட்ட சுவடிகளைப் பதிவு செய்யும் பிரிவு (accession section).

**சுவடி சேர்த்தல்**

பிள்ளைகள் படிப்பதற்காக ஓலைச் சுவடி, காகிதச் சுவடி சேர்த்தல் (collection of manuscripts).

**சுவடி திரட்டுதல்**

பல இடங்களில் சிதறிக் கிடக்கும் சுவடிகளை ஓரிடத்தில் திரட்டி வைத்தல் (collection of manuscripts).

**சுவடித் தூக்கு**

சுவடி தொங்கவிடும் உரி போன்ற கயிறு தாங்கு பலகை. காண்க : தூக்கு.

**சுவடி துவக்கல்**

ஒரு மாணவன் புதிதாக ஒரு நூலைப் படிக்கத் தொடங்குவதற்குச் சுவடி துவக்கல் என்று பெயர்.

**சுவடிப் பதிப்பு**

ஓலைச்சுவடிகள் மற்றும் காகிதச் சுவடிகளிலுள்ள செய்திகளை அச்சு வடிவில் வெளியிடுதல். சுவடிப் பதிப்பு என்பது பல்வேறு பதிப்பு நிலைகளில் ஒன்றாகும். சுவடிப் பதிப்பு வெளியீட்டு நோக்கிலும், எழுதுபொருள் நோக்கிலும் வேறுபடும். வெளியீட்டு நோக்கில் சுவடிப் பதிப்பு இரண்டு நிலைகளில் அமையும். வெளிவராத நூலில் சுவடிகளைப் பெயர்த்து எழுதி அவற்றைப் பரிசோதனைக்கு உட்படுத்திப் பதிப்பு உருவாக்கம் செய்து அச்சிட்டு வெளியிடுதல் ஒன்றாகும்.

**சுவடிப் பதிவு அட்டை**

சுவடிகளைப் பதிவு செய்யும் அட்டை (accession card).

**சுவடிப் பதிவு எண்**

சுவடிகளைப் பதிவு செய்யும் பொழுது தரப்படும் எண் (accession number).

**சுவடிப் பதிவு நாள்**

சுவடிகளைப் பதிவு செய்யும்பொழுது தரப்படும் நாள் (accession date).

**சுவடிப் பதிவுப் பட்டியல்**

சுவடிகளைப் பதிவு செய்யும் பட்டியல் (accession list).

**சுவடிப் பதிவுப் பதிவேடு**

சுவடிகளைப் பதிவு செய்யும் பதிவேடு (accession register).

**சுவடிப் பதிவுப் பிரிவு**

சுவடிகளைப் பதிவு செய்யும் பிரிவு (accession section).

**சுவடிப் பதிவு முத்திரை**

சுவடிகளைப் பதிவு செய்யும் முத்திரை (accession stamp).

**சுவடிப் புத்தகம்**

காண்க : சுவடி.

**சுவடிப்புலம்**

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மொழிப்புலம், சுவடிப்புலம் (Faculty of Manuscriptology), கலைப்புலம், வளர்தமிழ்ப்புலம், அறிவியல் புலம் என்ற ஐந்து புலங்களுள் ஒன்று. இச் சுவடிப்புலத்தில் ஓலைச்சுவடித்துறை, அரிய கையெழுத்துச் சுவடித்துறை, கல்வெட்டு மற்றும் தொல்லியல்துறை, நீரகழாய்வு மையம் ஆகிய நான்கு துறைகள் செயல் பட்டு வருகின்றன.

**சுவடிப் பொத்தகம்**

காண்க : சுவடி.

**சுவடி பெறுகை**

சுவடிகளைப் பெறுதல் (acquisition).

**சுவடி பெறுகைப் பதிவு**

பெற்ற சுவடிகளுக்கு எண்கள் இட்டு உரிய பதிவேட்டில் பதிவு செய்தல் (acquisition record).

**சுவடி பெறுகைப் பிரிவு**

சுவடிகளைப் பெறும் பிரிவு (acquisition section).

**சுவடியியல்**

சுவடிகளைப் பற்றி ஆராய்வதும், அறிவதும், உணர்வதும், உணர்த்துவதும், கற்பதும், கற்பிப்பதுமாகிய கல்வியே சுவடியியலாகும்.

**சுவடியைக் கட்டுதல்**

ஓலைச்சுவடி, காகிதச் சுவடியைக் கட்டி வைத்தல்.

**சுவடி விளக்க அட்டவணை**

சுவடிகளுக்கு விரிவான முறையில் அட்டவணை (Descriptive catalogue of manuscripts) தயாரித்தல்.

**சுவடி வேறுபாடு**

பல்வேறு சுவடிகளுக்கிடையே உள்ள வேறுபாடு சுவடி வேறுபாடு ஆகும். இதனைப் பிரதிபேதம் என்றும் கூறுவர்.

**சுவரொட்டிக் காகிதம்**

சுரசுரப்பாக ஒருபக்கத்திலும் வழவழப்பாக மறுபக்கத்திலும் இருக்கும் காகிதம் (Poster paper). திரைப்படம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகளின் விளம்பரங்கள் இத்தாள்களில் அச்சடிக்கப் படுகின்றன.

**சுவஸ்த லிகிதம்**

தானே தன் கையால் எழுதிய ஆவணம்.

**சுவீகாரப் பத்திரம்**

பிறர் மகனைத் தன் மகனாகத் தத்து எடுத்தல் ஆவணம் (adoption deed).

**சுவீகார புத்திரன்**

தத்துப்பிள்ளை (adopted son).

**சுழல்**

மூன்று வகை அச்சியந்திரங்களில் சுழல் இயந்திரமும் (rotary) ஒன்று. இந்த இயந்திரம் மணிக்கு 40,000 பிரதிகள் வரை அச்சடிக்கும்.

**சுழல் ஈரப்பதமானி**

காண்க : ஈரப்பதம்.

**சுழலும் அச்சுப்பொறி**

அச்சியந்திர வகைகளுள் (rotary press) ஒன்று.

**சுழற்சி நூலகம்**

புனைகதைகளையும் புகழ்பெற்ற பிறவகைப் புத்தகங்களையும் தனியார் நிறுவனம் தன் வாடிக்கையாளர்களுக்குச் சிறு தொகையைக் கட்டணமாகப் பெற்றுக் கொண்டு வழங்குவது சுழற்சி நூலகமாகும் (circulating library).

**சுற்றறிக்கைகள்**

அலுவலகத்தில் உயர் அலுவலர் களால் சுற்றுக்கு விடப்படும் அறிக்கைகள்.

**சுஸ்தீஸ்சிலே**

'Justice' என்ற பிரெஞ்சுச் சொல். நீதிமன்றம், நியாயசபை என்பது பொருள்.

## சூ

**சூசி பத்திரம்**

காண்க : பொருளடக்கம் (index).

**சூழ்நிலைச் சான்று**

சான்றினால் மெய்ப்பிக்கப்பட்ட நிகழ்வைக் கொண்டு தீர்வு தரு நிகழ்மை அல்லது மெய்ப்பிக்க வேண்டிய நிகழ்மை யைப் பற்றி அனுமானிக்க முடியுமானால் அச்சான்று சூழ்நிலைச் சான்று எனப்படும்.

## செ

**செக்சன் தையல்**

மடிப்புகளை அடுக்கிக் கொண்டு ஒவ்வொன்றிற்கும் முதுகுப்புறத்தில் நூலைச் செலுத்தித் தைத்த பின்பு இணைத்துக் கட்டுவது; முடிந்த பின்பு எல்லா செக்சன்களையும் சேர்க்கும் வகையில் முதுகுப்புறத்தில் மூன்று துண்டுத் துணிகளில் பசையைத் தடவி ஒட்டி விடுவர். ஏடுகள் அசைவதோ உதிர்வதோ தளர்வதோ இதில் இல்லை. இதனைக் 'கைத்தையல் கட்டுமானம்' (section sewing) என்பர்.

**செங்குத்துநிலைப் பாடவேறுபாடு**

ஒவ்வொரு குடும்ப ஏட்டிலும் உள்ள மேலேட்டிற்கும் அதன் வழியேட்டிற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் செங்குத்து நிலைப் பாடவேறுபாடுகள் எனப்படும்.

**செப்புப் பட்டயம்**

காண்க : செப்பேடு.

**செப்பேடு**

செம்பு எனும் உலோகத்தில் உளியினால் எழுத்துக்களை வெட்டி அதை ஒரு ஏடாகப் பயன்படுத்துதல். மலையாளத்தில் செம்போலை என அழைக்கப்படுகிறது. செப்புப் பட்டயம் (Copper plate) எனவும் அழைக்கப்படுகிறது.

**செம்பஞ்சுக் குழம்பு**

தாழம்பூவின் தோட்டில் பித்திகையின் முகையாகிய எழுத்தாணி கொண்டு செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து மாதவி தன்னை விட்டுப் பிரிந்து சென்ற கோவலனுக்கு மடல் எழுதியுள்ளாள். செம்பஞ்சுக் குழம்பு எழுதுவதற்குரிய மையாகப் பயன்பட்டுள்ளது.

**செம்பிசின்**

மை தயாரிக்கப் பயன்பட்ட பொருள்களுள் ஒன்று.

**செம்பு சல்பேட்**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் செம்பு சல்பேட் (Copper sulphate) என்பதும் ஒன்று.

**செம்பொன் ஊசி**

ஓலைச்சுவடிகளில் எழுதுவதற்குரிய ஊசி அல்லது எழுத்தாணியைச் சீவக சிந்தாமணி செம்பொன் ஊசி என்று கூறுகிறது. காண்க : ஊசி.

**செம்போலை**

மலையாளத்தில் உள்ள செப்பேடு.

**செம்மறியாட்டுத் தோல்**

செம்மறியாட்டுத் தோலைப் பதப்படுத்தி அதில் எழுதிச் சுவடியாகப் பயன்படுத்தியுள்ளனர்.

**செய்கைச் சீட்டு**

நிலக்குத்தகைப் பத்திரம்.

**செய்தித்தாள்**

நாளிதழ் (news paper).

**செய்தித்தாள் காகிதம்**

நாளிதழ் அச்சடிக்கப் பயன்படும் காகிதம் (newsprint paper).

**செய்தி மடல்**

ஒரு துறையினர் பார்வைக்கு மட்டும் பயன்படும் அளவில் அத்துறைச் செய்திகள், நிகழ்ச்சிகள் அடங்கிய விவர ஏடு. நிலைத்த நியமனத்தை அறிவித்து, ஒரு நாட்டுத் தலைவர் மற்றொரு நாட்டுத் தலைவருக்கு அனுப்பும் ஆவணத்தைக் குறிக்கும் சிறப்புப் பெயர் (news bulletin).

**செல் எழுத்து**

சேர வேண்டிய தொகை சேர்ந்ததை அல்லது கடன் தீர்ந்ததை எழுத்து மூலம் குறித்தல்.

**செல்லு**

கையெழுத்து, பாக்கிக் கடனைத் திருப்பிக் கொடுத்தல் (payment of loan).

**செல்லுலாய்டு**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் செல்லுலாய்டு (Celluloid) என்பதும் ஒன்று.

**செல்லுலாஸ் அசிட்டேட் ஃபாயில்**

ஆவணங்கள் லேமினேசன் செய்வதற்குச் செல்லுலாஸ் அசிட்டேட் ஃபாயில்

(Cellulose acetate foil) பயன்படும். பொதுவாக 107 செ.மீ. (42 அங்குலம்) அகலத்தில் சுருளாகக் கிடைக்கும். சில வேளைகளில் தேவையான அளவில் வெட்டப்பட்ட தாள்களாகவும் கிடைக்கும். இது ஒரு வேதிமப் பொருளாகும்.

**செலவுச் சீட்டு**

பணம் பெற்றுக் கொண்டதற்கு ஒப்புகையாகத் தரப்படும் பற்றுச்சீட்டு.

**செலுத்துச் சீட்டு**

வங்கியில் பணம் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் படிவம்.

**செவ்விய முறையில் அமைந்த பதிப்பு**

எவ்விதப் பிழைகளும் இல்லாமல் சிறந்த முறையில் சுவடிகளைப் பதிப்பித்தல்.

**செவிடு**

ஆழாக்கில் ஐந்தில் ஒன்றாகிய அளவு.

**செறிவடக்க ஏடு**

காண்க : மணிச்சுருக்கம்.

## சே

**சேர்**

நெற்களஞ்சியம் (grannary), முகத்தலளவை (measure). எட்டேகால் சேர் கொண்டது ஒரு மரக்கால்.

**சேர்க்கை**

நூலின் செய்திகளை அச்சுக் கோத்து, அச்சடித்து முடித்த பின்பு கிடைக்கும் புதிய தகவல்களைத் தனியே அச்சிட்டுப் புத்தகத்தில் சேர்த்தல். கட்டமைப்பு செய்யும் போது, நூற் செய்தியின் பின்னோ முன்னோ வருமாறு இதைச் சேர்ப்பர். புத்தகத்தின் இறுதியில் இது ஒட்டப்படுவதும் உண்டு.

**சேர்க்கை எண்**

சுவடிகளைச் சேர்க்கும் பொழுது தரப்படும் எண் (accession number).

**சேர்க்கைகள்**

சுவடிகள், ஆவணங்கள், கடிதங்கள் போன்றவற்றைச் சேர்த்தல் (additions).

**சேர்க்கைப் பதிவேடு**

சேகரித்த ஆவணங்கள், சுவடிகள், கடிதங்கள் போன்றவற்றைப் பதிவு செய்யும் பதிவேடு (admission register).

**சேர்த்தல்**

உதிரியாக உள்ள ஆவணங்கள், தாள்கள் போன்றவற்றை ஒன்றாகச் சேர்த்தல் (gathering).

**சேனாதுரந்தர்**

சேனைத் தலைவர் (military leader) பொறுப்பு வகிப்போர். சேனாதிபதி எனவும் அழைக்கப் பெறுகிறார்.

## சை

**சைனிக்**

போர்ப்பயிற்சி உடையவர்களில் ஓர் அலுவலர் (army man).

## சொ

**சொத்து**

சொத்திற்கு உரியதான பொருள் (assets).

**சொத்துரிமை**

ஓர் உடன்பாடு, ஒப்பந்தம் இவற்றால் கட்டுப்படுத்தப்பட்டால் ஒழிய ஒரு முன்பொருள் சொத்தை, கருப்பொருள் சொத்தை ஒருவர் தன் விருப்பப்படி அனுபவிக்கும் உரிமை.

**சொத்துரிமை மாற்றம்**

சொத்துரிமை மாற்றம், அத்தகைய மாற்றுதல்களுக்காக எழுதப்படும் முறை ஆவணத்தையும் குறிக்கும்.

**சொத்துரிமையியல்**

சொத்தின் மீது முழு உரிமையுடைய நபர் ஒருவர்.

**சொல் அட்டவணை**

அகர வரிசையில் அமைந்த சொற்களின் அட்டவணை (vocabulary).

**சொல் தொகை நிரல்**

குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் ஒரு மொழியில் வழங்குகின்ற சொற்களைத் தொகுத்து அவற்றின் பொருளுடன் காட்டுவது சொல் தொகை நிரல் எனப்படும். இது அகரநிரல் போல் இருந்தாலும் அளவில் சிறியது.

**சொல் தொடர்த் தொகுதிப் பட்டியல்**

பெரியதொரு நூலில் இடம் பெற்றுள்ள சொற்களையும் தொடர்களையும் அகரவரிசைப்படுத்தித் தருவது. எந்தச் சொல் அல்லது தொடர், எந்த எந்த இடங்களில் எத்தனை முறை இடம் பெற்றுள்ளன என்று அறிவதற்கு இது (Concordance Dictionary) உதவும்.

**சொல் நிரல்**

ஒரு நூலில் பயன்பட்டுள்ள முக்கியமான சொற்கள், பெயர்கள், இடங்கள், ஊர்கள், கோட்பாட்டுத் தொடர்கள் ஆகியவற்றை அகரவரிசைப் படுத்தி, அவை இடம் பெறும் பக்கங்களைச் சுட்டித் தொகுப்பது சொல் நிரல் எனப்படும். அந்தச் சொல் இடம்பெறும் பக்கத்தை எளிதில் கண்டறிந்து திருப்ப இச்சொல் நிரல் (Index) உதவும். நூலின் அச்சுப் பணி முழுவதும் முடிந்த பின்னரே இச் சொல் நிரலைத் தொகுக்க முடியும்.

**சொல்லடைவு**

ஒரு நூலில் அல்லது சுவடியில் காணப்படும் சொற்களைத் தொகுத்து அகர வரிசைப்படுத்தி அமைத்தல்.

**சொற்களஞ்சியக் கலைஞர்**

இலக்கிய இலக்கணங்களில் வழங்கும் சொற்களை அகரவரிசையில் தொகுத்து அவற்றின் பொருளையும் அவை வழங்கும் இடத்தையும் கூறுவது சொற்களஞ்சியம். இந்த நிகண்டுப் பணியைச் செய்பவர் சொற்களஞ்சியக் கலைஞர் (Lexicographer) எனப்படுவார்.

**சொற்களஞ்சியம்**

காண்க : சொற்களஞ்சியக் கலைஞர்.

**சொற்பொருள் நிரல்**

இலக்கிய இலக்கண நூல்களில் வழங்கும் சொற்களைத் தொகுத்து அகர நிரலாக்கி அவை வழங்கும் இடத்தையும் பொருளையும் சுட்டுவது சொற்பொருள் நிரல் (Lexicon) எனப்படும்.

**சொஸ்த லிகிதம்**

தானே தன் கையால் எழுதிய ஆவணம்.

## சோ

**சோடியம் குளோரைடு**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் சோடியம் குளோரைடு (Sodium chloride) என்பதும் ஒன்று.

**சோடி ராஜிநாமா**

நில உரிமையை விட்டுவிட எழுதிக் கொடுக்கும் மனு.

**சோபகிருது**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் முப்பத்தேழாவது ஆண்டு.

## சௌ

**சௌமிய**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் நாற்பத்து மூன்றாவது ஆண்டு.

## ஞா

**ஞானஸ்நானம்**

கிறித்தவர்களுடைய பெயரிடும் சடங்கு. திருமுழுக்கு என்று அழைக்கப்படுகிறது.

## ட

**ட்யூக்**

நோட்டுப் புத்தகம் தயாரிப்பதற்குப் பயன்படும் 178 x 143 மி.மீ. அளவுள்ள தாள்.

**டவுல் கணக்கு**

வரி செலுத்துவோருக்குக் கொடுக்கும் தீர்வை விவரக்கணக்குக் குறிப்பு. டவுல் நாமா எனவும் அழைக்கப்படும்.

**டவுல் நாமா**

காண்க : டவுல் கணக்கு.

**டவுல் வசூல் பாக்கிக் கணக்கு**

ஒரு மாவட்டம் அல்லது கிராமத்தின் மொத்தத் தீர்வையின் வசூல், பாக்கி விவரங்களைத் தெரிவிக்கும் கணக்கு.

**டவுல் ஜமா**

ஒரு மாவட்டம் அல்லது கிராமத்தின் மொத்தத் தீர்வையின் வசூல், பாக்கி விவரங்களைத் தெரிவிக்கும் கணக்கு.

**டஸ்ட் உறை**

காண்க : மேலட்டை உறை (dust jacket). 'டஸ்ட்' என்பது ஆங்கிலச் சொல்.

**டஸ்ட் கவர்**

காண்க : மேலட்டை உறை. 'டஸ்ட் கவர்' என்பது ஆங்கிலச் சொல்.

## டா

**டாணா**

சேனை, காவல்.

## டி

**டிட்டாகர் காகித ஆலை**

கோல்கத்தாவில் 1884இல் தொடங்கப்பட்டது.

**டிப்பண்ணா, டிப்பிணி**

குறிப்புரை (Commentary).

**டிஷ்யூ தாள்**

ஒளி ஊடுருவலான மெல்லிய வழவழப்பான தாள் (Tissue paper). அதாவது நேர்த்தியாக நெய்யப்பட்ட துணியினாலான தாள்.

## டெ

**டெஸ்க் எடிட்டர்**

'டெஸ்க் எடிட்டர்' (Desk Editor) என்பது ஆங்கிலச் சொல். குறிப்பிட்ட தொரு துறை நூல்களை மட்டும் ஒழுங்கு படுத்தி அச்சுக்குத் தயார் செய்பவர்.

## டை

**டையிரி**

பணிமுறை தேதிக் குறிப்பேடு (Diary).

## டொ

**டொலி**

தூக்கிச் செல்லும் மஞ்சம்.

**டொலுயீன்**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் டொலுயீன் (Toulene) என்பதும் ஒன்று.

## த

**தக்கணாயனம்**

ஆடித்திங்கள் முதல் மார்கழித் திங்கள் வரை சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் ஆறு திங்கள் காலம்.

***தகுதிச் சாத்து***

காண்க : சான்றிதழ் (certificate).

***தகுதிச் சான்றிதழ்***

காண்க : சான்றிதழ் (certificate).

***தங்கத்***

கையெழுத்து (signature).

**தகக்கூலி**

எழுத்துக்கூலி.

**தட்சணாயனம்**

காண்க : தக்கணாயனம்.

**தட்டச்சுச் சுவடி**

தட்டச்சில் பதிவு செய்யப்பட்ட சுவடி.

**தட்டி மகால்**

மாட்டுப்பண்ணை.

**தட்டு**

மூன்று வகை அச்சியந்திரங்களுள் ஒன்று தட்டு (platen) அல்லது மிதி இயந்திரமாகும். இதில் சிறு விளம்பரங் களும் நூல்களுமே அச்சிட இயலும்.

**தட்டு இயந்திரம்**

காண்க : மிதி. அச்சியந்திர வகை களுள் ஒன்று.

**தட்டைப் படுக்கை உருளி அச்சுப் பொறி**

அச்சியந்திர வகைகளுள் ஒன்று.

**தண்டல்**

வசூல், வரவு, படகுத் தலைவர்.

**தண்டு**

இராணுவம் (Army).

**தணிக்கை**

பொது மக்களின் ஒழுகலாறுகளைச் சீர்படுத்த இதழ், திரைப்படம், புத்தகம் போன்றவை தரும் செய்திகளை அரசு ஆழ்ந்து பரிசீலிப்பது தணிக்கை (Censor) எனப்படும்.

**தணிக்கை அறிக்கை**

ஒரு நிறுவனத்தில் மேற்கொள்ளப் படும் கணக்குகள் தணிக்கை அதிகாரி களால் சரிபார்க்கப்பட்டு அளிக்கப்படும் அறிக்கை தணிக்கை அறிக்கை (Audit Report) எனப்படும்.

**தத்து எடுத்தல்**

காண்க : மகவேற்பு எடுத்தல் (Adoption).

**தத்துக் கொடுத்தல்**

மகவேற்புக்காக ஒருவருக்குக் குழந்தையை அளித்தல்.

**தத்துப்பிள்ளை**

சுவீகார புத்திரன். காண்க : ஏற்புமகன்.

**தத்து மகன்**

காண்க : ஏற்பு மகன்.

**தப்தர்**

துணிக்கட்டு (Cloth bundle), பத்திரங்களைப் பாதுகாத்து வைக்குமிடம் (Record Office).

**தபாதே**

பாக்கி வரவு.

**தபாதே ஜமா**

பழைய பாக்கி.

**தம்பிடி**

காண்க : சல்லி (coin).

**தம்பிரான்படி**

வைணவ நூல் மரபுப்படி அரையர் கூறும் உரை தம்பிரான்படி என அழைக்கப் படும்.

**தமிழ் ஆண்டுகள்**

பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரசோற்பத்தி, ஆங்கீரச, சுமுக, பவ, யுவ, தாது, ஈசுர, வெகுதானிய, பிரமாதி, விக்கிரம, விஷு, சித்திரபானு, சுபானு, தாரண, பார்த்திப, விய, சருவசித்து, சருவதாரி, விரோதி, விகிர்தி, கர, நந்தன, விசய, சய, மன்மத, துன்முகி, ஏவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி, விசுவாவசு, பராபவ, பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, இராட்சத, நள, பிங்கள, காலயுத்தி, சித்தார்த்தி, இரௌத்திரி, துன்மதி, துந்துபி, உருத்திரோற்காரி, இரத்தாட்சி, குரோதன, அட்சய முடிய 60 தமிழ் ஆண்டுகள் உள்ளன.

**தமிழ்நாடு இறையியல் கல்லூரி**

மதுரையில் உள்ள இக்கல்லூரி நூலகத்தில் கிறித்தவ சமயம் தொடர்பான காகிதச் சுவடிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் வேதநாயக சாத்திரியார் எழுதிய கையெழுத்துப் பிரதிகள் அவற்றுள் குறிப்பிடத்தக்க சுவடிகளாகும்.

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

தஞ்சாவூரில் 1981ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15ஆம் நாள் மாண்பமை தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களால் இப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. ஓராயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அமைந் துள்ள இப்பல்கலைக்கழகத்தில் உரு வாக்கப்பட்டுள்ள 24 துறைகளுள் ஓலைச் சுவடித்துறை, அரிய கையெழுத்துச் சுவடித் துறை ஆகிய இரு துறைகளில் பல்லாயிரக் கணக்கான ஓலை மற்றும் காகிதச் சுவடிகள் சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும் சுவடிகள் ஆய்வு

செய்யப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டு வரும் பணியும் நடைபெற்று வருகிறது. சுவடிகள் சேகரித்தல், பதிவு செய்தல், பதிப்பித்து வெளியிடுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இத்துறைகள் செயல்பட்டு வருகின்றன. முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் ஆகிய பட்ட வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அரிய கையெழுத்துச் சுவடித்துறையில் சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைத் தரவுகளாகக் கொண்டு ஆய்வு செய்தமைக் காக ஒரேயொருவர் முதுமுனைவர் பட்டம் பெற்றுள்ளமை குறிக்கத்தக்கது.

**தமிழ் மாதங்கள்**

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி (அற்பிசி), கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி ஆகிய 12 மாதங்கள்.

**தமிழ் வாரம்**

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய 7.

**தமுக்கு**

மேளம் அடித்து ஊரெல்லாம் வந்து மக்களுக்கு அறிவிக்கப்படும் செய்தி. ஆங்கிலத்தில் 'Tom-Tom' என்று அழைக்கப்படுகிறது.

**தயாரிப்பு வரவு செலவுத் திட்டம்**

புத்தகத் தயாரிப்பாளர் ஒவ்வோர் ஆண்டிலும் தாம் வெளியிடும் புத்தகங் களின் தயாரிப்புத் தொடர்பாக வரவு செலவுத் திட்டம் ஒன்றினை முதலில் வகுத்துக் கொள்கிறார். ஒரு புத்தகத்திற்கு ஆகும் செலவுகளையும் அதன் விற்பனை யின் மூலம் பெறக்கூடிய வரவுகளையும் இலாப நட்டங்களையும் முன்னதாகக் கணித்துக் கொள்கிறார். இது தயாரிப்பு வரவு செலவுத் திட்டம் (Production budget) எனப்படும்.

**தர்கா**

இசுலாமியச் சமயத்தைச் சார்ந்த இறந்தவர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்படும் இடம் தர்கா (Mosque) எனப்படும்.

**தர்மசபை**

தஞ்சாவூர் மராத்திய ஆட்சிக் காலத்தில் இருந்த நான்கு நீதிமன்றங் களுள் ஒன்று. இதில் பெரிய வழக்குகள் தீர்க்கப்பட்டன.

**தர்வாஜா**

வாயில்.

**தர்ஜா வாரிக் கணக்கு**

காண்க : தரப்படி வகையேடு.

**தரகர்**

முத்திரை ஓலைகள், ஆவணங்கள், பத்திரங்கள் போன்றவற்றை விற்கும் தனி விற்பனையாளர் தரகர், ஸ்டாம்பு வெண்டர் என அழைக்கப்பெற்றார்.

**தரகுக்காசு**

தானியம் வாங்குவோன் அளப்பவ னுக்குக் கொடுக்கும் கூலி.

**தரப்படிக் கணக்கு**

காண்க : தரப்படி வகையேடு.

**தரப்படித் தொகையேடு**

தரப்படி வகையேட்டில் விரிவாகக் கூறப்பட்டுள்ள விவரங்களைச் சுருக்கிக் கூறும் உள்ளடக்கக் கணக்கு.

**தரப்படி மானியம்**

ஆதி இறையிலி நிலம்.

**தரப்படி வகையேடு**

கிராம நிலங்களின் தரம் சாகுபடி, வரி முதலியவற்றைக் குறிக்கும் கணக்கு கிழக்கிந்தியக் கம்பெனிக் காலத்தில் பார்நார்ட் என்ற ஆங்கிலேயப் பொறியாளரால் செங்கற்பட்டு மாவட்டம் நிலஅளவையும், நிலவரித் திட்டமும் (Survey and Settlement) செய்யப்பட்டது. அந்தக் கணக்குகள் தற்பொழுது தமிழ்ப் பல்கலைக் கழக ஒலைச்சுவடித்துறையில் பாதுகாக்கப் பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. தரப்படிக் கணக்கு, தரம் பேரீஜ் கணக்கு, தரம் பைசலாதி கணக்கு, தரம்வாரிக் கணக்கு, தர்ஜா வாரிக் கணக்கு ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

**தரப் பொத்தகம்**

காண்க : அ–பதிவேடு.

**தரம் பேரீஜ் கணக்கு**

காண்க : தரப்படி வகையேடு.

**தரம் பைசலாதிக் கணக்கு**

காண்க : தரப்படி வகையேடு.

**தரம் வாரிக் கணக்கு**

காண்க : தரப்படி வகையேடு.

**தரமான பதிப்பு**

தரமான பதிப்பு என்பது பயன்பாட்டு நோக்கில் கூறப்படுவதாகும். தரமான பதிப்பு என்பதற்கு அளவுகோல் பயன்பாடு மற்றும் வெளிப்பாட்டுத் திறனை உள்ளடக்கியதாகும்.

**தரிசு நிலம்**

சாகுபடி செய்யப்படாத நிலம்.

**தரு ஆவணப் பதிவேடு**

காண்க : தரு தாள் பதிவேடு (Record issue register).

**தரு தாள் பதிவேடு**

ஆவண அறையிலிருந்து ஒருவர் ஒரு தாளை அல்லது ஆவணத்தைப் பார்ப்பதற்காகப் பெறவேண்டுமானால், அது அவருக்குத் தரப்படுவதற்கு முன்பு இப் பதிவேட்டில் அத்தாளின் அல்லது ஆவணத்தின் எண், முடிவு, வகை, நாள், பிறவும் பதியப்பெறும். தரு ஆவணப் பதிவேடு (Record issue register) எனவும் இது அழைக்கப்படும்.

**தரும சாசன ஆவணங்கள்**

தருமம், அறக்கொடைகள் போன்றவற்றைக் கொண்டிருக்கும் ஆவணங்கள்.

**தலமுறைப்பதிப்பு**

தேவாரப் பாடல் பெற்ற திருத் தலங்களை எல்லாம் தில்லைப் பெருங் கோயில் முதலாக வரிசைப்படுத்தி அவ்வத் தலங்களுக்குரிய தேவாரப் பதிகங்களை ஏழு திருமுறைப் பாகுபாட்டிற்கேற்ப முறைப் படச் சேர்த்து அமைத்துப் பதிப்பித்தலைத் தலமுறைப் பதிப்பு என்று கூறுவர்.

**தலைச்சொல் அகராதி**

ஓர் அகராதியில் ஒரு பதிவுக்கான முதற்சொல் தலைச்சொல் எனப்படும். இச்சொல் தனிச்சொல்லாகவோ கூட்டுச் சொல்லாகவோ இருக்கலாம்.

**தலைநிலைச் சான்று**

துணைநிலைச் சான்றுக்கு மாறான சான்று அதாவது நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட மூலப் பத்திரம்.

**தலைப்புத் தாள்**

கடிதம் எழுதுவதற்கு எழுதுபவரின் பெயர், முகவரி, அலுவல், அலுவலகம், துறை, அவற்றில் ஒன்றோ, சிலவோ, அனைத்துமோ, தலைப்பிலோ அச்சிட்டு வைத்துக்

கொள்ளும் தாள் தலைப்புத் தாள் (Letter head) ஆகும்.

**தலைப்புப் பக்கம்**

இது நூலின் அல்லது சுவடியின் முதற்பக்கம். இது வலக்கைப் பக்கம் வரும். நூல் அல்லது சுவடியின் தொடக்கத்தில், அந்த நூலின் தலைப்பு / துணைத்தலைப்பு, ஆசிரியர் பெயர், கல்வித் தகுதிகள், வெளியிடுபவர் முகவரி, வெளியிடும் ஆண்டு, பதிப்பக இலச்சினை போன்ற வற்றைத் தெரிவிக்கும் பகுதி.

**தலையோலை**

காண்க : ஏடு பதப்படுத்துதல்.

**தவணைக் கணக்கு**

காண்க : கிஸ்தி பந்தி (payment register).

**தவணைக் கிரய சாசனம்**

தவணைக்குள் ஒத்தித்தொகை செலுத்தாவிடில் ஒத்திக்காரருக்கே நிலம் உரிமையானது என்ற நிபந்தனைக்குட் பட்ட ஒத்தி ஆவணம்.

**தவணைச் சீட்டு**

கெடு வைத்து எழுதிய பத்திரம்.

**தவறு**

அறியாமையாலோ, கவனமின்மை யாலோ ஒன்றைத் தவறாகச் செய்தல் (fault).

**தவுலத்**

அரசு, தவலத்து, காறுபாறு எனவும் அழைக்கப்படும் (government).

**தவுலத் பாவலோக்**

அரசு ஊழியர் (government servant).

**தவுலத்து பரமலோக்கு**

மக்கள் தொடர்பு அலுவலர் (Public Relation Officer).

**தழுவல் பதிப்பு**

ஒருவர் மற்றொருவருடைய படைப்பில் சிறு மாறுதல்கள் செய்து வேறு படுத்தி எழுதித் தமதாக வெளியிடுதல் தழுவல் (adopted edition) எனப்படும். தழுவல் என்பது (1) பிற மொழிகளில் உள்ள படைப்புகளைத் தழுவித் தமது மொழியில் புதியது போல எழுதுதல், (2) தம் மொழியி லேயே பிறர் எழுதிய படைப்புகளைத் தழுவுதல் என இருவகைப்படும்.

**தற்காலிக ஆவணப் பதிவேடு**

ஓராண்டு, மூன்றாண்டு என்று குறிப்பிட்ட சில ஆண்டுக்காலம் வரை பாதுகாக்கப்படும் ஆவணங்களைப் பதிவு செய்யும் பதிவேடு.

**தற்காலிகச் சான்றிதழ்**

நிலையான சான்றிதழ் வழங்கு வதற்கு முன் வழங்கப்படும் சான்றிதழ் (Provisional certificate).

**தற்குறி**

எழுதத் தெரியாத ஒருவர் கையெழுத்து இடுவதற்குப் பதிலாகக் குறியிடுபவர் (marksman).

**தற்சுவடி**

நூலாசிரியரே தம் கைப்பட எழுதியது தற்சுவடி (Autograph)யாகும்.

**தற்ஜமா**

மொழிபெயர்ப்பு (translation).

**தன்பிரதி**

இலக்கிய ஆசிரியர் தாமே எழுதிய

அல்லது பிறர் எழுதித் தாமே சரி பார்த்துத் திருத்திய பிரதி.

**தன் வரலாறு**

காண்க : சுயசரிதை (auto biography).

**தன்னுரிமைப்படி**

செயலுக்கும், எண்ணத்திற்கும், நடப்பதற்கும் தனக்குள்ள உரிமைப்படி.

**தனிப்படி**

காண்க : மிகைப்படி.

**தஸ்கத்**

கையெழுத்து.

**தஸ்தர்பந் (த்)து**

ஆவணம் காப்பவர். தஸ்தாவேசு களைப் பாதுகாக்கும் அலுவலர்.

**தஸ்தரம்**

துணித்துண்டு. காண்க : ஆவணத் துணி.

**தஸ்தா**

தாள்கட்டு, கட்டு, காகிதக்கட்டு. 'தஸ்தா' என்பது உருதுமொழிச் சொல். சில தாள்கள் சேர்ந்த ஒரு கட்டு 'தஸ்தா' எனப்படும். பெரும்பாலும் 24 தனித் தாள்கள் சேர்ந்த ஒரு கட்டே 'தஸ்தா' வாகும். எழுதாத வெறும் தாள் 'தஸ்தா' எனப்படும்.

**தஸ்தாவேஜ் (சு)**

ஆவணம். 'தஸ்தாவேஜ்' என்பது உருதுமொழிச் சொல்லாகும். கையினால் எழுதப்பட்ட ஒரு தாள் 'தஸ்தாவேஜ்' ஆகும். அச்சு இல்லாத காலத்தில் எழுத்து என்பது கையினால் எழுதப்பட்டதைக் குறித்தது. இக்காலத்தில் அச்சு செய்த ஆவணத்தை யும் 'தஸ்தாவேஜ்' என்பது குறிக்கும் (documents voucher).

**தஸ்தாவேஜு**

காண்க : தஸ்தாவேஜ்.

**தஸ்தான் மகால்**

நெற்களஞ்சியம்.

**தஸ்திரம்**

ஆவணங்களை ஒரு துணியில் மூட்டையாகக் கட்டிப் பாதுகாப்பாக வைத்தல்.

**தஸ்திக்**

மொகினித் தொகை.

**தஸ்து**

வசூல் செய்த கையிருப்புத் தொகை.

**தஸ்தூர்**

வழக்கம்.

**தஸ்தூரி வரி**

வழக்கமாகக் கொடுக்கும் வரி.

## தா

**தாக்கல்**

பதிவு செய்தல். அரசுக்கு அரசு அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்கள் எழுதிக் கொடுக்கும் விண்ணப்ப ஒப்பந்தம் தாக்கல் முச்சிலிக்கா எனப்படும்.

**தாக்கீது**

உத்தரவு, கட்டளை, ஆணை. 'தாக்கீது' என்பது 'Takid' என்ற அரபுச் சொல்லில் இருந்து பிறந்தது. தொல்லை தரும் பையனைத் 'தாக்கீது பண்ணிவை'

என்று கூறுவதுண்டு. 'தாக்கீது பண்ணுதல்' என்பது 'கண்டித்து வைத்தல்' என்ற பொருளில் உள்ளது.

**தாங்கல் வயணம் ஏடு**

கிராமத்திலுள்ள சிறிய பாசன ஆதாரங்களைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு.

**தாசகாவி**

ஊழியம் செய்பவள், வேலைக்காரி (servant).

**தாசில்தார்**

'தாசில்தார்' என்பது உருதுமொழிச் சொல்லாகும். வட்டாட்சியர். தாசில்தார் (taluk officer) என்பதற்குக் கடமை வகிப்பவர் அல்லது கடமையாளர் என்பது பொருள். ஒரு தாலுகா அல்லது வட்டமே வட்டாட்சியரின் எல்லையாகும்.

**தாட பத்திரம்**

ஓலைச்சுவடி (palmleaf).

**தாது**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் பத்தாவது ஆண்டு.

**தாலுகா**

உருதுமொழிச் சொல். வட்டம், ஒரு மாவட்டத்தின் உட்பிரிவு (taluk).

**தாவா**

வழக்கு. 'தாவா' என்பது அரபுச் சொல்லாகும் (case). ஒருவர் சொல்வதற்கு மாறாகச் சொல்லுதல். அவரோடு 'தாவா' செய்தலாகும். வழக்காடுதலும் அதுவே. பகைமை பாராட்டலும் 'தாவா' பண்ணுதலே.

**தாழை மடல்**

கடிதம் (letter).

**தாள்**

காண்க : காகிதம் (paper), கட்டமைப்புப் பொருள்களுள் ஒன்று.

**தாள் இருத்தி**

காற்றில் பறக்காமல் இருத்தற் பொருட்டுத் தாள்களின் மேல் வைக்கப்படும் பொருள் (paper weight).

**தாளிப்பனை**

காண்க : பனை ஓலை. இதன் (talipot) ஓலைகள் அகலமாகவும் நீளமாகவும் மென்மையாகவும் இருக்கும்.

**தாளின் அளவை**

எழுதுகின்ற, அச்சடிக்கின்ற தாள்களில் பல்வேறு அளவுகள் (paper size) உள்ளன.

**தான சாசனம்**

ஒருவர்க்குக் கொடை வழங்கிய விவரம் குறித்த ஆவணம்.

**தான பத்திரிகை**

ஒருவர்க்குக் கொடை வழங்கிய விவரம் குறித்த ஆவணம்.

**தானாதி வினிமய விக்கிரயம்**

தொடர்புடைய சொத்துக்களை நிபந்தனை இல்லாமல் பதிவு செய்து கொள்ளுதல்.

**தானியங்கி வெப்ப ஈரப்பதமானி**

காண்க : ஈரப்பதம்.

**தானே அச்சு வார்க்கும் பொறி**

தானாகவே அச்செழுத்துக்களை வார்த்தெடுக்கும் கருவி (automatic casting machine).

**தானே மையளிக்கும் தொட்டி**

தானாகவே மைத்தொட்டியிலிருந்து மை வெளியேறும்.

## தி

**திசுக் காகிதம்**

மிக மெல்லியதாகவும் எடை குறைந்தும் இருக்கும். ஒளி கசியும் தன்மையுள்ளது. சிறுவர்கள் விடும் பட்டம் இக்காகிதத்தில் (tissue paper) செய்யப் படுகிறது.

**திதிகள்**

பிரதமை, துவிதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி, பௌர்ணமி அல்லது அமாவாசை ஆகத் திதிகள் பதினைந்து ஆகும். சுக்லபட்சம் திதி 15 (வளர்பிறை), கிருஷ்ணபட்சம் திதி 15 (தேய்பிறை) ஆக மொத்தம் முப்பது திதிகள்.

**திம்மதி**

பெரிய அலுவலர், போர்த் தளவாடங் களை மேற்பார்வையிடுபவர்.

**திம்மதிக்காரர்கள்**

அலுவலர்கள்.

**திரவியம்**

செல்வம் (treasure).

**திருகு சுருள் கட்டமைப்பு**

தனித்தனித் தாள்களை அடுக்கி இரு புறங்களிலும் கெட்டி அட்டையை வைத்த பின்பு, தாளின் உட்புற இடப்பக்க ஓரத்தில் சிறு துளைகளை உண்டாக்கி, ஒரு பிளாஸ்டிக் சுருள் வில்லைக் கீழ்ப்புற முதல் மேல்புறம் வரையில் அதனூடே செல்லுமாறு வைப்பது திருகுசுருள் கட்டமைப்பு (spiral binding) எனப்படும்.

**திருத்தப்படி**

திருத்தமாக எழுதப்பெறுவது (fair copy).

**திருத்தப் பதிப்பு**

ஒரு நூலின் பாடத்தில் காணும் ஐயங்களை நீக்கிப் பொருள் தெளிவு ஏற்படுமாறு பதிப்பித்து, படிப்பவர்கள் தாங்களே பாடத்தை உறுதி செய்து கொள்வதற்குத் துணையாக எல்லாப் பாடங்களையும் ஒழுங்காகக் கொடுத்துப் பதிப்பித்தல்.

**திருத்தமான பாடம்**

பல சுவடிகளை ஆய்ந்து அவற்றுள் கிடைக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பாடல் களில் சிறந்த பாடத்தைத் தேர்ந்தெடுத்துப் பதிப்பித்தல்.

**திருத்தாப்படி**

திருத்தமில்லாமல் எழுதப்பெறுவது (rough copy).

**திருத்தா வரைவு**

திருத்தமில்லாமல் எழுதப்பெறுவது (rough draft).

**திருத்திய படி**

திருத்தம் செய்து இறுதி வடிவம் கொடுத்த படி (corrected copy).

**திருத்திய பதிப்பு**

பலவகையிலும் முதற்பதிப்பைப் புதுக்கியும் சுருக்கியும் திருத்தியும் மறுமுறை வெளியிடுவது (revised edition).

**திருத்துபவர்**

காண்க : பிரதியாளர் (corrector).

**திருமந்திர ஓலை**

ஓலை எழுதும் பணியாளர் அரசரிடத்தும் திருக்கோயில்களிலும் பணி புரிந்தால் அவர்கள் எழுதும் ஓலைக்கும், அவர்கள் அலுவலுக்கும் திருமந்திர ஓலை என்பது பெயர்.

**திருமந்திர ஓலைநாயகம்**

திருமந்திர ஓலைகளின் தலைவர், பிழையின்றி எழுதப்பட்டுள்ளதா என்று பார்ப்பவர்.

**திருமறைப் பதிப்பு**

திருமறை என்பது கிறித்தவ வேதாகமத்தைக் குறிக்கும். அதாவது பைபிளைக் குறிக்கும். உலகில் மிக அதிக அளவில் பல்வேறு அளவுகளில் பல மொழிகளில் திருமறைப் பதிப்புகள் வெளி வந்துள்ளன.

**திருமுகம்**

அரசரிடமிருந்து வந்த ஆவணம் ஓலையாகவே இருந்தாலும் அதனைப் பெரும்பாலும் ஓலை எனக் கூறும் வழக்கம் இல்லை. திருமுகம், ஸ்ரீமுகம் என்றே அவ்வோலை அழைக்கப்பெற்றது.

**திருமுறைப் பதிப்பு**

சைவத் திருமுறைகள் 12 ஆகும். இவற்றைப் பல்வேறு சைவத் திருமடங் களும் பல்வேறு சைவ சமயச் சான்றோர் களும் பதிப்பித்துள்ளனர். சம்பந்தர் அருளியன முதல் மூன்று திருமுறை களாகவும், அப்பர் அருளியன நான்கு, ஐந்து, ஆறு ஆகிய திருமுறைகளாகவும், சுந்தரர் அருளியன ஏழாம் திருமுறை யாகவும், மாணிக்கவாசகர் அருளியன எட்டாம் திருமுறையாகவும், திருவிசைப்பா திருப்பல்லாண்டு முதலியன ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் அருளியன பத்தாம் திருமுறையாகவும், 40 சிற்றிலக்கிய நூல்கள் அடங்கியன பதினோராம் திரு முறையாகவும், சேக்கிழார் அருளியன பன்னிரண்டாம் திருமுறையாகவும் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

**திருவாய்க்கேள்வி**

ஆணையை ஓலையில் எழுதிக் கொடுப்பவர்.

**திருவுளச்சீட்டு**

குலுக்கிப் போட்டு எடுத்தல் முதலிய வகையால் தெய்வச்சித்தமறியும் சீட்டு.

**திரேதாயுகம்**

நான்கு யுகங்களுள் இரண்டாவது யுகம். இதற்கு 12 இலட்சத்து 96,000 ஆண்டுகள்.

**திரைப்பட நூல்நிலையம்**

திரைப்படங்கள் தொடர்பான ஆவணங்கள், நூல்கள், படங்கள், ஒலி நாடா, ஒளி நாடா முதலானவற்றைச் சேகரித்து வைத்துள்ள இடம்.

**திவிதிவி என்னும் இங்கி மரத்தின் காய்**

மை தயாரிக்கப் பயன்பட்ட பொருள்களுள் ஒன்று.

**தின சரிதை**

காண்க : நாட்குறிப்பு (daily accounts).

## தீ

**தீர்ப்பளி**

இரு தரப்பினரிடையே எழும் மாறு பாட்டைத் தீர்ப்பதற்கென அவர்களால் இசைந்து ஏற்கப்பட்டவர் (arbitrator).

**தீர்ப்பாளர்**

நீதிமன்றத் தீர்ப்பளிப்பவர் (adjudicator).

**தீர்வை**

காண்க : சுங்கம். நிலத்தைப் பயன் படுத்துவோர்க்கு விதிக்கப்படும் வரி (tax).

**தீர்வைத் திட்டம் ஏடு**

தீர்வை விதிக்கப்பட வேண்டிய வரன் முறைகளைத் தெரிவிக்கும் கணக்கு (duty register).

**தீர்வைத் தொகையேடு**

தீர்வை வகையேட்டில் விரிவாகக் கூறப்பட்டுள்ள விவரங்களைச் சுருக்கிக் கூறும் உள்ளடக்கக் கணக்கு.

**தீர்வை வகையேடு**

வரி நிர்ணய விவரத்தைக் கூறும் கணக்கு. இது தரப்படி வகையேட்டில் கண்ட தீர்வை விதிப்பின் விவரம் கூறும் கணக்கு.

## து

**துகூர் நியமனத் திருமுகம்**

நிலைத்த நியமனத்தை அறிவித்து ஒரு நாட்டுத் தலைவருக்கு அனுப்பும் ஆவணத்தின் சிறப்புப் பெயர்.

**துடாமுறிச் சாசனம்**

விடுதலைப் பத்திரம் (release bond).

**துண்டு வெளியீடு**

சிறு துண்டறிக்கை (bit notice) யாக வெளியிடுதல்.

**துணி**

காண்க : கல்.

**துணிச்சுவடி**

பருத்தி, பட்டுத் துணிகளில் எழுதப் படுவன. மன்னர் ஆட்சிக் காலங்களில் அரசு ஆணைகள், கடிதங்கள் போன்ற வற்றைப் பட்டுத் துணிகளில் எழுதி அவற்றை மூங்கில் குழாய்களில் போட்டு அனுப்பினர். சமண இலக்கிய நூலான தர்மவிதி என்பது கி.பி. 1361–62இல் துணியில் எழுதப்பட்ட சுவடியாகும் (cloth manuscripts).

**துணைநிலைச் சான்று**

தலைநிலைச் சான்று இல்லாத போது அனுமதிக்கப்படும் சான்றுவகை (secondary evidence). சான்று : ஆவணம் ஒன்றின் முறையான படி அல்லது நகல்.

**துணை நூல்**

ஆய்வேட்டில் அந்த ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்கள், ஆய்வேடுகள், ஆவணங்கள் முதலானவற்றின் பட்டியலை அகர வரிசையில் தருதல் (reference).

**துத்தம்**

மை தயாரிக்கப் பயன்பட்ட பொருள் களுள் ஒன்று. பசை தயாரிக்கவும் பயன் படும்.

**துந்துபி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் ஐம்பத்தாறாவது ஆண்டு.

**துபாஷ்**

இரு மொழிபெயர்ப்பாளர் (interpreter).

**தும்பால் மானியம் வயணம் ஏடு**

கிராம ஊழியர் மற்றும் அறநிலையங்களுக்கு வழங்கப்படும் இறையிலி நிலங்களின் விவரம் தெரிவிக்கும் ஏடு.

**தும்பிரதி**

தலைமைக் கணக்கர், தீர்வை இல்லாமல் அனுபவிக்கும் நிலம்.

**துய்ப்பு**

காண்க : அனுபோகம்.

**துலாம்**

நிறைகோல், ஒரு நிறையளவு, ஐந்து வீசை.

**துவாக**

பழைய பிரெஞ்சு நீள அளவைப் பெயர் (Toise) 1.95 m.

**துவாபரயுகம்**

நான்கு யுகங்களுள் மூன்றாவது யுகம். இதற்கு 8 இலட்சத்து 64,000 ஆண்டுகள்.

**துளை பண்ணும் கருவிகள்**

தாள், அட்டை போன்றவற்றைத் துளையிடும் கருவிகள் (punches). புத்தகக் கட்டமைப்பு செய்யும் பொருள்களுள் ஒன்று.

**துளையிட்ட சீட்டுகள்**

சொற்கள், பெயர்கள் போன்றவற்றை அகர நிரல்களாகத் தயாரிப்பதற்காக 3" x 5" அளவுள்ள அட்டைகளில் எழுதுவதுண்டு. சில நேரங்களில் சிக்கனம் மற்றும் செலவைக் கருதி முழு வெள்ளைத்தாளில் தேவையான அளவில் துளையிட்ட சீட்டுகள் (perforated sheets) தயாரித்து எழுதுவதுண்டு.

**துராக்கிருதம்**

நிந்தனை (misconduct).

**துறை**

காண்க : இலாகா, நிறுவனம் (department).

**துன்மதி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் ஐம்பத்தைந்தாவது ஆண்டு.

**துன்முகி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் முப்பதாவது ஆண்டு.

**துஷ்டி**

உறவினர்களின் இறப்பினால் ஏற்படும் தீட்டு (sarrow).

## தூ

**தூக்கு**

1. ஓர் அளவை (measure). ஐம்பது பலமுள்ள நிறையளவு.

2. பல சுவடிகளைச் சேர்த்துக் கயிற்றில் கட்டித் தொங்கவிட்டமையால் தூக்கு எனப் பெயர் பெற்றது. இவற்றைச் சுவடித் தூக்கு என்றும் கூறுவர்.

**தூக்குத் தூக்கி**

ஓலைச் சம்படம் அடங்கிய தூக்கினைத் தூக்கிச் செல்லும் பணியாளர் தூக்குத் தூக்கி எனப்படுவார்.

**தூக்குரி ஈஸ்துவை ஏடு**

கிராமக் காவல்காரருக்கு வழங்கப்பட வேண்டிய இனாம் முதலிய விவரங்களையும் அவற்றைப் பெற வேண்டிய உரிமையாளரையும் தெரிவிக்கும் ஏடு.

**தூணி**

நான்கு மரக்கால் கொண்ட ஓர் அளவு (measure).

**தூய்மைப்படுத்தல்**

சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றில் படிந்துள்ள தூசிகள் போன்றவற்றை அகற்றுதல் (katharsis).

**தூரிகை**

புத்தகக் கட்டமைப்புச் செய்வதற்குரிய பொருள்களுள் ஒன்று (brush).

## தே

**தேசிய ஆவணக் காப்பகம்**

புதுதில்லியில் ஜன்பத் சாலையில் தேசிய ஆவணக் காப்பகம் (National Archives) அமைந்துள்ளது. மைய அரசின் பொறுப்பிலுள்ளது. பல முக்கியமான மைய அரசின் ஆவணங்கள் இங்குப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மிகுந்த பாதுகாப்புடன் விளங்கிவரும் இக்காப்பகத்தின் மூலம் இந்தியாவிலுள்ள ஆவணக் காப்பகங்கள், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றுக்கு மைய அரசு சுவடிகள், ஆவணங்கள் சேகரித்தல், பாதுகாத்தல், பதிவு செய்தல், விளக்க அட்டவணை தயாரித்தல், பதிப்பித்தல், பாதுகாப்புப் பொருள்கள் வாங்குதல் முதலானவற்றுக்கு நிதிநல்கை வழங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் ஆவணங்கள் நுண்படச் சுருள்களாக எடுத்துப் பாதுகாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. ஆண்டுதோறும் பல்வேறு வகையான பயிற்சி வகுப்புகள் எடுக்கப்பட்டுச் சான்றிதழ்கள் வழங்கும் பணியையும் இக்காப்பகம் செய்து வருகிறது.

**தேவநாகரி**

வடமொழி, மராத்தி, இந்தி ஆகிய மொழிகளுக்குத் தேவநாகரி எழுத்து பயன்பட்டது.

## தை

**தைமல் புகையூட்டுதல்**

சுவடிகள், ஆவணங்களில் படிந்துள்ள பூஞ்சைக் காளான்களைத் தைமல் புகையூட்டுதல் (thymol fumigation) மூலம் நீக்கலாம்.

## தொ

**தொகுப்புப் பதிப்பு**

ஒருவருடைய அல்லது பலருடைய கவிதை, சிறுகதை, கட்டுரை போன்ற படைப்புகளிலிருந்து சிலவற்றைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்துத் தருவது தொகுப்புப் பதிப்பாகும் (Anthology).

**தொகைப் பதிப்பு**

காண்க : முழுமைத் தொகுப்பு.

**தொகையகராதி**

எண்ணிக்கையால் காட்டும் சொற்களைத் தொகுத்து அந்த எண்ணிக்கையால் குறிப்பிடப்படும் பொருள்களை விளக்குதல். சான்று : நவமணிகள், நவதிருப்பதிகள், நவரசங்கள், ஆய கலைகள் அறுபத்து நான்கு.

**தொடக்கவுரை**

காண்க : அணிந்துரை (preface).

**தொடக்கிவிடும் பதிப்பாசிரியர்**

புத்தகங்கள் வெளியிடும் திட்டங்

களைத் தொடக்குபவர். புத்தகம் எழுதுவதற்கு வழி காட்டுதல், வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்றவை அவரது பணிகளாகும்.

**தொடர்பு மேற்கோள்**

ஒன்றுக்கொன்று தொடர்புடைய பொருள் ஒரு கோப்பில் இருவேறு இடங்களில் வருமானால் ஒவ்வோரிடத்திலும், விளிம்பில் மற்ற இடத்தின் பக்கம், பத்தி இவற்றைக் குறிப்பது.

**தொடரியல் தண்டனை**

ஒரே வழக்கில், ஒரு குற்றத்திற்குத் தண்டனை விதிக்கப்பட்டபின், தொடர்ந்து மற்றொரு குற்றத்திற்குத் தண்டனை விதிக்கும் பொழுது, பின் தண்டனை, முன் தண்டனையோடு உடன் நிகழாது, அது முடிந்தபின் தொடங்கும் எனத் தீர்ப்பளித்தல்.

**தொம்பை**

தானியங்கள் வைக்கப்படும் கூடை.

**தொய்பா**

மராத்தியச் சொல். கப்பம்.

**தொல்லேடு / தொல்லாவணம்**

முப்பது ஆண்டுகளுக்கு முந்தைய தான முறையான இடத்தில் இருந்து கொண்டு தரப்படும் ஆவணம். அதிலுள்ள கையெழுத்து, ஒப்பம், சான்றொப்பம் முதலியவை மெய்யானவை எனத் துணியப்படும்.

**தொலச்சீட்டு**

தொல் என்றால் பழைய என்பது பொருள். தொலை என்ற சொல்லில் இருந்து முடிதல் என்ற பொருளில் வந்துள்ளது. சீட்டு என்றால் சன்மானம். பழைய வரவு முடிந்த சீட்டு என்பது இதற்குப் பொருளாகும்.

**தொலை அச்சுக்கோப்பான்**

அச்சுக் கோப்பதில் ஒன்றான லைனோடைப் முறையைத் தொலை சேசுக் கோப்பான் என்ற கருவியோடு இணைத்து விடுவர். இக்கருவி தட்டச்சுக் கருவி போன்றிருக்கும். இதில் ஒரு காகித நாடா இருக்கும். அச்சடிக்க வேண்டிய செய்தி யை இதில் தட்டச்சு செய்தால் நாடாவில் ஒவ்வோர் எழுத்திற்கும் ஊற்ற துளைகள் ஏற்படும். துளைகள் கொண்ட நாடாவை லைனோடைப் இயந்திரத்தில் மாட்டி விட்டால் அது தானாகவே அச்சுக்களைக் கோத்துவிடும்.

**தொலைபேசி விவர நூல்**

தொலைபேசிக்குரியவரின் பெயர் முகவரியுடன் தொலைபேசி எண்கள் கொண்டது (telephone directory).

**தொன்மை ஆவண நூலகம்**

ஆவணக் காப்பகங்களில் அரிய அச்சு நூல்கள், ஆவணங்கள் தொடர்பான நூல்கள், படி எடுத்த தாள்கள், படங்கள் முதலானவற்றைச் சேகரித்துப் பாதுகாத்து வரும் பணியும் முக்கியமான ஒன்றாகும். இவற்றைப் பராமரிப்பதற்காக நூலகம் (archival library) செயல்பட்டு வருகிறது.

**தொன்மை ஆவணம்**

முப்பது ஆண்டுகளுக்கு முந்தைய தென முறையான இடத்திலிருந்து கொண்டு தரப்படும் ஆவணம். அதிலுள்ள கையெழுத்து, ஒப்பம், சான்றொப்பம் முதலியன மெய்யானவை எனத் துணியப் படும்.

## தோ

**தோடு**

இதழ். ஓலைச்சுவடியின் தனி யிதழைக் குறிக்கும்.

**தோப்பு வயணம் ஏடு**

கிராமத்திலுள்ள தோப்புகளின் விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு.

**தோல்**

காண்க : கல். கட்டமைப்பு செய் வதற்குப் பயன்படும் (leather).

**தோல் கட்டமைப்பு**

நீண்ட நாள் வைத்திருக்கக்கூடிய புனித நூல்கள், சிறந்த படைப்புகள் முதலியவற்றை விலையுயர்ந்த தாளில் அச்சிட்டுத் தோல் கட்டமைப்பு (Leather binding) செய்வது வழக்கம். இதில் பலவகைகள் உண்டு. நூல் முழுவதும் தோல் போர்த்தியது முழுத்தோல் கட்டமைப்பு ஆகும். முதுகுத்தண்டுப் பகுதியும் மூலைகளும் மட்டும் தோலினால் போர்த்தப்பட்டுப் பிற பகுதிகள் துணி அல்லது காகிதத்தில் மூடப்படுவது அரைத் தோல் கட்டமைப்பு ஆகும். முதுகுப்பகுதி மட்டும் தோலினால் போர்த்தி மற்ற எல்லா இடமும் துணியாலோ காகிதத்தாலோ போர்த்துவது கால்தோல் கட்டமைப்பு எனப்படும்.

**தோல் சுவடி**

வெள்ளாடு, செம்மறியாடு, கன்றுக் குட்டி ஆகியவற்றின் தோலில் எழுதப் படுவது தோல் சுவடி (Parchment manuscript) ஆகும்.

**தோற்றுவாய்**

நூலின் செய்தி பற்றித் தொடங்கு வது தோற்றுவாய் (introduction). தாம் எடுத்துக் கொண்ட கருப்பொருளைக் கையாளும் வகை, அந்த நூலை வாசகர் கண்டு பயன்படுத்த வேண்டிய முறை ஆகியவற்றை இப் பகுதியில் ஆசிரியர் கூறுவதுண்டு.

## தெள

**தௌலத் பாவ்லோக்**

அரசு ஊழியர்கள் (government servants).

## ந

**நகம்**

சகுந்தலை தாமரை இலையின் பின்புறத்தில் நகத்தால் கீறித் தன் காதல் உணர்ச்சிகளைத் துஷ்யந்தனுக்குப் புலப்படுத்தியதாகச் சாகுந்தலம் குறிப்பிடு கின்றது. இதில் நகம் எழுதுகோலாகப் பயன்பட்டுள்ளது.

**நகரப் பதிப்புப் பதிப்பாசிரியர்**

நகரத்தில் வெளியிடப்படும் நாளிதழ் போன்றவற்றின் பதிப்பாசிரியர் (city editor).

**நகராவு**

மெய்க்காப்பாளர் முரசு.

**நகரும் படச்சுருள்**

இதுவும் ஓர் ஆவணமாகும்.

**நகல்**

உருதுமொழிச் சொல், படி (copy). முத்திரை ஓலைகளுக்கு நகல் எழுதி வைத்துக் கொள்வதுண்டு. அதன் தலைப்பில் நகல் என்று எழுதப்பட்டிருக்கும்.

நகல் முத்திரையில்லாத வெற்று ஓலையில் எழுதப்பட்டது.

**நகல் எடுப்புத் தாள்**

மூலப்படிவத்தை நகலாக எடுப்பதற்குரிய தாள் (Stencil paper).

**நகல் பதிப்பாசிரியர்**

நூலாசிரியரால் வெளியிடுவதற்காகத் தரப்படும் ஒரு கையெழுத்துப் பிரதியை அச்சுக்கேற்ற வகையில் ஒழுங்கு படுத்துபவர் (city editor).

**நகல் பெருக்கி**

பல பிரதிகளாக எடுக்கும் இயந்திரம் (xerox machine, cyclostyle machine).

**நகலர்**

காண்க : எழுத்தர் (clerk).

**நகலெடுதாள் எழுதுகோல்**

நகல் எடுக்கும் தாளில் எழுதும் கருவி.

**நச்சிலக்கியம்**

பணம் ஈட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு மக்களின் உணர்வுகளைக் கீழ்த்தரமாகத் தூண்டும் வகையில் எழுதப்படுவது (pulp literature).

**நச்சுக்குழல்**

மாலுமி தொலைநோக்கி.

**நசர்**

நசீர் எனும் உருது மொழிச் சொல். உத்தியோகஸ்தருக்குச் செலுத்தும் காணிக்கை என்று பொருள்.

**நட்சத்திரங்கள்**

அசுவினி, பரணி, கிருத்திகை, ரோகிணி, மிருக சீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி என 27 நட்சத்திரங்கள்.

**நடப்புக் கோப்பு**

நடப்பிலுள்ள தாள்களைக் கொண்ட கோப்பு (current file).

**நடப்புத்தாள்**

அலுவலகத்தில் இச்சொல் (current) செல்கின்ற, வருகின்ற தாள்களைக் குறிக்கும்.

**நடவடிக்கைக் குறிப்பு**

கூட்டத்தில் நிகழும் நிகழ்வுகளைச் சுருக்கமாக எடுத்தல் (minutes).

**நத்தம்**

ஊரில் குடியிருக்குமிடம்.

**நந்தன**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் இருபத்தாறாவது ஆண்டு.

**நமூனா**

படிவம் (form). உருதுமொழிச் சொல். எடுத்துக்காட்டான, முன் வகையான படிவம் ஆகும்.

**நயினார்**

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் காவல்துறைத் தலைவரை 'நயினார்' என்ற சொல்லால் அழைத்தனர்.

**நவவித்யா கலாநிதி சாலா**

தஞ்சாவூர்க் கோட்டைக்குள் இருந்த மராத்தியர் காலக் கல்வி நிலையம்.

**நள**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் ஐம்பதாவது ஆண்டு.

**நன்கொடை ஆவணம்**

காண்க : அறுதி ஆவணம் (settlement deed).

**நன்றியுரை**

நூல் வெளியீட்டிற்குத் துணை நின்ற அனைவருடைய உதவிகளையும் நினைவு கூர்ந்து கூறுமிடம் நன்றியுரையாகும் (acknowledgement). இவ்வுரை ஆய்வு நாகரிகங்களுள் ஒன்றாகும். மூலச் சுவடிகள், நிழற்படங்கள், செப்பேடுகள் போன்றவற்றை வழங்கியோர், நூல் உருவாக்கத்தில் அச்சுப்படி திருத்துதல், நூலின் முன் பின் இணைப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றை உதவியவர்களுக்கு நன்றி கூறுதல். இப்பகுதி நூலின் முன்பகுதியில் இடம்பெறும். சுவடியிலிருந்து நூலாகப் பதிப்பித்த தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர் அந்தந்த நூலின் முன்பகுதியில் அந்நூலுக்கு உதவிய அனைவரையும் நன்றி கூறியிருப்பதைச் சான்றாகக் காட்டலாம்.

## நா

**நாகசுரம்**

நாதஸ்வரம் என்ற இசைக்கருவி.

**நாட்காட்டி**

ஓர் ஆண்டின் மாதங்கள், வாரத்தின் கிழமைகள், தேதிகள் ஆகியவற்றைக் காட்டும் குறிப்புத் தொகுதி (calender).

**நாட்குறிப்பு**

நாள்தோறும் எழுதப்படும் குறிப்பு நாட்குறிப்பாகும் (Diary).

**நாட்டு நிலப்படம்**

குறிப்பிட்ட ஒரு நாட்டின் படங்கள், மாநிலங்கள், வானிலை ஆகியவற்றைக் காட்டுவது (country atlas).

**நாட்டுப்பனை**

பனைமரங்களில் நாட்டுப்பனை (Borasus Flabellifer / Palmyra) ஒன்று. தென்னிந்தியாவில் இது அதிகமாக வளர்கிறது. இந்த ஓலைகள் மிகவும் தடிமனாகவும் நீளம் குறைந்தும் காணப்படும். இவ்வகைப் பனைமரங்களின் ஓலைகள் 4 செ.மீ. முதல் 6 செ.மீ. வரை அகலமும் 60 செ.மீ. முதல் 90 செ.மீ. வரை நீளமும் உள்ளதாக இருக்கும்.

**நாணய வழக்கு**

பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓலை ஆவணங்களில் கம்பெனியாரின் நாணய வழக்கே குறிக்கப் பட்டுள்ளன. ரூபாய், கும்பினி ரூபாய், கும்பினி செலாவணி, கும்பினி அரும்பு, கும்பினியார் வழங்கும் வெள்ளிப்பணம் என்பன அவற்றுள் சில.

**நாணல்குச்சி**

கி.மு. 2,000 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்தியர் நைல் நதிக்கரையில் விளையும் பேபரைஸ் புல்லின் நாணல் குச்சி (Reed) களால் இலைச்சாறு, விலங்குகளின் இரத்தம் ஆகியவற்றைக் கொண்டு எழுதியுள்ளனர்.

**நாராசம்**

ஏடுகளில் உள்ள துளைகளில் கயிறிட்டுச் சேர்த்துச் சுவடியாக்கப்படும்.

நூல் அல்லது கயிறு நழுவி விழுந்து விடாமல் தடுக்கக் கயிற்றின் மேற்பக்கம் பனையோலையின் ஈர்க்கத் துண்டையோ அல்லது சோழியையோ அல்லது துளை செய்யப்பட்ட செப்புக் காசையோ கட்டுவ துண்டு. சுவடி பெரிய அளவில் இருந்தால் இரு துளையிடப்பட்ட ஓலைகளில் இடப் பக்கம் நூல்கயிறு கோர்த்தும் வலப்பக்கம் மெல்லிய குச்சியைச் செருகியும் சுவடி தொய்வடையாமல் காக்கப்படுகிறது. குச்சிக்குப் பதில் பித்தளை அல்லது இரும்பாலான கம்பியையும் பயன்படுத்துவ துண்டு. இந்தக் குச்சி அல்லது கம்பிக்கு நாராசம் என்று பெயர்.

**நாழி**

அளக்கும் ஒரு படி.

**நாழிகை**

கால அளவு. 60 விநாடி கொண்ட கால அளவு.

**நாளிதழ்**

நாள்தோறும் நாட்டில் நிகழும் நடப்புச் செய்திகளை வெளியிடும் இதழ்.

**நாளோலை**

முகூர்த்த ஓலை.

## நி

**நிகழ்ச்சிக் குறிப்பேடுகள்**

கூட்ட நடவடிக்கைக் குறிப்பு (Minutes book).

**நிசான்**

கொடி (flag).

**நிசிந்**

நிசிந்தே – குமாஸ்தா போன்ற அலுவலர், சத்திர அலுவலர்.

**நிபந்தங்கள்**

மன்னர்கள் தாங்கள் எடுப்பித்த கோயில்களின் நாள் வழிபாடு, திங்கள் விழாக்கள், ஆண்டுவிழாக்கள் நடைபெறு வதற்காகப் பொன், பொருள், நிலங்கள் போன்றவற்றை வழங்கினர். இவை நிபந்தங்கள் எனப்பட்டன.

**நிம்மதி-துப்பது**

ஓர் அலுவலர்.

**நியமன ஆணை**

பதவியில் ஒருவரை அமர்த்தும் அலுவலகக் கடிதம் (appointment order).

**நியமனக்குழு**

பதவியில் அமர்த்தம் செய்வதற்குத் தேர்வு செய்யும் ஒன்றுக்கும் மேற்பட்டோர் உள்ள குழு (appointment committee).

**நியமனம்**

ஒரு பதவியில் அமர்த்தும் பணி நியமன ஆணை (appointment).

**நியாயகர்த்தர்**

நியாயாதிபதி, நீதிபதி (Judge).

**நியாயப் பத்திரம்**

வழக்குத் தீர்ப்பு ஏடு (Judgement register).

**நிர்வாக அதிகாரப் பத்திரம்**

குறிப்பிட்ட நபர் ஒருவரின் ஒரு சொத்தை நிர்வகிக்க வேறு ஒருவருக்கு அதிகாரம் அளிக்கும் ஆவணம்.

**நிருபம்**

கடிதம் (letter).

**நிருவாக உரிமை ஆவணம்**

சொத்துள்ள ஒருவர் உயிலின்றியோ நிறைவேற்றாளர் எவரையும் நியமிக்காமலோ இறந்துவிட்டால், அதிகார வரம்புடைய நீதிமன்றம் தக்க ஆள் ஒருவருக்கு நிருவாக உரிமைச் சீட்டு வழங்கும். அவ்வாறு வழங்கப்பட்டவர் நிறைவேற்றாளரைப் போன்று அதிகாரங்களையும் பொறுப்புகளையும் பெறுகின்றார். இது நிருவாகப் பத்திரம் எனவும் வழங்கப்படும்.

**நிருவாகப் பத்திரம்**

காண்க : நிருவாக உரிமை ஆவணம்.

**நில அளவை**

நிலம், மனை போன்றவற்றை அளந்து மதிப்பிடுதல் (survey).

**நில அளவை எண்**

நிலம், மனை போன்றவற்றை அளந்து எண்ணிடுதல் (survey number).

**நில அளவைக் கருவிகள்**

நிலம், மனை போன்றவற்றை அளப்பதற்குரிய கருவிகள் (survey instruments).

**நில அளவையர்**

நிலம், மனை போன்றவற்றை அளப்பவர் (surveyor).

**நில எல்லைக் குறிகள்**

நிலம், மனை போன்றவற்றை அளந்து மதிப்பிட்டு அவற்றின் எல்லைகளைக் குறித்தல் (survey marks).

**நிலக்கிழார்**

நிலவரி செலுத்துவதற்குப் பொறுப்புடைய நில உரிமையாளர், அதிகமான நிலங்களை வைத்திருப்போர் (land holder).

**நிலக்குத்தகை**

குத்தகை முறையில் நிலத்தை அல்லது மனையை அனுபவித்தல் (land lease).

**நிலக் கையகப்படுத்துகை பற்றிய வழக்கு**

பொதுக் காரியத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலம் தொடர்பான வழக்கு (suit).

**நிலச் சேர்மானம்**

இயற்கை நிகழ்ச்சிகளின் காரணமாக நிலச் சேர்க்கையால் சொத்து சேருதல்.

**நிலச்சேர்வு**

காண்க : நிலச் சேர்மானம்.

**நிலச்சொத்து**

நிலத்திலுள்ள பாத்தியதையையும் விரிவான பொருளில் ஒருவருடைய எல்லா வகையான பாத்தியங்களையும் உட்படுத்தும் ஒருவரின் அசையாப்பொருள், அசைபொருள் மற்றும் பல்வகைச் செல்வங்களையும் ஒருசேரக் குறிக்கும்.

**நிலப்படத்தாள்**

நிலப்படத்தை வரைவதற்குரிய தாள்.

**நிலப்படம்**

உலகம், நாடு, நகரம் ஆகியவற்றின் விவரங்களைக் காட்டும் படம் (map, atlas). குறிப்பிட்ட அளவுகோலில் பூமிப்

பகுதியின் இயற்பியல், அரசியல் கூறுகளைப் பாகுபடுத்திக் காட்டும் வகையில் வரைந்த படம்.

**நிலப்படம் வரைபவர்**

உலகம், நாடு, நகரம் ஆகியவற்றின் படங்களை வரைகின்றவர் (cartographer).

**நிலப்பதிவணம்**

நிலப்பதிவேடு (land record).

**நிலவரி**

நிலத்திற்குச் செலுத்தப்படும் வரி (land tax).

**நிலவரி நீக்கம்**

நிலத்திற்குச் செலுத்தப்படும் வரியை நீக்குதல்.

**நில வருமானம்**

நிலங்கள் மீது வரி விதித்து அரசு ஈட்டும் நிலவரி வருமானம் (land revenue).

**நிலவியல் நிலப்படம்**

ஒரு நிலப்பரப்பில் பாறைகள் மண் அமைப்புகள் ஆகிய புவியியற் கூறுகளைக் காட்டுவது.

**நிலவிலையாவணம்**

காண்க : அறுதிக் கிரயம்.

**நிலுவை**

பாக்கி (arrear).

**நிலுவைக் கோரிக்கை**

நிலுவைத் தொகையைக் கேட்டல்.

**நிலுவைத் தண்டல்**

வரவேண்டிய பாக்கித் தொகையை வசூலித்தல்.

**நிலுவைப்பட்டி**

வரவேண்டிய பாக்கித் தொகைக்குரிய பட்டியல் (arrear bill).

**நிலுவைப் பட்டியல்**

வரவேண்டிய பாக்கித் தொகைக்குரியவர்களின் பட்டியல்.

**நிலுவை பற்றிய புள்ளி விவரம்**

வரவேண்டிய பாக்கித் தொகைக்குரிய புள்ளி விவரப் பட்டியல்.

**நிலை ஆவணப் பதிவேடு**

நிலையாக எப்பொழுதும் இருக்கும் வகையில் ஆவணங்கள், சுவடிகள் போன்றவை யாவும் பதியப்படும் பதிவேடு.

**நிழல் எழுத்தாளர்**

வேறொருவருக்காக மறைமுகமாக எழுதும் எழுத்தாளர் (ghost writer).

**நிழல் சுயசரிதை**

தம் வாழ்க்கை வரலாற்றை மற்றொருவரைக் கொண்டு எழுதுவித்துத் தாமே எழுதியதாக வெளியிடுவது (ghost autobiography).

**நிழற்பட ஏடு**

படங்கள் அடங்கிய ஏடு.

**நிறுத்தற் குறிகள்**

சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைப் பதிப்பிக்கும்பொழுது கையாளப்பட வேண்டிய குறிகளுள் ஒன்று.

**நிறுவனம்**

காண்க : இலாகா, துறை (institute).

**நிறைகோல்**

ஓர் அளவு. காண்க : துலாம்.

**நிறைவேறிய ஒப்பந்தம்**

முழுவதும் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம்.

**நின்று நின்று சுழலும் பொறி**

அச்சியந்திர வகைகளுள் ஒன்று.

**நினைவுக் குறிப்புகள்**

ஒருவர் தம் சொந்த வாழ்வில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகளையும், கண்ட சிறந்த மனிதர்களையும் நினைவு கூர்ந்து எழுதிய செய்திகளின் தொகுப்பு நினைவுக் குறிப்புகளாகும் (Memoirs).

**நினைவுரை**

காண்க : உரிமையுரை.

**நிஷ்கர்சை**

உறுதி (Assurance).

**நிஷ்பத்தி**

உதவியாளர் (Assistant).

## நீ

**நீட்டலளவை**

ஓர் அளவை (long measure).

**நீட்டு**

காண்க : நீட்டோலை.

**நீட்டோலை**

அரசனுடைய ஆணை தாங்கிய ஓலை நீட்டோலை எனப்பட்டது. அழகிய பாண்டிய புரம் பெரிய வீட்டு முதலியார் ஓலைகளில் திருவிதாங்கூர் அரசரின் அரசாணைகள் நீட்டு எனக் குறிக்கப்பட்டது. காண்க : நெட்டோலை.

**நீத்தார் நினைவுக்கடன்**

காண்க : உத்திரகிரியை (funeral rites).

**நீதிமன்றம்**

சட்டமுறைப்படி நீதி வழங்கும் மன்றம் (court).

**நீர் புகாத காகிதம்**

வழவழப்பாகவும் ஒளி கசியும் தன்மை உடையதாகவும் இருக்கும். ஈரத்தைத் தடுக்கும் தன்மையுண்டு. நீரை உறிஞ்சாது.

**நீர்வளம் ஏடு**

கிராமத்தின் பாய்ச்சல் ஆதாரங்களின் நீர் வரவு செலவு இருப்பு விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு.

## நு

**நுண்கிருமி நீக்கப் பேழை**

நுண்ணிய கிருமிகளால் பாதிப் படைந்த சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றை நுண்கிருமி நீக்கப் பேழை (Fumigation chamber) மூலம் நீக்கப் படுகின்றன. பெரும்பாலும் சுவடிக் காப்பகங்களில் இதன் பயன்பாடு பெருமளவில் உள்ளது.

**நுண்நிழற்படம்**

சுவடிகள், ஆவணங்கள் முதலானவற்றை நுண் நிழற்படம் (Microfilm) எடுத்து அவற்றைப் பாதுகாத்து வருகின்றனர்.

**நுண்படச்சுருள்**

இதுவும் ஓர் ஆவணமாகும்.

பல்லாயிரக்கணக்கான சுவடிகள் மற்றும் ஆவணங்களை நுண்படச்சுருள் (Microfilm) மூலம் பாதுகாக்கலாம். இதனால் இடவசதி பெரிய அளவில்-தவிர்க்கப்படும்.

## நூ

**நூல்**

ஆசிரியருடைய படைப்பு. புத்தகம் எனவும் அழைக்கப்படும். புத்தகக் கட்டமைப்புப் பொருள்களுள் ஒன்று. சுவடியும் நூல் (book) என்றே அழைக்கப் படுகிறது.

**நூல் அடுக்குத் தட்டு**

நூல்களை வரிசையாக அடுக்கும் தட்டு (book rack). இது மரத்திலும் எஃகிலும் செய்யப்பட்டிருக்கும்.

**நூல் உருவாக்கம்**

நூல்களை எழுதுவோர், பதிப்பு செம்மை செய்வோர், அச்சிடுவோர், வெளியிடுவோர் ஆகியோர் மேற்கொள் கின்ற உழைப்பினால் நூல்கள் அழகிய வடிவம் பெறுகின்றன.

**நூல் கட்டுபவர்**

நூல்களைக் கட்டமைப்புச் செய்பவர் (book binder).

**நூல்களும் படிவங்களும்**

அச்சடித்த நூல்களும் படிவங்களும் (books and forms).

**நூல் திரட்டாளர்**

பலருடைய கவிதை, சிறுகதை, கட்டுரை போன்றவற்றைத் தேர்ந் தெடுத்துத் தொகுத்து வெளியிடும் பணியைச் செய்பவர் நூல் திரட்டாளர் (Anthologist) எனப்படுவார்.

**நூல் தொகுப்பாளர்**

ஆய்வுக்கு அல்லது சுவடிப் பதிப்புக் குப் பயன்பட்ட நூல்களின் பட்டியலை அகரவரிசையில் தொகுக்கின்றவர் (bibliographer).

**நூல் மதிப்புரை**

நூல்களைத் திறனாய்வு அடிப்படை யில் மதிப்பிடுதல் (book review).

**நூல் விவர அட்டவணை**

நூல்களின் முழு விவரமும் அடங்கிய பட்டியல் (bibliography).

**நூல் விற்பனை உரிமை ஒப்பந்தம்**

நூல்களை விற்பனை செய்வதற்கு நூலைப் பதிப்பித்தவர் விற்பனை செய்யும் நிறுவனத்தோடு ஒப்பந்தம் செய்து கொள்ளுதல்.

**நூல் வெளியிடுதல்**

நூல் பதிப்பினைத் தயாரிப்பதற்கு உரிய செலவை ஏற்பவர் வெளியிடுபவராக இருப்பார். வெளியிடுதல் என்பது நூலை வெளியிட்டுச் செலவை ஏற்றல் எனப் பொருள்படும். பதிப்பித்தல் என்பது நூலின் பதிப்புத் தயாரிப்புப் பணி எனலாம். அத்தயாரிப்பிற்குரிய செலவை ஏற்பவர் வெளியிடுபவராக இருப்பார். நூல் வெளியிடுதலில் பதிப்பித்தல் அடங்கு மாயினும் நூல் வெளியிடுதல் என்பதே பதிப்பித்தல் என்பதாகாது. பதிப்பித்தல் என்பதில் பல்வேறு கூறுகளை உடைய பணிகளும் வெளியிடுதல் என்பதில் பல்வேறு கூறுகளை உடைய பணிகளும் தனித்தனியே செய்யப்பெற வேண்டியன வாகும்.

**நூல் வெளியீட்டு எண்**

பெரிய வெளியீட்டு நிறுவனங்கள்

தாங்கள் வெளியிடும் நூல்களுக்கு வெளியீட்டு எண்கள் தருவதுண்டு.

**நூல்களுக்கான பதிப்பு முறை**

நூல்களை வெளியிடுவதற்கென்று உள்ள முறை.

**நூலகச் சட்டவிதி**

மைய அரசின் 1954ஆம் ஆண்டுப் பொது நூலக விநியோகச் சட்டப்படி (book act) இந்தியாவில் வெளியிடுகின்ற எந்த வகையான வெளியீட்டகமும் தாங்கள் வெளியிடும் நூல்களில் இலவசமாகத் தேசியப் பொது நூலகம் (கோல்கத்தா), கன்னிமரா பொது நூலகம் (சென்னை), மைய நூலகம் (மும்பை), பொது நூலகம் (புதுதில்லி), நாடாளுமன்ற நூலகம் (புதுதில்லி) ஆகிய நூலகங்களுக்கு ஒவ்வொரு பிரதியை அனுப்ப வேண்டும். அனுப்பத் தவறுவது சட்டப்படிக் குற்றமாகக் கருதப்படும். 1867ஆம் ஆண்டு அச்சகம் மற்றும் நூல் பதிவுச் சட்டப்படித் தமிழ் நூல்களை வெளியிடுகின்றவர்கள் ஒவ்வொரு நூலிலும் இரண்டு பிரதிகளைப் புத்தகப் பதிவாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**நூலகப் பதிப்பு**

காண்க : விலையுயர்ந்த பதிப்பு.

**நூலகர்**

நூலகத்தின் பொறுப்பாளர் (librarian).

**நூலாசிரியர்**

நூல் எழுதுபவர் (author).

**நூற் கட்டுநர்**

நூல்களை முறையாகக் கட்டமைப்புச் செய்பவர் (Binder).

**நூற் பதிப்பாசிரியர்**

சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைச் சரி பார்த்து நூல் வடிவில் பதிப்பித்து வெளியிடுபவர் (editor). அந்த நூலைப் பொறுத்த அளவில் இவர்தான் முழுப் பொறுப்புக்குரியவர்.

**நூற்பதிப்பில் சுருக்கம்**

மூல நூலின் அளவைச் சுருக்கிக் குறைந்த பக்கங்களில் செறிவாகத் தருதல்.

**நூற் பதிவாளர்**

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் நூல்களைப் பதிவு செய்வதற்கென்று நியமிக்கப்பட்டுள்ளவர் (Registrar of books).

**நூற் பதிவு**

மைய அரசின் சட்டப்படி இந்தியாவில் வெளியாகும் நூல்களைப் பதிவு செய்தல்.

**நூன்முகம்**

காண்க : முன்னுரை (preface).

## நெ

**நெகிழ்ச்சியுள்ள கட்டமைப்பு**

சாதாரண செக்சன் தையல் முறையில் இடைவெளி ஓரளவு வருமாறும் இடைவெளியே இல்லாமலும் அமையும் கட்டமைப்பு நெகிழ்ச்சியுள்ள கட்டமைப்பு (Flexible binding) ஆகும். இக் கட்டமைப்பில் எளிதில் புத்தகத்தைத் தட்டையாக விரித்துப் படிக்க முடியும்.

**நெகிழ்வட்டு**

தற்காலத்தில் சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றை நெகிழ்

வட்டில் (Floppy) பதிவு செய்து பாதுகாத்து வருகின்றனர்.

**நெட்டெழுத்து**

எழுதிய ஓலை எழுத்துக்களுக்குப் பெயர், பெயர் முழுவதும் அடங்கிய கையெழுத்து. செப்பேடுகளுக்கு மூல ஓலைகள் எழுதப்பட்டதையும் நெட்டெழுத்து எழுதுதல் என்று குறித்துள்ளனர். சில ஆவணங்களில் கையெழுத்தும் நெட்டெழுத்து என்று கூறப்பட்டுள்ளது.

**நெட்டோலை**

நெட்டெழுத்து எழுதப்பட்ட ஓலை நெட்டோலை ஆகி அது நீட்டோலை ஆகியிருக்கலாம்.

**நெடுங்கணக்கு**

அகரவரிசையில் அமைப்பது நெடுங்கணக்கு (Alphabet) ஆகும்.

**நெடுங்கணக்குப் புத்தகம்**

காண்க : அரிச்சுவடி.

**நெல் இலக்கம்**

எண்சுவடியிலுள்ள வாய்பாடுகளில் நெல் இலக்கம் என்பதும் ஒன்று.

## நே

**நேயர் படிவம்**

துல்லியமான நகல் நேயர் படிவம் (Facsimile) ஆகும்.

**நேர்நிலைச் சான்று**

சான்றினால் மெய்ப்பிக்கப்படும் நிகழ்மை தீர்வுதரு நிகழ்மையாகவோ மெய்ப்பிக்க வேண்டிய நிகழ்மையாகவோ அமையுமானால் அச்சான்று நேர்முகச் சான்று எனப்படும்.

## நொ

**நொடிப்புநிலைச் சான்றிதழ்**

கடனை முழுவதும் அடைப்பதற்குரிய சான்றிதழ்.

## நோ

**நோட்டேபாண்டு**

கடனை எந்தக் காலம் என்று குறிப்பிடாமல் எப்போது வேண்டுமானாலும் கொடுப்பது.

## ப

**பக்கச் சொல்**

காண்க : முதனிலைப் புகை (puff).

**பக்க புரூப்.**

காலியில் வரி, இடைவெளி, தலைப்பு போன்றவற்றை ஒழுங்கு செய்து பக்க எண்கள் கொடுக்கப்பட்டு அதன் பிறகு எடுக்கப்படும் மெய்ப்பு (page proof).

**பக்க மேல் தலைப்பு**

நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் மேல் பகுதியில் காணப்படும் தலைப்பு. இது இருவேறு நிலைகளில் அமையும். 1. வலதுபக்க மேல் தலைப்பில் இயல் பெயரும், இடதுபக்க மேல் தலைப்பில் நூற்பெயரும் அமையும். 2. இடதுபக்க மேல் தலைப்பில் நூற்பெயரும், வலதுபக்க மேல் தலைப்பில் நூலாசிரியர் பெயர் அல்லது பதிப்பாசிரியர் பெயர் போன்றவற்றைத் தருதலும் உண்டு.

**பகுக்கப்பட்ட வணிக விவர நூல்**

பல்வேறு தொழில்கள், வியாபாரங்கள் ஆகியவற்றைத் தலைப்புக்களாக்கி அவ்வவற்றில் ஈடுபட்டுள்ளோருடைய

விவரங்களைத் தொகுத்து முழுப் பட்டியல் நூலாக்கித் தருவது.

**பங்கு மாலை ஏடு**

கிராமத்தின் காணியாட்சிக்காரர்களுக்கு உள்ள பங்கு விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு.

**பச்சிலை**

மை தயாரிக்கப் பயன்பட்ட பொருள்களுள் ஒன்று.

**பச்சோலை**

ஓலை வகைகளில் ஒன்று.

**பசலி**

'பசல்' என்பது அரபுச் சொல். 'விளைவு', 'விளைச்சல்' என்ற பொருள் உடையது. எனவே 'பசலி' (fusli) என்பது விளைச்சல் ஆண்டைக் குறிக்கும். கி.பி. 591இல் கலீப் உம்மார் என்பார் இந்த ஆண்டு வரிசையைத் தொடங்கி வைத்தார்.

**பசை**

சுவடிகளைப் பழுது பார்ப்பதற்கும், நூல்களைக் கட்டமைப்புச் செய்வதற்கும் பயன்படும். சாதாரணப் பசை, வச்சிரம், பெவிகால் என்று பசைகளில் (adhesive, glue) பல வகைகள் உண்டு.

**பஞ்சகவ்வியம்**

பசு நெய், தயிர், பால், கோமூத்திரம், கோமயம் (சாணி) ஆகிய ஐந்து பொருள்கள் பஞ்சகவ்வியம் எனப்படும்.

**பட்டடை**

பலவகைத் தொழில் செய்யும் இடம்.

**பட்டா**

'பட்டா' (patta) என்பது உருது மொழிச் சொல். நபர் ஒருவரைக் குறிப்பிட்ட நிலத்தின் சொந்தக்காரராக ஏற்றுள்ளதையும், அவர் செலுத்த வேண்டிய வரித் தொகையையும் காட்டும் அரசு ஆவணம். அது ஒருவர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நபர்கள் பெயரில் இருக்கலாம்.

**பட்டுத்துணி**

சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைக் கட்டமைப்புச் செய்வதற்குரிய பொருள்களுள் ஒன்று. இத்துணி(silk cloth)யையும் சுவடியாகப் பயன்படுத்தி உள்ளனர்.

**பட்டுவாடா**

கொடுத்தல் (Distribution).

**பட்டோலை**

கிராமக் கணக்கில் பதியும் ஓலை.

**பட்டோலை கொள்ளுதல்**

புலவர்கள் சொல்லச் சொல்ல, அவர்களிடம் பயின்ற மாணவர் எவரேனும் கேட்டு ஏட்டில் பதிவு செய்தல்.

**பட அச்சு**

அச்சுத் தொழிலில் மரத்திலோ, கல்லிலோ, உலோகத்திலோ செதுக்கப்பட்ட வடிவம். நூலின் பொருளுக்கும் தேவைக்கு வசதிக்கும் ஏற்பப் பல பட அச்சுகள் (Blocks) பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**பட (ங்கள்) நூல்நிலையம்**

ஓவியங்கள், நிழற்படங்கள், கோட்டுப் படங்கள் போன்றவற்றைத் தொகுத்துப் பாதுகாத்து வைக்குமிடம்.

**படம் வரையும் அட்டைத்தாள்**

உறுதியாக உள்ள இத்தாளின் மேற்பரப்பு சுரசுரப்பாய் இருக்கும். ஓவியர்கள்

இத்தாளைப் படம் வரைவதற்குப் பயன் படுத்துவர்.

**படலப்பதிப்பு**

மாதத்திற்கு ஒரு படலமாகவோ, இரண்டு மாதத்திற்கு ஒரு படலமாகவோ அச்சிட்டுச் சந்தாதாரர்களுக்கு அனுப்புவது.

**படி**

மூலப்படிவத்தின் நகல் (Copy).

**படி எடுதாள்**

மிகவும் இலேசான, மெல்லிய தாள் (Manifolding, stencil paper).

**படி எடுப்பவர்**

காண்க : எழுத்தர் (copyist).

**படி ஓலை**

மூல ஓலையின் நகல் (duplicate document).

**படிச்சுவடி**

காண்க : படிபெருக்கிச் சுவடி.

**படிபெருக்கிச் சுவடி**

மூலப்படிவத்திலிருந்து நகல் எடுத்த சுவடி.

**படிமைகள்**

காண்க : பட அச்சு (blocks).

**படியோலை**

மூல ஓலையிலிருந்து படி எடுத்த ஓலை.

**படுக்கா**

ஒருவகை அணிகலன்.

**படையல்**

காண்க : உரிமையுரை.

**படையல் உரை**

நூலாசிரியர் அந்நூலைப் படையலாக, காணிக்கையாகச் செலுத்துவதற்குரிய உரை. உரைநடை அல்லது பாடலாக இது அமையும்.

**பண்டமாற்று முறை**

சில வகையான பண்டங்களைக் கொடுத்து அவற்றிற்குப் பதிலாக வேறு பண்டங்களைப் பெற்றுக் கொள்தல்.

**பண்முறைப் பதிப்பு**

மூவர் அருளிய பதிகங்களில் அமைந்துள்ள பண்களை வகைப்படுத்தி, ஒவ்வொரு பண்ணுக்கும் உரிய பதிகங் களைக் கட்டளை விகற்பத்துக்கு இயைய நிரலே தொகுத்து வகைப்படுத்திய முறை பண்முறை எனப்படும். இதுவே பழைய முறையாகும். பாராயணம் செய்வதற்கும் இப்பண்முறையையே கொள்வது மரபு. பழைய ஏட்டுச் சுவடிகளுள் இப் பண் முறையே இடம்பெற்றுள்ளது. பண் அடிப் படையில் தேவாரங்களைப் பதிப்பித்தல் பண்முறைப் பதிப்பு ஆகும்.

**பணத்தாள்**

காகிதத்தால் செய்த நாணயம் (note).

**பணமதிப்பு**

இடத்திற்கேற்பப் பணமதிப்பு இருந்ததை ஆவணங்களில் காண முடிகின்றது. திருநெல்வேலி – 10 துட்டு (40 சல்லி, 20 காசு); தஞ்சாவூர், இராம னாதபுரம் – ½ துட்டு (30 சல்லி, 15 காசு); திருச்சிராப்பள்ளி – 6 துட்டு (24 சல்லி, 12 காசு); சென்னை – 3¾ துட்டு (15 சல்லி,

7½ காசு); திருவிதாங்கூர் – 4 சக்கரம் (24 சல்லி, 12 காசு).

சல்லி = காசு; 4 சல்லி = 1 துட்டு; 1 சல்லி = ¼ துட்டு; 2 சல்லி = ½ துட்டு; 3 சல்லி = ¾ துட்டு.

**பணிப் பதிவேடு**

ஒப்படைக்கப்படும் பணிகளைப் பதிவு செய்யும் ஏடு (service book).

**பத்திரம்**

காண்க : ஆவணம், முத்திரை ஓலை.

**பத்திராதிபர்**

காண்க : பதிப்பாசிரியர் (editor).

**பத்திரிகை ஆசிரியர்**

நாள், வார, மாத இதழ்களை வெளியிடுபவர் (editor).

**பத்திரிகைத் தாள்**

நாள், வார, மாத இதழ்களை வெளியிடுவதற்குரிய தாள் (newsprint).

**பத்துச் சீட்டு**

சாகுபடிக் குத்தகைப் பத்திரம். பற்றுச் சீட்டு (receipt) எனவும் அழைக்கப்படும். காண்க : இரசீது.

**பத்தை**

அட்டை (board) எனவும் அழைக்கப்படும். ஓலைச்சுவடிகளைக் கட்டி வைக்க, பாதுகாக்க மூங்கில் பத்தைகளைப் பிற பலகைகளைப் பயன்படுத்தியது போல அச்சிட்ட காகிதத் தொகுப்பைப் பாது காக்கக் கெட்டியான இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட அட்டைகளைப் பயன் படுத்துவதுண்டு.

**பதக்கஞ்ச**

பதக் என்ற ஊர்களின் ஒன்றியங் களைக் கவனிக்கும் அலுவலர்.

**பதக்கத்தார்**

கண்காணிப்பாளர் (Superintendent).

**பதவுரை**

பலவகை உரைகளுள் பதவுரை (Commentary) ஒன்றாகும். பாடலில் இடம்பெற்ற சொல்லுக்குச் சொல் உரை கூறுதல்.

**பதிப்பாசிரியர்**

பதிப்பு உருவாக்கம் பதிப்புச் செம்மை செய்பவர் பதிப்பாசிரியர் (editor) ஆவார். பதிப்பித்தல் பணியைச் செய்பவர் பதிப்பாசிரியர். சுவடி பெயர்த்து எழுதுவது முதல் நூல் அச்சிட்டு வெளிவரும் வரை உள்ள அனைத்துப் பணிகளையும் மேற் கொள்ள வேண்டிய பதிப்பாசிரியர் பொறுப்பாகும். இவர் பதிப்பு நெறிமுறை களையும், அச்சுப்பணி பற்றிய விவரங் களையும் நன்கு அறிந்து வைத்திருத்தல் வேண்டும். பல்துறை அறிவும், பன்மொழிப் புலமையும் பெற்றிருப்பின் பதிப்பாசிரியர் பணிநிலைக்குப் பெருமை சேர்ப்பதாக அமையும். பத்திராதிபர் எனவும் அழைக்கப் பெறுதலுண்டு.

**பதிப்பாளர்**

நூல்களை வெளியிடும் நிறுவனத் தின் உரிமையாளரைக் குறிக்கும் (Publisher).

**பதிப்பித்தல்**

பதிப்பு உருவாக்கம் செய்து அச்சிட்டு வெளியிடுதல் பதிப்பித்தல் (Editing) எனப்படும். பதிப்புக்கு உள்ளாகும் நூலை

நோக்கிப் பதிப்பு என்றும் நூல் உருவாக்கப் பணியினை நோக்கிப் பதிப்பித்தல் என்றும் கூறுவர். பதிப்பித்தல் என்பது ஒரு நூலின் மூல எழுத்தான்மை வடிவத்திற்கு ஏற்ற முறையில் ஏட்டை உருவாக்குதல்.

**பதிப்பு**

பதிப்பு உருவாக்கம் செய்து அச்சிடப் பட்ட நூல் பதிப்பு (edition) எனப்படும். ஒரு புத்தகமாக வெளிவரும் பிரதிகள் எத்தனையானாலும் அவை ஒரு பதிப்பு என்று வழங்குவாரும் உளர்.

**பதிப்பு உருவாக்கம்**

பதிப்பு நெறிமுறைகளைப் பயன் படுத்திச் செப்பம் செய்து நூலாக உருவாக்குதல் அல்லது தொகுத்தல் பதிப்பு உருவாக்கம் எனப்படும்.

**பதிப்புத்துறை**

பல்கலைக்கழகங்களில் பதிப்புத் துறை (Publication devision) என்ற பெயரில் நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

**பதிப்பு நெறிமுறை**

பதிப்புப் பணியின் தன்மைகளைப் பகுத்துரைப்பது பதிப்பு நெறிமுறை (editing methodology)யாகும். இது பதிப்பாசிரியரின் பணி நிலையாகும். பதிப்பு உருவாக்கம் செய்வதற்கு மேற்கொண்ட நெறிமுறைகள் என்று விளக்கம் தரலாம். நூற்பதிப்பு, பதிப்புப்பணி என்னும் நிலைகளில் செய்யப்படும் ஆய்வுகள் பதிப்பாசிரியரின் பதிப்பு நெறிமுறைகளை வெளிக்கொணர்வதாய் அமையும்.

**பதிப்புப்பணி**

நூல் பதிப்பு நோக்கிச் செய்யும் பணிகள் அனைத்தும் பதிப்புப் பணியாகும். பதிப்புப்பணி என்பதை நூல் உருவாக்கப் பணி என்றும் கூறலாம். இப்பணிகளை மேற்கொள்பவரே பதிப்பாசிரியர் ஆவார்.

**பதிப்புரிமை**

ஏடு, படம், பாடல், நாடகம் முதலிய வற்றை ஆக்கிய மூல முதல்வருக்கு அல்லது அவரது ஆட்பேருக்கு அதை அச்சிட்டு வெளியிட்டு விற்பனை செய்யவோ பாடவோ ஒலிப்பதிவு செய்யவோ நடிக்கவோ திரைப்படமாக்கவோ குறிப்பிட்ட ஆண்டு அளவுக்குச் சட்டம் அளிக்கும் தனியுரிமை பதிப்புரிமை (Copyright)யாகும். இது அவருக்குள்ள தனிப் பயனீட்டுரிமையாகும். வெளியீட்டுரிமை எனவும் வழங்கப்படும். அதாவது இயல், இசை, நாடக மூல நூல்களைக் குறித்து எதையும் செய்யும் தனியுரிமை. இது 1957ஆம் ஆண்டு இந்தியப் பதிப்புரிமைச் சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டதாகும். நியாயமான சில காரணங்களுக்காக ஒரு நூலின் பகுதியை எடுத்தாள்வதை இச் சட்டத்தின் ஒரு பிரிவு அனுமதிக்கிறது. பொது மக்களுக்கு நடப்பு நிகழ்ச்சியைச் சுட்டுதல், இலக்கியத் திறனாய்வு, நூல் மதிப்புரை, பள்ளிகளுக்கான புத்தகத்தில் மூல நூலிலிருந்து மேற்கோள் காட்டுதல் என்பன நியாயமான அக்காரணங்களாகும். ஆயினும், நன்றியுரையில் அல்லது துணை நூற்பட்டியலில் நூலாசிரியருடைய பெயரையும் நூலையும் குறிப்பிடுதல் வேண்டும் என்று விதி வகுக்கப்பட்டது. இவை பதிப்புரிமை மீறலாகமாட்டா.

**பதிப்புரிமைப் பக்கம்**

நூலின் தலைப்புப் பக்கத்தை அடுத்து அமைவது பதிப்புரிமைப் பக்க மாகும். நூலின் தலைப்பு, உள்ளடக்கம், நூலாசிரியர், நூல் வெளியீட்டாளர் முகவரி, பதிப்புரிமை, நூல் வெளியீட்டு எண், பதிப்பு விவரம், மொழி, பொருள், வெளியிட்ட

ஆண்டு, பயன்படுத்திய தாள், நூலின் அளவு, அச்செழுத்தின் அளவு, அச்சிட்ட நூல் பிரதிகளின் எண்ணிக்கை, நூலின் மொத்தப் பக்கங்கள், விலை, அச்சிட்டோர் போன்ற புத்தகத் தன் விவரக் குறிப்புகள், நூலகக் குறியீட்டு எண், பன்னாட்டுத் தரப்புத்தக எண் ஆகியவையும் பதிப்புரிமைப் பக்கத்தில் இடம்பெறும்.

**பதிப்புரிமை மீறல்**

பிறருடைய படைப்புகளை அவருடைய அனுமதி இல்லாமல் கையாளுவது பதிப்புரிமை மீறலாகும் (Breach of copyright).

**பதிப்புரை**

நூற்பதிப்புப் பணிகளை மேற்கொண்ட பதிப்பாசிரியர் எழுதும் உரை பதிப்புரை (editor's note) எனப்படும். இது நூல் முகப்பில் இடம்பெறும். சுவடி அல்லது நூலைப் பதிப்பித்து வெளியிடும் பொழுது அச் சுவடியின் அல்லது நூலின் வரலாறு, பதிப்பிக்கும்பொழுது ஆசிரியருக்கு நேர்ந்த சிக்கல்கள், ஏடுகளின் விவரங்கள், ஆசிரியர் செய்துள்ள மாற்றங்கள் முதலியவற்றை விரிவான முறையில் எழுதுதல். மேலும் அச்சுவடி அல்லது நூலைப் பதிப்பிக்க நேர்ந்த சூழல், அதில் இடம்பெறும் பொருள், அமைப்பு, போக்கு, பயன், நன்றியுரை போன்றவற்றை இப்பகுதியில் கூறுவதுண்டு.

**பதிவணப் பாதுகாப்பறை**

ஆவணங்களைப் பாதுகாக்கும் அறை (record room).

**பதிவணப் பொறுப்பாளர்**

ஆவணங்களைப் பாதுகாக்கும் அலுவலர் (record keeper).

**பதிவணம்**

ஆவணம் (record).

**பதிவு அறை**

ஆவணங்கள் இருக்கும் அறை (record room).

**பதிவு செய்தல்**

ஆவணங்கள், சுவடிகள், கடிதங்கள் போன்றவற்றைப் பதிவு செய்தல் (registration).

**பதிவு செய்யப்பட்ட ஆவணம்**

பதிவேட்டில் பதிவு செய்த ஆவணம்.

**பதிவுத்துறை அரசிதழ்**

அரசின் சார்பில் வெளியிடப்படும் இதழ்.

**பதிவுத்துறைத் தாள்**

விற்பனை, ஒப்பந்தம், இறுதி விருப்ப ஆவணம் (உயில்) முதலிய சட்ட பூர்வமான வற்றை எழுதப் பயன்படும் பருமனான அழுத்தமான தாள். நீதிமன்றத்திற்குகந்த தாள் (judicature paper).

**பதிவுரு**

ஆவணம் (record).

**பதிவுரு எழுத்தர்**

அலுவலகத்தில் அல்லது ஆவணக் காப்பகத்தில் கோப்புகளை, ஆவணங் களைப் பராமரிக்கும் பணியில் இருப்பவர் (record clerk).

**பதிவுருக்களைக் கோத்து வைத்தல்**

ஆவணங்களை முறைப்படிக் கோத்து வைத்தல்.

**பதிவுருக்களைக் கோருதல்**

தேவைப்படும் ஆவணங்களைக் கேட்டல்.

**பதிவுருப் பெட்டி**

ஆவணங்கள் பாதுகாப்பாக வைக்கப்படும் அட்டைப்பெட்டி (record box).

**பதிவுரு வழங்கு பதிவேடு**

வழங்கப்படும் ஆவணங்களைப் பதிவு செய்யும் ஏடு (record issue register).

**பதிவேடு**

ஆவணங்களைப் பதிவு செய்யும் ஏடு.

**பதிவேடுகள் நூலகம்**

பதிவேடுகளைத் தொகுத்துப் பாது காத்து வைக்குமிடம்.

**பந்தர்**

கடற்கரைப் பட்டணம் என்பது பொருள்.

**பயணக் குறிப்புகள்**

ஒருவர் தாம் சென்று வந்த நாட்டைப் பற்றியும் சந்தித்த மக்களைப் பற்றியும் எழுதி வைத்த குறிப்புகள் பயணக் குறிப்புகள் (Traveller's accounts / book).

**பயண வழிகாட்டி நூல்**

ஒருவர் தாம் மேற்கொள்ளும் பயணத்திற்குத் தேவையான விவரங்களை யும் பயணம் செல்லத்தக்க வழிகளையும் கூறுவது (guide book of journey).

**பயிரிடத்தக்க நிலம்**

பயிர் செய்யத்தக்க வகையில் உள்ள நிலம்.

**பர்வானா**

இது உருது மொழிச் சொல்லாகும். எழுதப்பட்ட உத்தரவு என்பது பொருள்.

**பர்ஸ்ட் கட்டமைப்பு**

அடுக்கிக் கொள்ளப்பட்ட மடிப்பு களின் முதுகுப் பக்கத்தில் அரத்தைக் கொண்டு அராவிச் சிறு பள்ளங்களை (kerfs) உருவாக்குவர். அதன்பிறகு அந்தப் பள்ள வரிசையில் வலிய பசையைத் தடவுவர். பள்ளங்களிலும் கீற்றிலும் பசை நன்கு தங்கும். பின்பு மேலட்டையுடன் ஒட்டுவத னால் கட்டமைப்பு உறுதியாக இருக்கும். இது பர்ஸ்ட் கட்டமைப்பு (burst binding) எனப்படும்.

**பரங்கி**

ஐரோப்பியரைக் (European) குறிக்கும் சொல்.

**பராபவ**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் நாற்பதாவது ஆண்டு.

**பரிகரித்தல்**

மாற்றிக் கொள்ளுதல் (exchange).

**பரிசாரகர்**

கோயிற் பணியாள் (servant in a temple) , சமையற்காரர்.

**பரிசுப் பதிப்பு**

காண்க : விலையுயர்ந்த பதிப்பு.

**பரிதாபி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் நாற்பத்தாறாவது ஆண்டு.

**பரிமாற்றம்**

காண்க : பரிவர்த்தனை.

**பரியம்**

திருமணத்து முன்னர்ப் பெண்ணை மணமகனுக்கு உறுதி செய்து நடைபெறும் நிகழ்ச்சி.

**பரிவர்த்தனை**

தங்கள் சொத்துரிமைகளை இருவர், ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்ளுதல், மாற்றிக் கொள்ளப்படும் பொருள்கள் இரண்டுமே அவற்றில் ஒன்று பணமாக இருத்தல் கூடாது. இது பரிமாற்றம் (exchange) எனப்படும்.

**பரிவர்த்தனைப் பத்திரம்**

தமது வசதிக்குத் தகுந்தவாறு தம்முடைய சொத்துக்களை ஒருவருக் கொருவர் மாற்றிக் கொள்வதற்கான ஆவணம் பரிவர்த்தனைப் பத்திரமாகும் (Exchange deed).

**பரிவாரம்**

படை.

**பரிஷ்காரம்**

சோதனை செய்தல் (adorning).

**பருத்தித்துணி**

பருத்தித்துணிகள் சுவடிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பருமனான தாள்**

சிறுவர் நூல்கள் வெளியிடப் பயன் படும் கனமான தாள் (bulky paper).

**பருவ இதழ்கள்**

காலமுறைப்படி வெளியிடப்படும் இதழ்கள் (periodicals).

**பலகைச் சுவடி**

பலகையில் எழுதப்படும் சுவடிகள் (wooden manuscripts). இதில் எழுதப்பட்ட கையெழுத்துச் சுவடிகளுக்குக் கோடக்ஸ் (codex) என்று பெயர். சரசுவதி மகால் நூலகத்தில் பலகையில் வரையப் பெற்ற ஓவியங்கள் பாதுகாத்து வைக்கப் பட்டுள்ளன.

**பலமொழி அகரநிரல்**

காண்க : அகராதி.

**பவ**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் எட்டாவது ஆண்டு.

**பவுஞ்சுகள்**

சேனைகள்.

**பவுஜ்தார்**

நாடதிகாரி, சேனாதிபதி (General, Military leader).

**பழஞ்சுவடி**

பழைய சுவடி.

**பழந்தாள் அறை**

ஆவணங்களைப் பாதுகாத்து வைக்கும் அறை (record room).

**பழுது பார்க்கும் கையேடு**

ஓர் இயந்திரம் பழுதடைந்து விட்டால் அதைச் சீர்படுத்துவதற்கு வழிகளைக் காட்டி உதவும் ஏடு.

**பழைய ஆவணம்**

காண்க : தொன்மை ஆவணம் (ancient document).

**பழைய உரை**

காலத்தால் முந்திய உரை.

**பழைய பதிப்பு**

சுவடி வேறு, அச்சு நூல் வேறு என்று பிரித்து அறியமுடியாத அமைப்பை உடையது (old edition).

**பள்ளிகோவில்**

மசூதி.

**பள்ளிவாசல்**

இசுலாமியர் தொழுகை இடம் பள்ளிவாசல் (Mosque) எனப்படும்.

**பளபளப்பான ஆர்ட் தாள்**

சீனக் களிமண்ணால் ஒருபுறம் மட்டும் அல்லது இருபுறமும் மூடப்படுவது ஆப்டோன் படங்கள் அச்சிடுவதற்கு ஏற்றது (coated art paper).

**பற்றுச் சீட்டு**

காண்க : பத்துச்சீட்டு (receipt). தரப்பெற்ற தொன்றைப் பற்றிக் கொண்டதற்கு அடையாளமாகக் கொடுக்கப்படும் சீட்டு.

**பற்றுமுறி**

தொகையைப் பெற்றுக் கொண்டவர் பற்றுச் சீட்டாக எழுதி வழங்கும் ஒலைத் துணுக்கு.

**பன்மொழிப் பதிப்பு**

மூலம் ஒரு பகுதியிலும் அதன் எதிரே அதன் மொழிபெயர்ப்புகள் வெவ்வேறு மொழிகளிலும் வர அமைவது பன்மொழிப் பதிப்பு (polygot edition). பன்மொழிப் பதிப்பு முறையில் வெளியிடப்பட்ட முதல் நூல் பைபிள். இன்று பைபிள் 850 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது.

**பன்னாட்டுத் தரப்புத்தக எண்**

காண்க : உலக வெளியீட்டு எண் (ISBN).

**பனையோலை**

காண்க : கல்.

**பஸலி (பசலி)**

ஆண்டு (fusli). உருதுமொழிச் சொல்.

## பா

**பாக்கி**

மீதி (balance).

**பாக்சிமிலி**

அச்சிட்ட அல்லது கையால் எழுதிய பக்கங்களையோ படங்களையோ நிழற் படங்களையோ மின்னணுக்கருவியின் மூலமாக ஒரிடத்திலிருந்து வேறோரிடத் திற்கு அனுப்புதல் (Facscimile-Fax). உருவ நேர் வடிவம் என்பது இதன் நேர் பொருளாகும்.

**பாகப் பத்திரம்**

இந்துச் சட்டப்படி, கூட்டுக் குடும்பச் சொத்தில் பங்குரிமையாளரின் பங்கினை வரையறுத்தலையும், பகுத்துப் பிரித்தலை யும் குறிக்கும் ஆவணம் ஆகும் (partition deed).

**பாகப்பிரிவினை ஆவணம்**

காண்க : பாகப் பத்திரம்.

**பாச்சான்**

பேச்சுவழக்குச் சொல். காண்க : கரப்பான்பூச்சி.

**பாடத்திருத்தம்**

சுவடிகளைப் பதிப்பிக்கும்பொழுது ஐயத்தோடு ஒப்புக்கொள்ளும் நிலையில் பாடத்திருத்தம் (Emendation) நிகழ்கின்றது. நூலின் அகச்சான்று கொண்டு, ஐயத்திற்கிடமான பாடத்தை ஒரெழுத்து மாற்றுதலால் மூலத்தினுடைய ஒழுங்கு தவறாமல் புலப்படும் என்றால் மட்டுமே திருத்த வேண்டும். அத்திருத்தம் புறச்சான்றினாலும் வலிமை பெற வேண்டும்.

**பாடநிர்ணயம்**

ஓர் ஏட்டில் சரியான பாடத்தைத் தேர்வு செய்வதற்கும், பாடத்தை உறுதிப்படுத்துவதற்கும் யாப்பறிவு மிகமிகத் தேவையாகும்.

**பாடபேதம்**

காண்க : பாடவேறுபாடு.

**பாடம்**

பாடம் (text) என்பது மூல பாடத்தைக் குறிக்கும். இப்பாடம் ஓர் எழுத்தாகவோ, ஒரு சொல்லாகவோ கூட இருக்கலாம்.

**பாடம் செய்தல்**

காண்க : ஏடு பதப்படுத்துதல்.

**பாடவேறுபாடு**

ஒரு சொல்லுக்கு மாற்றாகப் பொருளிலும் ஓசையமைப்பிலும் ஒத்த சொற்கள் வருதல் (variants). சான்று : கோளரி மாதவன் > கோளரி வாமனன்.

ஒரு சொல்லில் காலப்போக்கில் காணப்படும் உருமாற்றம் வடிவ வேறுபாடு ஆகும். பல்வேறு சுவடிகளுக்கிடையே உள்ள வேறுபாடு சுவடி வேறுபாடு ஆகும். பாடபேதம், பிரதிபேதம் என்பன வடமொழிச் சொற்கள். அவற்றிற்கு இணையான தமிழ்ச் சொற்களே பாடவேறுபாடு, வடிவ வேறுபாடு, சுவடி வேறுபாடு ஆகும்.

**பாண்ட் தாள்**

சதுர மீட்டருக்கு 50 கிராம் எடையுள்ள, மெல்லிய, வழவழப்பான உயர் தாள் (bond paper). கடிதத்தாள், ஆய்வேடுகள் ஆகியவற்றுக்குப் பெரும்பாலும் இத்தாள் பயன்படுத்தப்படுவதுண்டு.

**பாதிரியார்**

பாதிரி என்பது போர்த்துக்கீசியச் சொல். கத்தோலிக்கக் குரு என்பது பொருள்.

**பாத்தியஸ்தர்**

உரிமையாளர்.

**பாயிசாயபு**

தஞ்சை மராத்திய மன்னர் கடைசி சிவாஜியின் மனைவியர்.

**பாயிரம்**

காண்க : அணிந்துரை (prologue).

**பார்த்திப**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் பத்தொன்பதாவது ஆண்டு.

**பார்வைக் குறிப்பு நூல்கள்**

அடிப்படைத் தகவல்களைத் தரும் நூல்கள் (reference books). சான்று : கலைக்களஞ்சியம், அகராதி போல்வன.

**பார்வை நூல்**

அடிப்படைத் தகவல்களைத் தரும் நூல் (reference book).

**பார்வை நூலகம்**

இந்நூலகத்திலுள்ள (reference library) நூல்களை வெளியில் எடுத்துச் சென்று படிக்க முடியாது. அங்கேயே அமர்ந்து நூல்களைப் படித்துக் குறிப்பு எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**பார்வையாளர் குறிப்பேடு**

சுவடிகள், ஆவணங்கள் போன்ற வற்றை ஆவணக் காப்பகங்களில் பார்வை யிட்டோர் எழுதி வைக்கும் குறிப்பேடு (visitor's book).

**பார அடையாளம்**

காண்க : மடிப்புக் குறிப்பு (designation mark).

**பாரா**

காவல் (guard).

**பாரா டை குளோரோ பென்சீன்**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவை யான வேதிமப் பொருள்களுள் பாரா டை குளோரோ பென்சீன் (Para dichloro benzene) என்பதும் ஒன்று.

**பாராக்காரன்**

காவலாளி (watchman).

**பாராட்டுரை**

காண்க : அணிந்துரை.

**பாராட்டு விரிவுரை**

காண்க : புகழுரை (praise).

**பாராயணப் பதிப்பு**

பாடல்களை மனனம் செய்வதற் கேற்ற வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களைப் பதிப்பிப்பது. பெரும்பாலும் சமய இலக்கியங்களில் அதாவது திருமுறைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட பாடல்களின் தொகுப்பு. இவற்றை நாள்தோறும் பாராயணம் செய்வது வழக்கம்.

**பாரிடா தாள்**

அச்சியந்திரங்களில் ஏற்றுவதற்கு முன்பு சரி பார்க்கப்படும் கடைசி மெய்ப்பை எடுப்பதற்குப் பயன்படும் உயர்ந்த தர மெய்ப்புத்தாள் (barita paper).

**பாலபாடம்**

காண்க : அரிச்சுவடி.

**பாலி**

கி.பி. 591 முதல் தொடங்குவதும் 1555ஆம் ஆண்டு அக்பரால் ஏற்படுத்தப் பட்டதுமான ஆண்டு முறை.

**பாலித்தீன் பை**

இக்காலத்தில் சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைப் பாதுகாப் பதற்குப் பாலித்தீன் பைகள் பெருமளவில் பயன்பட்டு வருகின்றன.

## பி

**பிங்கள**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் ஐம்பத்தொன்றாவது ஆண்டு.

**பிசானம்**

தை மற்றும் மாசி மாதங்களில் நெல் அறுவடை செய்யப்படும் காலம்.

**பிடிபாட்டு ஓலை**

கொடைச் செய்திகள் எழுதப்படும் ஓலை.

**பிடிபாடுத் தீட்டு**

ஆதாரமாக எழுதித் தரும் உறுதிச்

சீட்டு (உத்திரவாதச் சீட்டு) பிடிபாடுத் தீட்டு (security deed) எனப்படும்.

**பிடுத்துக்கீசு**

போர்த்துக்கீஸ் என்பது பொருள்.

**பிணை மனு**

காண்க : பிணை விண்ணப்பம் (bail petition).

**பிணை முறி**

குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது கைதியின் வருகைக்காக எழுதிக் கொடுக்கப்பட்ட பிணை ஆவணம் (security bond). ஜாமீன் பத்திரம் (bail bond) எனவும் கூறப்படும்.

**பிணையாள்**

கடப்பாடு ஒன்றை நிறைவேற்ற வேண்டிய ஒருவர், அதைச் செய்யத் தவறினால், தாமே அதை நிறைவேற்றுவதாகத் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்பவர்.

**பிணை விண்ணப்பம்**

கைதானவரையோ சிறையிடப்பட்டவரையோ வேண்டும் போது முன்னிலையாகுமாறு விடுக்கும் விண்ணப்பம் (bail application).

**பித்திகையின் முகை**

பித்திகையின் முகையை எழுத்தாணியாகக் கொண்டு தாழம்பூவில் மாதவி எழுதினாள்.

**பித்துசாம்**

பெட்டிசன் என்ற பிரெஞ்சுச் சொல். விண்ணப்பம், மனு.

**பிர்க்கா**

பகுதி, வட்டத்தின் பல பகுதிகளில் ஒன்று பிர்க்கா (Firka)வாகும். பிர்க்கா என்பது இந்துஸ்தானிச் சொல்லாகும்.

**பிரசங்கி**

சொற்பொழிவாளர் (Orator).

**பிரசித்த கடிதம்**

அறிக்கை (notice).

**பிரசோற்பத்தி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் ஐந்தாவது ஆண்டு.

**பிரதி**

முதன் முறையாக எழுதப்படும் பிரதி.

**பிரதி செய்யும் வழக்கம்**

உ.வே. சாமிநாதையர் பாடல்களை ஏட்டில் பிரதி செய்யும் வழக்கமுடையவராக இருந்தார்.

**பிரதிபேதம்**

காண்க : சுவடி வேறுபாடு (variant).

**பிரதிமை**

படிவம் (Form).

**பிரதியாளர்**

மெய்ப்புத் திருத்தம் செய்யும் பொழுது இருவர் சேர்ந்து திருத்துவது நல்லது. இந்நிலையில் ஒருவர் மூலத்தை வாய்விட்டுப் படிக்க, மற்றொருவர் மெய்ப்பைத் திருத்துவார். மூலத்தைப் படிப்பவர் பிரதியாளர் (copy holder) என்றும், அடுத்தவர் திருத்துபவர் என்றும் வழங்கப் பெறுவர்.

**பிரபவ**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் முதலாண்டாக வருவது.

**பிரபவாச் சுவடி**

ஆண்டுகள், மாதங்கள், விண்மீன்கள், யோகம், கரணம், இராகு காலம், குளிகை காலம், எமகண்டம் போன்ற சோதிடம் தொடர்பான செய்திகள் அடங்கிய சுவடிக்குப் பிரபவாச்சுவடி என்று பெயர். பிரபவாதிச் சுவடி எனவும் அழைக்கப்படும்.

**பிரபவாதிச் சுவடி**

காண்க : பிரபவாச் சுவடி.

**பிரமாண இசைவுச் சீட்டு**

விற்பவர் வாங்குபவர் ஆகிய இருவரும் விலையை உறுதி செய்து, கிரயத்தை ஒப்புக்கொண்டதற்குரிய சான்றாக இருவரும் சேர்ந்து எழுதிக் கொள்ளும் உடன்படிக்கை உறுதிச்சீட்டு (agreement).

**பிரமாண பத்திரம்**

உறுதிமொழி.

**பிரமாதி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் பதின்மூன்றாவது ஆண்டு.

**பிரமாதீச**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் நாற்பத்தேழாவது ஆண்டு.

**பிரமோதூத**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் நான்காவது ஆண்டு.

**பிரவுன் தாள்**

புத்தகம், நோட்டிற்கு உறையாகப் போடப்படும் தாள். 'பிரவுன்' (brown) என்பது ஆங்கிலச் சொல்.

**பிராது**

முறையீட்டு விண்ணப்பம். பிராது (petition, complaint) என்பது உருது மொழிச் சொல்.

**பிராமிசரி நோட்டு**

'Promissory note' என்பது ஆங்கிலச் சொல். இது வாக்குறுதிக் கடன் பத்திரத்தைக் குறிக்கும்.

**பிரிடின்**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் பிரிடின் (Pyridine) என்பதும் ஒன்று.

**பிரிண்டர்**

அச்சுக் கோத்த செய்திகளை அல்லது கணினியில் தட்டச்சு செய்த பகுதிகளை அச்சுருவில் வெளிக்கொணரும் ஓர் அச்சியந்திரம். 'பிரிண்டர்' (Printer) என்பது ஆங்கிலச் சொல்லாகும்.

**பிரெஞ்சு இந்தியக் கழகம்**

புதுச்சேரியில் இந்நிறுவனம் அமைந்துள்ளது. ஆய்வுக்குத் தேவைப்படும் நூல்கள், ஆவணங்கள், படங்கள், நிழற்படங்கள், நிலப்படங்கள் முதலானவை இந்நிறுவனத்தில் சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. சுவடிகளில் இருந்து பல நூல்களாக வெளியிடப்பட்டு வரும் பணியையும் இந்நிறுவனம் (French Institute of Indology) செய்து வருகிறது.

**பிரெஞ்சு மடிப்பு**

தாளின் ஒருபுறம் மட்டுமே அச்சிடப்படுவதும், பின்னர் இருமுறை மடிக்கப்படுவதுமாகிய மெல்லிய அட்டைப் பிரசுரம் (french folding). சான்று : மருந்து விலைப்பட்டியல், திருமண அழைப்பிதழ், வாழ்த்து மடல்.

**பிரெஞ்சு மூட்டு இடைவெளிக் கட்டமைப்பு**

காண்க : மூட்டு இடைவெளிக் கட்டமைப்பு.

**பிரைசி**

நாணலை எழுதுகோலாகக் கொண்டு மரப்பட்டையில் எழுதுவதுண்டு. மிகத் தொன்மையான சுவடியாகப் பிரைசி (Prisse) எனும் சுவடி காணப்படுகிறது. காண்க : மரப்பட்டைச் சுவடி.

**பிரைசி-தி-அவென்னஸ்**

தீப்ஸ் என்ற இடத்திலிருந்து பிரைசி எனும் சுவடியைப் பிரைசி–தி–அவென்னஸ் (Prisse d' Avennes) என்பவர் கண்டு பிடித்ததால் அவருடைய பெயரால் இச்சுவடி அழைக்கப்படுகிறது.

**பிலவ**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் முப்பத்தைந்தாவது ஆண்டு.

**பிலவங்க**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் நாற்பத்தொன்றாவது ஆண்டு.

**பிழை**

காண்க : தவறு (error).

**பிழை திருத்தம்**

ஆசிரியரோ அச்சிடுபவரோ நூல் அச்சாகும்போது பாராமல் அச்சு வேலை முடிந்த பின்பு கண்டுபிடிக்கும் பிழைகளை அவற்றின் திருத்தத்தோடு நூலின் ஒரு பகுதியில் அச்சிடுதல் (errata, corri-genda). பக்க எண், பிழை வடிவம், திருந்திய வடிவம் என இப்பகுதி அமையும்.

**பிழைபாடு**

ஓலைச்சுவடிகளில் காணப்படும் பிழைபாடுகள். இவை அதிக அளவில் காணப்பெறும்.

**பிழையற்ற பதிப்பு**

எவ்விதப் பிழைகளும் இல்லாமல் சுவடிகளைப் பதிப்பித்தல்.

**பிள்ளை உடன்படிக்கைச் சீட்டு**

தத்து மகனாகக் கொடுத்து அதற்காக எழுதிக் கொடுத்த உடன் படிக்கைச் சீட்டுக்குப் பிள்ளை உடன் படிக்கைச் சீட்டு என்று பெயர்.

**பிளாக்கு அச்சுமுறை**

இருவகை அச்சுமுறைகளுள் ஒன்று. அச்சிட வேண்டிய ஓவியத்தைக் கையினால், மரக்கட்டையின் மேல் செதுக்குவர். வேலைப்பாடுகள் நிறைந்த ஓவியங்களைச் செதுக்குக் கட்டையில் செப்புத் தகட்டைப் பதித்துக் கொண்டு அதன்மீது எழுதுவது வழக்கம் (block process). இது மெதுவாக நடக்கும் முறையாகும். இன்றும் சிலவகை வேலைகளுக்கு இம்முறையைப் பயன்படுத்தி வருகின்றனர். காண்க : காலிக்கோ அச்சுமுறை.

**பிற்குறிப்பு**

அச்சு நூல்களின் தொடக்க காலத்தில் இம்முறை (imprint) இருந்தது. நூற் பெயர், வெளியிடுவோர் முகவரி, அச்சிடுவோர் முகவரி, படங்கள் வரைந்தவர் என்ற விவரங்களும் வெளியிடுவோர் முத்திரையும் இப்பகுதியில் இடம்பெற்றன.

**பிற்சேர்க்கை**

நூலின் இறுதியில் சேர்க்கப்படும் பகுதிகள் (appendix, annex).

**பின் இணைப்பு**

நூலின் தேவைக்கேற்ப அதன் இறுதியில் சேர்க்கப்படும் பகுதிகள் (appendix).

**பிஸ்தோல்**

பிரெஞ்சு மொழிச் சொல். கைத் துப்பாக்கி என்பது பொருள்.

## பீ

**பீப்பாய் அச்சுப்பொறி**

அச்சுப்பொறி வகைகளுள் ஒன்று (drum press).

## பு

**புகழுரை**

புத்தகம் பற்றிய வெளியீட்டாளரது பாராட்டு புகழுரையாகும் (blurb). புத்தகப் பின் அட்டையின் மீதுள்ள வெளியீட்டு விளம்பரமும் இப்பெயர் பெறும். புத்தகத் தை வெளியிடுபவர், நூலாசிரியரையோ புத்தகத்தையோ புகழ்ந்து அறிமுகப் படுத்தி, நூலின் பின் அட்டையிலோ அட்டை உறையின் உள்மடிப்புத் தாள்களி லோ சிறுகுறிப்பு எழுதுவது இது. இம்முறை நூல் விற்பனைக்கு உதவும்.

**புகழுரை எழுதுபவர்**

நூலை வெளியிடுபவர் எழுதுவது. விளம்பர நிறுவனங்களில் இதற்கென எழுத்தாளர்கள் உண்டு. அணிந்துரையி லிருந்து வேறுபட்ட இப்புகழுரையை எழுது வதற்கென்று (blub writer) சிலர் உள்ளனர்.

**புகைக்கரி**

மை தயாரிக்கப் பயன்பட்ட பொருள் களுள் ஒன்று.

**புகையூட்டுதல்**

புத்தகப் புழுக்கள், புத்தகப் பேன்கள் புகையூட்டுதல் (fumigation) மூலம் நீக்கப்படுகின்றன.

**புகையூட்டும் கூண்டு**

ஆவணப் பாதுகாப்பிற்குத் தேவை யான பொருள்களுள் ஒன்று. காண்க : நுண்கிருமிநீக்கப்பேழை (fumigation chamber).

**புத்தக உறுப்பு**

புத்தகத்தின் முன் அட்டைக்கும், பின் அட்டைக்கும் இடையே உள்ள உறுப்புகள் புத்தக உறுப்புகள் எனப்படும்.

**புத்தக உறை**

காண்க : மேலட்டை உறை (book jacket).

**புத்தகக் கட்டமைப்பு**

காண்க : கட்டமைப்பு (book binding).

**புத்தகக் கட்டடம்**

காண்க : கட்டமைப்பு (book binding).

**புத்தகக் கட்டுமானம்**

காண்க : கட்டமைப்பு (book binding).

**புத்தகக் கவளி**

பல சுவடிகள் சேர்ந்த கட்டு கவளி அல்லது புத்தகக் கவளி எனப்படும்.

**புத்தகப் பதிவு**

இதுவும் ஓர் ஆவணமாகும்.

**புத்தகப் புழுக்கள்**

சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைப் பாழ்படுத்தும் புழுக்கள் (book worms).

**புத்தகப் பேன்கள்**

சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைப் பாழ்படுத்தும் பேன்கள் (book lice) மிகச் சிறியவையாகும். இவை தாவரம் மற்றும் விலங்கினங்களிலிருந்து பெறப்பட்ட பொருள்களில் வளரும் தன்மை உடையவை. இவை சுவடிகள், நூல்கள், நிழற்படங்கள், நீர் வண்ணங்கள் மற்றும் தாள்களை அரித்து உண்கின்றன. பிசின், பசை ஆகியவை இதன் உணவுப் பொருள்களாகும்.

**புத்தகம்**

காண்க : நூல், சுவடி.

**புத்தகம் கட்டுநர்**

புத்தகத்தைக் கட்டமைப்புச் செய்பவர் (binder).

**புத்தக மேலட்டை**

புத்தகத்திற்குச் சட்டை போன்று மேலாகப் போடப்படும் அட்டை (book cover).

**புத்தக விவரக் குறிப்புகள்**

காண்க : பதிப்புரிமைப் பக்கம் (bibliographical data).

**புத்தக விவரத் தொகுப்பு**

புத்தகங்களின் முழு விவரங்கள் அடங்கிய தொகுப்பு (bibliography). இது ஆசிரியர் அல்லது நூல் தலைப்பு அகரவரிசையில் அமையும்.

**புத்தக விற்பனையாளர்**

நூல்களை விற்பனை செய்பவர் (book-seller) அல்லது நிறுவனம்.

**புரவலர் உரை**

சுவடிகளைப் பிரதி செய்பவருக்கு மாத ஊதியம் அல்லது அவரது வாழ்க்கைச் செலவுத் தொகையைப் புரவலர்கள் வழங்குவர். சிலர் நூல் வெளிவருவதற்குப் பொருளுதவி செய்வர். இவ்வாறு பொருளுதவி செய்த அச்செல்வருடைய பெயருக்கு அந்நூலை உரிமையாக்கி எழுதுவது புரவலர் உரை (patron word) எனப்பட்டது.

**புலவர்முறைப் பதிப்பு**

ஒரு புலவரின் பாட்டு பல தொகைகளில் இருந்தால் அவற்றை ஒரிடத்தில் தொகுத்து வெளியிடுவது. ச. வையாபுரிப் பிள்ளை பதிப்பித்த சங்க இலக்கியம் இப்புலவர்முறைப் பதிப்புக்குச் சான்றாகும்.

**புற இதழ்**

காண்க : அக இதழ்.

**புறஊதாக்கதிர் விளக்கு**

ஆவணப் பாதுகாப்பிற்குத் தேவையான கருவிகளுள் புறஊதாக்கதிர் விளக்கு (UV Lamp) என்பதும் ஒன்று.

**புறநிலைச் சான்று**

ஆவணம் ஒன்றின் வாசகத்தை விளக்கவோ மாற்றவோ எதிர்மறையாகக் காட்டவோ அந்த ஆவணத்தைத் தவிர்த்து வேறு வெளிச் சான்றுகளைக் கொண்டதற்குப் புறநிலைச் சான்று என்று பெயர்.

**புறவுரை**

காண்க : அணிந்துரை (preface).

**புறாக்கூட்டு முறை**

புறாக்கூட்டு முறையில் பழைய சுவடிகள் மறுசீரமைப்புச் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**புனைபெயர்**

எழுத்தாளர்களில் சிலர் தம் இயற்பெயருக்குப் பதிலாகக் கற்பனைப் பெயரைப் பயன்படுத்துவர். தாமே சூட்டிக் கொள்ளும் இப்பெயர் புனைபெயர் (Pen name) எனப்படும்.

## பூ

**பூச்சிக்கொல்லி**

சுவடிகள், ஆவணங்கள் முதலானவற்றைக் கரப்பான், எலி, அணில், அந்துப் பூச்சி, கரையான் போன்ற பூச்சிகளிலிருந்து பாதுகாத்தற் பொருட்டுப் பயன்படுத்தப் படும் பூச்சிக்கொல்லி (insecticide) மருந்துகள்.

**பூச்சிகளும் புழுக்களும்**

அந்துப்பூச்சி, புத்தகப் புழுக்கள், புத்தகப் பேன்கள் போன்றவை ஆவணங் களையும் சுவடிகளையும் புத்தகங்களையும் பாழ்படுத்துபவைகளாகும். பழங்காலத்தில் பூச்சிகளை அகற்றுவதற்குச் சிவப்பு அல்லது மஞ்சள்நிறத் துணியில் சுவடி களைக் கட்டி வைத்தனர். சிவப்புநிறத் துணி அனேகப் பூச்சிகளை விரட்டும் தன்மையுடையது. இக்காலத்தில் கற்பூரம், நஞ்சுள்ள தூள், சோடியம் புளோரைட் ஆகியவற்றால் பூச்சிகளையும்; புத்தகப் புழுக்கள், புத்தகப் பேன்கள் ஆகியவற்றைப் புகையூட்டுதல் மூலமும் நீக்குகின்றனர்.

**பூஞ்சைக்காளான்**

சுவடிகளைப் பாதிக்கும் உயிரியல் காரணிகளுள் ஒன்று. பழங்காலத்தில் காளான்களை அகற்றுவதற்குச் சிவப்பு அல்லது மஞ்சள்நிறத் துணியில் சுவடி களைக் கட்டி வைத்தனர். நவீன காலத்தில் சுவடிகளில் படிந்துள்ள பூஞ்சைக் காளான் (fungi)களைத் தைமல் புகையூட்டுதல் மூலம் நீக்குகின்றனர். இவை பல்வேறு நிறங்களில் காணப்படுகின்றன. இவை 63% முதல் 100% வரையிலான ஈரப்பதத் திலும் 15 முதல் 35° சென்டிகிரேடு வரையி லான வெப்பநிலையிலும் வளர்கின்றன.

**பூதக் கண்ணாடி**

சுவடிகள் மற்றும் ஆவணங்களில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களை இக் கண்ணாடியின் (magnifying glass) மூலம் தெளிவாகவும் விரைவாகவும் படிக்க இயலும்.

**பூர்ச்ச பத்திரம்**

காஸ்மீரத்தில் வளரும் பூர்ச்ச மரங்களின் பட்டையைச் சுவடியாகக் கொண்டு எழுதுதல்.

**பூர்ச்ச மரப்பட்டைச் சுவடி**

காஸ்மீரத்தில் வளரும் பூர்ச்ச மரங்களின் மரப்பட்டைகளில் எழுதப்படும் சுவடி பூர்ச்ச மரப்பட்டைச் சுவடி (birch bark manuscripts) எனப்படும். புத்த சமயத்தைச் சார்ந்த பல இலக்கியங்கள் பூர்ச்சமரப்பட்டைகளில் வடமொழியில் எழுதப்பட்டுள்ளன. காளிதாசர் எழுதிய குமார சம்பவம் எனும் நூலில் இச்சுவடி களைப் பற்றிய குறிப்புகள் காணப்படு கின்றன. கி.பி. 2 அல்லது 3ஆம் நூற்றாண்டில் பூர்ச்சமரப்பட்டையில் கரோஸ்தி எழுத்தில் எழுதப்பட்ட தம்மபதம் எனும் புத்த சமய நூலின் சுவடியே மிகத் தொன்மை வாய்ந்தது.

**பூர்ஜப்பட்டை**

காண்க : கல்.

**பூவராகன்**

நாற்பத்தைந்து பணம் கொண்டது ஒரு பூவராகன். (புலிவராகன்) புலி – அழகு படுத்தப்பட்ட என்ற பொருள் கொண்ட நாணயம். புலிவராகன் எனவும் அழைக்கப் படும்.

## பெ

**பெண்கள் இதழ்**

காண்க : மகளிர் இதழ் (Women's journal).

**பெத்லகேம் ஆலயத் தோட்டம்**

பொறையாற்றில் கி.பி. 1715இல் பெத்லகேம் ஆலயத் தோட்டத்தில் காகிதப் பட்டடை (Paper Mill) ஒன்று முதன்முதல் ஏற்படுத்தப்பட்டது.

**பெந்தகம்**

அடைமானம் (mortgage).

**பெயர் புலப்படாத ஆசிரியர்**

எழுதியவருடைய பெயர் இல்லாமல் வெளிவரும் நூல்களின் படைப்பாசிரியர் பெயர் புலப்படாத ஆசிரியர் (anonymous author) எனப்படுவார்.

**பெயர் விவரத்தாள் கற்றை**

ஒருவரின் பெயர், அவர் பெற்ற பட்டங்கள், பணிபுரியும் இடம், பதவி, முகவரி, இல்ல முகவரி, தொலைபேசி எண்கள் போன்றவற்றைக் கொண்ட தனித் தனித்தாள்கள் அடங்கிய ஏடு (letter pad).

**பெர்கமேனா**

ஆங்கில மொழிச் சொல்லாகும். தோலினால் செய்யப்பெற்ற எழுது பொருளுக்குப் பெர்கமேனா (Pergamena) என்று பெயர்.

**பெர்பெக்ட் கட்டமைப்பு**

குத்துத் தையல், செக்சன் தையல் ஆகியவை போலன்றி, தையலே இல்லாமல், அரத்தினால் புத்தகத்தின் முதுகை நன்கு அராவி ஒட்டுப் பசையைத் தடவிச் செய்வது பெர்பெக்ட் கட்டமைப்பு (perfect binding) எனப்படும். இது ஒட்டுப்பசைக் கட்டமைப்பு எனவும் கூறப்படும். குறைந்த நேரத்தில் பல பிரதிகளைக் கட்டமைப்புச் செய்வது இதன் சிறப்புத் தன்மையாகும்.

**பெருக்கல் வாய்பாடு**

காண்க : எண்சுவடி (multiplication table).

**பெரும்பொருள் விளக்கக் களஞ்சியம்**

ஆகராதியைப் போலவோ. கலைக் களஞ்சியத்தைப் போலவோ சொற்களை அகரவரிசையில் தொகுத்துப் பொருள் தருவதன்றி, பொருள்களின் தலைப்பு அடிப்படையில் சொற்களைத் தொகுத்து விளக்கங்கள் தருவது (thesaurus).

**பெறுகை ஒப்பம்**

ஆவணம், ஆணை, கடிதம் போன்ற வற்றைப் பெற்றுக் கொண்டதற்காக இடப்படும் கையெழுத்து (acknowledgement).

**பென்சீன்**

ஆவணப் பாதுகாப்புக்குத் தேவை யான வேதிமப் பொருள்களுள் பென்சீன் (Benzene) என்பதும் ஒன்று.

## பே

**பேட்டாவாய்**

'பட்டா' (patta) என்ற மராத்தியச் சொல். பணமாற்றுதலில் உள்ள வித்தியாசத் தொகை.

**பேப்பர்**

ஆங்கில மொழிச் சொல்லாகும். எழுதுவதற்கும் அச்சடிப்பதற்கும் பயன் படும் தாள், காகிதம் (paper).

**பேரம்**

இரு தரப்பினர்களிடையே உள்ள நடவடிக்கையில் ஒவ்வொருவருக்கு உள்ளவற்றையும் தீர்த்து வைத்து உடன்பாடு செய்வது.

**பேரேடு**

தனித்தனிப் பக்கத்தில் ஒவ்வொரு வருக்கும் அல்லது ஒவ்வொரு நிறுவனத் திற்கும் இடையே உள்ள விவரங்கள் அடங்கிய ஏடு (ledger).

**பேனாக்கத்தி**

மடக்கெழுத்தாணி என்பது பேனாக் கத்தி போன்று பிடியுள்ளதாகி ஒருபக்கம் ஓலை சீவும் கத்தியும், மறுபக்கம் எழுதும் கூர் ஆணியும் அமைக்கப்பட்டு மடக்கி வைக்கப்பட்டிருக்கும்.

**பேஷ்கஷ்**

பாரசீகச் சொல். முன்தொகையைக் குறிக்கும் (advance of money).

**பேஷ்கார்**

பாரசீகச் சொல். மேலாளர், வருவாய்த்துறை அலுவலரின் (revenue officer) கீழ்ப் பணிபுரிபவர்.

## பை

**பைசல்**

உருதுமொழிச் சொல். தீர்ப்பு (judgement, decision).

**பைபிள் பதிப்பு**

உலகின் எந்த மொழிகளிலும் பைபிள் போல அதிகமான பதிப்புப் பெற்றது வேறு எந்த நூலும் இல்லை. கி.பி. 1,500க்கு முன்பே பைபிளுக்கு 94 பதிப்புகள் (bible editions) வந்தன.

**பைமாஷ்**

உருதுமொழிச் சொல்.

**பைமாஷ் எண்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆங்கில துரைத்தனத்தாரால் இந்தியா விற்குச் செய்யப்பட்ட நிலஅளவு எண்.

**பையடக்கப் பதிப்பு**

சட்டைப் பையில் அல்லது கோட்டுப் பையில் வைத்துக் கொள்கின்ற அளவில் இருப்பவை பையடக்கப் பதிப்பாகும் (pocket edition). இதனைக் கையில் வைத்தே பிரித்துப் படிக்கும் அளவில் சிறியதாக இருப்பதனால் இதைக் கையடக்கப் பதிப்பு எனவும் அழைத்தனர்.

**பைல்கள்**

கோப்புகள் (files).

## பொ

**பொக்கிஷம்**

முத்திரை ஓலைகளில் பொக்கிஷம் (treasure) என்று பொறிப்பது வழக்கம்.

**பொத்தகக் கவளி**

காண்க : கவளி (bundle of books).

**பொத்தகம்**

காண்க : சுவடி (codex, book).

**பொது நூலக இயக்ககம்**

சென்னையில் தமிழக அரசின் கல்வித்துறையின்கீழ் இது அமைந்துள்ளது. இயக்குநர், துணை இயக்குநர், உதவி இயக்குநர் முதலான அலுவலர்கள் பணி செய்கின்றனர். நூலகங்களை ஒருங்கிணைக்கவும், புத்தகம் வாங்குவதை ஒழுங்குபடுத்தவும், நூலகங்களை விரிவு படுத்தவும் பொது நூலக இயக்ககம் (Directorate of Public Library) அமைக்கப்பட்டது. நூலகங்களுக்குப் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்தல், பிரதிகளின் எண்ணிக்கை, புத்தக விலை, விற்பனைக் கழிவு ஆகியவற்றை இது முடிவு செய்கிறது. நூல்களைத் தேர்ந்தெடுப்பதில் ஒரு வல்லுநர் குழுவின் ஆலோசனையை இவ்வியக்கம் பெற்றுச் செயல்படுகிறது.

**பொது மேரைக் கழிவு ஏடு**

மேல்வாரம் குடிவாரம் பிரிக்கப்படாத பொதுதானியத்தில் கிராம ஊழியர்கள் அறநிலையங்கள் ஆகியவற்றுக்கு வழங்கப்படும் மேரைத் தானிய அளவினைத் தெரிவிக்கும் ஏடு.

**பொய் ஆவணம்**

பொய்யாகப் புனைந்து உருவாக்கப்பட்ட ஆவணம் (false document, forge document).

**பொருளடக்கம்**

நூல் என்னென்ன செய்திகளைக் கூறுகின்றது என்பதைப் பக்க எண்களோடு தொகுத்துச் சுட்டும் இடம் பொருளடக்கமாகும் (content). இது உள்ளடக்கம், உள்ளுறை, உள்ளே, பொருளுரை, இப் புத்தகத்தில் அடங்கியன, உள் தலைப்புப் பட்டியல், அத்தியாய அட்டவணை போன்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றன. தொடக்க காலப் பதிப்புகளில் சூசி பத்திரம் என இதை வழங்கி வந்தனர்.

**பொருளுதவியுரை**

தமது நூலை வெளியிடப் பணவுதவி செய்த செல்வர், முழுப் பொறுப்பும் ஏற்று வெளியிடுபவர், ஆளுக்கொரு செலவாக ஏற்றுக்கொண்ட நண்பர்கள் ஆகியோரைத் தனியே ஒரு பக்கத்தில் குறிப்பது ஒரு வழக்கம். இது பொருளுதவியுரை எனப்படும்.

**பொருளுரை**

காண்க : பொருளடக்கம் (content).

**பொல்லாங்கு நீக்கிய பதிப்பு**

ஆபாசமான வகையிலோ சமுதாயத்துக்குத் தீமை பயக்கும் வகையிலோ சட்டத்திற்குப் புறம்பான வகையிலோ அமைந்துள்ள ஒரு நூலின் மூலத்திலிருந்து அத்தகைய சில பகுதிகளை நீக்கிய பின்பு வெளியிடுவது பொல்லாங்கு நீக்கிய பதிப்பு (Expurgated edition) எனப்படும்.

**பொழிப்புரை**

பலவகை உரைகளுள் பொழிப்புரையும் (commentary) ஒன்றாகும். பாடலுக்குத் திரண்ட முறையில் உரை கூறுதல்.

**பொறுப்பாசிரியர்**

புத்தகம் பத்திரிகை முதலியவற்றை

வெளியிடுவதில் நிர்வாகத்தைக் கவனிப்பவர் பொறுப்பாசிரியர் (Managing editor) ஆவார்.

**பொறுப்புத் தரும் பதிப்பாசிரியர்**

புதிய துறைகளில் அல்லது விற்பனையில் பெரிதும் எதிர்பார்க்கப்படும் துறைகளில் புத்தகங்கள் வெளியிடுவது பற்றிச் சிந்திப்பதும், அவ்வகை நூல்களை எழுதுவதற்கேற்ற ஆசிரியர்களைக் கண்டுபிடித்துப் பேசிப் புத்தகம் எழுதும் வேலையை ஒப்படைத்துப் பிரதியை எழுதி வாங்கித் தம் பதிப்பகத்திடம் ஒப்படைப்பதும் ஆகியனவற்றைச் செய்பவர் பொறுப்புத் தரும் பதிப்பாசிரியர் (Commissioning editor) எனப்படுகிறார்.

**பொன்னோலை**

தஞ்சாவூர் நாயக்கர் காலத் தங்கத் தகட்டுப் பொறிப்புக்குப் பொன்னோலை என்று பெயர்.

## போ

**போதகாசிரியர்**

பாடஞ் சொல்பவர் (Teacher).

**போதே மகால்**

அரசுப் பொருள் நிலையம் (Treasury).

**போலி ஆவணம்**

காண்க : போலிப் பத்திரம் (Forged document).

**போலித் தோல் கட்டமைப்பு**

தோல் போலத் தோன்றும் துணியைப் பயன்படுத்திக் கட்டமைப்புச் செய்வது.

**போலிப் பத்திரம்**

மெய் போலத் தோன்றும் மெய்யுரிமைப் பத்திரம்.

**போற்தாம்**

'Pardon' என்ற பிரெஞ்சுச் சொல். மன்னிப்புக் கேட்டல் என்பது பொருள்.

## ம

**மகசூல்**

பலன். ஒன்று பலவாதலே பயிர் செய்வதனால் ஆகும் பயன். விளைச்சலுக்குப் பலன் எனப்படும்.

**மகமை**

கோயிலுக்குக் கொடுக்கும் உதவித் தொகை. கோயில், சத்திரம் முதலியவற்றின் செலவுக்காக வசூலிக்கும் வரி.

**மகவளிப்பு**

காண்க : தத்துக் கொடுத்தல்.

**மகவேற்பு ஆவணம்**

ஒருவர் மற்றொருவரது ஆண் அல்லது பெண் குழந்தையைத் தம் வாரிசாகத் தத்து எடுத்தல் தொடர்பான ஆவணம் மகவேற்பு ஆவணம் (Adoption deed) எனப்படும்.

**மகவேற்பு எடுத்தல்**

ஒருவர் மற்றொருவரது ஆண் அல்லது பெண் குழந்தையைத் தம் வாரிசாகத் தத்து எடுத்தல்.

**மகளிர் இதழ்**

பெண்களைப் பற்றிய, பெண்களின் பிரச்சினைகளைப் பேசுகின்ற, சமுதாயத்

தில் பெண்கள் சிறப்பிடம் பெறவேண்டும் என்பதற்காக வெளியாகும் இதழ். பெண்கள் இதழ் எனவும் அழைக்கப்படும்.

**மங்கல வாசகம்**

சுவடிகள், ஆவணங்கள், சாசனங்கள் முதலில் மங்கலச் சொல்லில் தொடங்கப்பெறுவதுண்டு.

**மங்கலான தாள்**

நிறவகையில் மங்கிய ஒளியற்ற வகையில் தயாரிக்கப்படும் தாள்.

**மங்கள விலாசம்**

தஞ்சாவூர் மராத்திய மன்னர் கடைசி சிவாஜியின் காமக்கிழத்தியர் தங்கி இருந்த இடம்.

**மகம்தார்**

நிலவரிக் கணக்கு எழுதும் பெரிய அலுவலர்.

**மஞ்சள் கந்தகக் கல்**

மை தயாரிக்கப் பயன்பட்ட பொருள் களுள் ஒன்று.

**மஞ்சள் நீர் குடிப்பித்தல்**

குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்ளும் பொழுது அக்குழந்தைக்கு மஞ்சள் நீரைக் கொடுத்துக் குடிக்கச் செய்யும் சடங்கு.

**மஞ்சள் நீர்ச் சாசன முறி**

காண்க : மஞ்சள் நீர்ச் சீட்டு.

**மஞ்சள் நீர்ச் சீட்டு**

குழந்தையைத் தத்து எடுத்துக் கொண்டு எழுதிக் கொடுக்கும் ஆவணம். மஞ்சள் நீர்ச் சாசன முறி எனவும் அழைக்கப்படும்.

**மடக்கெழுத்தாணி**

காண்க : எழுத்தாணி. ஒரு முனை எழுதவும் மறுமுனை கத்தியாகப் பயன் படுத்தவும் அமைந்தது. இரு முனைகளை யும் மடக்கி இடையில் உள்ள ஒரு கைப் பிடியில் அடக்கிக் கொள்ளுமாறு அமைந்திருக்கும் (iron pen).

**மடல்**

காண்க : கடிதம்.

**மடிப்பு அடுக்குக் குறி**

காண்க : மடிப்புக் குறிப்பு (Collation mark).

**மடிப்புக் கட்டு**

தாள் உற்பத்தி முன்னேறிய பிறகு தாளில் அச்சடிக்கப்பட்டு அவை மடிக்கப் பட்டு 4, 8, 16 பக்க மடிப்பாக மாற்றப் பட்டது. இம்மடிப்புகளில் துளையிட்டு நூல் கட்டப்பட்டது. இது மடிப்புக் கட்டு (section stitching) ஆகும்.

**மடிப்புக் குறிப்பு**

8, 16 பக்கம் கொண்ட படிவத்தில் ஒவ்வொரு மடிப்புத் தொடங்கும் போதும் அதன்கீழ் இடப்புறத்தில் ஓர் அடையாளக் குறி இருக்கும். அல்லது புத்தகப் பெயரின் முதலெழுத்துடன் 1, 2, 3 என்ற படிவ எண் வரிசை இருக்கும். இவ்வாறு குறி இடுவதை மடிப்புக் குறிப்பு (designation mark, signature mark) அல்லது படிவ அடையாளம் என்று கூறுவர். தமிழில் வால் குறிப்பு என அழைப்பர்.

**மணங்கு**

ஓர் அளவுப் பெயர் (measure). வீசை =1/8 மணங்கு.

**மணிச்சுருக்கம்**

சிறு சுருக்கத்தில் மணிச்சுருக்கம் (Compendium) என்பதொரு வகையுண்டு. பெரியதொரு நூலைச் சிறியதாகச் சுருக்கிய பதிப்பு இது. இதைச் செறிவடக்க ஏடு எனவும் அழைப்பர். இது மூலப் புத்தகத்தின் சாரத்தை மட்டும் எடுத்துக் கூறும்.

**மணியக்காரன்**

கிராமத்தலைவர். கிராம வருவாய் பெறுபவர். கோயில் மடங்களை மேற்பார்வை செய்பவன்.

**மணிலா காகிதம்**

மெல்லியதாகவும் உறுதியாகவும் இருக்கும். கடிதங்கள் எழுதப் பயன் படுத்தும் உறைகள் இக்காகிதத்தில் செய்யப்படுகின்றன. மேலும் பொருள் களின் மேல் சுற்றுவதற்கும் ஒட்டுப் பொறிப்புத்தலை (label) செய்வதற்கும் பயன்படுகிறது.

**மத்தியார்ச்சுனம்**

இது ஒய்வூதியம் ஆகும். சாதாரண மாக மத்தியார்ச்சுனம் என்றால் அது திருவிடைமருதூரைக் குறிக்கும். தஞ்சை மராத்திய ஆவணங்களில் அதிக அளவில் இச்சொல் பயன்பாடு உள்ளது. திருவிடை மருதூரிலிருந்த தஞ்சை மராத்திய அரசர் அமர்சிங்கரின் வழியினருக்கு அளிக்கப் பட்ட உதவித்தொகை.

**மத்லோத்து**

கப்பலோட்டியைக் (Sailor) குறிக்கும்.

**மதாம்**

'Madame' என்ற பிரெஞ்சு மொழிச் சொல். மணமானவள், திருமதி என்பது பொருள்.

**மதிப்பாவணம்**

சட்டப்படியான உரிமையை ஆக்குதல், மாற்றுதல், வரையறுத்தல், அழித்தல் அல்லது விடுத்தல் செய்யும் அல்லது அவ்வாறு செய்வதாகக் கூறும் ஆவணம்.

**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

இப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறை யில் ஔவை டி.கே. சண்முகம் நூல்நிலையத் தில் ஏறத்தாழ 350க்கும் மேற்பட்ட ஏட்டுச் சுவடிகள் சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப் பட்டு வருகின்றன. மேலும் நாடகம் தொடர்பான கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன.

**மயிர் ஈரப்பதமானி**

காண்க : ஈரப்பதம்.

**மர அச்சுப்பொறி**

மரத்தினாலான அச்சுப்பொறி.

**மரக்கரி**

மை தயாரிக்கப் பயன்பட்ட பொருள் களுள் ஒன்று.

**மரக்கால்**

ஓர் அளவுவகை (corn measure). முகத்தலளவைக் கருவி.

**மரக் குழம்பினால் செய்யப்பட்ட தாள்**

மரக் குழம்பைக் கொண்டு தயார் செய்யப்பட்ட தாள் (wood pulp paper)

**மரச்சாறு**

மையாகப் பயன்படுத்தப்பட்டது. காண்க : மூங்கிற்பத்தை.

**மரப்பட்டைச் சுவடி**

பேபரைஸ் (papyrus) என்ற

ஒருவகைக் கோரைப்புல்லில் நடைவலை எழுதுகோலாகப் பயன்படுத்தி எழுதப்பட்ட சுவடி.

**மரப்பலகை**

காண்க : கல்.

**மருத்துவச் சுவடி**

சித்த மருத்துவம், ஆயுர் வேதம், யூனானி போன்ற மருத்துவம் தொடர்பான சுவடிகள்.

**மலிவுப்பதிப்பு**

பொது மக்களுக்காக அடக்க விலையில் அல்லது அடக்க விலையினும் குறைவான விலையில் வெளியிடப்படுவது (cheap edition). இதில் பல்லாயிரக்கணக்கில் நூல்களைச் சாதாரணத் தாளில் அச்சடித்து வெளியிடுவர்.

**மறவர் சீமை**

மறவர் இனத்தைச் சேர்ந்த மன்னர்கள் ஆட்சி செய்த பகுதி. குறிப்பாகப் புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதி.

**மறு அச்சு**

ஒருமுறை அச்சுக் கோத்து வெளியிடப்பட்டதை மாற்றாமலும் திருத்தாமலும் மீண்டும் வெளியிடுதல் (reprint, re-impression).

**மறுப்பு அறிக்கை**

ஓர் அறிக்கைக்கு மறுப்பாக விடப்படும் அறிக்கை.

**மறுப்புச் சீட்டு**

மறுப்பாகக் கொடுக்கப்படும் சீட்டு.

**மறுப்பு மனு**

மறுப்பாக அளிக்கப்படும் மனு (objection petition).

**மறுப்புரைக் குறிப்பாணை**

மறுப்புரையாகக் கொடுக்கப்படும் குறிப்பாணை (objection memo).

**மறுபடிவம்**

ஓர் ஆவணத்தில் பல்வேறு பகுதியில், பல்வேறு நபர்களால் பரிமாறும் வகையில் எழுதப்பட்டது என்றால், அளித்தவர் எழுதிக் கொடுத்த படி (பிரதி) மூலப்படி என்றும், ஏனையவை மறுபடிவங்கள் (Counterparts) என்றும் அழைக்கப்படும்.

**மறு பதிப்பு**

ஒரு நூலின் முதற் பதிப்பை மாற்றாமல் அப்படியே மறு பதிப்பாக (Re edition, Re issue) வெளியிடுவது.

**மறு வெளியீடு**

முன்னைய பதிப்பின் செய்திகளில் பெரிதும் மாறுதல் செய்யாமல், தேவைப்படின் சிறுசிறு திருத்தங்கள் மட்டும் செய்து, அச்செழுத்தும் படங்களும் முதலாயின மாற்றாமல் செய்யப்படுவது மறு வெளியீடாகும் (Republication).

**மன்மத**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் இருபத்தொன்பதாவது ஆண்டு.

**மனப்பாடம் செய்தல்**

முற்காலத்தில் இலக்கியம் போன்றவற்றை மனப்பாடம் செய்து பாதுகாத்தனர்.

**மனிபோல்டு தாள்**

சிப்பம் கட்டுவதற்குரிய சணல் தாள். பிலிப்பின்ஸ் நாட்டில் வளரும் ஒரு

தாவரத்தின் இலைகளினால் செய்யப்படும் நாரிழைகள் பொருந்திய, வலிய பருமனான தாள்.

**மனு**

உருதுமொழிச் சொல்லாகும். நீதிமன்றம் ஒன்றைத் தன் அதிகாரத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கும்படி எழுத்து மூலம் வேண்டுதல் (petition).

**மனுச் செய்பவர்**

தன் மேலதிகாரிக்குத் தன் குறை குறித்து விண்ணப்பிப்பவர் (petitioner).

**மனுதாரர்**

விண்ணப்பம் செய்பவர்.

**மனைவரிக் கணக்கு ஏடு**

கிராமத்திலுள்ள வீட்டு மனைகளுக்கு விதிக்கப்பட்ட வரி விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு.

**மஜீத்**

இசுலாமியர் தொழுகை இடம்.

**மஸ்லின் துணி**

பழுதடைந்த வரைபடங்கள், தேசப் படங்கள் போன்றவற்றைச் சீர் செய்வதற்கு மஸ்லின் துணி(Muslin cloth)யைப் பயன்படுத்தி ஒட்டுவர்.

## மா

**மா**

கீழ்வாய் இலக்கத்துள் ஒன்று. நில அளவை வகை (measure). இருபதில் ஒன்று 1/20.

**மாகதர்னாமா - மகசர்நாமா**

பலர் கையெழுத்திட்ட பொது விண்ணப்பம்.

**மாகல்**

மகால் (mahal) என்பதைக் குறிக்கும்.

**மாகாணங்கள்**

தஞ்சை மராத்தியர் ஆட்சியில் பல கிராமங்களைச் சேர்ந்த ஒரு பகுதி மாகாணங்கள் என்று வழங்கப்பட்டது. ஒவ்வொரு சீமையும் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.

**மாச்சல்லியம்**

பகைமையைக் குறிக்கும்.

**மாசிக்காய்**

மை தயாரிக்கப் பயன்பட்ட பொருள்களுள் ஒன்று.

**மாத இதழ்**

மாதந்தோறும் கதை, கட்டுரை, கலை, இலக்கியம், திறனாய்வு, சமயம் முதலானவற்றைத் தாங்கி வெளிவரும் இதழ் (monthly journal).

**மாதர்னாமா - மகசர்நாமா**

காண்க : மாகதர்னாமா.

**மார்பிள் இறுதித் தாள்**

கட்டமைப்புச் செய்யும்போது புத்தகத்தின் உட்புறத்தில் முகப்புப் பக்கத்திற்கும் அட்டைக்கும் இடையில் வைக்கப்படும் வழவழப்பான தாள் (marble end paper).

**மார்பிள் தாள்**

வண்ண வடிவங்கள் ஒருபுறத்தில்

கொண்ட வழவழப்பான தாள் (marble paper). புத்தகங்களைக் கட்டமைப்புச் செய்வதற்கும், பரிசுப் பொருள்களை அட்டைப் பெட்டியில் வைத்து அதன் மேல்புறத்தில் வைத்துக் கட்டுவதற்கும் இத்தாள் பயன்படுகிறது.

**மார்ஜின்**

காண்க : வரம்புப்பகுதி. தாளின் இட, வலப்பக்கம் மற்றும் மேல், கீழ் ஆகிய பக்கங்களில் விடப்படும் ஓரப்பகுதி (margin).

**மாலதாரர்கள்**

தஞ்சாவூரில் மராத்தியர் காலத்தில் இருந்த மகால்களின் அலுவலர்கள்.

**மாலோமல் யாதி**

தஞ்சாவூர் மராத்தியர் காலத்தில் இருந்த மகால்களின் விண்ணப்பங்கள்.

**மாவட்டக் கிளை நூலகம்**

தமிழ்நாடு அரசு மாவட்டந்தோறும் கிராமங்களில் பொது மக்கள் பயன் படுத்தும் வகையில் கிளை நூலகங்களைத் திறந்துள்ளன (District Branch Library).

**மாவட்ட நீதிமன்றம்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நீதிமன்றத்தில் (District Court) உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் விசாரித்துத் தீர்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**மாவட்டம்**

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் உருவான சொல். ஒரு மாநிலத்தின் நிலப் பகுதிகளில் ஒருபகுதி மாவட்டம் (District) ஆகும். ஜில்லா என்ற சொல்லால் குறிக்கப்பட்டும் வந்துள்ளது. சோழர் ஆட்சியில் கோட்டம் என்ற பெயரால் வழங்கப்பட்டு வந்துள்ளது.

**மாவட்ட மைய நூலகம்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் மைய நூலகம் (District Central Library) செயல்பட்டு வருகிறது. தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இந் நூலகத்தில் பொது மக்கள் பயன்படும் வகையில் நூல்கள், நாளிதழ்கள் போன்றவை வாங்கப்பட்டு வருகின்றன.

**மாற்றுமுறை ஆவணம்**

கடன் உறுதிச்சீட்டு, மாற்று ஆவணம் அல்லது உத்தரவு பெற்றவருக்கோ, அதைக் கொண்டு வருபவருக்கோ பணம் கொடுக்க வேண்டும் என்ற காசோலை ஆகிய இவை மாற்றுமுறை ஆவணம் எனப்படும்.

**மான்யம்**

தீர்வை செலுத்தாமல் அனுபவிக்கப் பெறும் நிலம்.

**மானம் பார்த்த பூமி**

மழைநீரை நம்பிப் பயிரிடப்படும் நிலம்.

**மானாவாரி**

காண்க : மானம் பார்த்த பூமி.

**மானியம்**

காண்க : மான்யம். நிலத்தின் தீர்வையை இனாமாகப் பெறும் பாத்தியதை.

# மி

**மிகைப்படி**

பல ஆசிரியர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்புப் புத்தகம் ஒன்றில் அவர்களுக்கு வழங்குவதற்கான கட்டுரைத் துணுக்குப்படி, மிகைப்படி (off-print) எனப்படும்.

**மிகைப்பாடல்**

சுவடிகளில் மிகைப்பாடல்கள் காணப்படுவதுண்டு.

**மிட்டா**

உருதுமொழிச் சொல்லாகும்.

**மிட்டாதார்**

உருதுமொழிச் சொல்லாகும்.

**மிதி**

மூன்றுவகை அச்சியந்திரங்களுள் மிதி (treadle) இயந்திரம் என்பதும் ஒன்று. இது தட்டு இயந்திரம் எனவும் அழைக்கப்படும். இவ்வகை இயந்திரத்தில் பெரிய தாள்களில் அச்சடிக்க இயலாது. சிறு விளம்பரங்கள், புத்தகங்கள் மட்டும் அச்சடிக்கலாம். தையல் இயந்திரத்தைப் போல இதைக் காலால் மிதித்து இயக்கலாம். அல்லது மின்மோட்டாரைப் பொருத்தியும் இயக்கலாம். இதில் மணிக்குச் சுமார் 1,000 முதல் 1,500 பிரதிகள் வரை அச்சிடலாம்.

**மிமோ**

ஆங்கில மொழிச் சொல். நினைவுக் குறிப்பைக் (memorandam) குறிக்கும்.

**மிமோரண்டம்**

நினைவுக்குறிப்பு.

**மிராசு**

மிராசு (Landlordship) என்பது உருதுமொழிச் சொல். வழிவழியாக வருகின்ற உரிமையைக் குறிக்கிறது. மரபுரிமையாகவும் வருவது.

**மிராசுதார்**

மரபுரிமையர். இதுவும் உருதுமொழிச் சொல். மரபுரிமையைப் பெறுகிறவர் மிராசுதார் (mirasdar) எனப்படுவார். வழிவழியாக நிலத்தின் உரிமை பெறுகிறவர். தந்தையிடமிருந்து மகனும், மகன் வழியாய்ப் பேரனும், கால்வழி கால்வழியாக, ஒரு சொத்தையோ, ஒரு வசதியையோ, பிற ஒரு நன்மையையோ பெற்று வருகிறவர்.

**மின் அடுப்பு**

ஆவணப் பாதுகாப்பிற்குத் தேவைப்படும் பொருள்களுள் மின் அடுப்பு (Hot plate) என்பதும் ஒன்று.

**மின் அச்சடிப்பு**

தட்டச்சு இயந்திர வகைகளுள் ஒன்று (electro typing).

**மின்னியக்கப் பிரசுரம்**

ஒளியச்சு முறையில் அச்சுக் கோக்கவும் பக்க ஒழுங்கு செய்யவும் படங்களை வரையவும் தேவையான இடங்களில் சேர்க்கவும் கணினியுடன் இணைக்கப்பட்ட அச்சுமுறை இது (electronic publishing).

**மினிஸ்துருமார்கள்**

'Ministre' என்ற பிரெஞ்சுச் சொல். அமைச்சர், மந்திரி என்பது பொருள்.

**மினுமினுப்பான தாள்**

பளபளப்பான மேற்பரப்புப் பூச்சுள்ள தாள் (Gloss paper).

**மிஸ்தீசு**

போர்த்துக்கீசிய சொல். போர்த்துக்கீசிய வணிகர்களுக்கும், இந்தியப் பெண்களுக்கும் பிறந்த குழந்தைகள்.

## மீ

**மீட்டுருவாக்கம்**

ஓலை / சுவடி பழுதுபட்டதனாலும், எழுத்துத் தெளிவின்மையாலும் விடுபட்டுள்ள இடத்தை நிரப்பிப் பதிப்பித்தல்.

**மீள்பதிப்பு**

மீண்டும் பதிப்பித்தல்.

**மீளச்சு**

மீண்டும் பதிப்பித்தல்.

## மு

**முக்தா**

முன்னிலை.

**முக்தியார் நாமா**

அதிகாரமளிக்கும் ஆவணம் (Power of attorney).

**முகச்செய்தியிலா ஆவணம்**

இன்னார் எனக் குறிப்பிடாமல் வரப்பெற்ற ஆவணம் (Anonymous document).

**முகப்பு எதிர்ப்பக்கப் படம்**

நூலின் தலைப்புப் பக்கத்திற்கு எதிர்ப்புறமாக இப்படம் இடம்பெறும். நூலில் இடம்பெறும் செய்தியின் தொடர்புடைய ஒரு பொருளின் நிழற்படமோ, வரையப்பட்ட படமோ இங்கு இடம்பெறும். சுவடி, கல்வெட்டு, பழங்காலக் காசு, செப்பேடு முதலானவற்றின் படம் முகப்புப் பக்கத்தில் இடம்பெறும்.

**முகப்பு எதிர்ப்பக்கம்**

நூலின் தலைப்புப் பக்கத்திற்கு எதிர்ப்புறமாக அமைவது.

**முகமல்**

வெல்வெட்டு என்ற ஒருவகைத் துணியைக் குறிக்கும்.

**முகவுரை**

காண்க : முன்னுரை (Preface).

**முகாஸா**

அரச குடும்பத்தவர் அனுபவித்து வந்த நிலங்கள், தோட்டங்கள் (வரி செலுத்தாமல்) முகாஸா எனப்படும்.

**முகூர்த்த ஓலை**

திருமணம் உறுதி செய்யப்படும் பொழுது தாளில் எழுதுவதற்கு முகூர்த்த ஓலை என்று பெயர்.

**முச்சலிக்கா ஏடு**

குடிமக்கள் அரசுக்கு எழுதிக் கொடுத்த ஒப்பந்தம். ஒப்புதல் வாக்குமூலம் முதலானவற்றைத் தெரிவிக்கும் ஏடு.

**முச்சலிக்கை**

ஜாமின் (jamin).

**முச்சிலிகா**

இதுவும் ஒருவகை ஆவணமாகும். காசித் திருமடத்தில் இவ்வகை ஆவணங்கள் உள்ளன. கரார் நாமா எனவும் அழைக்கப்படும்.

**முட்டையோட்டு முரட்டுத்தாள்**

காலண்டர் செய்யப்படாத தாளின் மங்கலான இலேசாக வழுவழுத்த பூச்சு, முட்டையோட்டுப் பூச்சாகும்.

**முடிவெப்ப ஈரமானி**

ஆவணப் பாதுகாப்பிற்குத் தேவையான பொருள்களுள் முடிவெப்ப ஈரமானி (Hair Thermohygrometer) என்பதும் ஒன்று.

**முத்திரித சபை**

தஞ்சாவூர் மராத்தியர் காலத்தில் இருந்த நால்வகை நீதிமன்றங்களுள் ஒன்று. சிறிய வழக்குகள் இதில் விசாரணை செய்யப்பட்டுத் தீர்ப்புகள் வழங்கப்பட்டன.

**முத்திரை**

உலோகத்தில் அல்லது பிற பொருளில் பொறிக்கப்படும் பதிமுத்திரை (seal stamp).

**முத்திரை ஏடு**

காண்க : முத்திரை ஓலை.

**முத்திரை ஒப்பந்தம்**

ஏதேனும் ஒன்று செய்யப்பட்டது என்று அல்லது செய்யப்படும் என்று ஒருதரப்பினர் மற்றொரு தரப்பினருக்கு எழுத்து மூலமாக வாக்குறுதி அளிக்கும் உடன்பாடு (agreement deed).

**முத்திரை ஓலை**

வழக்கு மன்றங்களில் வழக்குத் தொடுத்தல், ஆவணங்களின் படிகளைப் பெறுதல், ஒப்பந்தங்கள் முதலியவற்றுக் கெல்லாம் அரசு முத்திரையிட்ட ஓலை (seal document) அல்லது காகிதத்தில் எழுதுதல். கிழக்கிந்தியக் கம்பெனி நிருவாகத்தின் பொழுதும், தஞ்சாவூர் மராத்தியர் ஆட்சிக் காலத்திலும் ஆவணங்கள் முத்திரை ஓலைகளில் எழுதப் பட்டன. அவை முத்திரை ஓலை, முத்திரை ஏடு, சீட்டு ஏடு, அச்சு ஓலை, அச்சுப் பத்திரம், அச்சடி பத்திரம், அச்சடித்த பத்திரம், அச்சுக் கடுதாசி, பத்திரம், ஸ்டாம்பு என்று பலவாறு குறிக்கப்பட்டன. அவற்றில் எழுதப்பட்ட ஆவணங்கள் முறி, சாசனம், பத்திரம், சீட்டு எனப்பட்டது.

**முத்திரைச் சாவடி**

வழக்கு மன்றங்களில் ஒன்று. இங்குதான் முதன்முதலாக வழக்குகள் அனுமதிக்கப்படும்.

**முத்திரைத்தாள்**

அரசுக்குத் தொகை செலுத்தப்பட்ட தற்குச் சான்றாக உள்ள பதிவுக்குறிக் காகிதம் (stamp paper).

**முத்திரைத்தாள் விற்பனையாளர்**

காண்க : முத்திரை வில்லை விற்பனையாளர் (Stamp Vendor).

**முதற்படி**

திருத்தப்படியில் முதலில் எடுப்பது. பல படிகள் தட்டச்சுச் செய்யும் பொழுது மேலேயுள்ள படியே முதல்படி (first copy) யாகும். திருத்தப்படிக்கு அடுத்துள்ளதை முதல்படி என்பர். செலுத்துச் சீட்டு போன்ற படிவங்களில் முதலில் இருப்பது.

**முதற்பார்வைப்படி**

காண்க : காலி பருப் (galley proof).

**முதனிலைப் புகை**

சில நூல் வெளியீட்டாளர்கள் செய்தித்தாள்களின் புத்தக விமர்சனப் பகுதியில் தமக்கு வரவேண்டியவரைக்

கொண்டு தமது புத்தகத்தைத் திறனாய்வு செய்விப்பர். அவர்கள் அச்செய்தித்தாள் களில் நூலை மிகைபடப் புகழும் விமர்சனம் அல்லது பாராட்டுரை. பக்கச் சொல் எனப்படும். பிறகு வெளியீட்டாளர் தமது புத்தக விலைப்பட்டியலில் நூல் விற்பனையைப் பெருக்குவதற்காக முன்னதாக அச்சிட்டு வெளியூர்களுக்கு அனுப்புவர். இது முதனிலைப் புகை எனப்படும்.

**முந்திரி**

1/320ஐக் குறிக்கும் ஒரு பின்ன வெண்.

**முபதக் மகால்**

சமையல் கூடத்தைக் குறிக்கும்.

**முபதலா**

கைமாற்றுக் கடனைக் குறிக்கும்.

**முல்லா**

ஹாஜியாரின் பிரதிநிதி. இசுலாமிய வழக்குரைஞர், அறிஞர்.

**முழுஉரிமைச் சொத்து**

சொத்துரிமை உடையவர் தம் விருப்பப்படிச் சொத்தை விற்கவோ வேறு வகையில் துய்க்கவோ அல்லது அனுபவிக்க வோ உள்ள சொத்து முழுஉரிமைச் சொத்தாகும்.

**முழுத்தாள்**

தாள் வகைகளுள் ஒன்று. அளவால் பெற்ற பெயராகும் (foolscap paper).

**முழுத்தோல் கட்டமைப்பு**

விலங்குகளின் தோலைப் பதப் படுத்தி நூல் கட்டமைப்புச் செய்யும் பொழுது அந்த நூல் முழுமையாகத் தோல் போர்த்தியது முழுத்தோல் கட்டமைப்பு (full leather binding) எனப்படும்.

**முழுநிலச் சொத்து**

முழு உரிமைச் சொத்து.

**முழுமைத் தொகுப்பு**

ஒரே ஆசிரியருடைய படைப்புகள் முழுவதையும் ஒருங்கே தருவது. இவ்வாறு வரும் பதிப்பு தொகைப் பதிப்பு எனவும் வழங்கும்.

**முழுமையான உரிமை மாற்றம்**

எவ்வித நிபந்தனையாலோ, வரை யறையாலோ பாதிக்கப்படாத உரிமை மாற்றம்.

**முற்குறிப்பு**

நூல் தொடங்குவதற்கு முன்பு இடம் பெற்றுள்ள பகுதியில் காணப்படும் குறிப்புகள்.

**முற்றல் ஓலை**

ஓலை வகைகளுள் ஒன்று.

**முற்றுரிமை மாற்றம்**

காண்க : முழுமையான உரிமை மாற்றம்.

**முறி**

காண்க : முத்திரை ஓலை.

**முறிச்சீட்டு**

ஓலைப்பத்திரம். காண்க : ஆவணம்.

**முறிநறுக்கு**

காண்க : முறியோலை.

**முறியோலை**

பிற்காலத்தில் இரு சாரார் எழுதும்

ஒப்பந்த ஓலை (agreement deed). முறிநறுக்கு என்று இதைச் சேதுபதி செப்பேடு கூறும்.

**முறை ஆவணம்**

முறைப்படி அமைந்த ஆவணம்.

**முறை சொல்லுதல்**

பள்ளியில் ஆசிரியர் சொல்வதை மாணவர் காதால் கேட்டு மனத்தில் நன்கு உள்வாங்கி மனப்பாடம் செய்வார். முதல் நாள் நடந்த பாடத்தை மறவாமல் மறுநாள் ஒப்புவிப்பதை முறை சொல்லுதல் என்பர்.

**முறைப்படியான ஆவணம்**

உறுதியான முறைப்படி அல்லது விதிப்படி அமைந்த ஆவணம்.

**முறையீடு**

கீழ் அலுவலர் விதித்த தண்டனை யின்மீது, மேல் அலுவலருக்குச் செய்து கொள்ளும் விண்ணப்பம் (Appeal).

**முன் இணைப்பு**

நூலின் அல்லது ஆய்வேட்டின் முன் அமையும் உறுப்புகள் முன் இணைப்புகள் எனப்படும். அணிந்துரை, முன்னுரை, பதிப்புரை, நன்றியுரை, பொருளடக்கம் போன்றவை பொதுவாக நூலின் முன் இணைப்புகளாக அமையும். இவை தவிர நூல், நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, கதைச் சுருக்கம், ஆய்வுரை, துறை சார் கட்டுரைகள், சுருக்க விளக்கங்கள். முதற்குறிப்பகராதி போன்றவற்றையும் நூலின் முன் இணைப்புகளாகக் காணலாம்.

**முன் தேதியிடல்**

பத்திரத்தில் கையொப்பம் இடும் அல்லது எழுதிக் கொடுக்கும் நாளுக்கு முற்பட்ட தேதியிடல்.

**முன் பாத்தியம்**

முன்னுரிமை.

**முன்னாளிட்ட காசோலை**

முன் தேதியிட்டு வழங்கப்பட்ட காசோலை.

**முன்னிலையாதல்**

ஒரு வழக்கில் அல்லது நடவடிக்கை யில் தரப்பினராக நேரிலோ வழக்கறிஞர் மூலமாகவோ நீதிமன்றத்தில் முன்னிலை யாதல்.

**முன்னுரை**

நூலாசிரியர் அந்த நூல் எழுத நேர்ந்த சூழல், நூலில் இடம்பெறும் பொருள், அமைப்பு, போக்கு, பயன், நன்றியுரை போன்றவற்றைக் கூறுதல். நூற்பதிப்பில் முன்னுரை (preface) முக்கிய இடம் பெறுவதாய் அமையும். முகவுரை, நூன்முகம், பதிப்புரை என்னும் தலைப்பு களிலும் இதனை வழங்குவர். நூலுக்கோர் அறிமுக மாகவும் நூலைப் பயன்படுத்து வார்க்கு நெறிகாட்டுவதாயும் இம் முன்னுரை அமையும்.

**முஸ்தீது**

தயார் செய்தல்.

## மூ

**மூஞ்ஜ்**

காகிதக் கூழ் தயாரிக்க உதவும் ஒருவகைப் புல்வகை (moonj).

**மூட்டு இடைவெளிக் கட்டமைப்பு**

ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிய மடிப்புகளை நாடாவினால் இணைக்காமல் முதுகுக்கும் அட்டைக்குமிடையே

வெளியிடம் தோன்றுமாறு ஊசிநூல் கொண்டு மடிப்புகளைத் தைப்பது மூட்டு இடைவெளிக் கட்டமைப்பு (groove binding) எனப்படும். அமெரிக்க மூட்டு இடைவெளிக் கட்டமைப்பு, பிரெஞ்சு மூட்டு இடைவெளிக் கட்டமைப்பு என்றும் இது வழங்கப்படும்.

**மூங்கில் எழுதுகோல்**

மூங்கிலை எழுதுகோலாகப் பயன் படுத்தி மரச்சாற்றில் தயாரிக்கப்பட்ட மையில் தோய்த்து மூங்கிற் பத்தைகளில் எழுதப்பட்டன.

**மூங்கில் குழாய்**

மன்னர் ஆட்சிக் காலங்களில் அரசு ஆணைகள், கடிதங்கள் முதலானவற்றைப் பட்டுத்துணியில் எழுதி அத்துணியை அழகுபடுத்திச் சுருளாகச் சுருட்டி மூங்கில் குழாய்களில் போட்டுத் தூதுவர்கள் மூலம் பிற நாடுகளுக்கு அனுப்பி வந்துள்ளனர்.

**மூங்கில் நூல்கள்**

மூங்கில் பத்தைகளில் எழுதப்பட்ட சுவடிகள் மூங்கில் நூல்கள் (bamboo books) எனப்படும்.

**மூங்கிற் பத்தை**

சீனாவில் மூங்கிற் பத்தை (bamboo)களில் எழுதப்பட்ட சுவடிகள் உள்ளன. மூங்கில் எழுதுகோலினால் மரச்சாற்றினால் தயாரிக்கப்பட்ட மையில் தோய்த்து மூங்கிற் பத்தைகளில் எழுதினர். காண்க : கல், மூங்கிற் சுவடி.

**மூங்கிற் சுவடி**

சீனாவில் கி.மு. 250இல் மூங்கிற் பத்தைகளில் எழுதப்பட்டன. மூங்கிலை எழுதுகோலாகப் பயன்படுத்தி மரச்சாற்றில் தயாரிக்கப்பட்ட மையில் தோய்த்து மூங்கிற் பத்தைகளில் எழுதப்பட்டன. இவை மூங்கிற் சுவடிகள் (bamboo manuscripts) எனப்பட்டன. மே-தீ என்ற சீனநாட்டுத் தத்துவ அறிஞர் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பயணம் செய்த பொழுது தம்முடன் மூன்று வண்டிகள் நிறைய மூங்கில் நூல்களைக் கொண்டு சென்றார் என்று சீன வரலாறு கூறுகிறது.

**மூல ஓலை**

முதலில் எழுதப்பெற்ற ஓலை (original palmleaf). செப்பேடுகளுக்கு முதலில் மூல ஓலைகள் எழுதப்பட்டன.

**மூல சாசனப் பத்திரம்**

மூல உறுதி ஆணை.

**மூலச்சுவடி**

நூலாசிரியரால் எழுதப்பட்ட சுவடி மூலச்சுவடி (original manuscript) எனப்படும். நூலாசிரியர் சொல்லப் பிறரால் எழுதப்பட்ட சுவடிகளாயினும் படியெடுத்த சுவடிகளாயினும் நூலாசிரியரால் திருத்தப் பட்டிருக்குமானால் அவற்றையும் மூலச் சுவடிகள் எனலாம்.

**மூலப் பத்திரம்**

நிலச் சொத்தில் ஒருவருக்குள்ள உரிமையை அல்லது உரிமை மூலத்தைக் காட்டும் ஆவணம்.

**மூன்றாம் படி**

செலுத்துச் சீட்டில் மூன்றாவதாக இருக்கும் பகுதி (triplicate).

**மூன்றாமவர் ஆணை உறுதி ஆவணம்**

வழக்கில் தொடர்பு இல்லாதவர் உண்மை உறுதியாகக் கூறும் வாக்குமூலம்.

## மெ

### மெசின் மெய்ப்பு

அச்சியந்திரத்தில் அச்சிடும் பக்கங்கள் முடுக்கப்பட்டு எடுக்கப்படும் முதல் பிரதி அல்லது மெய்ப்பு (machine proof).

### மெம்பரேனா

வெள்ளாடு, செம்மறியாடு, கன்றுக் குட்டி ஆகியவற்றின் தோலை எழுதும் முறையில் பதப்படுத்துவதற்கு மெம்பரேனா (membrana) என்று பெயர்.

### மெய்க்கீர்த்தி

அரசனது புகழுரைகள் கூறுவன. இது பிரசஸ்தி எனவும் கூறப்படும்.

### மெய்ப்புத் திருத்துதல்

அச்சகத்திலிருந்து பெறப்பட்ட அச்சுக் கோப்புப் பக்கங்களைப் பார்த்துப் பிழைகளை நீக்கும் பணியைச் செய்பவர் அச்சுப்படி திருத்துபவராவார். காலி, பக்கம், படிவம், இயந்திரம் ஆகிய நான்கு நிலைகளில் மெய்ப்புகளைத் திருத்தம் (proof correction) செய்ய வேண்டியிருக்கும்.

### மெய்ப்புத் திருத்துபவர் குறியீடுகள்

மெய்ப்புத் திருத்துவதற்கென்று சில குறியீடுகள் (Proof reader's mark) உண்டு. அனைவரும் கையாளத்தக்க, கையாள வேண்டிய இக் குறியீடுகள் ஒரே நிலையில் உருவாயின. அச்சுப் பிரதியில் தவறானவற்றைத் திருத்துவதற்கேற்பட்ட குறியீடுகளுள் ஒருசில வருமாறு :

| | |
|---|---|
| ℓ | நீக்கிவிடுக. |
| # | இரண்டு எழுத்துக்களுக்கு, சொற்களுக்கு அல்லது வரிகளுக்கு இடையே போதுமான இடம் விடுக. |
| ⊥ | ஏதுவின்றித் தோன்றும் இடத்தைப் பற்றிக் கவனிக்க. |
| x | விளக்கமாய்த் தெரியாத எழுத்தைக் கவனிக்க. |
| ^ | இக்குறி விடப்பட்டவற்றைத் தெரிவிக்கிறது. அவ்வாறு விடப்பட்ட எழுத்தையோ அன்றிச் சொல்லையோ பிரதியின் ஓரத்தில் எழுத வேண்டும். |
| ? | இது ஐயத்திற்கு இடமானதைத் தெரிவிக்கிறது. |
| ══ | கோணலாயிருப்பதை நேராய் அமைக்க. |
| P | வேறு பத்தியாகப் பிரிக்க. |
| Rom. | உரோமன் வடிவெழுத்தாக மாற்றுக. |
| l.c. | சிறிய வடிவில் அமைக்க. |
| tr. | இடம் மாற்றி வேறிடத்தில் அமைக்க. |
| w.f. | மாறான எழுத்தை நீக்கிப் பொருத்தமானதை அமைக்க. எதைத் சாய்ந்த வடிவில் அமைக்க வேண்டுமோ அதன்கீழ் இக் கோட்டை வரைவதுடன், பிரதியின் ஓரத்தில் ital. என்று எழுத வேண்டும். |
| = | எதைப் பெரிய எழுத்தின் வகையில் சிறிய எழுத்தை அமைக்க வேண்டுமோ, அதன்கீழ் இக்குறியை வரைந்து பிரதியின் ஓரத்திலும் Sm. Cap. என்று எழுத வேண்டும். |
| ≡ | எதைப் பெரிய எழுத்தின் வகையில் அமைக்க வேண்டுமோ அதன்கீழ் இக்குறியை வரைந்து பிரதியின் ஓரத்தில் Cap. என்று எழுத வேண்டும். |
| -- | விடுபட்ட சொற்களைப் பிரதியின் |

ஓரத்தில் எழுதிச் சொற்களின் முன்னும் பின்னும் இக்குறியை இடவேண்டும்.

...... எதை முதலில் வேண்டாமென அடித்துவிட்டுப் பிறகு அதையே அவ்விடத்திலேயே அமைக்க வேண்டுமென ஏற்பட்டதோ அப்பொழுது அதன் கீழ் இக் குறியை இட்டுப் பிரதியின் ஓரத்தில் Stet என்று எழுத வேண்டும்.

**மெருகிட்ட தாள்**

பளபளப்பாக்கப்பட்ட தாள் (Glaze paper).

**மெருகொட்டு**

புத்தக அட்டையின் மீது அல்லது மேலுறையின் மீது மெல்லிய பிளாஸ்டிக் பிலிம் தாள் கொண்டு மூடுவது. பளபளப்பு, வழவழப்பு, அழகு எளிதில் அழுக்குப் படாமை, பாதுகாப்பு என்பன இதன் பயன்களாகும். ஆங்கிலத்தில் இதை 'லேமினேசன்' (lamination) என்பர்.

**மெல்லிய தாள், மெலிந்த தாள்**

கரித்தாள் பிரதிகள் எடுப்பதற்கும் 'லே அவுட்டு'கள் வரைவதற்கும் பயன்படும் மெல்லிய தாள் (Flimsy paper).

**மெழுகு**

மை தயாரிக்கப் பயன்பட்ட பொருள் களுள் ஒன்று.

**மெழுகுத் தாள்**

ஆவணங்களைச் சீர் செய்வதற் குரிய பொருள்களுள் மெழுகுத் தாள் (Waxed paper) என்பதும் ஒன்று.

## மே

**மேடோவர் பத்திரம்**

கடன் சீட்டைப் பிறருக்கு மாற்றுதல்.

**மேரைச் சட்டம் ஏடு**

கிராம ஊழியர் மற்றும் அறநிலையங் களுக்கு வழங்கப்படும் மேரைகளின் அளவு. அதனைப் பெறும் உரிமையாளர் ஆகிய விவரங்களைக் கூறும் ஏடு.

**மேல் ஒப்பம்**

ஒருவர் கையெழுத்திட்ட ஆவணத்தில் உறுதி செய்யும் வகையில் அதில் கையொப்பம் இடுதல் (counter-sign).

**மேல் முறையீட்டாளர்**

தீர்ப்பிற்கு எதிராக மேல் முறையீடு செய்பவர் (appellate).

**மேல் முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பாணை**

மேல் முறையீட்டின் பேரில் பிறப் பிக்கப்பட்ட தீர்ப்பாணை.

**மேல் முறையீட்டு நீதிமன்றம்**

ஒரு நீதிமன்றத் தீர்ப்புரையின் மீது மேல் முறையீட்டைச் செயல்படுத்தும் நீதிமன்றம் (appellate court).

**மேல் முறையீடு**

கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பைத் திருத்துவதற்கோ மாற்றுவதற்கோ மேல் நீதிமன்றத்தில் முறையிடுதல் (appeal).

**மேல்வாயிலக்கம்**

எண்சுவடியில் வாய்பாடுகளுள் ஒன்று.

**மேல்வாரம்**

நில விளைச்சலில் அரசுக்கு அல்லது நில மேலாளருக்கு உரிய பங்கு.

**மேல்வாரம் மேறைத் திட்டம் ஏடு**

மேல்வாரம் தானியத்தில் கிராம ஊழியர்கள் அறநிலையங்கள் முதலிய வற்றிற்கு வழங்கப்படும் மேரையின் அளவு விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு.

**மேலட்டை**

புத்தகத்தின் மேற்பொதி அட்டை மேலட்டை (cover) எனப்படும். புத்தகத் தின் மேல் முன்னும் பின்னும் அமைத்து, நூலினாலோ பசையினாலோ முதுகோடு இணைக்கப்படுவது.

**மேலட்டை உறை**

கட்டமைப்புச் செய்யப்பட்ட மேலட்டையின் மேல் சுற்றி, அதனைக் காத்தவாறு அமையும் தடிமனான வண்ணத்தாள் மேலட்டை உறை (jacket) எனப்படும். புத்தகம் அழுக்காகாமல் இருக்க இது உதவுகிறது.

**மேலீடான சான்று**

எதிர்சான்று இல்லாநிலையில், ஒரு நிகழ்மையைப் பற்றித் துணிபு கொள் வதற்கு, சட்டப்படிப் போதுமான சான்று.

**மேலுறை**

காண்க : மேலட்டை உறை.

**மேலை இந்தியக் காகித ஆலை**

இந்த ஆலை லக்னோவில் உள்ளது.

**மேற்குறிப்பு**

ஆவணம் ஒன்றின் பின்புறத்தில் வரையப்படும் குறிப்பு (endorsement). இது முறை ஆவணத்தின் மேற்குறிப்பையும் ஆவணப்படிச் சேரவேண்டிய பணம் முழுமையாகவோ பகுதியாகவோ செலுத்தப் பட்டதற்குச் சான்றாக வரையப்பட்ட குறிப்பையும் உள்ளடக்கும்.

**மேற்குறிப்பு எழுதுநர்**

ஆவணத்தின் மேல் குறிப்பை எழுதுபவர் (endorser).

**மேற்குறிப்புப் பெறுநர்**

மேற்குறிப்பு ஒன்றைப் பெற்றவர் (endorsee).

**மேற்கோள் அகராதி**

ஒரு நூலிலோ அதன் உரையிலோ வந்துள்ள மேற்கோள்களைத் தொகுத்து அகரநிரலாக்கித் தருதல்.

**மேற்கோள் நூல்**

காண்க : மேற்கோள் அகராதி.

**மேற்கோள் நூலகம்**

காண்க : பார்வை நூலகம்.

**மேஸ்திரி**

போர்த்துக்கீசியச் சொல். கண் காணிப்பாளர், மேற்பார்வையாளர்.

## மை

**மை ஒற்றுக் காகிதம்**

தாள் செய்யும்போது மரத்தாதுக் களுக்கிடையிலுள்ள இடைவெளிகளை நிரப்பப் பயன்படுத்தும் பசைப் பொருளைக் கலக்காமல் செய்யப்படும் தாள் (blotting paper). மையை உறிஞ்சும் ஆற்றல் உடையது.

**மைத்தொட்டி**

அச்சேற்றம் செய்வதற்குரிய மை நிரப்பும் தொட்டி. இது அச்சியந்திரத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

**மையெழுத்தூசி**

எழுத்தாணிக்குரிய பெயர். சீவக சிந்தாமணியில் எழுத்தாணியை இவ்வாறு திருத்தக்கதேவர் குறிப்பிடுகின்றார். காண்க : எழுத்தாணி, ஊசி.

## மொ

**மொகினித் தொகை**

உதவித் தொகையைக் குறிக்கும். தஞ்சை மராத்தியர் கால ஆவணங்களில் இச்சொல் அதிக அளவில் பயன்பாட்டில் இருந்தது.

**மொழி பெயர்ப்பாளர்**

ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழி பெயர்ப்புச் செய்பவர் (translator).

**மொழி பெயர்ப்பு**

வேறொரு மொழியில் மாற்றி எழுதுதல் (translation).

**மொழி பெயர்ப்புப் பதிப்பு**

பிற மொழிப்படைப்பு ஒன்றைத் தமது மொழிக்குக் கொண்டு வந்து வழங்குவது. நூலின் மூலமொழி வாசகக் கருத்துகளையும் அதன் சிறப்பையும் தமது மக்களுக்குத் தருவதே மொழிபெயர்ப்பின் நோக்கம். இதன் அடிப்படையில் வெளிவரும் பதிப்பு மொழி பெயர்ப்புப் பதிப்பு (translation edition) எனப்படும்.

**மொஹரம்**

இசுலாமியர் மாதங்களில் முதல் மாதம்.

## மோ

**மோகரர்**

விண்ணப்பத்தைக் குறிக்கும்.

**மோகினி**

உதவித்தொகை.

**மோடி ஆவணம்**

மராத்தி எழுத்தின் சுருக்கெழுத்து வடிவமான மோடி ஆவணம் தஞ்சாவூர் மராத்தியர் ஆட்சிக் காலத்தில் அரசுப் பயன்பாட்டில் இருந்தது.

**மோத்தியார் நாமா**

முழு அதிகாரம்.

**மோறை தரப்படி ஏடு**

கிராமத்தில் பயிரிடப்படாமல் கரடு முரடாக அமைந்துள்ள நிலங்களின் தரம் முதலான விவரங்களைத் தெரிவிக்கும் ஏடு.

## யா

**யாதாஸ்து (யாதஸ்த்து)**

நினைவுக்குறிப்பு, உதவித்தொகை. தஞ்சாவூர் மராத்தியர் கால ஆவணங்களில் இச்சொல் (written memorandum) மிகுதியாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

**யாதி**

மனு, விண்ணப்பம் (petition). அரசர், அமைச்சர், அரசப்பிரதிநிதி, நீதிபதி

போன்றவர்களுக்குத் தமக்கேற்பட்ட குறைகளைத் தெரிவித்து அவற்றை நீக்கும்படி எழுதப்படுவது.

## யீ

**யீண்டார்கமென்க (ண்டு)**

'Endorsement' என்பது ஆங்கில மொழிச் சொல்லாகும். இது அலுவலகக் குறிப்பைக் குறிக்கும்.

**யீஸ்தியார்**

விளம்பரம் (advertisement).

## யு

**யுவ**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் ஒன்பதாவது ஆண்டு.

## யூ

**யூக மூல ஏடு**

மூலப்படி கிடைக்காத நிலையில் கிடைத்த ஏடுகளில் வரிசை முறையை ஆராய்ந்து மேலேட்டு வரிசை முறையில் முதல் நிற்பதையே மூல ஏடாகக் கருதி ஆய்வினை மேற்கொள்வர். அங்ஙனம் தேர்ந்தெடுக்கப்படும் மூல ஏடு மூலப்படி அன்று. எனவே அதனை யூக மூல ஏடு என்பர்.

## யே

**யேஜண்டு**

'Agent' என்பது ஆங்கில மொழிச் சொல். இது அரசுப் பிரதிநிதியைக் குறிக்கும்.

## ர

**ரகதாற் - ரகதாரி**

அரசு முத்திரையுள்ள வழிநடைச் சீட்டு.

**ரயத்**

ரயத் (ryot) என்றால் குடியானவன் என்பது பொருள்.

**ரயத்துவாரி முறை**

ஆங்கிலேயர் ஆட்சியில் காப்டன் ரீட், தாமஸ் மன்றோ ஆகியவர்களால் கி.பி. 1792இல் இந்த ரயத்துவாரி முறை (rytot system) அறிமுகப்படுத்தப்பட்ட முறை.

**ரவேஸ்**

தரகுப்பணம்.

## ரா

**ராசினாமா**

உடன்படிக்கைப் பத்திரம்.

## ரி

**ரிசிடெண்டு**

'Resident' என்பது ஆங்கில மொழிச் சொல். பிரதிநிதியைக் குறிக்கும்.

## ரு

**ருசு**

அத்தாட்சி (proof), கையெழுத்து (signature).

## ரு

**ருசுமு மேரைத்திட்டம் ஏடு**

ஆட்சியாளர்களால் அவ்வப்போது கிராம ஊழியர்கள் அறநிலையங்கள் முதலியவற்றுக்கு வழங்கப்படும் மேரையின் அளவினையும் அதனைப் பெறும் வழிமுறை உரிமையாளரின் விவரத்தினையும் தெரிவிக்கும் ஏடு.

**ருபகாலில்**

அத்தாட்சியாக ருபிக்க.

**ருபபேதம்**

காண்க : வடிவ வேறுபாடு.

## ரை

**ரைட்டர்**

எழுத்தர் (writer). ஆங்கில மொழிச் சொல்.

## ரொ

**ரொக்கக் குத்தகை தானியக் குத்தகை ஏடு**

கிராமத்தில் காணியாட்சி நிலங்களில் பயிரிடும் குடியானவர் ஒரு குறிப்பிட்ட அளவு ரொக்கப் பணமாகவோ அல்லது குறிப்பிட்ட அளவு தானியமாகவோ குத்தகை கொடுக்க நிர்ணயம் செய்யப்பட்ட விவரத்தினைக் குறித்த ஏடு.

## ரோ

**ரோக்கா**

குறிப்பு (note), அரசு உத்தரவு (government order). அத்தாட்சிச் சீட்டு.

## ல

**லகோடா**

காகித உறை (envelop)யைக் குறிக்கும்.

**லச்சை**

லட்ஜை என்று சொல்லப்படும். வெட்கம் என்பது இதன் பொருள்.

**லந்தர் பனை**

பனைமரங்களில் ஒருவகை. லந்தர் பனைமரங்கள் (Coripha Utan) இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகள், பர்மா, தாய்லாந்து ஆகிய இடங்களில் அதிகமாக வளர்கின்றன. இம்மரங்களின் ஓலைகளை எழுதுவதற்குப் பயன் படுத்தினர்.

## லா

**லாயம்**

கொட்டடி. குதிரைகள் கட்டுமிடம்.

## லி

**லிட்மஸ் காகிதம்**

ஆவணக் காப்பகத்திற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் லிட்மஸ் காகிதம் (Litmus paper) என்பதும் ஒன்று.

**லிண்டிஸ்பார்ன் காஸ்பெல்**

தோல் சுவடிகளுள் லிண்டிஸ்பார்ன் காஸ்பெல் (Lindisfarne Gospel) என்ற சுவடியே தொன்மையானது. கிளாஸ்கோவில் ஹண்டேரியன் அருங்காட்சியகத்தில் இச்சுவடி உள்ளது.

**லிண்டேன்**

ஆவணக்காப்பகத்திற்குத் தேவையான வேதிமப் பொருள்களுள் லிண்டேன் (Lindane) என்பதும் ஒன்று.

**லித்தோ அச்சுமுறை**

எழுத்துகளையும் படங்களையும் சமதளமான கல் அல்லது உலோகத் தகட்டில் வரைந்து அதைக் கொண்டு அச்சிடுதல் லித்தோ அச்சுமுறை (lithography) எனப்படும்.

**லிபர் சுவடி**

சில மரங்களின் உள்பட்டைகளின் ஒருவகை லிபர் ஆகும். இதில் எழுதப்பட்ட சுவடி லிபர் சுவடி (liber manuscript) எனப்பட்டது.

**லினன் தாள்**

நார்மடிக் காகிதம், வங்கி நோட்டுகள் தயாரிக்கப் பயன்படும் தாள் (linan paper). லினன் துணி போல் தோன்றுமாறு நார்மணி ஒட்டம் அமைந்தது.

## லே

**லேசர்**

'LASER' (Light Amplication by Stimulated Emissioning of Radiation) என்பது ஆங்கில மொழிச் சொல்லாகும். காண்க : ஒளி அச்சு.

**லேஞ்சிலே**

போர்த்துக்கீசியச் சொல். துணித் துண்டு என்பது பொருள்.

**லேமினேசன்**

சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றை லேமினேசன் (Lamination) முறையில் பாதுகாத்து வருகின்றனர்.

## வ

**வக்காலத்து**

அதிகாரப் பத்திரம் (power of attorney).

**வக்காலத்து நாமா**

வழக்கை நடத்துவதற்கு வழக்கறிஞருக்குக் கொடுக்கும் அதிகாரப் பத்திரம்.

**வகைப்படுத்துதல்**

சேகரிக்கப்பட்ட சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைப் பிரித்து வகைப்படுத்துதல் (assortment).

**வங்காளக் காகித ஆலை**

இந்த ஆலை ராணிகஞ்சில் உள்ளது.

**வட்டம்**

'தாலுக்' (taluk) என்பது இந்துஸ்தானிச் சொல். இதற்குப் பழைய தமிழ்ச் சொல் 'கூற்றம்' ஆகும். மாவட்டத்தின் உட்பிரிவு 'வட்டம்' ஆகும்.

**வட்டாட்சியர்**

வட்டாட்சியர் (tahsildar) என்பதற்குக் கடமை வகிப்பவர், கடமையாளர் என்பது பொருள். ஒரு தாலுகா அல்லது வட்டம் இதன் எல்லையாகும்.

**வட்டிக்கடன்**

வட்டி செலுத்தப்படும் கடன்.

**வடிவ வேறுபாடு**

ஒரு சொல்லில் காலப்போக்கில் காணப்படும் உரு மாற்றம் வடிவ வேறுபாடு எனப்படும். ரூபபேதம் எனவும் கூறப்படும். சான்று : துரியோதனன் > திரியோதனன், முழுசாதே > முழுவாதே.

**வணிக விவர நூல்**

வணிகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், நிறுவனங்கள், அவர்தம் முகவரியும் தொலைபேசி எண்ணும் முதலான பல விவரங்களைத் தரும் நூல் (trade directory).

**வர்த்தமானப் பத்திரம்**

அடைமானம் (bond).

**வர்த்தமானம்**

செய்தி (matter, news).

**வரம்புப் பகுதி**

நூல் அச்சிடும் பக்கத்தில் அச்சிடாமல் விடப்படும் ஓர இடம் (margin).

**வராகன்**

நாணயம்.

**வரிப் பொத்தகம்**

பண்டைக் காலத்தில் குடிமக்கள் நிலங்களுக்காகச் செலுத்தும் வரி விவரப் பதிவேடு (tax book). இது தற்போது நடைமுறையிலிருக்கும் கிராமக் கணக்கு 16 எண் வரியேடு என்ற பதிவேடாகும்.

**வரியேடு**

காண்க : வரிப் பொத்தகம்.

**வரிசைப்படுத்தும் முறை**

சுவடிகள், ஆவணங்கள் போன்ற வற்றை ஒழுங்கான முறையில் வரிசைப் படுத்துதல் (arrangement).

**வருத்தக் கடிதம்**

செய்த தவற்றுக்கு வருத்தம் தெரிவித்து எழுதும் கடிதம்.

**வரைதல்**

காண்க : வரைவு.

**வரைபடம்**

பொருளொன்றை அல்லது இடத்தைக் குறிக்கும் வகையிலான வரைவு (plan, sketch).

**வரைமொழிச் சான்று**

காண்க : ஆவணச்சான்று.

**வரையறுத்த பதிப்பு**

காண்க : உறுதிசெய்யப்பட்ட பதிப்பு (definite edition).

**வரைவு**

வேறொரு அலுவலகத்திலிருந்தோ, வெளியார் ஒருவரிடமிருந்தோ ஒரு கடிதம் வந்தால், அதற்கு விடை வரைய நேரும் போது, முதலில் அவ்விடைக்கு ஒரு வரைவு (draft) எழுதப்பெறும். மேல் அலுவலர்கள் இவ் வரைவினைப் பார்வையிட்டுத் தேவை யானபடித் திருத்தியும் கூட்டியும் குறைத்தும் ஒப்பம் (approve) செய்வர். வெளியி லிருந்து கடிதம் பெறாமலே, அலுவலகத்தி லிருந்தே ஒரு வரைவு எழுதுதலும் உண்டு. இதை ஆங்கிலத்தில் 'arising current' என்பர். தமிழில் இதனை 'எழும் நடப்பு' எனலாம். Drafting – வரைவு எழுதுதல். வரைதல்.

**வரைவு எழுதுதல்**

காண்க : வரைவு.

**வலைத்துணி**

சுவடிகள், ஆவணங்களைச் சீர் செய்வதற்குத் தூய்மையான வெள்ளி நிறத்தினாலான வலைத்துணி (Chiffon cloth)யைப் பயன்படுத்துவர்.

**வழக்குப் பட்டியல்**

நீதிமன்ற அமர்வு நாட்களில் ஒவ்வொரு நாளுக்கும் தயாரிக்கப்படும் வழக்குப் பட்டியல்.

**வழி ஏடு**

அண்மைப் படிகளிலிருந்து பல நிலைகளில் படியெடுக்கப்பட்டவை வழி ஏடுகள் எனப்படும். மூல ஏட்டிலிருந்து பிறந்த அண்மைப் படிகளோ அவற்றின் பின் தோன்றிய வழி ஏடுகளோ பல்வேறு பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு ஆங்காங்கு அவற்றின் வழி ஏடுகள் தோன்றுதல் இயல்பாகும். இவ்வாறு பல பகுதிகளிலிருந்து கிடைக்கின்ற ஒரு நூலுக்குரிய பல சுவடிகளையும் சில குடும்பங்களாகப் பிரித்துக் கொள்ளலாம். ஒரே மாதிரியான விடுகைகள், சேர்க்கைகள், பிழைகள் கொண்டவை என மூன்று வகைக் குடும்பங்களாகப் பிரித்துக் காணமுடியும்.

**வளையக் கட்டமைப்பு**

உதிரித் தாள்களை அடுக்கித் துளையிட்டு மேலும் கீழுமாக இரண்டு உலோகத் துளை வளையம் பதித்த கடினமான இரு அட்டைகளுக்கிடையில், கோத்து வைப்பது வளையக் கட்டமைப்பு (ring binding) ஆகும். சில நூல்களில் இரண்டு வளையங்களுக்குப் பதில் நான்கு வளையங்கள் பதிக்கப்பட்டிருக்கும். அதற்கேற்ப உள்ளே வைக்கும் தாள்களிலும் நான்கு துளைகள் இடப்படும்.

**வற்றல் ஓலை**

ஓலை வகைகளுள் ஒன்று.

**வஸ்தாத்து**

மற்போரில் வல்லவர்.

## வா

**வாக்குமூலம்**

ஒருவர் வேலையில் சேர்வதற்கு முன்னர் அதற்குரிய அலுவலரிடம் நல்ல நடத்தையுடனும், கீழ்ப்படிதலுடனும், வேலையை மிகவும் செம்மையுடன் செய்து முடிப்பேன் என்றும் தனக்கு வேலை தரும்படிக் கேட்டுக் கொண்டு உறுதி அளிப்பது.

**வாசக தோஷம்**

சொற்பிழை.

**வாணிக அச்சகம்**

வணிக நோக்குடன் நடத்தப்படும் அச்சகம்.

**வாணிக உறுதிக்கடன்**

ஏற்றுமதி ஆவணங்களைப் பெற்றுக் கொண்டு பணம் கொடுப்பதற்கு வங்கி அளிக்கும் உறுதி.

**வாணிக உறுதிக் கடிதம்**

குறித்த ஒரு நபருக்குக் கடன் கொடுக்குமாறோ சரக்குகளை ஒப்படைக்குமாறோ ஒருவர் தமது வாணிபச் செல்வாக்கை ஈடுபடுத்தி மற்றொருவருக்கு எழுதும் கடிதம்.

**வாய்தா**

'Waida' என்ற உருது மொழிச் சொல். தவணை, கெடுவைத் தள்ளிப் போடுகை எனப் பொருள்படும்.

**வாய்மொழிச் சான்று**

வாய்மொழியாகக் கூறப்படும் சாட்சியம் (oral evidence). விசாரிக்க வேண்டிய சேர்வுகளைப் பற்றி நீதிமன்ற

அனுமதியின் பேரில் சாட்சிகள் கூறும் வாக்குமூலங்கள்.

**வாய்மொழித் தேர்வு**

வாய்மொழியாக வினாக்கள் கேட்டுச் சோதித்தல் (vivo voce examination).

**வார்ப்படப் பெட்டி**

லைனோ டைப் இயந்திரத்தில் உள்ள ஒரு கலம் (casting box).

**வார்னிஷ்**

'Varnish' என்பது ஆங்கிலச் சொல். மை தயாரிக்கப் பயன்பட்ட பொருள்களுள் ஒன்று.

**வார இதழ்**

வாரந்தோறும் கதை, கட்டுரை, கலை போன்றவற்றை வெளியிடும் இதழ் (weekly journal).

**வாரிசு**

உரிமையர். வாரிசு என்பது அரபுச் சொல். ஒருவருக்குப் பின்னால், ஒரு பொருளுக்கோ, ஒரு வசதிக்கோ உரிமை பெறுகிறவர், அவருடைய வாரிசு எனப் பெறுகிறார். இப்படி உரிமை பெறுகிற வாரிசு பிறப்பினால் வழிவழி வந்தவராகவும் இருக்கலாம், வராதவராகவும் இருக்கலாம். வழிவழி வந்தவரானால் அவரை மிராசுதார் அல்லது மரபுரிமையர் எனவும் சொல்லலாம்.

**வாரிசு உரிமைச் சான்றிதழ்**

இறந்தவர்க்கு வரவேண்டிய கடன்களையும் அவர்தம் பங்கு மதிப்புகளையும் வரப் பற்றும் உரிமையை அளித்துத் தக்க நீதிமன்றம் அளிக்கும் சான்றிதழ்.

**வாரிசு உரிமைச் சொத்து**

பிறப்பு முறையால் வாரிசு உரிமை உயில் எழுதாது இறப்பவரின் வாரிசுக்கு வரும் சொத்தையும் அது குறிக்கும்.

**வாரிசுதார்**

உரிமையர். வாரிசை அதாவது உரிமையைப் பெற்றிருக்கிறவர் வாரிசுதார் ஆவார்.

**வாரெழுத்தாணி**

காண்க : எழுத்தாணி.

**வால் குறிப்பு**

காண்க : மடிப்புக் குறிப்பு.

**வாழ்க்கை வரலாறு**

ஒருவரது வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது (biography).

**வாழ்த்துரை**

காண்க : அணிந்துரை (preface).

## வி

**விக்கிரம**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் பதினான்காவது ஆண்டு.

**விகாரி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் முப்பத்து மூன்றாவது ஆண்டு.

**விகிர்தி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் இருபத்து நான்காவது ஆண்டு.

**விசய**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் இருபத்தேழாவது ஆண்டு.

**விசிதம்**

விவரம்.

**விசுவாவசு**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் முப்பத்தொன்பதாவது ஆண்டு.

**விசு**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் பதினைந்தாவது ஆண்டு.

**விசேடவுரை**

உரைவகைகளுள் ஒன்று.

**விட்டில் பூச்சி**

சுவடிகளைப் பாதிக்கும் காரணிகளுள் விட்டில் பூச்சி(moth)யும் ஒன்று. இவை வெப்பமானதும் உலர்ந்ததுமான இடங்களில் வசிக்கின்றன.

**விடுதித்தாள்**

புத்தகக் கட்டுமான அட்டைக்கும் தலைப்புப் பக்கத்திற்கும் இடையில் புத்தகத்தைக் காப்பதற்காக ஒரு தாளைக் காலியாக (வெற்று) விட்டு விடுவர். இத்தாள் விடுதித்தாள் எனப்படும்.

**விண்ணப்பதார்**

நீதிமன்றத்தில் விண்ணப்பித்துக் கொள்பவர் (applicant).

**விண்ணப்பம்**

நீதிமன்றத்தில் முறையிடுதல், மனு (application).

**விநியோகஸ்தர்**

ஒரு வெளியீட்டாளரிடமுள்ள புத்தகங்களை மொத்தமாக வாங்கி வைத்துக் கொண்டு விற்பனைக்காகச் சில்லறை வியாபாரிகளுக்குக் கொடுப்பவர் (distributor).

**விபவ**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் இரண்டாவது ஆண்டு.

**விய**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் இருபதாவது ஆண்டு.

**வியாக்கியானம்**

உரை (commentary).

**வியாச்சியம்**

வழக்கைக் குறிக்கும் (case).

**வியாஷி**

'Viagens' என்ற போர்த்துக்கீசியச் சொல்லில் இருந்து பிறந்தது. கடல் பயணம் என்று பொருள்.

**விரல்ரேகைப் பதிவு வல்லுநர்**

விரல்ரேகைகளை ஒப்பிட்டுக் காணுவதில் வல்லுநர்.

**விரிவாக்கப்பட்ட பதிப்பு**

மறுபதிப்புச் செய்யும்போது முந்தைய பதிப்பின் செய்தி அளவைவிடப் புதிய பதிப்பின் அளவு திருத்தியும் சேர்த்தும் மிக விரிவாக வெளியிடுவது (enlarged edition).

**விரிவு**

சுருக்கமாக எழுதியதற்கு விரிவான முறையில் எழுதுதல் (expansion).

**விருத்தாப்பியம்**

வயது முதிர்ச்சி (old age).

**விருத்தியுரை**

விரிவாக எழுதும் உரை (commentary).

**விருப்புறுதிப் பத்திரம்**

உயில் (will).

**விரோதி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் இருபத்து மூன்றாவது ஆண்டு.

**விரோதிகிருது**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் நாற்பத்தைந்தாவது ஆண்டு.

**வில்லங்கம்**

வில்லங்கம் (dispute) என்பது சொத்தின் மீதுள்ள எவ்வகைப் பொறுப்பையும் குறிக்கும்.

**விலையாவணம்**

காண்க : அறுதிக் கிரயம்.

**விலையுயர்ந்த பதிப்பு**

விலையுயர்ந்த தரமான தாளில் அச்சிட்டு, தோல் அல்லது உயர்ந்த காலிக்கோவினால் கட்டமைப்புச் செய்து. அதிக விலை குறிப்பிட்டு விற்றல் (delux edition).

**விவரக்குறிப்பு**

ஓர் ஒப்பந்தத்தின் வரையறைகளைக் குறிக்கும் எழுத்து வடிவு (memorandum).

**விவரச்சுவடி**

காண்க : விவரத்தொகுப்பு நூல் (gazetteer).

**விவரத்தொகுப்பு நூல்**

ஊர்கள். மாவட்டங்கள் முதலான இடங்களின் பெயர்களைப் பட்டியலிட்டு அவற்றின் நிலம் பொழுது என்ற முதற் பொருள்கள், தெய்வம் உணவு விலங்கு ஊர் நீர் பூ யாழ் பண் மரம் புள் பறை செய்தொழில் என்ற கருப்பொருள்கள் முதலான பல தகவல்களையும் தொகுத்து அரசு வெளியிடுவது. சான்று : The Madurai Gazetteer.

**விவரநூல்**

ஊர்கள், தொலைபேசி எண்கள், பெயர்கள், முகவரிகள் முதலியவற்றை அகரநிரலாக்கித் தருவது (directory).

**விழியிழந்தோர்க்கான புத்தகப் பதிப்பு**

பாரிஸ் நகரத்தில் பிறந்த லூயி பிரேல் என்பவர் விழியிழந்தோர் கற்பிக்கப் பயன்படுத்துவதற்கான முறையை 1829இல் கண்டு பிடித்தார். இம்முறை 1959இல் இருந்து உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் கையாளப்பட்டு வருகிறது. குருடர்கள், காகிதத்தின்மீது கையினால் தடவிப் படிக்கும் வகையில் அவர்களுக்குரிய எழுத்துகள் அமைக்கப்படுகின்றன. காகிதத்தில் இரண்டிரண்டாக மூன்று வரிசையில் ஆறு குமிழ்கள் அமைக்கப் படும். குமிழ்களைப் பலவிதமாக அமைப்பதன் மூலம் 63 எழுத்துகளைக் கற்க முடியும். இப்படி அமைக்கப்பட்ட புத்தகப் பக்கங்களைக் குருடர்கள் கையினால் தடவி வாசிப்பர். இப்படியே அவர்கள் கணக்குப் போடுவதற்காக எண்கோண வடிவத் துளைகள் துளைக்கப்பட்டதொரு பலகையும் தயாரிக்கப்படுகிறது. விழியிழந்தோர் படிப்பதற்கேற்ற முறையில் புத்தகங்களும் பதிப்பிக்கப்பட்டு வருகின்றன.

**விளக்குக் கரி**

மை தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட பொருள்களுள் ஒன்று.

**விளம்பி**

அறுபது தமிழ் ஆண்டுகளுள் முப்பத்திரண்டாவது ஆண்டு.

## வீ

**வீசம்**

1/16 பங்காகிய மாகாணி.

**வீடு வயணம் ஏடு**

கிராமத்தில் அடங்கிய வீடுகளின் வகையினை விவரமாகத் தெரிவிக்கும் ஏடு.

## வெ

**வெகுதானிய**

அறுபது தமிழ் ஆண்டுகளில் பன்னிரண்டாவது ஆண்டு.

**வெட்டுக்கிளி**

சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைப் பாதிக்கும் காரணிகளுள் ஒன்று.

**வெட்டெழுத்தாணி**

எழுத்தாணி வகையுள் ஒன்று.

**வெண்முறி**

வெள்ளைத் தாளில் கீழே தான் கையெழுத்திட்டு ஒருவரிடம் கொடுத்து, அதை அவர் விருப்பப்படி நிறைவு செய்து கொள்ளுமாறு விட்டுவிடுவது.

**வெத்தோலை**

வெற்றோலை அரசு முத்திரை இடப்படாத ஓலை.

**வெல்லம் தாள்**

கன்றுக்குட்டியின் தோல் 'வெல்லம்' ஆகும். கன்றின் தோலிலிருந்து செய்த மெல்லிய எழுதுதாள் வகை. முற்காலத்தில் இதன் பயன்பாடு இருந்தது. இது பின்னர் வெல்லம் தாள் (Vellum paper) என்றாகியது.

**வெள்ளாட்டுத் தோல்**

காண்க : தோல் சுவடி.

**வெள்ளி மீன்**

சுவடிகளைப் பாதிக்கும் உயிரியல் காரணிகளுள் வெள்ளி மீன் (Silver fish) என்பதும் ஒன்று. இவற்றுக்கு இறகுகள் கிடையாது. இவை தாள்களின் மேல்பகுதியையும் நூல்கட்டிலுள்ள பிசின் மற்றும் பசைகளையும் உண்கின்றன.

**வெள்ளேடு**

எழுதாத ஏடு. வெள்ளோலை என்றும் கூறுவர்.

**வெள்ளோலை**

எழுதாத ஓலை. எழுதுவதற்காகத் தயாரிக்கப்பட்ட ஓலை.

**வெளியிடுபவர்**

நூல்களை அச்சிட்டு வெளியிடுபவர் (Publisher).

**வெளியிடுவோர் சுருக்கக் குறிப்புகள்**

வெளியிடுபவர் தமக்கு வரும் கடிதங்களுக்கு எழுதும் மறுமொழிகளிலும், பதிப்பாசிரியர்க்கும் விற்பனையாளர்க்கும் அனுப்பும் கடிதங்களிலும் பயன்படுத்தும் சுருக்கக் குறிப்புகள் சில உண்டு. 1953இல் உருவான இக்குறிப்புகள் உலக அளவில் தற்பொழுது பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

**வெளியீட்டு ஒப்பந்தம்**

ஒரு புத்தக ஆசிரியருக்கும் புத்தக வெளியீட்டாளருக்கும் இடையே நூலின் எழுத்துரிமைத் தொகை, புத்தக அமைப்பு, இலவசப் பிரதிகள் முதலியன குறித்து எழும் உடன்பாட்டுக்கு வெளியீட்டு ஒப்பந்தம் என்று பெயர்.

**வெளியீட்டு முன்விலை**

வெளியீட்டிற்கு முன்னதாகக் குறிப்பிடும் விலை. நூல் ஆர்வலர் களுக்குத் தெரிவித்துத் தேவைப்படும் அல்லது அச்சிடுவதற்குரிய நூல்களின் எண்ணிக்கையை உறுதி செய்வதற்கு உதவும்.

**வெளியீட்டுரிமை**

காண்க : பதிப்புரிமை (copyright).

**வெளியீடு**

நூல் வெளியீடு (publication). செய்தி வெளியீடு (bulletin).

**வெற்றிடத் துடைப்பான்**

சுவடிகள். ஆவணங்கள் பாதுகாப் பிற்குத் தேவையான பொருள்களுள் வெற்றிடத் துடைப்பான் (Vacuum Cleaner) என்பதும் ஒன்று.

**வெற்றுத்தாள் கையொப்பம்**

காண்க : வெண்முறி.

**வெற்று மேற்குறிப்பு**

மேற்குறிப்பு எழுதுபவர் கையொப்பம் மட்டும் இடுதல்.

**வெற்றேடு**

எழுதுவதற்காகத் தயாரிக்கப்பெற்ற ஓலை வெற்றேடு எனவும் வெள்ளோலை எனவும் கூறுவது வழக்கம்.

## ந

**நசத்து**

படைக்கு வேண்டிய உணவுப் பொருள்களைக் குறிக்கும்.

## ஜ

**ஜகாயதி**

நிலத்துக்குரியவர்.

**ஜடத்தி**

தினசரிச் செலவு எழுதும் குறிப்பு.

**ஜப்தி**

உருதுமொழிச் சொல்.

**ஜப்பான் காகிதம்**

மல்பெரி மரத்தின் பட்டையிலிருந்து கையினால் செய்த மெல்லிய வெள்ளைத் தாள். அச்சிடுவதற்கும் படங்கள் வரைவதற் கும் பயன்படும் உயர்ந்த தாள். மிகவும் உறுதியானது. விலையுயர்ந்தது. நீண்ட நாள் கெடாமல் இருக்கும்.

**ஜபானி**

அலுவலர்.

**ஜமாபந்தி**

உருதுமொழிச் சொல். நிலவரிக் கணக்கு முடிப்பு. கிராமக் குடிகள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிப் பணத்தைக் குறித்து ஆண்டிறுதிக் கணக்கு முடிவு செய்தல்.

**ஜமீன்**

ஜமீன் (jamin) என்பது உருது மொழிச் சொல். இது நிலத்தைக் குறிக்கும்.

**ஜமீன்தாரி (ர்)**

உருதுமொழிச் சொல். நில உரிமையாளர். 1948ஆம் ஆண்டின் 26ஆவது சட்டப்படியும், அதனை ஒட்டிய சட்டங்களின் படியும் எஸ்டேட் என்பது ஜமீன்தாரி (Zamindar), இனாம், கீழ்வார உரிமை நிலங்களைக் குறிக்கும்.

**ஜமுக்காள உடன்பாடு**

நூல் வெளியீட்டில் ஒரு பதிப்பு மட்டுமா எல்லாப் பதிப்புகளுமா, உள்நாட்டுப் பதிப்பா வெளிநாட்டுப் பதிப்பா, மலிவுவிலைப் பதிப்பா, பரிசுப் பதிப்பா, முழுமைப் பதிப்பா சுருக்கப் பதிப்பா முதலான விவரங்கள் கொண்டதை ஜமுக்காள உடன்பாடு என்பர். இதில் பல நிபந்தனைகள் உள்ளடங்கி இருக்கும். பல இழைகள் குறுக்கும் நெடுக்குமாகப் பாயும் ஜமுக்காளம் போலப் பல நிபந்தனைகளையும் அடக்கியுள்ளமையால் இப்பெயர் பெற்றது.

**ஜரீது**

பணி அல்லது வேலை நியமனம்.

**ஜரூர்**

விரைவு.

## ஜா

**ஜாகீர் மானியம்**

பணி செய்ததைப் பாராட்டி அரசால் வழங்கப்படும் நிலம் (jahir).

**ஜாசு மகால்**

தூதுவர் அலுவலகம்.

**ஜாசுத் மகால்**

தூதுவர் இருக்குமிடம்.

**ஜாடா**

முழுமை (complete).

**ஜாபிதா**

வேலை செய்பவர்கள் அல்லது பொருள்களின் விவரம் பற்றிய பட்டியல் (list) தருதல்.

**ஜாம்தார் கானா**

தஞ்சை அரசுக்குரிய ஆடைகளும் நகைகளும் வைக்கப்பட்ட இடம்.

**ஜாமின் பத்திரம்**

காண்க : பிணைமுறி (security bond).

**ஜாமீன்**

உருதுமொழிச் சொல். பிணை (security).

**ஜால்ரா**

கைத்தாளம்.

## ஜி

**ஜில்லா**

காண்க : மாவட்டம்.

## ஜீ

**ஜீராத்கானா**

ஆயுதசாலை.

**ஜீவனம்**

அலுவல் (employment).

**ஜீவனாம்சம்**

கைம்பெண் உயிர் வாழ்வதற்குக் கொடுக்கும் பிழைப்புப் பொருள்.

## ஹ

**ஹார்சி**

பட்டாளத்துப் பதவிகளுள் ஒன்று.

**ஹவில்தார்**

இராணுவ அதிகாரி (army officer).

**ஹஜாரி**

வடக்குவாசல்.

**ஹார்டுபோர்டு**

மரக்கழிவிலிருந்து செய்து. கட்டைக்குப் பதிலாகப் பயன்படும் விரைப்பான அட்டைப் பலகை (hard board).

**ஹேசிங்**

கணக்கப்பிள்ளை (accountant).

## ஹு

**ஹுசூர்**

'Husur' என்பது உருதுமொழிச் சொல். தலைமைப் பொறுப்பில் உள்ளவர் என்பது பொருள். தஞ்சாவூர் மராத்தியர் ஆட்சிக் கால ஆவணங்களில் இச்சொல் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## ஸ

**ஸ்டாம்பு**

'Stamp' என்பது ஆங்கிலச் சொல். காண்க : முத்திரை. ஓலை.

**ஸ்டாம்பு வெண்டர்**

முத்திரை ஓலைகள், முத்திரைப் பத்திரங்கள் போன்றவற்றை விற்பனை செய்பவர் (stamp vender).

**ஸ்தாபக ஆசிரியர்**

இதழ்கள், நூல்கள் போன்றவற்றை வெளியிட்ட நிறுவன ஆசிரியர் (founder editor).

**ஸ்தானாபதி**

போர்ப்படைத் தளபதி (General).

**ஸ்மிருதி**

ஆந்திரம். கர்னாடகப் பகுதிகளில் பருத்தித் துணிகளில் ஸ்மிருதிகள் (Smrtis) எழுதி வைக்கப்பட்டுள்ளன.

**ஸதர் சாவடி**

அரசுக்குரிய சாவடி.

## ஷ

**ஷரத்து**

நிபந்தனை (condition).

**ஷெட்யூல்**

பட்டியல் அட்டவணை (shedule).

## ஸ்ரீ

**ஸ்ரீமுகம்**

காண்க : திருமுகம். கடிதம் (letter).

## பின்னிணைப்புகள்

### பத்தொன்பது, இருபது ஆகிய நூற்றாண்டுகளின் பிரபவாதி ஆண்டுகட்கு நேரான ஆங்கில ஆண்டுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| பிரபவ | 1807-1808 | 1867-1868 | 1927-1928 | 1987-1988 |
| விபவ | 1808-1809 | 1868-1869 | 1928-1929 | 1988-1989 |
| சுக்கில | 1809-1810 | 1869-1870 | 1929-1930 | 1989-1990 |
| பிரமோதூத | 1810-1811 | 1870-1871 | 1930-1931 | 1990-1991 |
| பிரசோற்பத்தி | 1811-1812 | 1871-1872 | 1931-1932 | 1991-1992 |
| ஆங்கிரச | 1812-1813 | 1872-1873 | 1932-1933 | 1992-1993 |
| சிமுக | 1813-1814 | 1873-1874 | 1933-1934 | 1993-1994 |
| பவ | 1814-1815 | 1874-1875 | 1934-1935 | 1994-1995 |
| யுவ | 1815-1816 | 1875-1876 | 1935-1936 | 1995-1996 |
| தாது | 1816-1817 | 1876-1877 | 1936-1937 | 1996-1997 |
| ஈசுர | 1817-1818 | 1877-1878 | 1937-1938 | 1997-1998 |
| வெகுதானிய | 1818-1819 | 1878-1879 | 1938-1939 | 1998-1999 |
| பிரமாதி | 1819-1820 | 1879-1880 | 1939-1940 | 1999-2000 |
| விக்கிரம | 1820-1821 | 1880-1881 | 1940-1941 | 2000-2001 |
| விகு | 1821-1822 | 1881-1882 | 1941-1942 | 2001-2002 |
| சித்திரபானு | 1822-1823 | 1882-1883 | 1942-1943 | 2002-2003 |
| சுபானு | 1823-1824 | 1883-1884 | 1943-1944 | 2003-2004 |
| தாரண | 1824-1825 | 1884-1885 | 1944-1945 | 2004-2005 |
| பார்த்திப | 1825-1826 | 1885-1886 | 1945-1946 | 2005-2006 |
| விய | 1826-1827 | 1886-1887 | 1946-1947 | |
| சர்வசித்து | 1827-1828 | 1887-1888 | 1947-1948 | |
| சர்வதாரி | 1828-1829 | 1888-1889 | 1948-1949 | |
| விரோதி | 1829-1830 | 1889-1890 | 1949-1950 | |
| விகிர்தி | 1830-1831 | 1890-1891 | 1950-1951 | |
| கர | 1831-1832 | 1891-1892 | 1951-1952 | |
| நந்தன | 1832-1833 | 1892-1893 | 1952-1953 | |
| விசய | 1833-1834 | 1893-1894 | 1953-1954 | |
| சய | 1834-1835 | 1894-1895 | 1954-1955 | |
| மன்மத | 1835-1836 | 1895-1896 | 1955-1956 | |

| | | | |
|---|---|---|---|
| துன்முகி | 1836-1837 | 1896-1897 | 1956-1957 |
| ஏவிளம்பி | 1837-1838 | 1897-1898 | 1957-1958 |
| விளம்பி | 1838-1839 | 1898-1899 | 1958-1959 |
| விகாரி | 1839-1840 | 1899-1900 | 1959-1960 |
| சார்வரி | 1840-1841 | 1900-1901 | 1960-1961 |
| பிலவ | 1841-1842 | 1901-1902 | 1961-1962 |
| சுபகிருது | 1842-1843 | 1902-1903 | 1962-1963 |
| சோபகிருது | 1843-1844 | 1903-1904 | 1963-1964 |
| குரோதி | 1844-1845 | 1904-1905 | 1964-1965 |
| விசுவாவசு | 1845-1846 | 1905-1906 | 1965-1966 |
| பராபவ | 1846-1847 | 1906-1907 | 1966-1967 |
| பிலவங்க | 1847-1848 | 1907-1908 | 1967-1968 |
| கீலக | 1848-1849 | 1908-1909 | 1968-1969 |
| சௌமிய | 1849-1850 | 1909-1910 | 1969-1970 |
| சாதாரண | 1850-1851 | 1910-1911 | 1970-1971 |
| விரோதிகிருது | 1851-1852 | 1911-1912 | 1971-1972 |
| பரிதாபி | 1852-1853 | 1912-1913 | 1972-1973 |
| பிரமாதீச | 1853-1854 | 1913-1914 | 1973-1974 |
| ஆனந்த | 1854-1855 | 1914-1915 | 1974-1975 |
| இராட்சத | 1855-1856 | 1915-1916 | 1975-1976 |
| நள | 1856-1857 | 1916-1917 | 1976-1977 |
| பிங்கள | 1857-1858 | 1917-1918 | 1977-1978 |
| காலயுத்தி | 1858-1859 | 1918-1919 | 1978-1979 |
| சித்தார்த்தி | 1859-1860 | 1919-1920 | 1979-1980 |
| இரௌத்திரி | 1860-1861 | 1920-1921 | 1980-1981 |
| துன்மதி | 1861-1862 | 1921-1922 | 1981-1982 |
| துந்துபி | 1862-1863 | 1922-1923 | 1982-1983 |
| உரோத்திரோற்காரி | 1863-1864 | 1923-1924 | 1983-1984 |
| இரத்தாட்சி | 1864-1865 | 1924-1925 | 1984-1985 |
| குரோதன | 1865-1866 | 1925-1926 | 1985-1986 |
| அட்சய | 1866-1867 | 1926-1927 | 1986-1987 |

## வர்த்தமான ஆண்டுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கலியுகாதி | 5. | இங்கிலீஷ் |
| 2. | சாலிவாகன சகாப்தம் | 6. | பசலி ஆண்டு |
| 3. | கொல்லம் ஆண்டு | 7. | ஹிஜரா |
| 4. | விக்கிரம சகாப்தம் | 8. | பிரபவாதி |

## இலக்கம் – எண் எழுத்துக்கள்

| | | | |
|---|---|---|---|
| முந்திரி | 1/320 | அரைக்காணி | 1/160 |
| அரைக்காணி முந்திரி | 3/320 | காணி | 1/80 |
| கால் வீசம் | 1/64 | அரைமா | 1/40 |
| அரைவீசம் | 1/32 | முக்காணி | 3/80 |
| முக்கால் வீசம் | 3/64 | ஒருமா | 1/20 |
| மாகாணி (வீசம்) | 1/16 | இருமா | 1/10 |
| அரைக்கால் | 1/8 | மூன்றுமா | 3/16 |
| மூன்று வீசம் | 3/16 | நாலுமா | 1/5 |
| கால் | 1/4 | அரை | 1/2 |
| முக்கால் | 3/4 | ஒன்று | 1 |
| இரண்டு | 2 | மூன்று | 3 |
| நான்கு | 4 | ஐந்து | 5 |
| ஆறு | 6 | ஏழு | 7 |
| எட்டு | 8 | ஒன்பது | 9 |
| பத்து | 10 | இருபது | 20 |
| முப்பது | 30 | நாற்பது | 40 |
| ஐம்பது | 50 | அறுபது | 60 |
| எழுபது | 70 | எண்பது | 80 |
| தொண்ணூறு | 90 | நூறு | 100 |
| ஆயிரம் | 1,000 | பதினாயிரம் | 10,000 |
| நூறாயிரம் | 100,000 | பத்து நூறாயிரம் | 10,00,000 |
| நூறு நூறாயிரம் | 1,00,00,000 (கோடி) | | |

## தமிழ் எண்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஒன்று | க | 2 | இரண்டு | உ |
| 3 | மூன்று | ங | 4 | நான்கு | ச |
| 5 | ஐந்து | ரு | 6 | ஆறு | சு |
| 7 | ஏழு | எ | 8 | எட்டு | அ |
| 9 | ஒன்பது | கூ | 10 | பத்து | ய |
| 100 | நூறு | ள | 1000 | ஆயிரம் | த |

## தொகை அல்லது எண் தானப் பெயர்

| | |
|---|---|
| 1 | ஒன்று (ஏகம்) |
| 10 | பத்து (தசம்) |
| 100 | நூறு (சதம்) |
| 1,000 | ஆயிரம் (சகஸ்ரம்) |
| 10,000 | பத்தாயிரம் (ஆயுதம்) |
| 1.00,000 | நூறாயிரம் (இலட்சம்-நியுதம்) |
| 10,00,000 | பத்து நூறாயிரம் (பிரயுதம்) |
| 1,00.00,000 | கோடி |
| 10,00,00,000 | அற்புதம் |
| 1,00,00,00,000 | நிகற்புதம் |
| 10,00,00,00,000 | கும்பம் |
| 1,00,00,00,00,000 | கணம் |
| 10,00,00,00,00,000 | கற்பம் |
| 1,00,00,00,00,00.000 | நிகற்பம் |
| 10,00,00,00,00,00,000 | பதுமம் |
| 1,00,00,00.00,00,00,000 | சங்கம் |
| 10.00,00.00,00.00.00,000 | வெள்ளம் (சமுத்திரம்) |
| 1,00,00,00,00,00,00,00.000 | அந்நியம் |
| 10,00,00,00,00,00.00.00.000 | மத்தியம் (அர்த்தம்) |
| 1,00.00,00,00,00,00,00.00.000 | பரார்த்தம் |
| 10,00,00.00.00.00,00.00.00.000 | பூரியம் |
| 1.00,00.00.00.00,00.00.00,00.000 | பிரமகற்பம் (முக்கோடி) |

## அளவை முறைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 360 | நெல் | = | 1 | செவிடு |
| 5 | செவிடு | = | 1 | ஆழாக்கு |
| 2 | ஆழாக்கு | = | 1 | உழக்கு |
| 2 | உழக்கு | = | 1 | உரி |
| 3 | உழக்கு | = | | மூவுழக்கு |
| 2 | உரி | = | 1 | நாழி |
| 8 | நாழி (படி) | = | 1 | குறுணி (மரக்கால்) |
| 2 | குறுணி | = | 1 | பதக்கு |
| 3 | குறுணி | = | 1 | முக்குறுணி |
| 2 | பதக்கு ( 4 குறுணி) | = | 1 | தூணி |
| 2 | தூணி | = | 8 | குறுணி |
| 3 | தூணி | = | 1 | கலம் |
| 5 | மரக்கால் | = | 1 | பறை |
| 80 | பறை அல்லது 400 மரக்கால் | = | 1 | கரிசை |

## நில அளவை முறைகள்

| | | | |
|---|---|---|---|
| 100 | சதுர அடி | = | 12 அடி கோலால் 1 குழி |
| 100 | குழி | = | 1 மா |
| 20 | மா | = | 1 வேலி |
| 10 | மைல் | = | 1 தமிழ் காதம் அல்லது 7½ நாழிகை வழி தூரம் |
| 40 | அடி அகலம் 60 அடி நீளம் | = | 1 மனை |

## நிறுத்தல் அளவை முறைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 32 | குன்றிமணி | = | 1 | வராகனெடை |
| 10 | வராகனெடை | = | 1 | பலம் |
| 180 | தானியமணி | = | 1 | தோலா அல்லது |
| | | | 1 | ரூபாய் எடை |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | தோலா | = | 1 | பலம் |
| 8 | பலம் | = | 1 | சேர் |
| 5 | சேர் | = | 1 | வீசை |
| 8 | வீசை | = | 1 | மணங்கு |
| 20 | மணங்கு அல்லது | | | |
| 500 | இராத்தல் | = | 1 | பாரம் |
| 1 | நெல்லெடை | = | 1 | வீசம் |
| 2 | வீசம் | = | 1 | பிளவு |
| 2 | பிளவு | = | 1 | குன்றிமணி |
| 2 | குன்றிமணி | = | 1 | மஞ்சாடி |
| 2 | மஞ்சாடி | = | ¼ | கழஞ்சு |
| 1 | கழஞ்சு | = | 20 | மஞ்சாடி |
| 2 | கழஞ்சு | = | 1 | கஃசு (¼ பலம்) |
| 4 | கஃசு | = | 1 | பலம் |
| 100 | பலம் | = | 1 | தூக்கு |
| 2 | தூக்கு | = | 1 | துலாம் |
| 32 | துலாம் | = | 1 | பாரம் |
| 2 | துலாம் | = | 1 | பிசு |
| 32 | குன்றிமணி | = | 1 | வராகனெடை |
| 9 | வராகனெடை | = | 1 | ஒஞ்சை |
| 9 | ஒஞ்சை | = | 1 | சேர் |
| 16 | மஞ்சாடி | = | 1 | வராகனெடை |
| 9 | பணவெடை | = | 1 | பூவராகன் |
| 10 | பணவெடை | = | 1 | கழஞ்சு |
| 10 | பணவெடை | = | 1/8 | ரவை மஞ்சாடி |
| | | = | 1 | கழஞ்சு பழகம் |
| 10½ | மாத்துடையது | = | | தங்கம் |
| 3½ | மாத்துடையது | = | | வராகன் |
| 1/16 | வராகனெடை | = | 1 | ரதி (பச்சை) |

## நீட்டலளவை முறைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | அணு | = | 1 | கதிரெழு துகள் |
| 8 | கதிரெழுதுகள் | = | 1 | பஞ்சுத்துகள் |
| 8 | பஞ்சுத்துகள் | = | 1 | மயிர்முனை |
| 8 | மயிர்முனை | = | 1 | நுண்மணல் |
| 8 | நுண்மணல் | = | 1 | சிறுகடுகு |
| 8 | சிறுகடுகு | = | 1 | எள்ளு |
| 8 | எள்ளு | = | 1 | நெல்லு |
| 8 | நெல்லு | = | 1 | விரற்கிடை |
| 12 | விரற்கிடை | = | 1 | சாண் |
| 2 | சாண் | = | 1 | முழம் |
| 12 | முழம் | = | 1 | சிறுகோல் |
| 500 | சிறுகோல் | = | 1 | கூப்பிடுதூரம் |
| 4 | கூப்பிடுதூரம் | = | 1 | காதம் |
| 4 | காதம் | = | 1 | யோசனை |

## கால அளவை முறைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 60 | விநாடி | = | 1 | நாழிகை |
| 2½ | நாழிகை | = | 1 | ஓரை |
| 3 | நாழிகை | = | 1 | முகூர்த்தம் |
| 7½ | நாழிகை | = | 1 | சாமம் |
| 8 | சாமம் | = | 1 | நாள் |
| 7 | நாள் | = | 1 | கிழமை |
| 15 | நாள் | = | 1 | பக்கம் |
| 30 | நாள் | = | 1 | திங்கள் |
| 6 | திங்கள் | = | 1 | அயனம் |
| 2 | அயனம் | = | 1 | ஆண்டு |
| 60 | நொடி | = | 1 | நிமிடம் |
| 60 | நிமிடம் | = | 1 | மணி |
| 24 | மணி | = | 1 | நாள் |
| 7 | நாள் | = | 1 | வாரம் |
| 30 | அல்லது 31 நாள் | = | 1 | மாதம் |
| 12 | மாதம் | = | 1 | ஆண்டு |
| 365 | நாள் | = | 1 | சாதா ஆண்டு |
| 366 | நாள் | = | 1 | லீப் ஆண்டு |

## துணிகளின் அளவை முறைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | முழம் கொண்டது | = | 1 | புடைவை |
| 8 | புடைவை | = | 1 | சாம்பு |
| 80 | சாம்பு | = | 1 | கோடி |
| 2 | வேட்டி | = | 1 | சோடி |
| 2 | சோடி அல்லது 4 வேட்டி | = | 1 | மடி |
| 5 | மடி | = | 1 | கோடி |

1 கோடி என்பது 2½ சவுக்களி

## கால்நடைகள் கணக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| 80 | ஆடு | = | 1 | நிரை (1 மந்தை) |
| 80 | பசு கொண்டது | | | |
| 80 | எருமை | | | |

## குறியீடுகள்

| | | |
|---|---|---|
| காற்புள்ளி | ( , ) | comma |
| அரைப்புள்ளி | ( ; ) | semicolon |
| முக்காற்புள்ளி | ( : ) | colon |
| முற்றுப்புள்ளி | ( . ) | fullstop |
| உணர்ச்சிக்குறி / வியப்புக்குறி | ( ! ) | exclamation |
| வினாக்குறி | ( ? ) | interrogation |
| ஒற்றை மேற்கோள்குறி | ( ' ' ) | single quatation mark / inverted comma |
| இரட்டை மேற்கோள்குறி | ( " " ) | double quation marks |
| சிறுகோடு | ( - ) | dash |
| இணைகோடு | ( - ) | hypen |
| பிறைவளைவு | ( ) | bracket |
| பகர வளைவு | [ ] | square bracket |

## கி.பி. ஆண்டுக்கு மாற்றும் முறை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | கலியுகம் | - | கி.மு. | 3152இல் தொடங்குகிறது |
| 2 | புத்தர் ஊழி | - | கி.மு. | 544இல் தொடங்குகிறது |
| 3 | மகாவீரர் ஊழி | - | கி.மு. | 527இல் தொடங்குகிறது |
| 4 | விக்கிரமாதித்ய ஊழி | - | கி.மு. | 57இல் தொடங்குகிறது |
| 5 | சகஊழி (சாலிவாகன சகம்) | - | கி.பி. | 78இல் தொடங்குகிறது |
| 6 | இஜிரா ஊழி | - | கி.பி. | 622இல் தொடங்குகிறது |
| 7 | பர்மியஊழி | - | கி.பி. | 630இல் தொடங்குகிறது |
| 8 | கொல்லம் ஆண்டு | - | கி.பி. | 824இல் தொடங்குகிறது |
| 9 | சாளுக்கிய ஊழி | - | கி.பி | 1076இல் தொடங்குகிறது |
| 10 | பசலிஊழி (அக்பரால் தொடங்கப்பட்டது) | - | கி.பி | 1556இல் தொடங்கப் பட்டது |
| 11 | திருவள்ளுவராண்டு | - | கி.மு. | 31இல் தொடங்குகிறது |

**விளக்கம்**

கலியுக ஆண்டு 4200 என்பது - 4200-3152 = 48 கி.பி. 48 ஆகும்.
கலியுக ஆண்டு 2500 என்பது - 2500-3152 = 652 கி.மு. 652 ஆகும்.
சக ஆண்டு 250 என்பது - 250 + 78 = 328 கி.பி. 328 ஆகும்.
கொல்லம் ஆண்டு 520 என்பது - 520 + 824 = 1344 கி.பி. 1344 ஆகும்.
திருவள்ளுவராண்டு என்பது - 2006 + 31 = 2037 கி.பி. 2037 ஆகும்.

**அளவுகள் (பழைய முறை)**

| | | |
|---|---|---|
| 7.92 அங்குலம் | = | 1 லிங்க் |
| 100 லிங்க் | = | 1 கண்டர் சங்கிலி |
| 12 அங்குலம் | = | 1 அடி |
| 3 அடி | = | 1 கஜம் |
| 22 கஜம் | = | 1 கண்டர் சங்கிலி |
| 10 சங்கிலி | = | 1 பர்லாங்கு |
| 8 பர்லாங்கு | = | 1 மைல் |
| 144 சதுர அங்குலம் | = | 1 சதுர அடி |
| 9 சதுர அடி | = | 1 சதுர கஜம் |

| | | |
|---|---|---|
| 484 சதுர கஜம் | = | 1 சதுர சங்கிலி |
| 10 சதுர சங்கிலி | = | 1 ஏக்கர் |
| 640 ஏக்கர் | = | 43,560 சதுர அடி அல்லது 1,00,000 சதுர லிங்க். |

**அளவுகள் மெட்ரிக் முறை (தற்போதைய முறை)**

| | | | |
|---|---|---|---|
| 1. | 1 லிங்க் (20 மீட்டர் சங்கிலி) | = | 2 மீட்டர் |
| | 1 லிங்க் (30 மீட்டர் சங்கிலி) | = | 3 மீட்டர் |
| 2. | 10 மில்லி மீட்டர் | = | 1 சென்டி மீட்டர் |
| | 10 சென்டி மீட்டர் | = | 1 டெசி மீட்டர் |
| | 10 டெசி மீட்டர் | = | 1 மீட்டர் |
| | (1 மீட்டர் 10 செ.மீ. | = | 1,000 மி.மீ.) |
| | 10 மீட்டர் | = | 1 டெகா மீட்டர் |
| | 10 டெகா மீட்டர் | = | 1 ஹெக்டா மீட்டர் |
| | 10 ஹெக்டா மீட்டர் | = | 1 கிலோ மீட்டர் |
| 3. | 100 சதுர மில்லி மீட்டர் | = | 1 சதுர சென்டி மீட்டர் |
| | 100 சதுர சென்டி மீட்டர் | = | 1 சதுர டெசி மீட்டர் |
| | 100 சதுர டெசி மீட்டர் | = | 1 சதுர மீட்டர் |
| | 100 சதுர மீட்டர் | = | 1 ஏர் அல்லது 1 சதுர டெகா மீட்டர் |
| | 100 ஏர் | = | 1 ஹெக்டேர் அல்லது 1 சதுர ஹெக்டா மீட்டர் |
| | (1 ஹெக்டேர் | = | 10,000 சதுர மீட்டர் அல்லது 25 சதுர சங்கிலிகள் (20 மீட்டர்) |
| | 100 ஹெக்டேர் | = | 1 சதுர கிலோ மீட்டர் |

**தஞ்சாவூர் நில அளவை**

| | | |
|---|---|---|
| 144 சதுர அடி | = | 12 அடி கோலால் 1 குழி |
| 100 குழி | = | 1 மா |
| 20 மா | = | 1 வேலி |
| 10 மைல் | = | 1 தமிழ் காதம் அல்லது 7½ நாழிகை வழி தூரம் |

**இந்திய நீட்டலளவை**

| | | |
|---|---|---|
| 3 வாற்கோதுமையளவு | = | 1 அங்குலம் |
| 3 அங்குலம் | = | 1 விரற்கடை |
| 9 அங்குலம் | = | 1 சாண் |
| 12 அங்குலம் | = | 1 அடி |
| 3 அடி | = | 1 கெஜம் |
| 1½ அடி | = | 1 முழம் |
| 5 அடி | = | 1 நடை அல்லது போக்கு |

**சென்னை முகத்தலளவை**

| | | |
|---|---|---|
| 8 ஆழாக்கு | = | 1 படி |
| 8 படி | = | 1 மரக்கால் |
| 5 மரக்கால் | = | 1 பறை |
| 80 பறை | = | 1 கரிசை |
| 12 மரக்கால் | = | 1 கலம் |
| 21 மரக்கால் | = | 1 கோட்டை |

ஒரு மரக்கால் 1 குறுணி என்றும், 2 மரக்காலைப் பதக்கு என்றும் சொல்லுவதுண்டு. 1 படி 100 கன அங்குலம் அளவுள்ளது.

**31 நாள் உள்ள திங்கள்**

சனவரி, மார்ச்சு, மே, சூலை, ஆகஸ்ட், அக்டோபர், திசம்பர்.

**30 நாள் உள்ள திங்கள்**

ஏப்பிரல், சூன், செப்டம்பர், நவம்பர்.

**எண் வாய்பாடு**

| | | |
|---|---|---|
| 12 உருப்படி | = | 1 டஜன் |
| 12 டஜன் | = | 1 குரோஸ் |
| 20 உருப்படி | = | 1 ஸ்கோர் |
| 24 காகிதத்தாள் | = | 1 குயர் |
| 20 குயர் | = | 1 ரீம் |
| 10 ரீம் | = | 1 பேல் அல்லது கட்டு |

## சுவடிப் பாதுகாப்பு முறைகள் (பழங்காலம்)

- பழங்காலத்தில் காளான்கள், பூச்சிகளை அகற்றுவதற்குச் சிவப்பு அல்லது மஞ்சள்நிறத் துணியில் சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றை மூடி, கட்டி வைத்தனர். சிவப்புநிறத் துணி அனேகப் பூச்சிகளை விரட்டும் தன்மையுடையது.
- ஒரு தாள் விட்டு அடுத்த தாளில் மஞ்சள் பூசுவதுண்டு.
- வேப்பமரத்தின் இலை, வசம்பு, புகையிலை, கற்பூரம் ஆகியவற்றைப் புத்தகம் அல்லது சுவடிகள் வைக்கப்பட்டுள்ள அலமாரிகளில் வைத்தனர்.
- வேப்பிலை, வேப்பங்கொட்டைப் பசை மற்றும் தாள், புகையிலை, வசம்பு, வெட்டிவேர், கற்பூரம், சிட்ரோனில்லா எண்ணெய் போன்றவற்றைக் கொண்டு சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன.
- இன்றைக்குத் தஞ்சாவூரிலுள்ள சரசுவதி மகால் நூலகத்தில் வசம்பு (1 அளவு), கருஞ்சீரகம் (1 அளவு), பட்டை (1 அளவு), மிளகு (கால் அளவு) மற்றும் கற்பூரம் சிறிது கலந்து தூளாக்கி அவற்றைத் துணிப் பைகளில் கட்டி நூல்கள், சுவடிகள், ஆவணங்கள் உள்ள அடுக்குகளுக்கிடையில் வைக்கப்பட்டு வருகின்றன. இவ்விதம் செய்வதால் ஆறு மாதம் வரை பூச்சிகளிடமிருந்து சுவடிகளைப் பாதுகாக்கலாம்.
- நிழலில் உலர்த்தப்பட்ட வேப்பிலைகளைப் பரப்பி, அவற்றின்மீது சுவடிகள், ஆவணங்கள், நூல்களை வைத்தால் அவற்றைப் பூச்சிகள் தாக்குவதில்லை.
- மஞ்சள் பொடி காளான் கொல்லியாகவும் கிருமி நாசினியாகவும் பயன்படுகிறது.
- ஆடாதோடை, புகையிலை, துளசி போன்ற செடிகளின் இலைகளையும் வேப்பிலை போலப் பயன்படுத்தலாம்.
- சோம்புத்தூள் புத்தகப் புழுக்களைக் கட்டுப்படுத்தும்.
- சிங்கோனா மரப்பட்டைத் தூள் துணிகளைப் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்கிறது.
- சுவடிகளைச் சமையலறையில் புகை படியுமாறு தொங்கவிட்டு வைத்துப் பாதுகாத்தனர். புகை படிவதனால் பூச்சிகள் இறப்பதோடு அச்சுவடியில் உள்ள எழுத்துகளும் நன்றாகத் தெரியும் என்று நம்பினர்.

## சுவடிப் பாதுகாப்பு (நவீனப் பாதுகாப்பு முறைகள்)

- பூஞ்சைக் காளான் - தைமல் புகையூட்டுதல்.
- பூச்சிகள் - கற்பூரம், நஞ்சுள்ள தூள், சோடியம் புளோரைட்.
- புத்தகப் புழுக்கள், புத்தகப் பேன்கள் - புகையூட்டுதல்.
- காற்றிலுள்ள ஈரப்பதம் (Hygrometer) ஈரமானியைக் கொண்டு அளவிடப்படுகிறது.
- ஈரப்பதத்தை அளவிடுவதற்குச் சுழல் ஈரப்பதமானி (Whirling Psychrometer), உலர் ஈரக்குமிழ் ஈரப்பதமானி (Wet and Dry Hygrometer), மயிர் ஈரப்பதமானி (Hair Hygrometer), தானியங்கி வெப்ப ஈரப்பதமானி (Automatic Thermo Hygrometer) போன்ற கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.
- ஈரத்தால் பாதிக்கப்படக்கூடிய மிக முக்கிய ஆவணங்கள் காற்றுப்புகாப் பெட்டியில் வைத்து அவற்றில் உள்ள ஈரம் சிலிக்கா ஜெல் (Silica Gel) மூலம் நீக்கப்படுகிறது.
- ஆர்சனிக் திரிஆக்சைடு (Arsenic trioxide), டியல்ட்ரின் (Dieldrin), லிண்டேன் (Lindane), பைரத்ரம் (Pyrethrum), துர்ஸ்பான் (Dursbhan), நாப்தலின் (Naphthalein), பாரா டைகுளோரே பென்சின் (Para dichloro benzene) போன்றவை பூச்சிக்கொல்லி களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.
- ஆவணங்களில் தோய்ந்துள்ள எண்ணெய், கொழுப்பு, மெழுகு போன்றவை டொலுயீன் (Toluene), எக்சேன் (Hexane), பென்சீன் (Benzene), பிரிடின் (Pyridene), பெட்ரோல் (Petrol) போன்றவற்றால் அகற்றப்படுகின்றன.
- செலோ டேப்பு (Cello Tape)களை அகற்றுவதற்கு டொலுயீனும், எக்சேனும் கலந்த கலவை பயன்படுத்தப்படுகிறது.
- அரக்கு, வார்னிஷ் போன்றவை அசிட்டோனினால் (Acetone) அகற்றப்படுகிறது.
- ஈ, கொசு போன்றவற்றால் ஏற்பட்ட கறைகள், பூஞ்சைக் காளானால் உண்டான கறைகள் போன்றவை சமமாகக் கலக்கப்பட்ட ஹைடிரஜன் பெராக்சைடு, ஆல்கஹால் ஆகிய கலவையைப் பயன்படுத்தி அகற்றப்படுகின்றன.
- தேயிலை, காப்பி போன்றவற்றால் ஏற்பட்ட கறைகள் 2 % பொட்டாசியம் பெர்போரேட் (Potassium perborate) என்ற கரைசல் மூலம் அகற்றப்படுகிறது

## சுவடிகள், ஆவணங்களைச் சீர் செய்வதற்குரிய பொருள்கள்

- கையினால் தயாரித்த தாள் (Handmade paper).
- நேர்த்தியாக நெய்யப்பட்ட துணியினாலான தாள் (Tissue paper).
- தூய்மையான வெள்ளி நிறத்தினாலான வலைத்துணி (Chiffon cloth).
- எண்ணெய்த் தாள் (Oiled paper).
- மெழுகுத் தாள் (Waxed paper).
- மஸ்லின் துணி (Muslin cloth) - வரைபடங்கள், தேசப்படங்கள் ஒட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.
- லாங்கிளாத் துணி (Long cloth).
- செல்லுலாஸ் அசிடேட் ஃபாயில் (Cellulose acetate foil) - சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றை லேமினேசன் (Lamination) செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது.
- மை ஒட்டும் தாள் (Blotting paper).

## சுவடிகள், ஆவணங்கள் பாதுகாப்பிற்குத் தேவையான கருவிகள்

- உச்சநீச வெப்பமானி (Maximum and minimum thermometer)
- முடி வெப்ப ஈரமானி (Hair Thermohygrometer)
- தானியங்கி வெப்ப ஈரப்பதமானி (Automatic Thermohygrometer)
- வெளிச்சமானி (Lux Meter)
- புறஊதாக்கதிர் விளக்கு (UV Lamp)
- புறஊதாக்கதிர் மானி (UV Light monitor)
- ஈரமூட்டும் கருவி (Humidifier)
- உலர வைக்கும் கருவி (Dehumidifier)
- உலர் சட்டி (Desiccator)
- அமில அளவைக் கருவி (pH Meter)
- எடையிடும் கருவி (Weighing balance)
- புகையூட்டும் கூண்டு அல்லது நுண்கிருமி நீக்கப் பேழை (Fumigation Chamber)
- வெற்றிடத் துடைப்பான் (Vacuum cleaner)

- உலர் இரும்புப் பெட்டி (Iron box)
- உலர் கருவிகள் (Dehumidification air dryers)
- கண்ணாடி முகவைகள் (Glass beakers)
- அளவு ஜாடிகள் (Measuring cylinders)
- எனாமல் தட்டுகள் (Enamel trays)
- கண்ணாடிப் புட்டிகள் (Glass bottles)
- மின் அடுப்பு (Hot plate)
- பாலித்தின் பைகள் (Polythene bags)

## சுவடிகள், ஆவணக் காப்பிற்குத் தேவையான வேதிமப் பொருள்கள்

- அசிட்டிக் அமிலம் (Acetic acid)
- அசிட்டோன் (Acetone)
- அமில அளவுக் காகிதம் (pH paper)
- அமைல் அசிட்டேட் (Amyl acetate)
- அமோனியம் ஹைடிரோசல்பைடு (Ammonium hydro sulphide)
- அமோனியா (Ammonia)
- அன்ஹைடிரஸ் கால்சியம் குளோரைடு (Anhydrous calcium chloride)
- ஆக்சாலிக் அமிலம் (Oxalic acid)
- ஆல்கஹால் (Alcohol)
- ஆர்சனிக்ட்ரை ஆக்சைடு (Arsenic tri oxide)
- ஆர்செனஸ் ஆக்சைடு (Arsenous oxide)
- எதிலின் ஆக்சைடு (Ethlene oxide)
- எரிசாராயம் (Methylated spirit)
- கந்தக அமிலம் (Sulphuric acid)
- கருநெய்க்கார எண்ணெய் (Creosote oil)
- கார்பன் டை ஆக்சைடு (Carbon-di-oxide)
- கால்சியம் ஆக்சைடு (Calcium oxide)
- கால்சியம் பை கார்பனேட் (Calcium bi carbonate)
- கில்லோபெட்ரா (Killoptera)

- கிளிசரின் (Glycerine)
- குளோரமின் - டி (Chloramin-T)
- சிட்ரிக் அமிலம் (Citric acid)
- சிலிக்கா ஜெல் (Silica gel)
- சின்க் குளோரைடு (Zinc chloride)
- சின்க் பாஸ்பைட் (Zinc phosphide)
- செம்பு சல்பேட் (Copper sulphate)
- செல்லுலாஸ் அசிட்டேட் ஃபாயில் (Cellulose acetate foil)
- செல்லுலாய்டு (Celluloid)
- சோடியம் ஃப்ளோரைடு (Sodium floride)
- சோடியம் குளோரைடு (Sodium chloride)
- டைல்டிரின் எமல்சன் (Dieldrine emulsion)
- டொலுயீன் (Toulene)
- தைமல் (Thymol)
- நிலக்கரி எண்ணெய் (Coal-tar)
- பாரா டை குளோரோ பென்சீன் (Para dichloro benzene)
- பாரா நைட்ரோ பீனால் (Para nitrophenol)
- பிரிடின் (Pyridine)
- பென்சீன் (Benzene)
- பேரியம் கார்பொனேட் (Barium carbonate)
- லிட்மஸ் காகிதம் (Litmus paper)
- லிண்டேன் (Lindane)

## சுவடிகள், ஆவணங்கள் கட்டமைப்பிற்குரிய பொருள்கள்

- பழுது பார்க்கும் கண்ணாடியுடன் கூடிய மேசை (Repairing table, preferably with glass top)
- சிறிய கையினால் அழுத்தும் கருவி (Small hand press)
- தாள் வெட்டும் கருவி (Paper trimmer)
- கத்தரிக்கோல்கள்
- கத்திகள் - தோல் சீவும் கத்தி, தோல் வெட்டும் கத்தி, பேனாக்கத்தி
- கிண்ணங்கள்

- தூரிகைகள் (கேமல் ஹேர் 2.5 - 1.25 செ.மீ. அகலம்) - பசை தடவுவதற்கு
- அளவுகோல்
- ஊசிகள் (பெரியதும் சிறியதும்)
- குத்தூசி
- தட்டுகள் (Enamelled trays)
- கண்ணாடித் தட்டுகள் (Glass plates)
- பசை தயாரிப்பதற்குரிய பொருள்கள்
- உலர் இரும்புப் பெட்டி (Electric iron box)
- நூல் கண்டு (Sewing thread)
- அட்டைகள் (Boards)
- காலிகோ (Calico), ரெக்சின் (Rexine)
- துணி (Cloth)
- தோல் (Leather)
- செயற்கைப் பசை (Adhesive) - வச்சிரப்பசை, கஞ்சிப்பசை
- தாள்
- நாடா
- தாள் மடிக்கும் தந்தம்
- அழுத்தும் பலகைகள்
- அழுத்தும் தகடுகள்
- கத்தி

## சுவடி மற்றும் ஆவணக் காப்பகங்கள்

### கல்வி நிறுவனங்கள்

1. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.
2. ஆந்திரப் பல்கலைக்கழகம், விசாகப்பட்டினம்
3. இறையியல் கல்லூரி, பெங்களூர்.
4. உஸ்மானியாப் பல்கலைக்கழகம், ஹைதராபாத்.
5. கரந்தைத் தமிழ்ச் சங்கம், கரந்தை, தஞ்சாவூர்.
6. கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு.
7. கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகம், கள்ளிக்கோட்டை
8. தமிழ்நாடு இறையியல் கல்லூரி, அரசரடி, மதுரை.
9. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
10. தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தமிழ்க் கல்லூரி, பேரூர், கோயம்புத்தூர்.
11. திருவனந்தபுரம் பல்கலைக்கழகச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.
12. போப் கல்லூரி, சாயர்புரம்.
13. மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், பல்கலைநகர், மதுரை.
14. மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை

### அரசு நிறுவனங்கள்

1. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூல் நிலையம், சேப்பாக்கம், சென்னை.
2. அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை
3. அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை.
4. அரசு அருங்காட்சியகம், புதுச்சேரி.
5. ஆவணக் காப்பகம், கடலூர்.
6. ஆவணக் காப்பகம், கோயம்புத்தூர்
7. ஆவணக் காப்பகம், சிதம்பரம்.
8. ஆவணக் காப்பகம், தஞ்சாவூர்.
9. ஆவணக் காப்பகம், திருச்சிராப்பள்ளி
10. ஆவணக் காப்பகம், புதுச்சேரி.
11. ஆவணக் காப்பகம், மதுரை.
12. ஆவணக் காப்பகம், மைசூர்.

13. இந்திய தேசிய நூல்நிலையம், கோல்கத்தா.
14. இராமலிங்க விலாசம், இராமநாதபுரம் அரண்மனை, இராமநாதபுரம்.
15. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
16. கீழ்த்திசை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சுவடிகள் நூல்நிலையம், காரியாவட்டம், திருவனந்தபுரம்.
17. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம். பரோடா.
18. சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம், சென்னை.
19. டேன்ஸ்பர்க் அருங்காட்சியகம், தரங்கம்பாடி.
20. தமிழ்நாடு ஆவணக் காப்பகம், எழும்பூர், சென்னை.
21. திலக் அருங்காட்சியகம், புனா.
22. தேசிய ஆவணக் காப்பகம், புதுதில்லி.
23. பாரதிதாசன் நினைவு நுலகம், புதுச்சேரி.
24. பாரதியார் நினைவு நூலகம், புதுச்சேரி.
25. பிரெஞ்சு இந்தியக் கழகம், புதுச்சேரி.
26. மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் - தமிழ்நாடு
27. மையத் தொல்பொருள் ஆய்வுத்துறை அலுவலகம், மைசூர்.

**பொது நிறுவனங்கள்**

1. இறையியல் கழகம், அடையாறு, சென்னை.
2. ஈராஸ் பாதிரியார் நிறுவனம், மும்பை.
3. உ.வே.சா. நூல்நிலையம், சென்னை.
4. சரசுவதி மகால் நூல்நிலையம், தஞ்சாவூர்
5. மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.
6. ரோஜா முத்தையா நூல்நிலையம், சென்னை.
7. வெல்லிங்டன் நூலகம், திருவில்லிபுத்தூர்.

**சமய நிறுவனங்கள்**

1. அருள்மிகு வேங்கடேசுவரா கீழ்த்திசை ஆய்வு நிறுவனம், திருப்பதி.
2. ஏசு சங்க ஆவணக் காப்பகம், செண்பகனூர், கொடைக்கானல்.
3. காசி மடம், திருப்பனந்தாள்.
4. குமாரதேவர் மடம், விருத்தாசலம்.

5. குன்றக்குடி ஆதீனம், குன்றக்குடி.
6. சங்கராச்சாரியார் சுவாமிகள் மடம், காஞ்சிபுரம்.
7. சர்குனி தேவாலயம், தேவகோட்டை
8. சூரியனார் கோயில் ஆதீனம், திருமங்கலக்குடி.
9. தருமபுர ஆதீனம். தருமபுரம், மயிலாடுதுறை.
10. திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை.
11. பிஷப் இல்லம், சாந்தோம், மயிலாப்பூர், சென்னை.
12 பொம்மபுர ஆதீனம், மயிலம்.

## சுவடிகளைப் பாதிக்கும் காரணிகள்



புத்தகப்பேன்



புத்தகப்புழு



வெள்ளிமீன்கள்



விட்டில் பூச்சி



கறையான்



எலிகள்



அணில்



வெட்டுக்கிளி



கரப்பான் பூச்சிகள்

# ஓலைச்சுவடிகள்









## காகிதச்சுவடிகள்



# நூலாசிரியர் - சிறுகுறிப்பு

- தந்தை பெயர் - முனைவர் ச. சாம்பசிவனார்
- தாய் பெயர் - சா. மனோன்மணி
- பிறந்த நாள் - 06-03-1954
- கல்வித் தகுதி - இளம் அறிவியல் (B.Sc. Maths)
  முதுகலை (M.A. Tamil)
  முனைவர் (Ph.D.)
  முதுமுனைவர் (D.Litt.)
- மொழியறிவு - தமிழ் (தாய்மொழி)
  ஆங்கிலம் (பேச, எழுத, படிக்க)
  மராத்தி (எழுத, படிக்க)
- முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு
  திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள்
- முதுமுனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு
  தஞ்சை மராட்டிய மன்னர்கள் வளர்த்த நுண்கலைகள்
- படித்த சிறப்புப் பாடங்கள் - ஒப்பிலக்கியம்- சங்க காலம், சைவ சமயம்
- சிறப்பாய்வு மேற்கொண்டமை - தமிழ் இலக்கியம், சைவ சமயம், நுண்கலைகள், சுவடி பதிப்பித்தலும் பதிவு செய்தலும்
- ஆய்வுப்பணி அனுபவம் - 30 ஆண்டுகள்
- கல்விப்பணி அனுபவம் - 18 ஆண்டுகள்
- நிருவாகப்பணி அனுபவம் - 10 ஆண்டுகள்
- ஆய்வுக் கட்டுரைகள் - 160க்கும் மேலானவை
- மேற்பார்வைப் பணியில்
  முனைவர் பட்டம் பெற்றோர் - 9
  ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றோர் - 40
- பெற்ற சிறப்பு - முதுமுனைவர் ஆய்வேட்டைத் தமிழில் எழுதித் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலேயே முதன் முதலாக இப்பட்டத்தைப் பெற்ற சிறப்பினர்.
- அயல்நாடு சென்றமை - கொழும்பில் நடைபெற்ற இசுலாமியக் கருத்தரங்கம், தொல்காப்பியக் கருத்தரங்கம் ஆகியவற்றில் பங்கேற்றல்.

## எழுதிய நூல்கள்

- போதமும் சுபக்கமும் — 1978
- மூவர் தேவாரம் முதல் 5 பதிகங்கள் (மூலமும் உரையும்) — 1981
- திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள் — 1986
- சைவத் தமிழ் — 1992
- தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி 1 — 1994
- புத்துலகச் சிந்தனைகள் — 2003
- உள்ளங்கவர் ஓவியம் — 2003
- தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி 2 — 2003
- தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி 3 — 2004
- நிகழ்வுக் கலைகள் — 2004
- திருக்கோயில் வளர்க்கும் ஓவியக்கலை — 2004
- தஞ்சை மராட்டிய மன்னர்கள் வளர்த்த நுண்கலைகள் — 2006
- இலக்கியச் செல்வம் — 2006
- பதிப்புச் சிந்தனைகள் — 2006

## பதிப்பித்த நூல்கள்

- தமிழக வரலாற்றறிஞர்கள் தொகுதி 1 (இணைப் பதிப்பாசிரியர்) — 1993
- ஆறாம் உலகச் சைவ மாநாட்டு மலர் (இணைப் பதிப்பாசிரியர்) — 1997
- காகிதச் சுவடி ஆய்வுகள் (பதிப்பாசிரியர்) — 2000
- பதிப்பு நிறுவனங்கள் (பதிப்பாசிரியர்) — 2002
- தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் ஆய்வுப் பனுவல் (இணைப் பதிப்பாசிரியர்) — 2003
- சுவடிப் பதிப்பாசிரியர்கள் (பதிப்பாசிரியர்) — 2004
- பதிப்பியல் நெறிமுறைகள் (பதிப்பாசிரியர்) — 2004
- ஆராய்ச்சி நெறிமுறைகளும் சுவடிகளைப் பதிப்பித்தலில் எழும் சிக்கல்களும் (பதிப்பாசிரியர்) — 2004
- அமைதித் தமிழ் (பதிப்பாசிரியர்) — 2006
- தமிழும் உலக ஒற்றுமையும் (பதிப்பாசிரியர்) — 2006
- தமிழக அறிஞர் கடிதங்கள் (பதிப்பாசிரியர்) — 2006
- சுவடியியல் கலைச்சொல் விளக்க அகராதி (தொகுப்பும் பதிப்பும்) — 2006

## அச்சில் உள்ள நூல்கள்

- கடித இலக்கியம்
- ஒலி அலையில் சில துளிகள்

## வெளிவர உள்ள நூல்கள்

- தஞ்சை மராத்தியர் வரலாறு
- ஆடல் மகளிர்

## பாராட்டுகள்

*கற்றனைத்தூறு மறிவு என்ற போக்கு எல்லோருக்கும் வேண்டிய ஒன்றாகும். தாங்கள் நன்கு கடைப்பிடித்து வருகின்றீர்கள்.*

- முனைவர் அ. **விசுவநாதன்**, *காரைக்குடி, 1997.*

*தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
*மன்னுயிர்க் கெல்லாம் இனிது*

*என்ற குறட்பாவிற்குத் தாங்கள் இலக்கணமாகத் திகழ்கின்றீர்கள்.*

- திரு முருகு. இராமலிங்கம், *சென்னை, 1997.*

*நெறிதெரிந் தொழுகும்சால்பும் நிறைதமிழறிவும் தொண்டும்*
*உறைவிட மானபெற்றோர் உஞற்றிய தவத்தால்வந்த*
*அறிவுடைநம்பி ஆன்ற ஆய்வமை அறிஞர் போற்றும்*
*செறிமுது முனைவராகத் திகழ்க பல்லாண்டு வாழ்க!*

*செந்தமிழ்தேர் சாம்பசிவம் செய்தவத்தின் நற்பயனா*
*வந்தஅறிவுடை நம்பிவளர் சிந்தையினான்*
*மேலுமொழித் தொண்டாற்றி வெற்றியொடு வாழியரோ*
*சாலபல ஊழி தழைத்து!*

- *பாவலரேறு திரு* ச. பாலசுந்தரம், *தஞ்சாவூர், 1997.*

